ஐந்தாண்டு அபிவிருத்தி
மதுரை ஜில்லா

ஐந்தாண்டு அபிவிருத்தி

மதுரை ஜில்லா

சென்னை சர்க்கார்
செய்தி இலாகாவின் வெளியீடு
1951

[விலை, அணா 4

இந்நூலின் இறுதியில் சேர்த்துள்ள ஜில்லாப் படத்தைத் தயாரித்து, அச்சடித்தும் கொடுத்தவர், சென்னை சர்க்கார் சர்வே இலாகாவினர் ஆவர். படத்தின் அளவு மிகப் பெரியதாய் இல்லாமையால், வெகு முக்கியமான குறிப்புகளை மட்டுமே அதில் காட்ட முடிந்தது.

இந்திய சர்க்கார் புதை பொருள் ஆராய்ச்சி இலாகாவினர் (Archæological Department) புராதனக்கலைகள் சம்பந்தமான பல அழகிய படங்களை வெளியிட அனுமதி தந்துதவினர். அவற்றுள் பெரும்பாலானவற்றை, கடைசி அட்டைப்படத்தில் காணலாம்.

ஸ்ரீ எம். கே. ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் அளித்த சில படங்களும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன.

படங்கள்

மேல் அட்டை :—

முதல் பக்கம் :

பெரியது—

மீனாட்சியம்மன் கோயில்.

சிறியது—

பஞ்சாலை.

கடைசி அட்டை ;

தஞ்சாவூர்க் கோயில், திருச்சி மலைக்கோட்டை, உதக்மண்டலம் காட்சி, கோடைக்கானல் ஏரி, ராமேஸ்வரம் கோயில், உட்புறக் கலைக் கூடம், புகளூர் பாலம், மேட்டூர் நீர்த் தேக்கம், பாபநாசம் மின்சார நிலையம், திருவரங்கம் கோயில் சிற்பம், மாமல்லபுரம் சிற்பம், குற்றால நீர்வீழ்ச்சி.

மேன்மை தங்கிய சென்னை கவர்னர்
ஸ்ரீ ஸர் கிருஷ்ணகுமார் ஸின்ஹ்ஜி பவ்ஸின்ஹ்ஜி,
கே. ஸி. எஸ். ஐ., பவ்நகர் மஹாராஜா.



ஸ்ரீ எம். பக்தவத்ஸலம்
மராமத்து மந்திரி

கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்
சுகாதார மந்திரி

கனம் ஸ்ரீ ஜே. எல். பி. ரோச் விக்டோரியா
உணவு மந்திரி

ஸ்ரீ பி. கோபால ரெட்டி
நிதி மந்திரி

கனம் ஸ்ரீ வி. பெருமாள்சாமி ரெட்டி
கைத்தொழில் மந்திரி

கனம் ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா
முதல் மந்திரி

ரீ கே. மாதவ மேனன்
கல்வி மந்திரி

கனம் ஸ்ரீ பி. பரமேஸ்வரன்
கிராம அபிவிருத்தி மந்திரி



ஹெச். சீதாராம ரெட்டி
ரெவின்யூ மந்திரி



கனம் ஸ்ரீ கே. சந்திர மௌலி
ஸ்தல ஸ்தாபன மந்திரி

கனம் ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி
விவசாய மந்திரி

கனம் டாக்டர் டி. எஸ்.எஸ். ராஜன் அவர்கள் சுகாதார மந்திரி பதவியை 1951-ம் ஞு செப்டெம்பர் 17உ ராஜிநாமா செய்த பிறகு கனம் ஸ்ரீ களா வெங்கடராவ் செப்டெம்பர் 26உயிலிருந்து அப்பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முன்னுரை

பொதுஜனப் பிரதிநிதிகள் சென்னை ராஜ்ய ஆட்சி முறையை மேற்கொண்டு இப்போது ஐந்தாண்டுகளுக்கு மேலாகிறது. நமது தேசத்தின் சரித்திரத்திலேயே இந்த ஐந்து வருஷ காலமும் ஒரு சோதனைக் கட்டமாகும். முற்கால ஆட்சி முறையின் சின்னங்கள், தற்கால மாறுதல்கள் காரணமாகத் தோன்றும் இன்னல்கள், வருங்கால நல்வாழ்வுக்குரிய பலமான அஸ்திவாரம் கோலவேண்டிய கடமை ஆகிய எல்லாவற்றையும், அரசாங்கம் ஏக காலத்தில் கவனிக்க வேண்டியதாயிற்று.

இத்தகைய சோதனைகளுக்கும் நிர்ப்பந்தங்களுக்குமிடையே, சர்க்கார் தங்கள் ஒரே இலட்சியத்தை மறக்காமல் போற்றி வந்துள்ளனர். அதாவது, "எம் கடன் மக்களுக்குப் பணிசெய்து கிடப்பதே" என்னும் உயர்ந்த கொள்கையை அவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். மக்களுடைய நன்மையைக் கோரியும், அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றவும்தான், ஜனப் பிரதிநிதிகள் அரசாங்க பதவியை வகித்து வருகின்றனர்.

எத்தனையோ காலமாக நாம் கண்டு கொண்டிருந்த இலட்சியக் கனவுகள், கடந்த ஐந்தாண்டுகளில் நனவாகி இருக்கின்றன. மதுவிலக்கு, ஜமீன்முறை நீக்கம், நீதி—நிர்வாகப் பிரிவினை ஆகிய சீர்திருத்தங்கள், நம்முடைய எதிர்கால சந்ததியாருக்கு மிகச் சிறந்த நற்பயன் அளிப்பதோடு, சமூக அமைப்பிலேயே ஒரு புரட்சியை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மூல சாதனக்குறைவினால் ஏற்பட்ட முடக்கம், மற்றும் எத்தனையோ பெரிய சங்கடங்களுக்கும் இடையே, அநேக அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளன. இத்திட்டங்கள் கஷ்டமான உணவு நிலைமையை ஓரளவு சமாளிக்க உதவுவதோடு, பொதுவாகப் பொருளாதாரத்துறையில் ஸ்திரமான நிலையையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தக் காரணமாயிருக்கின்றன.

பிரிட்டிஷார் தங்கள் ஆட்சிக் காலம் பூராவும் நீர்ப்பாசனத்துக்காகச் செலவு செய்த தொகைக்கு மேலேயே, நாம் கடந்த ஐந்தாண்டுகளில், அதன் பொருட்டு இந்த ராஜ்யத்தில் செலவிட்டிருக்கிறோம். 1945–46-ம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்த நீர்ப்பாசனச் செலவு, 1951–52-ம் வருஷத்தில், சர்க்காரின் வரவு செலவுத் திட்ட மதிப்பின்படி, 10 கோடி ரூபாய்க்கு மேலாகியுள்ளது. இப்போது நமது ராஜ்யத்தில் மொத்தம் 101 லட்சம் ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது.

தவிர, நமது சென்னை ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி இரு மடங்கு அதிகமாகியுள்ளது. மின்சார அபிவிருத்திக்கான ஐந்து வருஷத் திட்டத்தில் மூன்றில் இரு பங்கு பூர்த்தியாகி விட்டது. இதன் மூலம் சுமார் 1,600 கிராமங்களுக்கு மின்சாரம் சப்ளையாகிறது. கிராமங்களுக்கு மின்சார வசதி செய்துகொடுப்பதில் இந்தியா முழுவதிலும் சென்னை ராஜ்யமே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. 1945–46-ம் வருஷத்தில் மின்சாரத் துறையில் அரைக்கோடி ரூபாய்க்குக் கொஞ்சம் அதிகமாக மட்டும் சென்னை அரசாங்கத்தார் செலவிட்டனர். ஆனால், 1951–52-ம் ஆண்டிலோ, பட்ஜெட் மதிப்பின் பிரகாரம், ஒன்பது கோடி ரூபாய்க்குமேல் செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, ஐந்தாண்டுகளில் நீர்ப்பாசனத் துறையில் ஏறக்குறைய பத்து மடங்கும், மின்சாரத் துறையில் இருபது மடங்கும் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது விளங்கும்.

இத்தனை சாதனைகளுக்கும் பொது ஜனங்களின் பூரண ஒத்துழைப்பே காரணமாயிருந்தது. சர்க்காருடன் மக்கள் மனமுவந்து ஒத்துழைத்ததால்தான், அநேக காரியங்களை நிறைவேற்றுவது சாத்தியமாயிற்று. ஆகவே, இவற்றை எல்லாம் சாதித்த பெருமை, நிச்சயமாக இந்த ராஜ்ய மக்களையே சார்ந்ததாகும். அதாவது பொது ஜனங்களாகிய உங்களுக்கே அப் பெருமை உரியதாகும்.

கடந்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்பட்ட க்ஷேமாபிவிருத்திகளை விளக்கும் வெளியீடுகளில் இப்புத்தகமும் ஒன்றாகும். உங்கள் சர்க்கார் என்னென்ன செய்தார்கள் என்பதை இதன் மூலம் உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். இதை அறிந்து கொள்ளவேண்டிய உரிமையும், இதுபற்றித் தீர்ப்பளிக்கும் பொறுப்பும் உங்களுக்கே உண்டு.

பி. எஸ். குமாரசாமி ராஜா

அறிமுகம்

பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே

முத்தமிழ் வளர்த்த பெருமை பழைய தமிழ் நாட்டின் மூவேந்தர்க்கும் உண்டு. ஆயினும், சிறப்பாக பாண்டிய மன்னர்கள் இந்தப் பணியில் தலைசிறந்துவிளங்கினுர்கள் என்பதை சரித்திர ஏடுகள் எடுத்துரைக்கின்றன.

பாண்டிய நாட்டின் தலை நகரான மதுரை நகரம் அரசியல் முக்கியத்துவம் பெற்றிருந்ததில் வியப்பில்லை. பன்னெடுங் காலமாக தமிழ்க்கலையின் தலைமைப் பீடமாக, அது புகழ் பெற்றுள்ளதை எவரும் மறக்க முடியாது. தமிழ்த் தாய் கொலு வீற்றிருக்கும் ராஜ மண்டபமாகத் திகழ்ந்த சிறப்பு, மதுரை மாநகரின் தனியுரிமையாகும். முச்சங்கங்களில் ஒன்முன கடைச் சங்கம், தமிழ்க் கலையையும் தமிழ் நாட்டுப் பண்பாட்டையும் பேணிக்காத்து வளர்க்கும் பெரும்பணியில் ஈடுபட்டிருந்தது.

சங்கம் கண்ட மதுரை

இந்தச் சங்கத்தின் அனுமதியும் பாராட்டும் பெற்ற

MADHU.

வையே சங்கநூல்கள் என்ற பெயரால் வழங்குகின்றன. திருமுருகாற்றுப்படை முதலாக உள்ள பத்துப்பாட்டும், அகநானூறு, புறநானூறு முதலிய எட்டுத் தொகையும், திருக்குறள், நாலடியார் முதலிய பதினெண் கீழ்க்கணக்கும் இந்த வகையைச் சார்ந்தனவாகும். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் நாட்டின் பல்வேறிடங்களில் பல்வேறு சமயங்களில் பல்வேறு புலவர்கள் இயற்றிய பாடல்களையெல்லாம் சேகரித்து, அவற்றுள் சிறந்தவற்றைத் தக்கவாறு தொகுத்து, முறைப்படுத்தி, நமக்களித்துள்ளனர். ஆகவேதான் மதுரைச் சங்கத்தை, 'தமிழ்க் குழவியின் செவிலித்தாய்' என்று புலவர் பலரும் வாயாரப் பாடி வாழ்த்துக் கூறிவந்துள்ளனர்.

பத்துப்பாட்டில் ஒன்றான 'மதுரைக் காஞ்சி' அந் நகரின் சிறப்பை பலவாறு விரித்துக்கூறுகிறது. நகர வர்ணனை கூறும்போது, கற்பனை நயத்துக்காக அதிசயோக்தியாகப் பலவற்றை அடுக்கடுக்காகக் கூறிக்கொண்டே போகாமல், அக்காலத்து மக்களின் வாழ்வைப்பற்றிய நுட்பமான குறிப்புகளை மிகப் பொருத்தமுள்ள இடங்களில் அழகாக எடுத்துக் கூறும் இயல்பு அறிந்து அனுபவிக்கத் தக்கதாகும்.

சிலம்பின் சிறப்பு

சிலப்பதிகாரக் காவியம் மதுரை நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளது. பாண்டிய மன்னனின் 'வளையாத செங்கோல் வளைந்த' விபத்து நேரிட்டது. நெடுஞ்செழியன் தன் உயிர் கொடுத்து வளைந்த அந்தச் செங்கோலை நிமிர்த்தி, தமிழ் நாட்டின் பரம்பரைப் புகழையும், செங்கோல் நெறியையும் நிலை நாட்டினான்; அத்துடன், கற்புக்கரசி கண்ணகியின் ஆற்றலும் புகழும் எல்லா மக்களும் அறியச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதன் விளைவாக, இளங்கோவடிகள் தமிழ் மக்களுக்கு ஒருகாவியப் பொக்கிஷத்தை நன்கொடையாக அளித்தார்; தமிழ்த் தாய்க்கு 'ஒரு மணியாரம்' காணிக்கையாகக்கிடைத்தது.

மதுரையிலுள்ள மீனாட்சியம்மன் கோயில், காண் போரையெல்லாம் வசீகரிக்கும் கம்பீரத்துடன் விளங்கு கிறது. அதை நடுநாயமாகக் கொண்டே, நான் மாட வீதிகளெல்லாம் தாமரைப்பூ இதழ்களின் அமைப்பைப் போல் நிர்மாணிக்கப் பட்டுள்ளன. அங்குள்ள திருமலை நாயக்கர் மஹாலும், மங்கம்மாள் சத்திரமும் அக்கால அரசியல் தலைவரின் கலைவளர்ச்சிக்கும் பொதுநல சேவைக்கும் சிறந்த உதாரணங்களாகும். ஆண்களைப்போன்றே பெண் மணிகளும் ஆட்சிப் பொறுப்பைத் திறம்பட நடத்திக்காட்ட முடியும் என்பதற்கு ராணி மங்கம்மாள் வரலாறு சிறந்த சான்றாகும். இவை மட்டுமல்லாமல் மதுரை நகரைச் சார்ந்துள்ள மாரியம்மன் தெப்பக்குளம் பார்த்து ஆனந்திக்க வேண்டிய இடமாகும்.

நாட்டு நலங்கருதி

அந்த நிகழ்ச்சியை மறக்க முடியவில்லை. அன்றொரு நாள். ....வைகையிலே பெருவெள்ளம். மதுரை பூராவும் அல்லோலகல்லோலம். இன்னும் சில நிமிஷங்களில் நகரமே வைகையில் மூழ்கி, எங்கும் ஒரே வெள்ளக்காடாகி விடும் போலிருந்தது.

அப்போதிருந்த பாண்டிய மன்னன் ஓர் உத்தரவு போட்டான். ' வீட்டுக்கு ஓர் ஆள், ஒரு மண் வெட்டி, கூடையுடன் வரவேண்டும் ' என்ற அந்த உத்தரவை எல்லா மக்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். நாட்டைக் காக்க அத்தனை பேரும் வந்தார்கள். ஏன்? கடவுளே ஒரு கிழவியின் சார்பாகக் கூலிக்காரனாய் வந்ததாகத் திருவிளையாடல் புராணக்கதை. வைகையின் வெள்ளம்தணிய வழி கோலப்பட்டது. மதுரை மக்கள் மாபெரும் விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர். கூட்டு முயற்சியால் ஆகாத காரியம் எதுவுமில்லை என்பதற்கு இது ஒரு சான்று.

அதே சமயத்தில், கடமையைச் சரிவர ஆற்றாதவர்கள் யாராலும், அது கடவுளே என்றாலும் கூட, அரசாங்க தண்டனைக்குள்ளாவார்கள் என்ற நியதி பண்டைக்

காலத்தில் இருந்ததையும இது விளக்குகிறது. பிட்டுக்கு மண் சுமந்த சொக்கநாதர்பட்ட பிரம்படி இதை நினைவூட்டுகிறது.

குடியாட்சித் தோற்றம்

காலப் போக்கில் எத்தனையோ மாறுதல்கள்; அரசியல் நெறியிலேயும், மக்களின் பொறுப்புணர்ச்சியிலேயும் பல புதுமைகள் மலர்ந்துள்ளன. தனி மனிதர் ஆட்சி போய் குறிப்பிட்ட வம்சத்தினரின் முடியாட்சி நீங்கி அந்நிய நாட்டாரின் அதிகார வர்க்க ஆட்சியும் ஒழிந்து, இப்போது குடியாட்சி நடந்து வருகிறது. அதற்கேற்ப, மன்னரின் தண்டனைக்குப் பயந்து அரசாங்க உத்திரவுகளை மக்கள் அமுல் நடத்துவது போய், தாங்களாகவே தங்கள் நன்மைக்கான பொது நலக்கடமைகளை உற்சாகத்தோடும், சந்தோஷத்தோடும், தீர்க்க தரிசனத்தோடும் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

மதுரை ஜில்லாவிலுள்ள கோடைக்கானல், இயற்கைத் தேவியின் அலங்கார மண்டபம். அங்கேயுள்ள நீரருவியும், ஏரியும், சீதோஷ்ண நிலையும், வெளிநாட்டு யாத்ரீகர்களுக்கு நம் நாட்டுத் தனிச் சிறப்பை எடுத்தோதுகின்றன. பழனி மலை, திருப்பரங்குன்றம், அழகர்மலை முதலியன சிறந்த யாத்திரை ஸ்தலங்களாகும்.

நிலவளம்

விவசாயம், கால்நடைகள் ஆகியவற்றின் அபிவிருத்தியை நவீன விஞ்ஞான முறையில் அமைத்திட அரசாங்கம் முயலும்

—இந்திய அரசியல் அமைப்பு ஷரத்து—48

நமது நாட்டிலே நமது ஆட்சி நடைபெறுவது ஒன்றும் அதிசயமில்லை. என்றாலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் நம்முடைய சர்க்கார் நம்முடைய நலம் கருதி எந்தெந்தத் துறைகளில் என்னென்ன செய்துள்ளனர் என்ற விவரத்தை, உண்மையை அறிந்துகொண்டால்தான் சுதந்திர வாழ்வின் பலனை, சக்தியை நுகர்ந்து அனுபவித்தவர்களாவோம்.

இந்த உலகத்தில் அனைவரும் அறிந்த ஒரு உண்மை—அதாவது போலிக்கும், பொய்க்கும், பகட்டும் புரட்டும், மேல் பூச்சும் விளம்பரத் தடபுடலும் தேவை—ஆனால் உண்மைக்கும் நியாயத்துக்கும் இவைகள் தேவையா ? இல்லவே இல்லை. ஆயினும் இந்த உண்மையைப் பூரணமாக, தெளிவாக அறிந்தபின்னர்தான் போலிப் பகட்டையும், பிரசாரத்தையும் தகர்த்து, அடியோடு விலக்க முடியும்.

மக்கள் சர்க்கார் பொறுப்பேற்ற சமயம் நாடெங்கும் இயற்கையின் கொடிய சோதனை. யுத்த காலத்தில் ஏற்பட்ட கொடுமைகள் நீங்காமல் நாட்டிலே நிலைத்து இயற்கையின் சோதனைக்குத்துணை வந்த விபரீதம். மழையில்லை, இதனால் உணவுப்பொருள் உற்பத்தி குறைந்தது. இறக்குமதி வசதியில்லை, பொருளாதார நெருக்கடி, வறுமையும் பஞ்சமும் வியாதிகளாகப் பரிணமித்து மக்களை வாட்டி வதைத்தன. ஆடைப் பஞ்சம், உணவுப் பஞ்சம், இம்மாதிரி எத்தனை எத்தனையோ கொடுமைகள்—இம்மாதிரி பலதரப்பட்ட விபரீதங்கள்.

கடமையும் பொறுப்பும்

ஆனால் மக்கள் பிரதிநிதிகள் கால விபரீதத்துக்காகக் கடமையைப் புறக்கணிக்க இயலுமா? கடமையை ஏற்றுப் பொறுப்புடன், நிதானமாக மக்கள் நலன் கருதி ஒவ்வொரு சிக்கலையும் சமாளித்து நிர்மாண முறையிலே பணியாற்றி வருகின்றனர்.

உணவு முனையில் எப்படிச் சமாளித்தனர் என்பது தானே முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்? வயிற்றுப் பாடு தீர்ந்தபிறகுதானே மற்றவை பற்றிய சிந்தனை எழும்? இந்த விவரங்களை அறியும் முன்னர் மதுரை ஜில்லாவின் இயற்கை அமைப்பைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும்.

மதுரை ஜில்லாவின் மொத்த விஸ்தீரணம் 3,115,718 ஏக்கர்கள். இவற்றில் 741,448 ஏக்கர்கள் வனப்பிரதேசமாகும். சாகுபடிக் குள்ளாகியுள்ள பிரதேசம் சுமார் 1,137,645 ஏக்கர்களாகும். சாகுபடிக்குள்ளாகாத ஆனால் ஓரளவு சாகுபடிக் கேற்றதாகவுள்ள பிரதேசம் சுமார் 263,593 ஏக்கர்கள். எனவே இந்த ஜில்லாவில் சாகுபடியாகும் பிரதேசம் மொத்தத்தில் 36 5 சத விகிதம் தான் என்று தெரியவரும். அடுத்தபடியாக மதுரை ஜில்லாவில் உணவு உற்பத்தி சம்பந்தமான விவரங்களைப் பார்க்கலாம்.

நல்ல பலனைக்காண

கடந்த 5 ஆண்டுகளில் உணவு உற்பத்தித் துறையில் இந்த ஜில்லாவில் மக்கள் சர்க்கார் எத்தகைய சிரத்தையுடன், திட்டத்துடன் பணியாற்றி பஞ்சம் ஏற்படாமல் பட்டினியால் மக்கள் வாடாமல் தடுத்துள்ளனர் என்பதைப் பார்க்கலாம்.

நிலத்தை நன்கு உழுது பண்படுத்தினுல்தான் நல்ல விளைவு காணமுடியும். ஏதோ பழங்காலக் கலப்பைகளைக் கொண்டு உழுதால் ஆழமாகப்பதிந்து மண்ணைப் புரட்டிப் பண் படுவதெப்படி? இதை மக்களிடையே வற்புறுத்திய மக்கள் சர்க்காரின் விவசாய இலாகாவினர் கடந்த நாலாண்டுகளில் 714 இரும்பு முனைக் கலப்பைகளை தந்து உதவியுள்ளனர்.

சாகுபடியாகும் பிரதேசத்தில் சுமார் 89,627 ஏக்கர்களில் இந்தக் கலப்பைகளைக்கொண்டு உழுது பலன் அடைந்துள்ளனர்.

பசுந்தழை உரம் விளைவுக்கு நல்ல ஆதாரம். உற்பத்தி அதிகரிக்க இந்தப் பசுந்தழை உரம் இதர உரங்களைப் போல முக்கியமானதாகும். விவசாய இலாகாவின் வற்புறுத்தலினுல் சுமார் 14,718 ஏக்கர்கள் பசுந்தழை உரத்தைக்கொண்டு சாகுபடி செய்யப்பெற்றது. இது தவிர விவசாய டிப்போக்கள் மூலம் விற்பனை செய்யப்பெற்ற உர வகைகளும், அவற்ருல் பயன் அடைந்த சாகுபடி விஸ்திரணத்தையும் பார்க்கலாம் :

உரம்.	டன்கள்.	சாகுபடியான பிரதேசம். ஏக்கர்.
பிண்ணுக்கு உரம்	19,347	173,637
ரஸாயன உரம்	5,486	169,952
கிராமக் குப்பை உரம், குப்பை உரம்	63,044	12,609

இவை தவிர நல்ல விளைவுக்கு முக்கியமான இன்னொரு

உபகரணம் உயர்ந்த பொறுக்கு விதைகளாகும். கடந்த நாலு வருஷங்களில் விவசாய இலாகா மூலம் 1,162 டன் உயர்ந்த விதைகள் விவசாயிகளிடையே விற்கப்பெற்றன. இதைக்கொண்டு 62,072 ஏக்கர்கள் சாகுபடியாகும். தவிரவும் இந்தப் பொறுக்கு விதைகளின் காரணமாக உற்பத்தியும் ஏற்கனவே உள்ளதைக் காட்டிலும் 15 சத விகிதம் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது இதன் மூலம் சுமார் 10 லக்ஷம் ரூபாய் பெறுமான 5,000 டன் தானியம் அதிகமாகக் கிடைத்துள்ளது.

சிறப்பான கண்டு முதல்

இந்த ஜில்லாவில் நெல் உற்பத்திக்கு அடுத்தபடியாகக் குறிப்பிடக்கூடிய சோளம், ராகி, கம்பு போன்ற தானிய வகைகளில் சுமார் 60,200 ஏக்கர்களில் ராகி விளைகிறது. பொறுக்கு விதைகளைக்கொண்டு சாகுபடி செய்த வகையில் கடந்த நாலாண்டுகளில் 10 ஆயிரம் ஏக்கர்களில் நல்ல விளைவு. சோளம் 277,000 ஏக்கர்களில் சாகுபடியாகிறது. Co, 9 என்ற பேருள்ள சோள விதையைக்கொண்டு முதலில் 578 ஏக்கர்களில் சாகுபடி செய்ய ஆரம்பித்து கடந்த நாலாண்டுகளில் 6,000 ஏக்கர்களில் இவற்றால் நல்ல பலன் காணமுடிந்தது.

கம்பு சாதாரணமாக 42,500 ஏக்கர்களில் சாகுபடியாகிறது. கடந்த நாலாண்டுகளில் 1,785 ஏக்கர்களில் பொறுக்கு விதைகளைக்கொண்டு சாகுபடி செய்யப்பட்டுள்ளது, XI என்ற பேருள்ள கம்பு விதையைக்கொண்டு பெரியகுளம் தாலூகாவில் பயிர் செய்யப்பட்டதில் 20 சத விகிதம் அதிக உற்பத்தி கண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

வரகு தானியம் சுமார் 67,700 ஏக்கர்களில் பயிராகிறது. இதிலும் நல்ல பலன் காண விவசாய இலாகாவினர் ஆலோசனை அளித்து வருகின்றனர்.

கடலைக்கொட்டை 146,000 ஏக்கர்களில் பயிராகிறது. நல்ல பொறுக்கு விதைகளைக்கொண்டு கடந்த நாலாண்டுகளில் 9,000 ஏக்கர்களில் சாகுபடியானதில் ஏக்கர் ஒன்

றுக்கு அதிகமாக 80 முதல் 120 மணங்கு வரை உற்பத்தியாகியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆமணக்கு 1,780 ஏக்கர்களிலும், எள் பயிர் 20,200 ஏக்கர்களிலும், துவரை, உளுந்து, கொள்ளு முதலியன 109,000 ஏக்கர்களிலும் சாகுபடியாகிறது.

கரும்பு தற்போது சுமார் 4,040 ஏக்கர்களில் விளைகிறது. Co. 419 என்ற பேருள்ள கரும்பு நாற்று நல்ல கரும்பு விளைச்சலைத் தருகிறது. தவிரவும் இந்த ஜில்லாவில் சர்க்கரை ஆலையொன்றும் இருக்கிறது. கரும்பு சாகுபடி அபிவிருத்தியைக் கவனிக்க கரும்பு விவசாய டிமான்ஸ்டிரேட்டர் ஒருவரும், கரும்பு இன்ஸ்பெக்டர் ஒருவரும் உள்ளனர்.

இந்த ஜில்லாவின் விவசாய இலாகாத் தலைமை ஸ்தலம் மதுரையிலுள்ளது. ஜில்லாத் தலைமையதிகாரியைத் தவிர மதுரை, வேலூர், திருமங்கலம், பெரியகுளம், திண்டுக்கல், பழனி, நிலக்கோட்டை, கோடைக்கானல், உத்தமபாளையும் ஆகிய ஊர்களில் 9 விவசாய டிமான்ஸ்டிரேட்டர்களும் உள்ளனர். பருத்தி, புகையிலை, சுமார் 170,700 ஏக்கர்களிலும் தானியப் பயிர்களைத்தவிர இதர காய்கறி வகை அனைத்தும் சுமார் 44,000 ஏக்கர்களிலும் பயிராகிறது.

அதிக உற்பத்திக்கு

ஏழை விவசாயிகள் நலன் கருதியும், அதிக உணவு உற்பத்தி இயக்கப்படியும் மக்கள் சர்க்காரின் விவசாய இலாகா செய்துள்ள இன்னும் சில முக்கியமான உதாரணங்களைப் பார்க்கலாம்:

விவசாயக் கருவிகள், உரங்கள், விதைகள் முதலியன வாங்கத் தவிக்கும் எளிய விவசாயிகளுக்கு வட்டியில்லாமல், கடன் உதவி செய்துள்ளனர். கடந்த நாலாண்டுகளில் சுமார் 1,61,460 ரூபாய்கள் விதை, உரம் வாங்கவும், 4,490 ரூபாய் விவசாயக் கருவிகள் வாங்கவும் விவசாயிகளுக்குக் கடன் உதவி செய்யப்பட்டது.

மேற்சொன்னதைத்தவிர, மக்கள் சர்க்கார் விவசாயிகள் தமது உற்பத்திப் பணியில் இன்னும் அதிகத் திறமையும், அக்கறையும் கொள்வதற்கான முறையில் உர வகைகளை நிறைய வாங்க ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ரூ. 200, அளிப்பதென்று தீர்மானித்தனர். இந்த வினியோகத்துக்கென தனிச் சிப்பந்திகளையும் நியமித்தனர். இவ்வகையில் மக்கள் சர்க்கார் இந்த ஜில்லாவில் மட்டும் 1950-ம் வருஷம் செலவு செய்த தொகை ரூ. 30,68,415, ஆகும்.

விவசாயக் கைத்தொழில்கள்

தற்போது இந்த ஜில்லாவில் விவசாய சம்பந்தமுள்ள பல சிறு தொழில்களும் நன்கு அபிவிருத்தியடைந்துள்ளன. தேன் கூடுகள் சுமார் 1,114 வைக்கப் பெற்று கடந்த நாலாண்டுகளில் சுமார் 8,600 பவுண்டு தேனும் சேகரிக்கப்பட்டுள்ளது. இவற்றின் நிகர விலை மதிப்பு சுமார் 13,000 ரூபாய்களாகும். மலைப்பிராந்தியங்களில் உள்ள செடி வகைகளைக்கொண்டு நிலத்துக்கான பசுந்தழை உரமாக்க முயற்சிக்கப்பெற்று நல்ல பலனும் கிடைத்துள்ளது.



நவீன கருவிகளான டிராக்டர்கள், புல் டோஸர் ஒன்றும், 10 ஆயில் எஞ்சின்களும், 10 பெட்ரோல் செட்டுகளும், இந்த ஜில்லாவில் விவசாயிகளிடையே வினியோகிக்கப்பட்டுள்ளன.

சைதாப்பேட்டை மத்திய விவசாய எஞ்சினியரிங் ஸ்டோர்ஸிலிருந்து 18 ஆயில் எஞ்சின்களையும், 37 மின்சார மோட்டார்களையும் இந்த ஜில்லா விவசாயிகள் தவணை

முறையில் வாங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. நவீன முறைகளில் விவசாய உற்பத்தியைப் பெருக்க மதுரை ஜில்லா மக்களுக்குள்ள விருப்பம் நன்கு தெரிகிறது.

விவசாயிகளுக்குத் தேவையான வண்டிப் பட்டைகள், அச்சுகள், கரும்புச் சார் பிழியும் கருவிகள், மண்வெட்டி, கோடரி போன்ற பல் வேறு வகை இரும்பு, எஃகு சாமான் களும அளிக்கப்பட்டுள்ளன.

எளிய விவசாயிகளுக்கு, சுமார் 112,000 மரவெள்ளிக் கிழங்குப் பதியன்களும்,78,000 சர்க்கரை வள்ளிக்கிழங்குப் பதியன்களும் இலவசமாக வழங்கப்பட்டன. தவிரவும் அதிக உற்பத்தியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள விவசாயி களுக்கு அவ்வப்போது பரிசும் அளிக்கப்படுகிறது.

இதர உதவிகள்

முன்பு எளிய விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்பட் டது பற்றி விளக்கப்பட்டது. விதைகள் மட்டும் அல்ல, உர வகைகளிலும் எளிய விவசாயிகளுக்குச் சுமார் ரூ. 2,629-4-6 பெறுமான உரமும், ரூ. 350-12-9 பெறுமான விதைகளும் இலவசமாக வழங்கப்பட்டன. இதனால் 667 ஏக்கர்கள் சாகுபடியாகி சுமார் 521 டன்கள் அதிகமாக்க முதல் ஆயிற்று. இதன் மதிப்பு சுமார் ரூ. 1,56,300 ஆகும்.

அனுபவ அறிவு உற்பத்தி செய்வோர்க்கு மிகவும் அவ சியமான உபகரணமாகும். திருச்சிராப்பள்ளி, திருநெல் வேலி, கோவை, ராமநாதபுரம், தஞ்சாவூர் முதலிய இடங் களுக்கு விவசாயிகளை அழைத்துச் சென்று ஆங்குள்ள உற் பத்தி நிலவரம், முறைகள் பற்றி அறிவிக்கப்படுகிறது. இதற்காக சுமார் ரூ. 1,096–0–6 செலவாயிற்று.

கலெக்டர் இஷ்டப்படி செலவு செய்யப்படும் நிதியி லிருந்து அவ்வப்போது விதைகள், புத்தகங்கள், விவசாய சம்பந்தமான மெடல்கள், சின்னங்கள் முதலியன பரிசளித்த வகையில் சுமார் ரூ. 535 செலவழிக்கப்பட்டது.

இந்த விவரங்கள் அனைத்தும் ஜில்லாவைப் பொறுத் தவை. அடுத்தபடியாக மாகாணவாரி விவரங்களைப் பார்க்க

லாம். நாடெங்கும் மழையின்மையால் தவிதவித்த நிலையில் மக்கள் சர்க்கார் பயமுறுத்தும் பஞ்சத்தைத் தடுத்து நிறுத்திச் சமாளிப்பதெப்படி என்ற விவரத்தை பொதுவான முறையில், அதாவது ராஜ்யம் பூராவிலும் நடைபெற்ற வேலைகளை அறிந்தால்தான் முடியும்.

யுத்த காலத்துக்கு முன்னர் சென்னை ராஜ்யம் சுமார் 5 லட்சம் டன்னுக்குக் குறையாமல் உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்தது. சாதாரண காலத்தில் நம் மாகாணத்தில் சுமார் 70 லட்சம் டன் உற்பத்தியாவதாக மதிப்பீடு. இதில் சுமார் 45 லட்சம் டன் அரிசி இந்தியாவின் இதர ராஜ்யங்களைவிட இந்த ராஜ்யம்தான் அதிக அரிசி விளைவிக்கிறது. ஆயினும் அரிசிப்பற்றாக் குறையால் நம் ராஜ்யம்தான் அதிகம் தவிக்கிறது! காரணம் இங்குள்ளவரில் மிகப் பெரும்பாலோர் 'அரிசி உணவையே பிரதானமாக உட்கொள்ளுவதுதான்.

உணவு இறக்குமதியென்றால் இலேசான காரியமா? இதற்காகச் செலவாகும் பணம் எவ்வளவு? இதற்கெங்கு போவது? இப்படியெல்லாம் நினைத்தாலே மனக்குழப்பம் தான். ஆயினும் மக்கள் சர்க்கார் மனம் கலங்கி விடவில்லை.

அயல் நாடுகளிடமிருந்து இறக்குமதியின் மூலம், பக்கத்து ராஜ்யங்களின் உதவியின்மூலம், தேவைக்கு அதிகப்படியான தானியங்களை வைத்திருப்போரிடமிருந்து கொள்முதல் செய்வதன்மூலமும் நெருக்கடியைச் சமாளிக்க முன்வந்தனா.

உபரி தானியக்காரர்கள் கொள்முதல் இயக்கத்துடன் ஒத்துழைக்கப் 'போனஸ்' கொடுக்கப்பட்டது. பங்கீடு முறையை ராஜ்யமெங்கும் விஸ்தரிக்கப் பெற்று கிடைப்பதை அனைவரும் சமமாகப் பகிர்ந்துள்ள வகை செய்யப் பெற்றது.

மத்திய சர்க்காரும் இந்த நெருக்கடி நிலையைக் கண்டு நம் ராஜ்ய சர்க்காருடன் ஒத்துழைத்துப் பட்டினிக்கு இலக்காகாவண்ணம் செய்ததுமன்றி, இயற்கையின்

சோதனையைக்கூட எதிர்த்து வெற்றி கண்டது அனைவரும் அறிந்த உண்மை.

ஜமீன்தாரி முறை ஒழிப்பு

மக்கள் சர்க்கார் பதவியேற்றபிறகு செய்துள்ள எத்தனையோ முக்கிய சமுதாய சீர்திருத்தப் பணிகளில் இதுவும் ஒன்று. முன்பு ஜமீன்தார்கள் சர்க்காருக்கும் மக்களுக்கும் இடையே ஒரு ஏஜெண்டாக இருந்து சர்க்காருக்கு ஒரு வரியும், தனக்கு ஒரு வரியும் வசூலித்து இருவகையிலும் ஜமீன் மக்களைக் கொடுமைப்படுத்திய விபரீதங்களை எவரும் மறக்கமுடியாது.

“இவர்களுக்கு மட்டும் என்ன இப்பேர்க் கொத்த வாழ்வு? தடியெடுத்தவண் தண்டல்காரன் என்கிற மாதிரி இவர்கள் படுத்தும் பாடு தாங்கவில்லையே? இவர்களுடைய தர்பாரில் இன்னும் எத்தனை காலமோ என்று ஏங்கித் தவித்த மக்கள், சுதந்திர சர்க்கார் பதவியேற்றதும் இது சம்பந்தமாக எதாவது செய்வார்களா? இந்த இருவகைக் கொடுமையிலிருந்து விடுதலை யுண்டா?” என்று கேட்பதற்குமுன்னர் “ஜமீன்தாரி முறை ஒழிப்பு மசோதாவை மக்களுடைய பிரதிநிதித்துவ சர்க்கார் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளனர். இந்த மசோதாவின் மூலம் இந்த ராஜ்யத்தில் உள்ள 2,810 ஜமீன்தாரிகளையும், 3,500 இனும் கிராமங்களையும் சுவீகரித்துக்கொள்ளும் உரிமையை மக்கள் சர்க்கார் பெற்றுள்ளனர். இதற்காகச் சர்க்காருக்கும் நஷ்ட ஈட்டுச் செலவு ரூ. 15¾ கோடியாகும். மக்களின் நலனை உத்தேசித்துச் சர்க்கார் இது பற்றிக் கவலைப்படவில்லை.

இதனால் ஜமீன்தாரிகளிலுள்ள மக்கள் இரட்டைக் கொடுமையிலிருந்து விடுபட்டு இதர ரயத்துவாரி விவசாயிகளைப்போல வாழ முடிந்தது. வரிச் சுமையும், செம்பாதி குறைந்தது. நிலத்தரகர்கள் போனதால் நில உரிமையும் கிடைத்தது.

மதுரை ஜில்லாவில் சுமார் 40 ஜமீன்தாரிகள் இருப்ப

தாக மதிப்பு. இவற்றில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனைய ஜமீன்தாரிகள் சர்க்காரால் சுவீகரிக்கப்பட்டு விட்டன. எடுத்துக்கொள்ளப்படாத சுமார் பனிரெண்டு ஜமீன்தாரிகள் நீதி ஸ்தலத்தின் உத்தரவை எதிர்பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலையில் உள்ளன.

மதுரை ஜில்லா மக்களும், ராமநாதபுரம் ஜில்லா மக்களும் இந்த ஜமீன்தாரிகளின் பெரும் கொடுமைகளுக்கு ஆளாகி நேற்றுவரை பட்ட அவதிகளை இங்கு அதிகம் விவரிக்கத் தேவையில்லை.

கால்நடை சம்ரட்சணை

மதுரை ஜில்லாவின் கால்நடை அபிவிருத்தியைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்க பல அம்சங்கள் உள்ளன.

தல்லாகுளம், பெரியகுளம், திண்டுக்கல், பழனி, கோடைக்கானல், போடிநாயக்கனூர், திருமங்கலம், தர்மத்துப்பட்டி ஆகிய இடங்களில் கால்நடை சம்ரட்சணை நிலையங்களுள்ளன. இவை தவிர பல் வேறிடங்களுக்குச் செல்லும் கால்நடை வைத்திய சாலைகளும் உள்ளன. நிலக்கோட்டை, கம்பம், ஒட்டன் சத்திரம் ஆகிய ஊர்களில் 3 சிறிய கால்நடை வைத்திய சாலைகள் இருக்கின்றன.

கால்நடை இலாகாவின் மேற்பார்வையில் 27 பெரிய காளைகள் இருக்கின்றன. இவற்றைத் தவிர 4 காளைகள் கால்நடை விநியோகத் திட்டக் குழுவினரின் மேற்பார்வை

யில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஜில்லா போர்டாரின் மேற்பார்வையில் 12 காளைகள் வைத்து போஷித்துப் வரப் படுகின்றன.

திருமங்கலம் பிர்க்காவில் கால்நடை வைத்திய சாலை யொன்றும் 5 காளைகளும் நாலு கோழிப் பண்ணைகளும் இருக்கின்றன.

வனவளம்

மதுரை ஜில்லாவின் காட்டுப் பிரதேச விஸ்தீரணம் சுமார் 7,41,448 ஏக்கர்களாகும் என்று கூறப்பட்டது. இவற்றில் விவசாயத்துக்குத் தகுதியுள்ள சில பகுதிகளைத் தற்போது காட்டிலாகாவினர் பயன்படுத்துவதுடன் வனவளப் பாதுகாப்பு அம்சத்திலும் பல பணிகளைச் செய்து வருகின்றனர். பழனி மலை, பெருமாள் மலை, மூலையார், கோவிலடி, பாம்புக்கல்லார் முதலிய இடங்களிலுள்ள காடுகள் நன்கு பாதுகாக்கப்படுகின்றன.

பொதுநல வசதிகள்

மழையையே எதிர்பார்த்து நிற்க வேண்டிய புன்செய் நிலங்களுக்கு நீர் நிலைகளின் மூலம் பாசன வசதி ஏற்படுத்தினால், நாட்டின் வளம் பன்மடங்கு பெருகுவதோடு, அம் முயற்சியில் ஈடுபடுவோருக்கு அழியாப் புகழும் உண்டாகும்.

—புறநானூறு
18-ம் பாட்டின் கருத்து

உணவு முனைக்கு, உற்பத்திப் பெருக்கத்துக்கு ஆதாரமானது நீர்ப்பாசன அபிவிருத்தி. இந்தத் துறையில் தக்க கவனமும் அக்கரையும் செலுத்தினால்தான் உற்பத்தி பெருகும். பஞ்சம் தலைகாட்டாது பறந்தோடிப் போகும். இதனை நன்குணர்ந்த சர்க்கார் நீர்ப்பாசனத் துறையில் இந்த ஜில்லாவிலும், ராஜ்யத்திலும் கடந்த 5 ஆண்டுகளில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றனர். முதலில் மதுரை ஜில்லாவில் நடைபெற்றுள்ளதைப் பார்க்கலாம்.

மதுரையை நினைத்தாலும் வைகை வந்து முன் நிற்கிறது. வைகையைப் பார்த்தால் புராண இதிகாச சரித்திரகாலம்

புராதன கலைப்பொக்கிஷம்



திருமலை நாயக்கர் மஹால்:

மதுரைக் கோபுரம்

உட்புறத் தோற்றம்

மாரியம்மன் தெப்பக்குள



வைகையில் நவீன தோணிப்பாலம்



மதுரை நீராவி மின்சார நிலையம்



ஹரிஜனங்களுக்கு—குடிதண்ணீர்

மாதர் நலம்

சிசு சம்ரட்சணம்

1946-லிருந்து மக்கள் சர்க்கார் நீர்ப்பாசனத்துறையில் இந்த ஜில்லாவில் மட்டும் வருஷவாரியாகச் செலவு செய்த தொகை எவ்வளவு என்ற விவரம் பின்வருமாறு :—

பெரியாறு டிவிஷன்:

	அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை.	ஆன செலவு. ரூபாய்.
1946–47	168	1,62,920
1947–48	140	1,29,656
1948–49	225	2,98,907
1949–50	200	3,57,194
	733	9,48,677

இதர டிவிஷன்

	அனுமதித்த திட்டங்கள் எண்ணிக்கை.	ஆன செலவு. ரூபாய்.
1946–47	48	32,934
1947–48	29	20,126
1948–49	88	52,187
1949–50	92	1,31,664
	257	2,36,911

அதாவது பெரியாறு டிவிஷன் மட்டும் சராசரி வருஷமொன்றுக்குச் சுமார் ரூ. 2,37,169 செலவில் 183 திட்டங்கள் நிறைவேறியுள்ளன,

இதர டிவிஷன்களில் வருஷமொன்றுக்குச் சுமார் ரூ, 59,228 செலவில் 64 திட்டங்கள் நிறைவேற்றியுள்ளன.

வெள்ளப் பெருக்கெடுத்து, வீணாகும் நீரைத் தேக்க முற்

படும் பாலாறு, பொரந்தலாறுத் திட்டம் நிறைவேறியதும் பழனிக்கருகாமையில் ஏற்கனவே பயிராகும் 6,579 ஏக்கர் களுடன் இன்னும் 15,295 ஏக்கர்கள் அதிகமாகச் சாகுபடி யாகும் வசதி கிடைக்கும் வாய்ப்புண்டு.

இவை தவிர பரப்பலாறு திட்டம் நிறைவேற 20 லக்ஷ ரூபாய் செலவாகுமென்று மதிக்கப்படுகிறது. சந்தன வர்த்தனி அபிவிருத்தித் திட்டத்துக்கும் ரூ. 20,000 ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆதிபுரம் குளம் வெட் டுக்கு ரூ. 75,000-யும், ஆனைக்குளம் அணைக்கட்டைப் புதுப் பிக்க ரூ. 14,500-மும் மைதள மண்ணடிக் குளம் மராமத்து ரூ. 52,000 செலவு செய்து பாசன வசதிகளைச் செய்யும் திட்டங்கள் மக்கள் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட் டுள்ளன.

மதுரை ஜில்லாவில் கடந்த 5 ஆண்டுகளில் மக்கள் சர்க் கார் மேற்கொண்ட பணிகளைப்பற்றி இதுகாறும் விவரிக் கப்பட்டது. அடுத்த படியாக சென்னை ராஜ்யத்தில் பொதுவாக மக்கள் சர்க்கார் மேற்கொண்டுள்ள வேலைத் திட்டங்களைப் பார்க்கலாம்.

1946-ம் வருஷம் ஆட்சிப் பொறுப்பேற்ற மக்கள் சர்க் கார், உணவு உற்பத்தித் துறையில் இந்த ராஜ்யம் எதிர் பார்க்கும் பலனைக் காணவேண்டுமானால் நீர்ப்பாசன வசதி பெருகவேண்டும். எனவே இதற்கான சகல வழி துறை களையும் தீவிரமாகக்கொண்டு பற்பல திட்டங்களை நிறை வேற்றத் தீர்மானித்தனர்.

1946–47-ம் வருஷத்திலிருந்து 1952–53-ம் வருஷம் வரையிலுள்ள 7 வருஷ காலத்திற்குள் நீர்ப்பாசன வசதிக் கென மூலதனக் கணக்கிலிருந்து ரூ 40 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டது. கடந்த ஐந்து வருஷங்களில் இவ் வினத்தில் ரூ. 20 கோடி செலவாகியிருக்கிறது. அடுத்து வரும் இரு வருஷங்களில், வருஷத்துக்குப் பத்து கோடி ரூபாய் வீதம் செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதலில் இந்தத் திட்டங்களில் பெரிய திட்டங்கள், குறுகிய காலத் திட்டங்கள், நடுத்தரத் திட்டங்கள் என்று

மூவகையாகப் பிரித்து உடனடியாக பயன் அளிக்கக்கூடிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

குறுகிய காலத் திட்டங்கள் என்ற இனத்தில் கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 296 திட்டங்கள் நிறைவேறியுள்ளன. இவற்றிற்கான செலவோ சுமார் (ரூ. 293 லட்சமாகும்.) 4 கோடி ரூபாய்களாகும்.

1949-ல் இந்தக் குறுகிய காலத் திட்டங்களின் கீழ், ஏரி குளங்கள் அபிவிருத்தித் திட்டம் என்ற இன்னொரு அம்சமும் மேற்கொள்ளப்பெற்றது. இதனால் தூர்ந்து கிடக்கும் பல்லாயிரக்கணக்கான ஏரிகள் செப்பனிடப்படும். இவ்வேலைக்கென ரூ. 139 லட்சம் செலவில் 1,528 திட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

மழையின்மையால் கடந்த 5 வருஷங்களும் நாட்டுக்கு எவ்வளவோ கொடுமைகள் விளைவித்தன. அதிக உணவு உற்பத்தி இயக்கம் முழு வெற்றி அடையாமற் போனதற்கு இந்த மழையின்மைதான் பெருமளவு காரணம். ஆயினும் நீர்ப்பாசன வசதிக்கான பல்வேறு திட்டங்கள் யாவும் நிறைவேறியிருப்பது இவ்வகையில் ஒரு பிரமாத சாதனையாகும், ஏனெனில் இந்தத் திட்டங்களும் நிறைவேறாமலிருந்தால் நாடு பஞ்சத்தில் அடிபட்டுத் தவித்திருக்கும் என்பது உறுதி.

குறுகிய காலத் திட்டங்களுக்கு அடுத்தபடியாக நடுத்தரத் திட்டங்கள் பரிசீலிக்கப் பெற்று 9 திட்டங்களுக்கு அனுமதியும் அளிக்கப் பட்டுவிட்டது. இவற்றிற்காக மக்கள் சர்க்காருக்கு ஆகும் செலவோ சுமார் 44 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மணிமுத்தாறு திட்டம்; மலையாளம் மலம் புழா திட்டம்; சேலம், கோவைக்குப் பெரும் பயன் தரும் மேட்டூர்க் கால்வாய்த் திட்டம்; கிருஷ்ணா, காவேரி டெல்டாவில் வடிகால் திட்டங்கள்; மேல் பெண்ணாறு திட்டம்; கோவை ஜில்லாவில் அமராவதித் திட்டம்; மதுரை ஜில்லாவில் வைகை நீர்த்தேக்கத் திட்டம்; துங்கபத்திரை அணைத் திட்டம், கீழ்பவானித்

திட்டம், கிருஷ்ணா—பெண்ணாறு திட்டம் ஆகிய பல்வேறு சிறிய பெரிய திட்டங்களும் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்,

மக்கள் சர்க்காரின் இந்த மாபெருந்திட்டப் பணிகளில் மக்களும் மனமுவந்து கலந்து ஒத்துழைத்து சுபீட்சப் பாதையில் தோளோடுதோள் சேர்ந்து வருவது குறிப்பிடத் தக்கது, பெருமைப்படத்தக்கது.

விவசாய வளம் சிறக்க, பாசனவசதி பெருக நாடு சுபீட்சப் பாதையில் முன்னேறும்போது சாதாரணப் பாதைகள் அத்தியாவசியமாய்விடுகின்றன !

'பாதைகள்' என்று இப்படிச் சொல்லிவிடுவதால் மட்டும் இந்தத் துறைப்பணிகள் சுலுவாய் விடுகின்றனவா ? ஏழு லட்சம் கிராம இணைப்புகள், இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட நகரங்களின் தொடர்பு—இந்த நாட்டுக்குப் பெரியதொரு ஆதரவாகும். பாதை இணைப்பே மக்களின் கூட்டுறவுக்கு வழிவகுக்கும் பெருந்தொடர்பாகும்.

சாலை வசதிகள்

போக்குவரத்து வசதிகளிருந்தால்தான் பொருள்கள் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்லவும், மக்கள் பிரயாண வசதிகளை நன்கு முடித்துக் கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கும். இந்தத் துறையில் ராஜ்யத்தில் பொதுவாகப் பல்வேறு சாலைகள் விஸ்திரிப்புத் திட்டங்கள் நிறைவேறியுள்ளன, மத்திய



சர்க்காரும் இவ்வகையில் தங்களுடைய தேசியச் சாலைகள் திட்டம் மூலம் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகளைச் செய்து வருகின்றனர்.

யுத்த பிற்காலச் சாலை அமைப்புத் திட்டம் ஒன்றை வகுத்து ராஜ்ய சர்க்கார் பிரதானப் பெரும் சாலைகளையும், கிராமச்சாலைகள் பலவற்றையும் அபிவிருத்தி செய்திருக்கின்றனர், முதலில் மதுரை ஜில்லாவில் இவ்வம்சத்தில் ஆற்றியுள்ள பணிகளைப் பார்க்கலாம்.

மதுரை ஜில்லாவின் விஸ்தீரணம் 4,883 சதுர மைல்களாகும், ஜில்லாவில் உள்ள கிராமங்களோ சுமார் 1,081 ஆகும், 1941-ல் 2,473,009 பேர்களாயிருந்த ஜனத்தொகை இன்று 2,884,994 ஆகப் பெருகியுள்ளது. இவர்களில் பெரும்பாலோர் கிராமவாசிகள். இந்தக் கிராமப் போக்குவரத்து ஒரு காலத்தில் எவ்வளவு கேவலமாக இருந்தது? ஆனால் கடந்த 5 ஆண்டுகளுக்குள் மக்கள் சர்க்கார் எடுத்துக்கொண்ட சிரத்தையினால் இப்போதேற்பட்டுள்ள வசதிகளை ஓரளவாவது அறிந்துகொண்டால், கடந்ததை நினைத்துக் கவலையுற வேண்டாமல்லவா?

மதுரை டிவிஷன் ஹைவேஸ் இலாகாவின் மேற்பார்வையில் பல வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

முதலில் கிராமங்களை முக்கியமான ஸ்தலங்களுடன் இணைக்கும் புதிதாகப் போடப்பட்ட சாலைகள் விவரத்தை கொஞ்சம் விளக்கலாம்.

	மை.	ப.
மதுரை தாலூகா.		
(1) நடு மதுரையிருந்து—மதுரை அருப்புக்கோட்டை மார்க்கத்தில் ...	1	0
(2) தனகங்குளத்திலிருந்து ஜ,எ ஸ்,டி ரோட்டு	0	4
(3) போடிநாயக்கனூர்—சங்கராபுரம்	4	4
பழனி தாலூகா,		
(4) உப்பிலிப்பட்டி—பெரியகோட்டை	6	0
(5) கல்மண்டபம்—இடைய கோட்டை	5	4
(6) வேலப்பட்டி — கூத்தாம் பூண்டி	4	0

	மை.	ப.
(7) சின்னப்பட்டியிலிருந்து – திருச்சி ரோடுக்கு	5	0
(8) சத்திர வெள்ளாலப்பட்டி–பால மேடு ரோடு	4	0
திண்டுக்கல் தாலூகா.		
(9) முள்ளிப்பாடி கிராம ரோடு	1	0
(10) பாடியூர் கிராம ரோடு	1	2
(11) தாமரைப்பாடி கிராம ரோடு ...	1	9
(12) வீரக்கால் கிராம ரோடு ...	1	2
(13) வெள்ளோடு டிரங்க் ரோடு ...	1	2
(14) தொட்டனூத்து கிராம ரோடு...	1	4
(15) பலக்கனூர் ரெயில்வே பீரர் ரோடு	0	2
(16) திருமங்கலம் — பாறைப்பட்டி ரோடு (கூட கோயில் வழியாக) ...	8	3
திருமங்கலம் தாலூகா.		
(17) மதிப்பனூர் –புதுப்பட்டி–சிவரக் கோட்டை	6	0
(18) மேலக்கோட்டை கிராம ரோடு	1	4
(19) ராயபாளையம் கிராம ரோடு ...	1	4
(20) செங்குளம்–சுப்பலாபுரம் ரோடு	4	0
(21) ஏழுமலை – சத்திரபட்டி குடிசேர் ரோடு	15	0
(22) மேலக்கோட்டை–திருமல் ரோடு	6	0
(23) கள்ளிக்குடி–வய்யூர்–நல்ல மரம் ரோடு	13	0
(24) சேடப்பட்டி–ஆலம்பட்டி ரோடு	12	0
(25) கடனேரி–கீழுங்குளம் ரோடு ...	1	6
(26) முருகனேரி–செங்குளம், சிலார்ப் பட்டி மோதகம் ரோடு—		
(27) சின்னரெட்டிப்பட்டி — சுப்பலா புரம்	3	0

	மை.	ப.
(28) வன்னிவேலப்பட்டி-கல்லுப்பட்டி ரோடு	3	7
(29) கஞ்சம் பட்டி — குன்னத்தூர் ரோடு	2	0
(30) சிவரக்கோட்டை—சலுப்பப் பின் ளையார் நத்தம்	2	0
(31) கவணை ரோடு	1	0
(32) பன்னிக்குண்டு — அம்மாப்பட்டி ரோடு	1	4
(33) செங்குளம் கிராம ரோடு ...	0	6
(34) சங்கரப்படை புதுப்பட்டி ரோடு	1	6
(35) பேரையூர்—சுப்பலாபுரம் ...	6	0

இவையனைத்தும் தாலூகா வாரியாக, புதிதாக அமைக்கப்பட்ட கிராமாந்திர சாலைகளாகும். தவிரவும் கிராமங்களை இணைக்கும் புதிய ரோடுகள் பல நூறு மைல்களுக்குப் போட்டுக்கொண்டுமிருக்கிறனர். இன்னும் பல கிராம ரோடுகள் போடுந்திட்டமும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மதுரை நகரில் வைகைக்குக் குறுக்கே ரூ. 2 லட்சம் செலவில் ஒரு கல்பாலம், தென்காசி, மதுரை ரோடில் திருமங்கலத்துக்கருகாமையில் இரண்டு பெரிய குழாய்ப் பாலங்கள், ஒட்டன் சத்திரம, தாராபுரம் ரோட்டில் ஒரு வாராவதி ஆகியவைகள் அனைத்தும் முடிக்கப்பெற்றுள்ளன.

மதுரைக்கருகில் டிரங்கு ரோடிலும், திண்டுக்கல், பழனி ரோட்டிலும் சிமிட்டி கான்கிரிட் போட சுமார் 7½ லட்ச ரூபாய்க்குமேல் செலவில் திட்டம்போட்டு வேலையும் நடைபெறுகிறது. கோடைக்கானல் காட் ரோடில் தார் போட ரூ. 85,000 செலவு செய்யவும் அங்கீகரிக்கப்பெற்று வேலை துரிதமாக நடைபெறுகிறது.

இன்னும் ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டிகள், பஞ்சாயத்துகள் நிர்வாகத்திலும் இந்தச் சாலை அமைப்புப்

பணிகள் போற்றத்தக்க அளவில் நடைபெறுகின்றன.

இதே சாலை விஸ்தரிப்பு வேலையைப் பொறுத்தவரையில் ராஜ்யம் பூராவிலும் நமது சர்க்கார் செய்துள்ள வேலை விவரங்களையும் கொஞ்சம் விவரித்தால்தான் பொதுவான அபிவிருத்திகள் நன்கு புலனாகும்.

ராஜ்யம் பூராவிலும் சாலைகள் அமைப்புக்கென யுத்த பிற்காலத் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. தேசிய சாலை அமைப்புத் திட்டச் செலவனைத்தையும் மத்திய சர்க்காரே மேற்கொண்டுள்ளனர். தற்போது இந்த ராஜ்யத்தில் எல்லா வகைச் சாலைகளும் சேர்ந்து சுமார் 37,000 மைல்கள் நீளமிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

விமானப் போக்குவரத்து

சென்னை ராஜ்யத்தின் பிரதான நகரங்களில் ஒன்றான மதுரை பிரசித்தி வாய்ந்த சரித்திர நகரம்; புண்ணிய க்ஷேத்திரம்; தமிழின் இருப்பிடம்; பெரிய வியாபார ஸ்தலம்; இந்த நகரத்துடன் சாலைகள் மூலமும், ரெயில்வே பாதை மூலமும் தினசரி லட்சக்கணக்கான யாத்திரிகர்கள் வருகிறார்கள்—போகிறார்கள்; தற்போது மதுரை விமானப் பாதையிலும் ஒரு கேந்திரமாகிவிட்டது.

மின்சார வசதி

பாபநாசம் மின்சாரத் திட்டத்திலிருந்து மதுரை ஜில்லாவின் தென் கோடிப் பிராந்தியத்துக்கு மின்சார வசதி கிடைக்கிறது. வடகோடிப் ப்பிராந்தியத்துக்குப் பைகாரா மின்சாரத் திட்டத்திலிருந்து வசதி கிடைக்கிறது.

கடந்த நாலாண்டுகளில் பாபநாசம் திட்டத்திலிருந்து 35 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பெற்றிருக்கிறது. தவிரவும் தொழில், வீடுகள் முதலியவற்றிற்கு உபயோகிக்கப்படும் மின்சார சக்தியும் முன்பு 684 ஆக இருந்தது, தற்போது 4,604 ஆகப் பெருகியிருக்கிறது.

விவசாய உபயோகத்துக்கென கடந்த நாலாண்டுகளில் 364 பம்பு செட்டுகள் அளிக்கப்பட்டு அதற்கான மின்சார சக்தியும் இணைக்கப்பட்டுள்ளது.

இன்னும் கிராமாபிவிருத்தித் திட்டத்திற்குள் அடங்கிய செங்குளம், உச்சப்பட்டி வடகரை, வேங்கடசமுத்திரம் முதலிய கிராமங்களுக்குச் சுமார் ரூ. 40000 செலவில் மின்சார வசதி அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

புதிய திட்டங்கள்

ராஜ்யம் பூராவிலும் மின்சார வசதி அளிப்பதற்கான பற்பல பெரிய திட்டங்களை மக்கள் சர்க்கார் மேற்கொண்டுள்ளனர். விவசாய அபிவிருத்திக்கும், தொழில் வளர்ச்சிக்கும் இன்னும் வானொலி, டெலிபோன் போன்ற சாதனங்களுக்கும் இந்த மின்சார சக்தி எவ்வளவு அவசியம் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

மின்சார சக்தியை மக்களின் க்ஷேம நலத்துக்கும் இதர அபிவிருத்திகளுக்கும் தக்கப்படி பயன்படுத்த மக்கள் சர்க்கார் பின்வரும் முறையில் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். ஏற்கனவே உள்ள பைகாரா, மேட்டூர், பாபநாசம் ஆகிய மூன்று ஹைட்ரோ மின்சார சக்தி நிலையங்களை இன்னும் விரிவாக்கவும், விசாகப்பட்டணம், காகிநாடா, விஜயவாடா, மதுரை ஆகிய இடங்களில் புதிதாகத் தர்மல் (நீராவி மூலம் மின்சார உற்பத்தி) நிலையங்கள் ஆரம்பிக்கவும், மின்சார விநியோகத்தைத் தேசியமயமாக்கவும் திட்டமிட்டுள்ளனர்.



தேசியமயமாக்கும் திட்டத்தின் முதல் பகுதியாக சென்னை மின்சார விநியோக கார்ப்பொரேஷனைச் சர்க்காரே மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. இதுகாறும் இந்த ராஜ்யத்தில் சுமார் 2,000 கிராமங்களுக்கு மின்சார விநியோகமளித்திருப்பதும் இந்தியாவிலேயே இந்தத் துறையில் இந்த ராஜ்யம்தான் முதலில் நிற்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. ராஜ்ய சர்க்காரின் 5 வருஷத் திட்டத்தில் மசகுந்திட்டம், மோயார்த் திட்டம், பாபநாசம் திட்ட விஸ்தரிப்புத் திட்டம் முதலியன அடங்கியுள்ளன.

சமீபத்தில் ஏற்படுத்தப்பெற்ற மதுரை தர்மல் நிலையமும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

கல்வி மறுமலர்ச்சி

இந்த அரசியல் அமைப்புச் சட்டம் அமுல் நடக்கத் தொடங்கிய பத்து வருஷ காலத்திற்குள், எல்லாக் குழந்தைகளுக்கும் பதினான்கு வயது முடியும் வரையில் இலவசக் கட்டாயக் கல்வி போதிக்க அரசாங்கம் முயலும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—45

மக்கள் அரசிலே மாசு பல நீங்கின. நன்மை பல நிரம்பியுள்ளன என்று சொல்வது ஒருபுறம் சரியானாலும் மனித வாழ்வின் ஜீவாதாரத் தேவைகளை பூர்த்தி செய்ய அவர்கள் செய்ததென்ன என்ற விவரம் அனைத்தையும் பூரணமாக விளக்குவது அவசியமாகும். உணவு உற்பத்தி குறையாமல் அதிகரிக்கச் செய்து வரும் பணிகள், நிலவளம் பெற, நீர்வளம் பெருக்கி வகுத்த திட்டங்கள் ஆகியவற்றைச் சரிவர புரிந்து கொள்ள, செயலாற்ற திறன் வேண்டும், இந்தத் திறனைப் பெற அறிவும் அனுபவமும் தேவையாகும்.

'ஆதாரக் கல்வி' என்ற பேருடன் விளங்கும் புது

முறைக் கல்வி உண்மையில் பண்டைக் கல்வி முறையே யாகும். பண்டைக் காலத்தில் 'கல்வி' வாழ்க்கையின் ஒழுக்கத்துக்கும், வளர்ச்சிக்கும் ஆதாரமாக இருந்ததே யன்றி வெறும் சம்பாதனையை மட்டும் குறிக் கோளாகக் கொண்டதல்ல. ஆங்கிலேயர்கள் இந்த நாட்டில் காலடி வைத்தது முதல் நம்முடைய புராதன உயர்ந்த கல்வி முறை நகர்ந்து அன்னியக் கல்வி முறை வந்தது. தாய்மொழியின் முக்கியத்துவம் போய் ஆங்கில மொழிக்கு மதிப்பு வந்தது.

பலனளிக்கும் கல்வி முறை

இந்த ஏட்டுக் கல்வியால் ஏதும் பயனில்லை. இந்தக் கல்வி முறை அடியோடு மாறவேண்டும். கல்வி ஒரு பெரிய இலட்சியத்தின் சாதனமாகும். எனவே கல்வியை வெறும் வயிற்றுப் பிழைப்புக்காக மட்டுமின்றி தனிப்பட்டவர் நலன், சமூக நலன், நாட்டு நலன் கருதி நன்முறையில் வாழ வகை செய்யும் ஆதாரக் கல்வியாக மாற்றவேண்டும் என்ற எண்ணம் காந்தியடிகளுக்குத் தோன்ற, அவருடைய சகாக்களான தேச பக்தர்களும் அதை மனப் பூர்வமாக ஏற்றனர்.

ஆதாரக் கல்வி முறை இளம் பிராயத்தில் சிறுவர் சிறுமியர் மிகவும் விருப்பமான முறையில் கல்வியைப் பேணிப் பயில வழிவகுக்கும் முறையாகும். வாழ்க்கையின் தேவைகள் என்ன? இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதெப்படி? இதற்காக என்ன என்ன செய்யவேண்டும்? இவையனைத்தையும் இளம் பிராயத்திலேயே அனுபவ ரீதியாக அறிந்து கொள்ளும் வாய்ப்பைத் தருவது இந்த ஆதாரக் கல்வி முறையேயாகும்.

எனவே நாட்டுமக்கள் நலன் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு பணியாற்றும் நம்முடைய மக்கள் சர்க்கார் இந்த ஆதாரக் கல்வி முறையை நம் ராஜ்யத்தில் அமுலுக்குக் கொண்டு வந்ததில் அதிசயமில்லையாயினும் அளவு கடந்த மகிழ்ச்சியடைதற்குரிய பணியாகும்.

சென்னை ராஜ்யத்தில் தற்போது ஆதாரக் கல்விப்

பள்ளிக்கூடங்கள் 350 இருக்கின்றன. ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிகளோ 48 உள்ளன. இவற்றில் 4,240



ஆசிரிய மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் மேலும் அதிக ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப் படும். தவிர இந்த ராஜ்யம் பூராவிலும் 37,000 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.

கட்டாய இலவசக் கல்வித் திட்டத்தை இப்போது சில பகுதிகளில் அமுல் செய்துள்ளனர். சீக்கிரமே இது விஸ்தரிக்கப் பெறுவதற்கான பரிசீலனை நடைபெற்று வருகிறது.

ஆரம்பக் கல்வி முறை, படிப்படியாகக் கல்வி முறையிலும் தேர்ச்சி பெற விரும்பும் சிறுவர் சிறுமியருக்கு அஸ்திவாரம் போன்றதாகும்.

ஆரம்பக் கல்வி முறைக்கு அடுத்ததாக நடுத்தரக் கல்வி முறையாகும். இந்த இனத்தில் 1945-ல் 745 நடுத்தரப் பள்ளிகளே இருந்தன. தற்போது இத்தொகை இரட்டிப்பாக அபிவிருத்தியாகி 1,354 பள்ளிக்கூடங்கள் உள்ளன வென்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரிப் படிப்பு, கல்வியிலே உயர்தர அம்சங்களைப் பயிலுவதற்கான சந்தர்ப்பமளிக்கும் அத்தியாவசிய சாதனமாகும். மக்கள் சர்க்கார் இந்தக் கல்வி முறைக்கும் தேவையான ஆதரவையும் ஊக்கத்தையும் அளிக்க முன் வந்ததால் கடந்த ஆண்டுகளில் தனிப்பட்டோர் நிர்வாகத்தில் மட்டும் 17 புதிய கல்லூரிகள் ஆரம்பிக்கப் பெற்றன. ராஜ்யம் பூராவிலும் முன்பு 78 ஆகவிருந்த கல்லூரிகள் தற்போது 100 ஆகப் பெருகியுள்ளன.

இளம் பிராயத்தில் கல்வி பயில வகையில்லாமல் வாழ்க்கைப் பாதையில் மிகவும் கஷ்டத்துடன் நகர்ந்து பெரியவர்களானவர்களுக்கு அதாவது முதியோர்களுக்கும் கல்வி கற்பிக்க மக்கள் சர்க்கார் ஊக்கங் காட்டுவது குறிப்பிடத்தக்கது. [சென்னை ராஜ்யத்தில் 1,166 முதியோர் கல்விப் பள்ளிக்கூடங்கள் இருங்கின்றன. கிராமக் கல்லூரிகள் 10 இருக்கின்றன. தவிர நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கு உயர்தர எஞ்சினியரிங் பயிற்சி அவசியம். முன்பு ஒரே எஞ்சினியரிங் கல்லூரிதான் இருந்தது. தற்போது, 5 எஞ்சினியரிங் கல்லூரிகள் உள்ளன.

இது வரை பொதுவாக ராஜ்யம் பூராவிலும் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளை விவரித்தோம். அடுத்தபடியாக மதுரை ஜில்லாவில் கடந்த ஐந்தாண்டுகளில் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியும் விவரிக்க வேண்டியதாகும்.

கல்லூரிப் படிப்பைப் பொறுத்தவரை மதுரை ஜில்லாவில் அமெரிக்கன் மிஷின் கல்லூரி, மதுரை சர்க்கார் கல்லூரி, ஆகிய இரண்டும் ஏற்கனவே உள்ளவையாகும். சமீபத்தில் லேடி டோக் கல்லூரியும், தியாகராயா கல்லூரியும் சர்க்கார் மானிய உதவியுடன் ஆரம்பிக்கப் பெற்ற தனிப்பட்ட கல்லூரிகளாகும்.

மக்கள் சர்க்கார் பதவியேற்ற பிறகு இந்த ஜில்லாவில் பல நடுத்தரப் பாடசாலைகள் ஆரம்பமாகியுள்ளன,

பெரிய குளத்தில் சர்க்காரின் நேர் பார்வையில் ஒரு நடுத்தரப்பெண் பள்ளி ஆரம்பிக்கப் பெற்றது. நடுத்தரப் பள்ளிகள் என்றதும் பத்தாவது படித்த மாணவனின் இரண்டுங் கெட்ட நிலை பற்றி நினைவுண்டாகிறது.

பத்தாவது படித்தும் கல்வியில் பூரணத் தேர்ச்சி உண்டாவதற்கிடமில்லை. ஒரு கைத்தொழிலும் தெரியாது. பாரம் பரியத் தொழிலோ இந்த அரை குறைப் படிப்புக்குப் பலியாகி விட்டது. அதாவது மறந்து விட்டது! மேல் படிப்புக்கோ வசதியில்லை. இந்த நிலையில் ஒரு குமாஸ்தா உத்தியோகந் தேடித் தான் போகவேண்டும். ஆனல் ஒரு

ஷந்தோறும் இம்மாதிரி ஆயிரக் கணக்கில் வெளிவரும் 'பத்தாவது' படித்தவர்களுக்கு எங்கு தான், எவ்வளவு தான் உத்தியோகம் தரவோ அல்லது கிடைக்கவோ முடியும்? இந்த 'இரண்டுங் கெட்ட நிலை' மாறினாலன்றி விமோசனமில்லை என்பதை உணர்ந்த மக்கள் சர்க்கார் நடுத்தரக் கல்விப் பயிற்சியில் ஒரு குறிப்பிட்ட தொழிற் பயிற்சியும் மாணவர்களுக்கு அளிக்க முடிவு செய்தனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் மதுரை ஜில்லாவில் பல பள்ளிக்கூடங்களில் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு கிறது.

மதுரை சேதுபதிப் பள்ளியில் எஞ்சினியரிங் தொழிற் பயிற்சியும், பசுமலைப் பள்ளியில் விவசாயப் பயிற்சியும், ஓ. சி. பி. எம். பள்ளியில் வீட்டு வேலைப் பயிற்சியும், திண்டுக்கல் செயின்ட்மேரிப் பள்ளியில் குமாஸ்தாப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

கல்லுப்பட்டியில் சர்க்கார் ஆதாரப் பயிற்சிப் பள்ளிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. சொந்தக் கட்டிடத்தில் நடைபெறும் இந்தப் பள்ளிக் கட்டிடச் செலவு மட்டும் $1\frac{1}{2}$ லட்சமாகும்.

திண்டுக்கல் அருகில் சின்னாளப்பட்டி காந்திக் கிராமத்தில் சர்க்காரிடமிருந்து மானியம் பெற்று பெண்களுக்கென பயிற்சிப் பள்ளியென்றும் நடைபெறுகிறது. சென்ட் பிலோமினு அநாதாசிரமம், செயின்ட் தெரிசா அநாதாசிரமம் ஆகிய இரண்டும் சர்க்கார் மானிய உதவி பெற்று நடைபெறும் கல்வி நிலையங்களாகும்.*

மதுரை ஜில்லாவில் 40 முதியோர் கல்வி நிலையங்கள் உள்ளன. தவிரவும் கட்டண இலவச ஆரம்பக் கல்வி முறைத் திட்டம் இந்த ஜில்லாவில் 40 கிராமாந்திரங்களில் அமுல் செய்யப்படுகிறது.

ஜில்லா போர்டு நிர்வாகத்தில் 1946-ல் 670 ஆரம்பப் பாடசாலைகள் இருந்தன. தற்போதோ 730 ஆரம்பப் பாடசாலைகள் உள்ளன.

தொழிற் கல்வி

பல்வேறு கைத்தொழில்களான, தச்சுவேலை, அச்சு வேலை, பொம்மை வேலை, மோட்டார் யந்திர வேலை முதலியனவும், மின்சாரம், மோட்டார், வானொலி முதலியனவற்றில் எஞ்சினியரிங் பயிற்சியும் அளிக்கும் பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையம் ஒன்று மதுரையில் அமைக்கப் பட்டுள்ளது. தமிழ் நாடு பாலிடெக்னிக் என்பது இதன் பெயராகும். தமிழ் நாட்டின் பிரதான நகரமான மதுரையில் இந்த நிலையம் ஏற்பட்டிருப்பது மிகவும் பலன் அளிக்கக்கூடிய சாதனமாகும்.

இதைத் தவிர பசுமலைத் தொழிற்பள்ளி, மதுரை ஆர்ட்ஸ் பள்ளிக்கூடம், ஸி. எஸ். எம். தொழிற்பள்ளி திண்டுக்கல், மதுரை செண்ட். ஜோஸப் பெண்கள் தொழிற் பள்ளி ஆகியவை சர்க்கார் மானிய உதவி பெற்று நடை பெறுகின்றன.

நம் ராஜ்யத்தில் சர்க்காரின் நேர்பார்வையில் தற்போது 8 பல தொழில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இவை தவிர பல தொழிற் பள்ளிகள் சர்க்கார் உதவியுடன் நடை பெறுகின்றன.

தேசிய மாணவர் படை

மக்கள் சர்க்காரின் நிர்வாகத்தில் கல்வி பல துறையிலும் அபிவிருத்தியடைந்துள்ள தென்பதற்கு இன்னுமோர் சான்று தேசீயமாணவர் படை அமைப்பாகும். தற்போது இந்தப் படையில் 1,959 கல்லூரி மாணவகள் அடங்கிய ஸீனியர் டிவிஷன் ஒன்றும், 4,050 பள்ளிக்கூட மாணவர்கள் அடங்கிய ஜூனியர் டிவிஷன் ஒன்றும் இருக்கின்றன. கட்டுப்பாடான வாழ்க்கை முறை, மரியாதை, நற்பழக்கம், தோழமை அனைத்தையும் ஒருங்கே பெற்று மாணவர்கள் இந்த நாட்டின் உன்னதப் பிரஜைகளாக வாழ இந்தப் படையமைப்பு ஒரு நல்ல சாதனமாகும்.

தற்போது ராஜ்யத்தில் உள்ள 16 கல்லூரிகளிலும்

69 நடுத்தரப்பள்ளிகளிலும் தேசீய மாணவர் படை யூனிட்டுகள் இருந்து வருகின்றன.

ஆஸ்தான கவிஞர்கள்

நாட்டின் அபிவிருத்திக்கும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் இன்றியமையாத அம்சம் மொழியாகும். நமது ராஜ்ய மொழிவளர்ச்சிக்கு ஆக்கமளிக்கும் நோக்கத்துடன் செய்து வரும் பணிகளுள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலேயாளம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ந்த கவிஞர்களை ஆஸ்தானப் புலவர்களாக நியமனம் செய்திருப்பது மிகவும் மகிழ்வுடன் குறிப்பிடத் தக்கதொரு பணியாகும். தவிரவும் இம்மொழிகளில் வெளிவரும் சிறந்த நூல்களுக்குப் பரிசும் அளிக்கப்படுகிறது.

பொது சுகாதாரம்

மக்களின் போஷாக்கு, வாழ்க்கைத்தரம் முதலியவற்றை உயர்த்தி, பொதுஜன சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதை, அரசாங்கம் தனது முதன்மையான கடமைகளுள் ஒன்ருகக் கருதும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—47

"சுவற்றை வைத்துத்தானே சித்திரம் எழுத வேண்டும்?" என்ற பழமொழி நல்லதோர் அறிவுரை என்பதை யாரும் அறியாமல் இருக்கமுடியாது. உடலிலே வலிமையிருந்தால் தான் அதாவது ஆரோக்கியமாயிருந்தால் தான் எந்த வேலையையும் செய்ய முடியும். கடமையில் கருத்துச் செல்லும். மனித சமுதாயத்தின் ஜீவாதார அம்சங்களில் சுகாதாரத்திக்குத் தான் முக்கியத்துவம் உண்டு. நாட்டு மக்கள் நலமுடன், ஆரோக்கியத்துடன் இருந்தால் தான் நாடு வலிவுடன் இருக்க முடியும்.

தற்போது ராஜ்யத்தில் ஆறு வைத்தியக் கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றின் பராமரிப்புக்கென முன்னைவிட

இரட்டிப்பு செலவுமாகிறது. நல்ல அனுபவமும், தேர்ந்த பயிற்சியும் பெற்ற டாக்டர்கள் நிறையத் தேவையாயிருப்பதால் இந்த வைத்தியக் கல்லூரிகள் இன்னும் அபிவிருத்தியை செய்ய வேண்டிய தென்னவென்றும் மக்கள் சர்க்கார் பரிசீலனை செய்து வருகின்றனர்.

மேற்சொன்ன ஆறு வைத்தியக் கல்லூரிகளில் சென்னையிலுள்ள இந்திய வைத்திய முறைக் கல்லூரியும் ஒன்ருகும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மருந்துக்காக மட்டும் சர்க்காருக்கான செலவு சுமார் $6\frac{1}{2}$ கோடி ரூபாய்களாகும்.

1947–ல் ராஜ்யம் பூராவிலும் 318 பிரசவ சிசு சம்ரக்ஷணை நிலையங்கள் இருந்தன. தற்போது 461-க்கு மேல் உள்ளன.

மலேரியாத் தடுப்பு சம்பந்தமான செலவு 1946–ல் சுமார் 9 லட்சம் வரை ஆயிற்று. தற்போதோ 13 லட்சத்துக்கு மேலாகிறது.

இந்திய வைத்திய முறையில் உள்ள கிராம வைத்திய சாலைகள் முன்பு 624 ஆக இருந்து தற்போது 712 ஆக அபிவிருத்தியுள்ளது.

ராஜ்யத்தில் அனேகமாக எல்லா சர்க்கார் தலைமை ஆஸ்பத்திரிகளிலும் ரத்த நிதி ஆரம்பிக்கப் பெற்று ரத்த சேகரமும் திருந்திய முறையில் நடத்தப் பெறுகிறது.

மதனபள்ளி, ராஜமஹேந்திரபுரம், திருச்சி, பெருந்துறை, தாம்பரம் ஆகிய இடங்களில் உள்ள க்ஷயரோக நிவாரண நிலையங்களுக்கு கொடுக்கப்படும் மானியங்களும் இரட்டித்து விட்டன.

அடுத்தாற் போல் மதுரை ஜில்லாவில் இந்தத் துறையில் நடை பெற்றுள்ள அபிவிருத்திகளைப் பார்க்கலாம். மதுரை நகரத்தில் உள்ள எர்ஸ்கின் ஆஸ்பத்திரி, திண்டுக்கல், கோடைக்கானல், பழனி, பெரியகுளம், உசிலம்பட்டி முதலிய இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளும், திண்டுக்கல் பெண்கள் ஆஸ்பத்திரியும் சர்க்காருடைய நேர் பார்வையில் நடைபெறுகின்றன.

இவற்றில் உள்ள படுக்கையின் தொகையை அதிகரித்தும், வைத்திய சாதனங்களை அதிகரித்தும் பலவித அபிவிருத்திப் பணிகளைச் செய்துள்ளனர்.

இவற்றைத் தவிர மதுரை ஜில்லாவில் 20 லோகல் பண்டு வைத்தியசாலைகளும், 6 முனிசிபாலிட்டி வைத்திய சாலைகளும் இருக்கின்றன.

தற்போது ஜில்லா பூராவிலும் 14 பிரசவ, சிசு சம்ரக்ஷணை நிலையங்கள் உள்ளன. பிளேக், காலரா போன்ற கொடிய தொத்து நோய்கள் வராவண்ணம் பாதுகாத்துக்கொள்ளவும், மீறி வந்து விட்டால் பரிகரிக்கவும் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். இதற்காக இரண்டு ஆம்புலன்ஸ் வண்டிகள் ஜில்லா போர்டாரிடம் எப்பொழுதும் தயாராயிருக்கின்றன.

ஜில்லா போர்டாருக்கு ஜில்லா பொது நலக் கமிட்டியால் இலவசமாகக் அளிக்கப்பட்ட மோட்டார் வண்டியில் ஒரு டாக்டர், ஒரு கம்பவுண்டர், ஒரு ஆர்டர்லியும் தேவையான மருந்துகளுடன் திருமங்கலம் தாலூகாவிலுள்ள போதிய வைத்திய வசதியற்ற பகுதிகளுக்குச் சென்று வைத்திய வசதி அளிக்கப்படுகிறது.

இலவச வைத்தியம்

இந்த சமயத்தில் மக்கள் சர்க்கார் மக்கள் நலம் கருதி சுகாதாரத் துறையில் செய்துள்ள இன்னொரு பெரும் சீர்திருத்தத்தை இங்கு சொல்லாமலிருக்க முடியாது. அதாவது முன்னெல்லாம் 50 ரூபாய்கள் வரை வருமான முள்ளவர்களுக்கு இலவச வைத்திய சிகிச்சை அளிக்கலாம் என்ற திட்டம் அமுலிலிருந்தது. ஆனால் தற்போது 100 ரூபாய் வரை வருமான மிருந்தாலும் அவர்களும் இலவச சிகிச்சை பெற அருகதை யுள்ளவர்களே என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதுத் திருத்த முறை மக்கள் சர்க்காருக்குப் பொது மக்களிடமுள்ள அக்கரையையும் சிரத்தையையும் எடுத்துக்காட்டப் போதுமானதாகும்.

மதுரையில் ஒரு வைத்தியக் கல்லூரி ஆரம்பித்து நடத்தும் திட்டம் ஒன்று பரிசீலனை செய்யப்பெற்று அதற்கான பூர்வாங்க முடிவுகளும் செய்து முடிக்கப் பெற்றுள்ளன. மதுரை எர்ஸ்கின் ஆஸபத்திரியில் ஒரு பல் வைத்தியப் பகுதியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பழனி சர்க்கார் ஆஸ்பத்திரியில் 16 படுக்கைகள் கொண்ட புது வார்டு ஒன்று திறக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல்லில் உள்ள ஆஸ்பத்திரியுடன் பெண்கள் ஆஸ்பத்திரியையும் இணைப்பதற்கான திட்டத்தை மேற்கொண்டு அதற்காக ரூ. 70,000 செலவு செய்யவும் அனுமதித்துள்ளனர்.

குடி தண்ணீர் விநியோகத் திட்டம்

நல்ல தண்ணீர் விநியோகம் சுகாதாரத் துறையில் மிக முக்கியமானதோர் அம்சம். சர்க்கார் நேர் பார்வையிலும், முனிசிபாலிட்டி, பஞ்சாயத்துகளும் குறிப்பிடத்தக்க முறையில் குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தை பொதுவாக ராஜ்யம் பூராவிலும் நிறைவேற்றி வருகின்றனர்.

மதுரை ஜில்லாவில், மதுரை நகரக் குடி தண்ணீர விநியோகத் திட்டத்தில் ரூ. 2,90,150 செலவில் அபிவிருத்தி வேலைகள் நடைபெறுகின்றன. இன்னும் கோடைக்கானலிலும், ஆவினியாபுரத்திலும் குடி தண்ணீர்த் திட்டவேலைகள் முறையே ரூ. 21,190 செலவிலும், ரூ. 93,000 செலவிலும் அனுமதிக்கப்பெற்று வேலை துரிதமாக நடக்கிறது.

திண்டுக்கல் முனிசிபாலிட்டியார் இரண்டு லாரிகள் மூலம் நகர முழுமைக்கும் குடி தண்ணீர் கொண்டு வந்து விநியோகித்து ஓரளவு தண்ணீர்ப் பஞ்சத்தைச் சமாளித்து வருகின்றனர்.

மதுரைத் தண்ணீர்த் திட்டத்தைத் தவிர அருகிலுள்ள கோச்சடைத் தண்ணீர் சுரப்பு அதிகரிப்பு திட்ட வேலைகளையும் மராமத்திலாகாவினர் மேற்கொண்டனர். இதற்கான செலவு ரூ. 3 லட்சமாகும். கோச்சடை மராமத்து தற்போது முடிவு பெற்று விட்டதால் மதுரையில் கருங் கோடையிலும் தண்ணீர்ப் பஞ்சம் இனி ஏற்பட வழியில்லை.

கிராமச் சீரமைப்பு

இந்தியாவின் ஜீவன் அதனுடைய ஏழு லட்சம் கிராமங்களில்தான் இருக்கிறது; என்று இந்தக் கிராமங்கள் அனைத்தும் பிறர் கையை எதிர் பாராமலும், தம்முடைய தேவையைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் சக்தியும் தகுதியும் பெறுகின்றனவோ, அன்றுதான், இந் நாடு பூரண சுதந்திரம் பெற்ற நாடக முடியும்.

—மகாதமா காந்தியடிகள

நாடு சுதந்திரம் பெற்றதும் நாம் எதிர்பார்த்ததனைத்தும் கிடைத்துவிடுமா? நம் நாட்டு வாழ்வுக்கும் செழிப்புக்கும் ஆதாரமாக இன்றளவும் இலங்கிவரும் ஏழு லட்சம் கிராமங்களைக் கடந்த 300 வருஷங்களாக மறந்து நகர நாகரிக மோகங்கொண்ட கூட்டத்தினர்தான் அன்னிய அரசாங்கத்தின் உதவியாட்களாக இருந்தனர் என்பதை மறந்துவிட முடியுமா?

கிராமங்கள்தான், நகரங்களில் உள்ளவர்களை மட்டும் அல்ல, நாட்டினர் அனைவரையும் மூலப்பொருள்களான உணவு, இதர தானியங்களை அளித்துப் போஷித்து வருகின்

றன. சர்க்காரின் பெரும் வருமானமான நிலவரியும் கிராமங்களிடமிருந்துதான் கிடைக்கின்றன.

ஆனால் நேற்றுவரை அதாவது 5 வருஷங்களுக்கு முன்னர் இந்தக் கிராமங்களின் நிலையென்ன? அவர்களிடமிருந்து அனைத்தையும் பெற்றுக்கொண்டு அவர்கள் உழைப்பில் வாழ்கிறோமே, ஆனால் அவர்களுக்கென்று நாம் ஏதாவது செய்துள்ளோமா என்று அக்கால சர்க்காரோ சர்க்காரைச் சேர்ந்தவர்களோ நினைத்ததுண்டா?

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாட்டில் உள்ள கிராமங்கள் அனைத்தும் சுதந்திரமாகவும், அனைத்தும் நல்ல நிலையிலும், நெறியான வாழ்விலும் அபிவிருத்தி அடைந்து வந்ததென்னவோ உண்மை, ஆனால் அன்னிய ஆட்சி, வியாபார மனப்பான்மை, நாகரீக மோகம், சொகுசான வாழ்க்கை, ஒழுக்கத்தில் நலிவு போன்ற தீய சக்திகள் கிராமங்களின் விரோதிகளாக நின்று அவற்றின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டன.

முதல்தர சாதனை

சுயராஜ்யம் அடைந்தவுடன் நிர்வாகப் பொறுபேற்ற மக்கள் சர்க்கார், மீண்டும் முன்போல இந்தக் கிராமங்கள் சுயேச்சையாகவும், சுய தேவைப் பூர்த்தியுடனும் வாழ வேண்டும் என்று உறுதியில் இதற்காகத் தனி இலாகா ஒன்றை ஏற்படுத்தி, முழு மூச்சுடன் கிராமப் புனருத்தாரண இயக்கத்தில் ஈடுபட்டது. உண்மையில் மக்கள் சர்க்காரின் சாதனைகளில் முதன்மையானது என்று கூறலாம்.

கிராமங்களின் அபிவிருத்தி ஒன்றையே பிரதான நோக்கமாகக்கொண்டு பணியாற்றும் இந்தக் கிராமாபிவிருத்தி இலாகாவின் மேற்பார்வையில் ராஜ்யம் பூராவும் இன்று 84 பிர்க்காக்களில் (ஒரு பிர்க்கா என்பது பல கிராமங்கள் அடங்கியது.) அபிவிருத்தி பணிகள் நடைபெறுகின்றன.

இந்தப் பிர்க்காக்களில் சுமார் 2,500 கிராமங்களுக்குமேல்

இருக்கின்றன. ஒவ்வொரு பிர்க்காவிலும் ஐந்து முதல் பத்து கிராமங்கள் அடங்கியுள்ளன.

கிராமவாசிகளின் சகல நலன்களையும் கவனித்தல்; விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை அளித்தல்; சுகாதாரத்தை அபிவிருத்தி செய்தல்; பிரதம சிகிச்சை, சிசு சம்ரட்சணை, சிசு வைத்திய சாலை அமைத்து ஆரோக்கியப் பணி புரிதல்; எழுத்தறிவின்மையைப் போக்கிப் படிப்பும், பொது அறிவும் வளரச் செய்தல், நூல் நூற்பு, கதர்ப் பணி, குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்தல்; இத்தகைய பல்வேறு அம்சங்களிலும் கிராமங்கள் சுய தேவைப் பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய முறையில் கிராம முன்னேற்றத் திட்டத்தை அமுல் செய்வதே கிராமாபிவிருத்தி இலாகாவின் திருப்பணியாகும்.

இலட்சிய ஸ்தலம்

மதுரை ஜில்லாவில் உள்ள திருமங்கலம் பிர்க்கா இன்று இந்த ராஜ்யத்தில் மட்டும் அல்ல, அகில இந்தியாவிலும் பாராட்டப் பெறும் உதாரணப் பிர்க்காவாகும். இந்தப் பிர்க்காவில் அடங்கியுள்ள ஒவ்வொரு கிராமமும் பல்வேறு வகையிலும் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. மேநாட்டுக் கிராமாபிவிருத்திப் பணியாளர்கள் பலரும் வட நாட்டு நிர்மாண ஊழியர்கள் பலரும் இந்தப் பிர்க்காவுக்கு வந்து ஆங்கு நடக்கும் பணிகளை நேரிலே கண்டு பாராட்டிச் செல்கின்றனர்.

ராஜ்யத்தின் பிர்க்கா அபிவிருத்திப் பணிக்கு இலட்சிய ஸ்தலமாக இருக்கும் திருமங்கலம் பிர்க்காவில் நடைபெறும் வேலை விவரங்களே பிற பிர்க்கா அபிவிருத்திப் பணிகளுக்கும் ஒரு உதாரணமாயிருக்கும் அல்லவா?

திருமங்கலம் தாலுகாவில் 238 கிராமங்கள் கொண்ட தொகுதியை, 11 பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும் அபிவிருத்திப் பணிகளை நடத்த ஒவ்வொரு கிராம ஊழியர் (கிராம சேவக்) நியமிக்கப்பட்டுள்ளனர். ஜில்லா அபிவிருத்திக்குழு ஒன்று அமைக்கப் பெற்று அதன்

ஆலோசனைகளுக்கிணங்க வேலைகள் நடத்தப் பெறுகின்றன.

சுத்தமான குடி தண்ணீர், கிராமங்களுக்கு எவ்வளவு அவசியம் என்றும், மூலாதாரமான இந்த இனத்தில் நேற்று வரை பல கிராமங்கள் வசதியற்றுத் தவிக்கின்றன என்பதையும் அனைவரும் அறிவர்.

கிராமாபிவிருத்தி இலாகாவினர் முதலில் குடி தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதில் கவனம் செலுத்தினர். இதற்கென்று ராஜ்ய சர்க்கார் ரூ. 70,000-ம், சாலைகள் அமைப்புக்காக ரூ. 70,000-மும், இதர அபிவிருத்தி வேலைகளுக்கென்று கலெக்டரின் யுக்தானுசார நிதியாக ரூ. 39,820-ம் மேற்படி அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்ய அளிக்கப்பட்டிருக்கிறது. தவிர இந்தமாதிரி அபிவிருத்தி வேலைகளை செய்வதிலும், ஆகும் செலவில் ஒரு பகுதியைய்ம் பொது மக்களே எடுத்து நடத்த முன் வருவதும் பெருமையுடன் குறிப்பிடத்தக்கதாகும்.

திருமங்கலம் பிர்க்காவில் 1949–50-ம் வருஷ முடிவு வரையில் 12 புதிய கிணறுகள் ஹரிஜனங்களுக்கும், 13 புதுக் கிணறுகள் ஊர்ப் பொது மக்களின் உபயோகத்துக்கென்றும் சுமார் 35,552 ரூபாய் செலவில் தோண்டப் பெற்றுள்ளன. இவை தவிர பழுது பார்க்கப்பெற்ற கிணறுகள் 32 ஆகும், இவற்றிற்கு ஆன செலவோ 26,705 ரூபாயாகும். இந்த 57 கிணறுகளுக்கும் ஆன செலவில் மக்கள் சர்க்காருக்கான செலவு ரூ. 40,259-ம் பொது மக்களே மனமுவந்தளித்த தொகை ரூ. 21,998-ம் ஆகும்.

1950–51-ம் வருஷம் மார்ச்சுமீ 31-ந் தேதிக்குள் 10 புதிய கிணறுகள் தோண்டி முடிக்கப் பெற்றுள்ளன. ஏற்கனவேயுள்ள 38 கிணறுகள் பழுதுபார்க்கப் பெற்றுள்ளன. இந்த 48 கிணறுகளுக்கும் சர்க்கார் மானியம் ரூ. 33,000-ம், பொது மக்கள் செலவு ரூ. 8,250. இவற்றில் 15 கிணறுகள் ஹரிஜனங்களின் உபயோகத்துக்காகும்.

பிர்க்கா அபிவிருத்திப் பணியில் இன்னொரு முக்கிய அம்சம் கிராம ரஸ்தாக்களை இணைத்தலும், சீர்திருத்தலுமாகும்.

எட்டுக் கிராமங்களில் புதிதாகவும், தொடர் பேற் படுத்தும் ரீதியிலுள்ள ரோடுகளை இணைத்தற்காகவும் ஆன செலவு ரூ. 39,685–2–0. இந்த ரஸ்தாக்கள் அமைப் புச் செலவில் மொத்த மதிப்பில் நாலில் ஒரு பகுதியைப் பொது மக்களே கொடுத்துள்ளனர். இவை தவிர ரூ. 20,000-க்கு மேல் செலவில் இன்னும் 10 ரஸ்தாக்களை அமைக்கத் திட்டமிட்டு வேலை நடைபெற்று முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. இவை அனைத்தும் 1951-ம் வருஷம் மார்ச்சுக்குள் முடிந்துவிடும்.

கலெக்டரின் யுக்தானுசார நிதியிலிருந்து, இந்தப் பிர்க்கா அபிவிருத்தி வட்டாரத்தில் கிணறுகள் தோண்ட தெருக்களை ஒழுங்குபடுத்த, பள்ளிக்கூடம் கட்ட, வாசக சாலை, கக்கூஸ்கள், மாதர் நல சென்டர், ஹரிஜனங்களுக்கு ஸ்நான அறை, சாக்கடை, ரேடியோ, இவைபோன்ற இதர மராமத்துப் பணிகள் ஆக 15 விதமான வேலைகளின் 135-அம்சங்களுக்கு ஆன ரூ, 1,18,062–10–11 செலவில் ரூ. 78,242–10–11 கிராம பொது மக்களால் பகிர்ந்து கொள்ளப்பெற்றது.

இந்த வட்டாரத்துக்குள் ஹரிஜன முன்னேற்றப் பணிகள் அதி தீவிரமாய் நடைபெறுவதும் குறிப்பிடத் தக்கது. ஹரிஜன சமூக முன்னேற்ற சென்டர்கள் 12-ம், நான்கு கிராமங்களில் 37 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் விவசாயத்துக்கும் அளிக்கப்பட்டுள்ளன. ஹரிஜன ஆண் களுக்காக 12 முதியோர் கல்வி சென்டர்களும் அமைக்கப் பட்டுள்ளன. சுமார் ரூ. 23,438 செலவில் குடி தண்ணீர்க் கிணறுகள் 30 வெட்டப்பட்டுள்ளன.

திருமங்கலம் பிர்க்காவில் 117 கூட்டுறவு சங்கங்களும், 71 பஞ்சாயத்துக்களும், 115 கிராம சேவா சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சுமார் ரூ. 3,300 செலவில் 2,500 புத்தகங்கள் கொண்ட மத்திய புத்தகசாலையொன்றும், அதிலிருந்து கிராமங்களில் ஏற்படுத்தியுள்ள 55 கிளை வாசக சாலைகளுக்கு புத்தகங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

சுய தேவைப் பூர்த்தி

கதர்ப்பணி இந்தப் பிர்க்காவில் சிறந்த அம்சமாகும். 1,058 ராட்டைகளை இந்தப் பிராந்தியம் பூராவிலும் விநியோகிக்கப்பெற்று தீவிர கதர் உற்பத்தி நடைபெறுகிறது. இது தவிர, அகில பாரத சர்க்கா சங்கமும் 1,500 ராட்டைகளைக் கொடுத்துதவியுள்ளது. நூல் நூற்பு மட்டுமின்றி நெசவும் பயிலுவிக்கப்படுகிறது. நெசவு மேற்கொள்ளுபவர்களுக்குச் சர்க்கார் மானியம் அளித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்வியைப் பொறுத்தவரை இந்தப் பிராந்தியத்தில் 134 ஆரம்பப் பள்ளிகளில் 8,124 பையன்களும், 3,967 பெண்களும் படிக்கின்றனர். இது தவிர ஆதாரக் கல்விப் பள்ளிகள் 15-ம் நடைபெறுகின்றன.

கிராமப் பொருளாதாரம் சிறக்கக் குடிசைத் தொழில் அபிவிருத்தி இன்றியமையாததாகும்.

கோழிப் பண்ணை, தேனீ வளர்ப்பு, கருப்புக் கட்டி, வார்தா முறை செக்கு அமைத்தல், நெசவு, மகஞ்சுளா அடுப்புப் போடல், பாய், கூடை முடைதல் முதலியன போன்ற இன்னும் பலவற்றிற்கும் தேவையான ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பெறுகிறது.

இந்தப் பிர்க்கா எல்லைக்குள் நடைபெறும் குஷ்டரோக நிவாரண சேவை விசேஷமாகக் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு மோட்டார் வண்டி மருத்துவ வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 15 கிராமங்களில் கிராம வாசிகளே ரூ. 81,750 சொந்தச் செலவில் 54,500 அடி நீளமுள்ள சாக்கடை வாய்க்கால் அமைத்துக் கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இம்மாதிரி ஒவ்வொரு துறையிலும் கிராம மக்கள் ஐக்கியத்துடனும், உயர்ந்த மனப்பான்மையுடனும் சோம்பலோ, அசிரத்தையோ இல்லாமல் வாழ்ந்து தம்மையும் தமது கிராம நலனையும் கருத்தில் கொண்டு பணியாற்றுவதன் மூலமே நாட்டு நலனைப் பெருக்கமுடியும். மக்கள் வேறு, மக்கள் சர்க்கார் வேறல்ல; மக்களே சர்க்கார் என்ற மனப்பான்மையுடன் நாட்டு நலப்பணியாற்றுவதையே பிரதானக்கொள்கையாகக் கொண்டுள்ளது இந்தக் கிராமாபிவிருத்தி இலாகா.

கூட்டுறவு

கிராமப் பொருளாதார நலனுக்கும் மூலாதாரமான குடிசைத் தொழில் வளனுக்கும் கூட்டுறவு இயக்கம் மிகவும் அத்தியாவசியமானது. மக்கள் சர்க்கார் பதவியேற்றது முதல் இந்தத் துறையில் மிகவும் கவனங்காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

முதலில் விவசாயிகளுக்குக் கடன் உதவி செய்யும் கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்குபடுத்தி விரிவான அடிப்படையில் பயன் அளிக்கும் சங்கங்களாக மாற்றி அமைத்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது (அதாவது 1950 முடிவில்) 753 விவசாயக் கடன் உதவிக் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இவைகளின் உதவி ஜில்லாவில் உள்ள பெரும்பாலான அதாவது 82·8 சதவிகிதக் கிராமங்களுக்குக் கிடைக்கிறது இந்தச் சங்கங்களில் 74,000 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். தவிரவும் இந்தச் சங்கங்களில் 58-ஐ பல நோக்குச் சங்கங்களாக மாற்றப்பட்டுப் பலதுறை வேலைகளிலும் அக்கறை கொள்ள வாய்ப்பேற்படுத்தப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்கள், சர்க்கரை, ரஸாயன உர வகைகள், இரும்புக் கருவிகள், துணிமணிகள் போன்ற சர்க்காரின் கட்டுப்பாட்டுச் சட்டத்துக்குள்ளான பொருள்களின் விநியோகத்தையும், பால் உற்பத்தி விநியோகம், உர வகை உற்பத்திப் பணி, வாசக சாலைகள், ரேடியோக்கள்

வானிலை ஆராய்ச்சி நிலையம்
'வையத்திலிருந்து
வானமளப்போம்'
கோடைக்கானல்:
ஏரியில் உல்லாசப்படகு
கோடையின் அழகுத்தோற்றம்
கண்ணைக்கவரும்—வேரி அருவி


ஆரோக்கியமும் அபிவிருத்தியும்
மதுரைத் தலைமை ஆஸ்பத்திரி
நோயாளியாயினும் — வேலையில் ஆர்வம்
வாகன ஆஸ்பத்திரி
சிறு கிராமங்களுக்கும் வைத்திய வசதி
பொம்மை வேலை
பொழுதுபோக்குக்காக
சர்க்கார் தொழிற்பள்ளி

அமைத்து நடத்தல், காட்சிகள், விளையாட்டுப் பந்தயங்கள் போன்ற பொது நல சேவைகளிலும் இந்த சங்கங்கள் ஈடு பட்டுள்ளன. இவை தவிர அங்கத்தினர்களுக்குத் தேவை யான கடன் உதவியும் செய்யப் பெறுகிறது. இந்த ஜில்லா வில் உள்ள பால் சப்ளை யூனியன்கள் வேலையும் குறிப்பிடத் தக்கனவாகும்.

1950-ம் வருஷம் முடிய 60 பால் சப்ளைச் சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. 1948 முதல் 1950 வரை இந்தச் சங்கங் களுக்கு சர்க்கார் வட்டியில்லாக் கடன் தொகையாக ரூ. 1,51,330 கொடுத்துள்ளனர். மதுரை கூட்டுறவுப் பால் சப்ளை யூனியனுக்கு விநியோகத்திற்குத் தேவையான ஒரு மோட்டார் வண்டி வாங்குவதற்காகச் சர்க்கார் ரூ. 8,100 கொடுத்துள்ளனர். இது தவிர 15 சங்கங்களுக்குத் தலா ரூ. 600 மானியமாகக் கொடுத்துதவியுள்ளனர்.

இந்த ஜில்லாவிலுள்ள விவசாய உற்பத்திப் பொருள் களைச் சேகரிக்கவும் வியாபாரம் செய்யும் சங்கங்களுக்குக் கிடங்குபோன்ற வசதிகளை அமைத்துக்கொள்ளச் சர்க்கார் ரூ. 38,950 கடனாகவும் ரூ, 44,500 இலவசமாகவும் அளித் திருப்பது குறிப்பிடத்தக்கது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முன்பு அதாவது 1946-ல் 2,899 தான் இருந்தன. தற்போதோ 6,171 உள்ளன. சங்கங்களில் அங்கத்தினர்களாயுள்ளவர் களுக்கு மட்டுமின்றி அங்கத்தினரல்லாதாருக்கும் கூட் டுறவுப் பண்டக சாலை மூலம் நூல் விநியோகிக்கப்பெறு கிறது. 1950-ம் வருஷம் இந்தக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தயாராகி விற்பனையான துணிகள் மட்டும் ரூ. 21,00,000 பெறுமானமாகும்,

கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களைப் போலப் பயன்தரும் பணியாற்றி வரும் குடிசைத் தொழில் கூட்டுறவுச்சங்கங்கள் வேலையும் குறிப்பிடத்தக்கனவாகும்.

கல்லுப்பட்டியிலுள்ள சாந்திநிகேதன் கிராமக் கைத் தொழிற் சங்கத்தினர் ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை யமைப்புக்காகத் திட்டமிட்டபோது சர்க்கார் ரூ. 13,500

பஞ்சாயத்து ராஜ்யம்

கிராமப் பஞ்சாயத்துக்களை அமைப்பதற்கான வழிகோலி, தனித்தனி சுயாட்சி ஸ்தாபனங்களாகப் பணியாற்றுவதற்கு அவசியமான அதிகார உரிமைகளை அவற்றுக்கு அரசாங்கம் அளிக்கும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—40

கிராமங்களின் புனருத்தாரணப் பணியில் மக்கள் சர்க்கார் கொண்டுள்ள அக்கறையைப்போல் கிராமங்களின் நிர்வாக முறையைத் திருத்தி உண்மையான பஞ்சாயத்து ராஜ்யம் நடத்துவதிலும் அக்கறை கொண்டுள்ளனர் என்பதற்குச் சமீபத்தில் நிறைவேற்றியுள்ள பஞ்சாயத்து மசோதாவே சான்றாகும்.

சரித்திர காலத்திலும் சரி, புராதன காலத்திலும் சரி இந்தப் பரந்த நாட்டில் உள்ள கிராமங்கள் அனைத்தும் கிராமப் பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்திலேயே கட்டுப்பட்டு, ராஜ்யப் பிரதானத் தலைமைக்கும் அடங்கி விசுவாசத்துடன் வாழ்ந்து வந்தன வென்பதற்குச் சான்றுகள் பல உண்டு.

இடைக் காலத்தில் அதாவது ஆங்கில ஆட்சி இந்த நாட்டில் தலை காட்டியதும் இந்தக் கிராமங்கள், தன்னிச்சை இழந்து தங்களுடைய நிர்வாகத் திறனையும் உரிமையையும் இழந்து செயலற்றுப்போயின. கிராமங்களின் க்ஷீணத்துக்கும், கிராம மக்களின் சீரான வாழ்வு தகர்ந்தமைக்கும் இதுவே காரணமாகும்.

கடந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பஞ்சாயத்து மசோதா 1951-ம் ஏப்ரலில் அமுலுக்கு வந்தது. இதன்படி 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள கிராமங்கள் அனைத்திலும் பஞ்சாயத்து ஆட்சி அமைப்பு ஏற்படவேண்டும். பஞ்சாயத்துகளுக்கு ஓரளவு சுதந்திரமும் உண்டு. முன்னைப்போல ஜில்லா போர்டுகளுக்கு பஞ்சாயத்துக்களிடம் மேலதிகாரமில்லை. சர்க்காரின் நேர் பார்வையிலேயே இவைகள் இயங்கும். சர்க்காரின் ரெவினியூ வருமானத்தில் $12\frac{1}{2}$ சத விகிதம் கிராமப் பஞ்சாயத்துக்களின் நிர்வாகச் செலவுக்கு ஒதுக்கப்பெறும். தவிரவும் பஞ்சாயத்துக்களுக்கு தங்களது எல்லைக்குள் வரி வசூலிக்கும் அதிகாரமும் உண்டு. கிராம மக்களே அங்கத்தினர்களையும் பஞ்சாயத்துத் தலைவரையும் தேர்ந்தெடுப்பர். இந்தப் பஞ்சாயத்துக்கள் அனைத்தும் மக்கள் சர்க்காருக்குக் கட்டுபட்டதேயன்றி வேறு ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கட்டுப்பட்டதல்ல. கிராம நிர்வாகத்தில் மட்டுமல்ல ; நீதி வழங்குவதிலும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் உண்டு.

ராஜ்யத்தில் தற்போதுள்ள கிராமப் பஞ்சாயத்துக்களின் தொகை 8,335 ஆகும். இன்னும் 15 ஆயிரம் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தப்படும். இதில் நிர்வாகச் சவுகரியத்தை உத்தேசித்து ரூ. 3,000 வருமானத்துக்குட்பட்டவை சிறிய பஞ்சாயத்துக்கள் என்றும் மேற்பட்டவை பெரிய பஞ்சாயத்துக்கள் என்றும், பிரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறையில் மதுரை ஜில்லாவிலுள்ள நிலைமையைப் பார்க்கலாம். மதுரை ஜில்லாவில் 255 சிறிய பஞ்சாயத்துக்களும் 300 பெரிய பஞ்சாயத்துக்களும் உள்ளன.

கிராமப் பிரதேசத்தில் கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர் சாலை வசதி, விளக்கு வசதி போன்ற பல்வேறு அம்சங்களி லும் பணியாற்றி அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளு வதே இந்தப் பஞ்சாயத்துக்களின் நோக்கமாகும்.

கடந்த நாலாண்டுகளில் கிராமாந்திர சாலைகள் போடு தல், புதுப்பித்தல் போன்ற வேலைகளை 105 பஞ்சாயத்துக் கள் அக்கரையுடன் கவனித்துள்ளன. 11 பஞ்சாயத்துக்கள் கல்வி அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பணியாற்றி யுள்ளன. 8 பஞ்சாயத்துக்களில் பெரிய புத்தக நிலையங் களும், 45 பஞ்சாயத்துக்கள் வாசகசாலைகளும் நடத்து கின்றன. சுகாதார சேவையில் 81 பஞ்சாயத்துக்களும், தெரு விளக்கு வசதிப்பணிகளை 24 பஞ்சாயத்துக்களுக்கு 5 பஞ்சாயத்துக்களில் மின்சார வசதியும் செய்யப்பட் டுள்ளன., ஒரு பஞ்சாயத்துக்குச் சொந்தத்தில் ஒரு வண்டிப்பேட்டையுண்டு. ஐந்து பஞ்சாயத்துக்களின் பார்வையில் பொதுச் சந்தையும் 89 பஞ்சாயத்துக்களில் ரேடியோ வசதியும், 13 பஞ்சாயத்துக் களில் குப்பை உர உற்பத்திப் பணியும் நடைபெறுகின்றன.

இவை தவிர இந்த ஜில்லாவின் நகரங்களை நிர்வாகம் செய்துவரும் முனிசிபாலிட்டிகளின் தொகை 6 ஆகும்.

மதுரை முனிசிபாலிட்டியின் முக்கிய பணிகளுள் குடி தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்காகக் அது மேற் கொண்ட முயற்சியே முக்கியமானதாகும். சாக்கடைத் தண்ணீர்த் தேக்கத்தைச் சீர்ப்படுத்துவதிலும் மழைத் தண்ணீர் வடிகால் அமைப்புக்கும் ரூ. 5½ லட்சம் செலவு செய்துள்ளது. இந்தியாவிலேயே சிறந்ததொரு சாக்கடைத் தண்ணீர்வள நிலப்பண்ணையை (Sewage farm) இந்த முனிசி பாலிட்டி நடத்துவது குறிப்பிடத்தக்கது. மேலூர் ரஸ்தா வில் குப்பை உற்பத்தி நிலையம் ஒன்றை ஒரு லட்ச ரூபாய் செலவில் 3 ரோடுகளைக் கான்க்ரிட் செய்திருப்பதையும், 6 புதிய பார்க்குகள் அமைத்துள்ளதையும் அவசியம் குறிப் பிடவேண்டும். சுப்பிரமணியபுரம், மதிச்சியம் கெஜெட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் காலனி எல்லீசா நகர்

காலனி முதலிய இடங்களில் டவுன் பிளானிங் திட்டப் படி வேலைகளும், ஒரு ஏழை வீடு திக்கான வேலைகளும் நடை பெறுகின்றன. கரும்பாளையத்தில் தொழிலாளர்களுக்காக வீடு கட்டும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகக்கூடி இன்னும் பல துறைகளிலும் இந்த முனிசி பாலிட்டி பயனுள்ள வேலைகளைச் செய்து வருகிறது.

திண்டுக்கல் முனிசிபாலிட்டி 1948-ல் பாறைப்பட்டியில் புதிதாக ஆரம்பித்த ஆரம்பப் பள்ளியையும் மூன்று நடுத் தரப்பள்ளிகளையும் இதர 17 ஆரம்பப் பள்ளிகளையும் மிகச் சிறந்த முறையில் நிர்வகித்து கல்வித் துறையில் நல்ல அபி விருத்திப் பணிகளைச் செய்து வருகிறது. 5 முதியோர் கல்விச்சாலைகளையும், மத்தியப் புத்தக நிலையம் ஒன்றையும், வாசகசாலையையும் பாராட்டத் தக்க முறையில் நடத்தி வருகிறது. இந்த முனிசிபாலிட்டி ஆண்டொன்றுக்கு ஆரம் பக் கல்வி அபிவிருத்திக்கு ரூ. 90,000-மும் நடுத்தரக் கல்விக்கு ரூ. 50,000-மும் இந்த முனிசிபாலிட்டி செலவு செய்கிறது. சாலைகளைச் சீர்ப்படுத்தல், புதுப்பித்தல், பஸ் நிற்குமிடம் அமைத்தல் போன்ற பொது மராமத்துப்பணி யிலும், சுகாதார சேவையிலும் திண்டுக்கல் முனிசிபாலிட்டி மிகவும் அக்கரை காட்டி வருகிறது.

புதிதாக ஒரு சித்த வைத்தியசாலையை ஆரம்பித்துள் ளதுமன்றி, ஏற்கனவே மூன்று இந்திய வைத்திய முறை வைத்தியசாலைகளையும் நடத்தி வருகிறது.

தாய் நலப் பராமரிப்பு நிலையங்கள், இலவசப் பால் சப்ளை, குப்பை உர உற்பத்தி ஆகிய துறைகளிலும் இந்த முனிசிபாலிட்டி நன் முறையில் பணியாற்றி வருதல் குறிப் பிடத்தக்கது.

கோடைக்கானல் என்றவுடனேயே ஒரு குளுமையான நினைவும் மகிழ்ச்சியும் உண்டாகிறதல்லவா? கோடையில் போய்த்தங்கி குளுமையையும் அதனல் உண்டாகும் இன்பத் தையும் அனுபவித்தற்குத் தக்க இயற்கை அமைப்பை யுடைய இந்தப் பிரதேசத்தில் முனிசிபாலிட்டி நிர்வாகம் நடைபெறுகிறது. இயற்கை அழகு, இனிமையான சிறு

மலைப்பழம், வான ஆராய்ச்சி நிலையம் போன்ற முக்கியமான விஷயங்களுக்குப்பேர்பெற்ற கோடைக்கானலில் முனிசிபல் நிர்வாகமும்இவற்றைப்போலவே சிறப்பாக நடைபெறுவதில் வியப்பொன்றுமில்லை.

தவிரவும் இந்த ஜில்லாவில் உள்ள பெரியகுளம் முனிசிபாலிட்டியும், பழனி முனிசிபாலிட்டியும் பல துறைப்பணிகளையும் சிறப்பாகச் செய்து வருகின்றன. அடுத்தபடியாக மதுரை ஜில்லா போர்டு நிர்வாகத்தைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல வேண்டுவதவசியம்.

சாலைகள் அமைப்புத் துறையில் ரூ. 39,0007 செலவில் 44 மைல் 1 பர்லாங்கு 50 கஜம் நீளமுள்ள புதிய சாலைகள் அமைக்கப்பெற்றன. வருஷம் ஒன்றுக்குச் சுமார் 8 லட்ச ரூபாய் இந்த சாலைகள் பராமரிப்புக்கென ஜில்லா போர்டு நிதியிலிருந்து செலவாகிறது. கடந்த நாலாண்டுகளில் ஜில்லா போர்டாரால் 27 சிறிய பாலங்களும், 2 சற்றுப் பெரிய பாலங்களும் ரூ. 34,493 செலவில் கட்டப்பட்டிருக்கின்றன.

சுகாதாரத் துறையில் கடந்த நாலாண்டுகளில் 7 பிரசவ விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவேயுள்ள 6 விடுதிகளும் புதிதாகவுள்ள இந்த 7-ம் ஆக 13 பெரிய நன்கு பணியாற்றி வருகின்றன. இது போன்ற ஆஸ்பத்திரி அமைப்பு அபிவிருத்தி துறையிலும் அதிக அக்கரை செலுத்தப்பெற்று திருமங்கலம் தாலூகாவிலுள்ள கிராமங்களுக்கு வைத்திய வசதியளிக்க ஒரு சுற்றுப்பிரயாண சிகிச்சை வண்டியும் அளிக்கப்பட்டு சுகாதாரப் பணிகள் நன்கு நடைபெறுகின்றன.

1949-ம் வருஷம் கட்டாயக் கல்வித் திட்டப்படி இந்த ஜில்லாவில் 8 சென்டர்களே யிருந்தன. ஆனால் கடந்த நாலாண்டுகளில் இவைகள் அபிவிருத்தியாகித் தற்போது 47 சென்டர்களாக ஏழு மடங்கு அதிகமாக அபிவிருத்தி அடைந்துள்ளன. இவற்றிற்காகச் சர்க்கார் ரூ. 2,56,758 மானியம் அளித்துள்ளனர். இந்த சென்டர்களில் கல்வி கற்கும் சிறுவர் சிறுமியர் தொகை 38,821 ஆகும். தவிரவும்

இந்தக் கட்டாய கல்வி சென்டர்களில் பயிலும் ஏழை சிறுவர் சிறுமிகள் 1,184,612 பேர்களுக்கு பகல் வேளையில் இலவச போஜனம் அளிக்கப்பட்டது.

சாலைகள் அமைத்தல் போன்ற பொது மராமத்து பணிகளிலும் இந்த ஜில்லா போர்டு சிறப்பான முறையில் ஆவன செய்துள்ளது.

ஹரிஜன முன்னேற்றம்

> மக்களுள் பலதுறைகளிலும் தாழ்ந்துள்ள வகுப்பினரின்—முக்கியமாக ஷெட்யூல் வகுப்பு, மலைஜாதி ஆகியவற்றைச் சேர்ந்தவரின்—கல்வி, பொருளாதார உரிமைகளை விசேஷ கவனத்துடன் அபிவிருத்தி செய்து சமூக அநீதி, மற்றும் அது போன்ற எல்லா இடர்ப்பாடுகளினின்றும் அவர்களை அரசாங்கம் பாதுகாக்கும்.
>
> —இநதிய அரசியல் அமைப்பு
> ஷரதது—46

நாட்டு நலனில் அக்கரையுள்ள எவரும் சாதிபேதத்தாலும், இதர வேற்றுமைகளாலும சமுதாயம் சிதறிவிட இடந்தர விரும்பார். முன்பு ராஜாஜி தலைமையில் ஜனநாயக சர்க்கார் இந்த ராஜ்யத்தில் பொறுப்பேற்றதும், ஏற்கனவே ஹரிஜன சேவா சங்கங்கள், ஆதிவாசிகள் சேவா சங்கங்கள் போன்ற தனிப்பட்ட ஸ்தாபனங்கள் செய்த பணியை ஒருமுகப் படுத்தி, சர்க்காரே முன்னின்று சாதி வேற்றுமையை விரட்டத் துணிந்தனர்.

ஆலயப் பிரவேச மசோதா அமுலுக்கு வந்தபோது மதுரையில்தான் முதன் முதலாக ஹரிஜன ஆலயப்பிரவேசம்

நடந்த தென்பதையும் இதற்குள்ளாகத் தென்னாடு மறந்து விடமுடியாது. அதோடு மதுரை தேச பக்தியில் மட்டு மல்ல, தியாக சேவையில் மட்டும் அல்ல, சாதி மத வேற்று மையை விரட்டி அடிப்பதிலும் முன்னணியில் நின்றது என் பதையும் மறந்துவிட இயலாது. ஹரிஜன க்ஷேம நல இலா காவின் வேலை தொடங்குவதற்கு முன்னாலேயே மதுரையில் ஹரிஜனங்கள் முன்னேற்றத்தில் கருத்தும் கவனமும் செலுத்தி அபிவிருத்திப் பாதையிலும், முன்னணியில் நின் றது குறிப்பிடத்தக்கது.

ஆலயப் பிரவேசம்

1932-ல் ஹரிஜன சேவா சங்கத்தின் கிளை ஒன்று இங்கு ஆரம்பிக்கப்பெற்றது. அன்று முதல் சாதி வேறுபாடு

ஒழிப்பு, ஹரிஜனங் களின் நல்வாழ்வு, ஹரிஜன சிறுவர் சிறுமியரின் கல்வி, ஹாஸ்டல் வசதி போன்ற பல் வேறு துறைகளிலும் பணி நடந்து வந்தது இதன் காரணமாக ஹரிஜனங்களிடையே சர்வ சாதாரணமாக இருந்த மதமாற்றங்கள் குறைந்தன.

1939 மதுரையில் நடைபெற்ற ஆலயப் பிரவேசம் தென்னாட்டின் சமூக சீர்திருத்த வரலாற்றில் ஒரு மகத்தான நிகழ்ச்சியாகும். ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் கிடைத்து தேவ சன்னதியில் வேறுபாடில்லை என்று நிரூபிக் கப்பட்டாலும் அவர்களுடைய ஏழ்மை நீங்கினால் தானே முயற்சி பலனளிக்க முடியும்?

மாணவர் நலம் கருதி

இன்று மதுரை ஜில்லாவில், ஹரிஜனங்களுக்கெனத் தனிப் பள்ளிகள் 13-ம், அப்பள்ளிகள் ஒவ்வொன்றிலும்

இரு உபாத்தியாயர்களும் நியமிக்கப்பட்டு கல்வித் துறையில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இலவசமாக சிலேட்டுகள், புத்தகங்கள் அனைத்தும் கொடுக்கப்படுகின்றன. இந்த ஜில்லாவில் சர்க்கார் மானிய உதவியுடன் 30 ஹாஸ்டல்கள் நடைபெறுகின்றன. ஜில்லா ஹரிஜன சேவா சங்கத்தின் பார்வையில் 16 ஹாஸ்டல்கள் நடைபெறுகின்றன. இவை அனைத்துக்கும் மொத்தம் ரூ. 1,28,850 மானியமாக அளிக்கப் பெற்றுள்ளது. ஹாஸ்டல்களில் தங்கி கல்வி பயிலும் மாணவர்கள் தொகையும், பராமரிப்புக்காகும் செலவின் தொகையும் எவ்வளவென்று பார்க்கலாம்.

1949–50-ல் 102 தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்பெற்ற உபகாரச் சம்பளம் ரூ. 30,660–8–0. 1950–51-ல் 268 பேர்களுக்கு ரூ. 74,184–8–0 தவிர, ஹாஸ்டல்களில் தங்காமல் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் உபகாரச் சம்பள வகையில் செலவான தொகையும் குறைவும் வில்லை.

1949–50-ல் 1,116 பேர்களுக்கு ரூ. 21,024
1950–51-ல் 1,625 பேர்களுக்கு ரூ. 18,699

வாழ்க்கை வசதிகள்

இந்த ரீதியில் ஹரிஜன சிறுவர் சிறுமியருக்குக் கல்வி அளிப்பதுடன், ஹரிஜனங்களின் வாழ்க்கை வசதிக்காகவும் பல பணிகளைச் செய்துள்ளனர்.

முதலில் குடி தண்ணீர் வசதிபற்றிய விவரத்தைப் பார்க்கலாம் :

	1948–49.	1949–50.
1. குடி தண்ணீர்க் கிணறுகள் வேண்டி வந்த விண்ணப்பங்கள்	148	179
2. கிணறுகள் தோண்டி முடிவுற்றவை	30	49
3. முடியுந் தறுவாயிலிருப்பவை.	13	40

	1948–49	1949–50
4. கிணறுகள் தோண்ட அனுமதி தந்த வகையில் ...	19	20
5. ஆலோசனையிலிருப்பவை ...	...	9

அடுத்தபடியாகக் குடியிருப்பு மனைக்கட்டுகள் அளித்த விவரமாவது, கடந்த நாலாண்டுகளில் இது வரை சுமார் 142 மனைக்கட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. திண்டுக்கல், நிலக்கோட்டை, திருமங்கலம் போன்ற பல் வேறிடங்களில் விநியோகிக்கப்பட்டுள்ள இந்த மனைக்கட்டுக்களை வாங்க சர்க்கார் சுமார் ஆறுயிரம் வரை செலவழித்துள்ளனர்.

பிற்பட்டவர் முன்னேற்றம்

பிற்பட்ட வகுப்பினர் நலத்தில் அக்கரையுள்ள எவரும் குற்றபரம்பரைச் சட்டத்தை நமது சர்க்கார் நீக்கி விட்டதைக் கண்டு மகிழாமலிருக்க முடியாது. மனித ஜாதியிலே ஒரு குறிப்பிட்ட குழுவினரை ஒதுக்கிவைத்து, குற்ற பரம்பரையினர் என்று அமுல் செய்தது ந்யாயமல்ல என்பதை உணர்ந்த மக்கள் சர்க்கார் பதவியேற்றதும் இந்த சட்டத்தை நீக்கிவிட்டனர்.

பிரான்மலைக்கள்ளர் வகுப்பினர் இந்த ஜில்லாவில் குறிப்பாகத் திருமங்கலம் தாலூகாவில் உள்ளவராவர். சுமார் 40,000 குடும்பங்களாகவுள்ள இந்த வகுப்பினரைக் குற்ற பரம்பரையினராகக் கருதி வந்தனர் அன்னிய அரசாங்கத்தார். ஆனால் 1947 முதல் இந்த கொடுமையிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்த 'விடுதலை' பிற்பட்ட வகுப்பினர்களுக்கு குறிப்பாகப் பிரான்மலைக் கள்ளர்களுக்கு இரட்டிப்பு சுதந்திர இன்பம் அளித்தத்தில் வியப்பில்லை.

கள்ளர் சமூகம் சீர்திருந்தி முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமென்ற நினைப்பில் சர்க்கார் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளனர்.

கல்விப் பயிற்சி அளித்து அறியாமையின் விலங்கி

லிருந்து விடுவித்தல், ஹாஸ்டல்கள், உபகாரச் சம்பளம், படிப்புக்குத் தேவையான இதர உதவிகளைச் செய்தல், கடன் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து விவசாயம், தொழில் போன்றவற்றிற்கு மானிய உதவி அளித்தல், ஆகிய வேலைத் திட்டங்களுடன் சீர்திருத்தப் பணி களும் சிறப்பாக இந்த ஜில்லாவில் நடத்தப் பெறுகிறது.

தவிரவும் இந்த வகுப்பினரின் முன்னேற்றங் கருதி நடை பெறும் வேலைகளை அவ்வப்போது கவனித்து ஆலோசனை கூற ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. இதில் கூட்டு றவு, கல்வி அதிகாரிகளும் உத்தியோகப் பற்றற்ற அங்கத் தினர்களும் இருக்கின்றனர். கள்ளர் முன்னேற்ற வேலைக் கென ஒரு ஸ்பெஷல் டிப்டி கலெக்டரும் இருக்கிறார்.

குற்ற பரம்பரைச் சட்டத்தை நீக்கிவிட்டால் மட்டும் போதாது, அவர்களுடைய வாழ்க்கை நிலை திருந்தி முன் னேற்றம் அடைந்தால்தான் நல்ல பலன் என்ற இலட்சியத் துடன் சர்க்கார் இந்தப் பணிகளைச் செய்து வருகின்றனர்.

ராஜ்யம் பூராவிலும் ஹரிஜனங்கள், பிற்பட்ட வகுப்பி னர், ஆதி வாசிகள், மலைவாசிகள் போன்ற அனைவருக்கும் சமுதாயத்தில் சரி சம அந்தஸ்தும், கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு அம்சங்களையும் அளிக்க சர்க்கார் தேவை யான நிதி ஒதுக்கியுள்ளனர்.

தொழில் அபிவிருத்தி

விவசாயம், கைத்தொழில் அல்லது இதர துறைகளில் உழைக்கும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை, ஜீவனத்துக்கேற்ற ஊதியம், கண்ணிய வாழ்க்கைத் தரத்துக்கேற்ற வேலை நிபந்தனைகள், சமூக கலாசார வசதிகள், ஓய்வின் பூரண நுகர்ச்சி முதலிய சௌகரியங்களைத் தகுந்த சட்டம் அல்லது பொருளாதார அமைப்பின் மூலம் அளிக்க அரசாங்கம் முயலும்.

—இநதிய அரசியல அமைபபு
ஷரத்து—43

நாட்டு நிலை திருந்தி செழிப்பும் வளமும் நிறைந்ததாக முன்னேற வேண்டுமானால், தொழில் திறன் பெருகவேண்டும். தொழில் வளர்ந்தால் நாட்டுப் பொருளாதார நிலையும், மக்களின் வாழ்க்கைத்தரமும் சிறப்புறும். எனவே தொழிலை மட்டும் அல்ல, தொழிலாளர் க்ஷேம நலனையும் சிரத்தையுடன் கவனித்து ஆவனசெய்ய சர்க்கார் முன் வந்தனர். தொழிலாளரிடையே இன்று குழப்பமோ, கலக்கமோ இல்லை; தொழில்களும் நன்கு வளர்ந்து நற்பலனை அளிக்கின்றன என்றால், அவற்றிற்குக் சர்க்காரின்

தீவிர சிரத்தையும் முயற்சியுமே காரணமாகும். முதலில் ராஜ்யத்தின் தொழில் அபிவிருத்தியைப் பார்க்கலாம்.

நம் ராஜ்யத்தில் உள்ள ஜவுளி ஆலைகளுக்குத் தேவையான கதிர்களையும், சர்க்கரை சிமிட்டி போன்ற தொழிற்சாலைகளுக்குத் தேவையான உபகரணங்களைத் தந்துதவியுள்ளனர். ராஜ்யத்தில் கடந்த நாலாண்டுகளுக்குள் சுமார் 6 ஜவுளி மில்கள் நிர்மாணிக்கப்பெற்றுள்ளன. ஏற்கனவே இந்த ராஜ்யத்தில் 80 மில்கள் உள்ளன. இந்த துறையிலே கோவைக்கு அடுத்தபடி மதுரை ஜில்லாவில்தான் இந்த ஜவுளி மில் தொழில் நன்கு வளர்ந்துள்ளது.

பல துறைத் தொழிற் பெருக்கம்

சிமிட்டித் தொழிலைத் பொறுத்தவரை இன்று ராஜ்யத்தில் 5 தொழிற்சாலைகள் உள்ளன. சர்க்கரை மில்கள் இன்று 13 உள்ளன. கூடிய விரைவில் 10 ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. செயற்கைப் பெட்ரோல் தயாரிப்புக்கு சர்க்கார் அனுமதி வழங்கியுள்ளனர். சுமார் நான்கு கம்பெனிகள் இந்தப் பெட்ரோல் உற்பத்தியில் ஈடுபடும்.

வனஸ்பதி நெய்த் தயாரிப்புத் தொழிலுக்கும் தேவையான ஆதரவு அளிக்கப் பெறுகிறது. இந்த விவரங்கள் அனைத்தும் ராஜ்யம் பூராவுக்குமாகும். அடுத்தபடியாக மதுரை ஜில்லாவைக் கவனிக்கலாம்.

மதுரை ஹார்வி மில், மீனாட்சி மில், ராஜா மில், மஹாலக்ஷ்மி மில் போன்ற பெரிய ஜவுளி மில்கள் பலவும், பட்டு மில்கள் சிலவும், தையல், சாயந்தோய்த்தல் போன்ற தொழில்கள் பலவும் இருக்கின்றன. மதுரைச் சுங்கடிப் புடவை என்றால் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். இவை தவிர மதுரை, குடிசைத் தொழில் பலவற்றிற்கும் பேர் பெற்றதாகும்.

பல் தொழிற்பயிற்சி நிலையம்

சர்க்காரின் நேர் பார்வையில் இங்கு தமிழ்நாடு பல தொழிற்பயிற்சிப்பள்ளி நடைபெறுகிறது, இப்பள்ளியில்

மின்சாரம், யந்திரம், மோட்டார், ரேடியோ, சானிடரி எஞ்சினியரிங், ஓவர்சியர் போன்ற பல்வேறு துறைகளில் டிப்ளோமாப் பயிற்சியும், தச்சு வேலை, கொல்லர் வேலை, அச்சு வேலை போன்ற பதினைந்து விதத் தொழில்களில் சர்ட்டிபிகேட் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. இதைத் தவிர சர்க்காரின் மானிய உதவியுடன் பசுமலைத் தொழிற்



பள்ளி, மதுரை ஆர்ட்ஸ்பள்ளி, திண்டுக்கல் ஸி. எஸ். எம், தொழிற்பள்ளி, மதுரை செயின்ட் ஜோஸப் தொழிற் பள்ளி ஆகிய நடைபெறுகின்றன.

மதுரை ஜில்லாவில் உள்ள தொழிலாளர் நிலை கடந்த ஐந்தாண்டுகளில் எவ்வளவோ சீர் திருந்தியுள்ளன. இவற்றிற்குச் சான்றுகள் பல உள. 1946-ல் தொழிலாளர்களிடையே அமைதி நிலை நிலவாமல் கலவரப்பட்டு எத்தனையோ முறை ஸ்டிரைக் நடந்ததுண்டு. ஆனால் மக்கள் சர்க்கார் ஏற்பட்ட பிறகு இந்தக் கலவரமோ ஸ்டிரைக்குகளோ வெகுவாகக் குறைந்துவிட்டன. மதுரை மில்ஸ், மீனாட்சி மில்ஸ், கோதண்டராம் மில்ஸ் முதலியவற்றில் சர்க்கார் தொழில் இலாகா தலையீட்டால் பல சச்சரவுகள் சமரசமாகத் தீர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நலமளிக்கும் சட்ட திட்டங்கள்

கடைச் சிப்பந்திகள் சட்டம், தொழில் தகராறுகள் சட்டம், சமரஸக் கோர்ட்டுகள் ஆகியனவற்றை சர்க்கார் ஏற்

படுத்தியிருப்பதும், இதனுல் தொழிலாளர் நலன் வளர்வதற்கான வகைதுறைகள் ஏற்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். தவிரவும் தொழிலாளரின் வாழ்க்கைத்தரச் சீரமைப்பு, கிராக்கிப்படி, இருப்பிடவசதி போன்ற பல தரப்பட்ட பயன் தருபணிகளிலும் சர்க்கார் போதிய கவனம் செலுத்துகின்றனர்.

இதேமாதிரி வேலேயில்லாத திண்டாட்டக் கொடுமையைத் தீர்க்கவும் நம் ராஜ்ய சர்க்காரும், மத்திய சர்க்காரும் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதை விவரிக்காமலிருக்க முடியாது. இந்த ராஜ்யம் பூராவிலும் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் கிளேகள் ஆரம்பிக்கப்பெற்றுள்ளன.

1946-ம் வருஷத்தில் மதுரையில் ஆரம்பிக்கப்பெற்ற இந்த வேலே தேடிக்கொடுக்கும் ஸ்தாபனம் முன்பு மாஜி ராணுவத்தினருக்கு மட்டும் வேலே தேடிக்கொடுத்தது, தற்போதோ அனேவருக்கும் தேடிக்கொடுக்கும் ஸ்தாபனமாக மாறி நல்ல முறையில் பணியாற்றி வருகிறது.

வாக்குரிமை

மக்கள் சபைக்கும், ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்ட சபைக்கும், வயது வந்தோர் வாக்குரிமை என்னும் அடிப்படையின் கீழ் தேர்தல் நடைபெறும்.

—இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்
ஷரத்து—326.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல் இந்திய மக்களின் இப்போதைய முக்கியப் பொறுப்பாகும். உண்மையான ஜனநாயக முறை எந்த அளவுக்கு நம் நாட்டில் ஸ்தாபிக்கப்படுகிறதோ, அதற்குத் தகுந்தபடி சுதந்திரமும் நிலைக்கும்; சுய ஆட்சியும் நன்கு நடைபெறும். இந்த உயர்ந்த தத்துவங்களை மனதிற் கொண்டே, இந்திய ஜனத் தலைவர்கள் அரசியல் நிர்ணய சபை நிறுவி, சுதந்திர இந்திய ஜனநாயக அரசாங்க அமைப்புக்கான சட்டங்களை நிறைவேற்றினர்.

1950-ம் வருஷம் ஜனவரி 26-ந் தேதியன்று இந்த அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற, மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட, மக்கள் சர்க்கார் நிர்வாகம்தான் இந்த அரசியல் சாசனத்தின்

நோக்கமாகும். எனவே மக்களுக்குத்தான் இங்கு பூரண அதிகாரம் உண்டு.

ஜனநாயக அரசியல் அமைப்புக்குள்ள பொறுப்பு அதிகமானதாகும். இதே மாதிரி ஜனநாயக ஆட்சி விரும்பும் மக்களுடைய பொறுப்பும் அதிகமாகியுள்ளது. சுதந்திரமென்னும் குழந்தை, ஜனநாயகமென்னும் தொட்டிலில் தவழ்ந்து வளருவதற்கு, வாக்குரிமை சரியான சந்தர்ப்பமளிக்கிறது.

துணிச்சலான தீர்மானம்

நம் தேசத் தலைவர்கள் எடுத்தவுடனேயே வயது வந்தோர் எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுக்கத் துணிந்தனர். வயது வந்தோர் ஓட்டுரிமை என்பது தேச ஆட்சியில் எவ்வளவு மகத்தான சக்தி வாய்ந்ததென்பதையும், அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் நம் தலைவர்கள் தெரிந்து கொள்ளாமலில்லை. ஆனால் ஜனநாயக சர்க்காரென்றால், அதில் மக்களில் பெரும்பாலானவர்களின் உண்மைப் பிரதிநிதிகள் நிர்வாகம் நடத்த வேண்டும். இந்த ஒரே நோக்கத்தில்தான், நம் தலைவர்கள் மிகவும் தைரியத்துடன் இம் முறையை அனுஷ்டிக்க முன் வந்திருக்கிறார்கள்.

ஜனநாயகமென்பது மக்களின் சர்க்கார். மக்கள் எல்லோரும் சேர்ந்து ஆட்சி புரியவேண்டும். அப்படிச் செய்வது நடைமுறையில் சாத்தியமானதல்ல, எனவே, மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களின்மூலம் ஆட்சி நடத்துவதென்ற சம்பிரதாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்டசபை அங்கத்தினர்களை மக்கள் தேர்ந்தெடுத்து விடுகிறார்கள். அந்தச் சட்டசபை அங்கத்தினர்களில் பெரும்பாலானவர்களைக் கொண்ட அரசியல் கட்சியினர், தங்களுடைய தலைவரைத் தேர்ந்தெடுப்பர். அத் தலைவர் ராஜ்யத்தின் முதல் மந்திரியாக நியமிக்கப்படுவார். ராஜ்ய நிர்வாகத்தில் தமக்கு உதவி புரியச் சிலரை தம் சக மந்திரிகளாய் நியமிக்கவேண்டு

மென்று, முதல் மந்திரி, ராஜ்ய கவர்னருக்கு சிபாரிசு செய்வார். இம்மாதிரி மந்திரி சபையமைக்கப்படும். மந்திரிகள் சட்ட சபைக்கும், சட்டசபை மக்களுக்கும் பொறுப்பாவர். இந்தப் பார்லிமென்டரி முறைகள் பூராவும் இந்திய அரசியல் சட்டத்தில் விவரமாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் தொகை அதிகரித்தல்

இந்த நியதி மூலம் ஐந்து வருஷத்திற்கு ஒரு தடவை பொதுத்தேர்தல் இன்றியமையாததாகிறது. தேர்தலில் வாக்காளராவதற்குச் சில தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட யோக்கியதாம்ச நிபந்தனைகள் பிரகாரம், 1920-ம் வருஷம் ஜனத்தொகையில் 2 அல்லது 3 சதவிகிதமும் 1937-ல் 14 சதவிகிதமும் வாக்காளரானார்கள். இப்பொழுது வயது வந்தோர் ஓட்டுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது, ராஜ்ய மக்களில் 21 வயது பூர்த்தியானவர்கள் எல்லோரும் வாக்காளர்கள்தான். இந்தியப் பிரஜையாக இருக்கவேண்டியதும், 21 வயது பூர்த்தியாக வேண்டுமென்பதுதான், வாக்காளராவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முக்கிய யோக்கியதாம்சங்கள். இவற்றின்படி ஜனத்தொகையில் ஏறக்குறைய பாதிப்பேர் வாக்காளராகிறார்கள்.

சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை 1951-ம் வருஷத்து ஜன சங்கியைக் கணக்குப்படி 56,952,332. அதில் ஆண்கள் 28,413,661, பெண்கள் 28,538,671. மொத்த ஜனத்தொகையில் ஆண்கள் 49·9 சத விகிதமும், பெண்கள் 50 1 சத விகிதமும் இருக்கிறார்கள். 1941-ம் வருஷத்து கணக்குப்படி ராஜ்யத்தின் ஜனத்தொகை 49,847,508. எனவே சென்ற பத்து வருஷங்களில் சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை 7,104,824 அதிகரித்திருக்கிறது 1941-ல் ஒரு சதுர மைலுக்கு 390 பேர்கள் வசித்தார்கள்; 1951-ல் 446 பேர் வசிக்கிறார்கள்.

1951-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 28 நாட்களிலும், சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஜனசங்கியைக் கணக்கெடுப்பவர்



கிராமாபிவிருத்தி
திருமங்கலம் பிர்க்கா
குடிதண்ணீர் வசதி
சுகாதார சேவை
அ
ஆ
நூல் நூற்பு
எழுத்தறிவிப்பு
மாதர்கள் பொழுதுபோக்கு

கைத்தொழில்
கண்ணாடிவிளக்கு வேலை
சுங்கிடிப்புடவை
பட்டுநூல் நெசவு
பின்னல்வேலை

கள் வேலை செய்தார்கள். இதற்கு முன்னால் நடைபெற்ற ஜன சங்கியைக் கணக்கெடுப்பு மாதிரியில்லாமல், இந்தக் கணக்கெடுப்பில் சர்க்காரால் அதிக கவனம் செலுத்தப் பட்டு, அதிகப்படியான புள்ளி விவரங்களும் தயாரிக்கப் பட்டிருக்கின்றன.

பிரதிநிதிகள் எண்ணிக்கை

தற்போதுள்ள வாக்காளர் ஜாப்தாக்களின் பிரகாரம் சென்னை ராஜ்யத்தில் 271 லட்சம் ஓட்டர்கள் இருக்கிறார் கள். இவர்கள் நம் ராஜ்ய சட்டசபைக்கு 375 அங்கத் தினர்களையும், மத்திய சட்டசபையான டெல்லி பார்லி மென்டில் மக்கள் சபைக்கு நம் ராஜ்யப் பிரதிநிதிகளாய் 75 அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சென்னை மேல் சபையில் மொத்தம் 72 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்களில் ஸ்தல ஸ்தாபனங்களின் மூலம் 24 பேரும், பட்டதாரித் தொகுதியிலிருந்து 6 பேரும், ஆசி ரியர் தொகுதியிலிருந்து 6 பேரும் தேர்ந்தெடுக்கப்படுவர். சென்னை ராஜ்ய கீழ்ச் சட்டசபை அங்கத்தினர்கள் எல் லோரும் சேர்ந்து, தனியாக 24 பேரை சென்னை மேல் சபைக்குத் தேர்ந்தெடுப்பார்கள். இவர்களைத் தவிர, மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் 12 அங்கத்தினர்களை நியமனம் செய்வார்.

டெல்லி பார்லிமென்டின் மேல் சபையில் மொத்தம் 205 அங்கத்தினர்கள் இருப்பர். 'கவுன்ஸில் ஆப் ஸ்டேட்' எனப்படும் அந்தச் சபையில், சென்னை ராஜ்யத்தின் சார் பாக 27 பேர் அங்கம் வகிப்பார்கள்.

தவறான முறைகளைத் தவிர்க்க

பொதுவாக, தேர்தல் காலங்களில், இறந்தவர்கள் வந்து ஓட்டுப் போடுவதுதான் மிகவும் விசித்திரமானது. அபேட்சகர்களின் ஆட்கள் இதற்கென்று விசேஷ கவனம் செலுத்தி, ஜாப்தாவிலுள்ள பெயர்களில் இறந்துபோனவர் களுக்குப் பதில் நபர்களைத் தயார் செய்யக்கூடும். அவர்கள்

வந்து இறந்து போனவர்கள் பெயர்களைத் தம்மதென்று சொல்லி ஓட்டுப்போட்டு விட முடியும். இந்தக் கெடுதலைத் தடுப்பதற்கு, வரப்போகும் தேர்தலில் ஒரு அடையாள மிடும் முறையைக் கையாளவேண்டுமென்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஒருவர் ஓட்டுப் போட வரும்பொழுது அவருடைய விரலில் ஒரு வித மை பூசப்படும். அந்த மை குறைந்தது ஒரு வாரம் அழியாமலிருக்கும். எனவே, எவரும் தப்பான பெயரில் மீண்டும் ஓட்டுப் போடமுடியாது.

அகில இந்திய ரீதியில் பரிசீலனை

சென்னை ராஜ்யத்தில் தேர்தல் தொகுதிகள் பிரிப்பதில் ஜில்லா எல்லைகளை மட்டும் கூடுமானவரை அப்படியே வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், முன்னேற்ற மில்லாத வகுப்பினர்களுக்கு ஸ்தானம் ஒதுக்கப்படும் தொகுதிகள் மட்டும் இரட்டை அங்கத்தினர் தொகுதி களாகவும், மற்றைய தொகுதிகள் ஒற்றை அங்கத்தினர் தொகுதிகளாகவேயிருக்கவேண்டுமென்றும், சென்னை சர்க் கார் சிபார்சு செய்தனர். அவ் விஷயம் சென்னை அசம்பிளி யிலும், கவுன்சிலிலும் நன்கு விவாதிக்கப்பட்டு சர்க்காரின் சிபாரிசு அங்கீகரிக்கப்பட்டது.

இது பற்றிய எல்லா விஷயங்களையும் அகில இந்திய ரீதியில் சரிவர ஆராய்ந்து, இந்தத் தேர்தலை நடத்த, பிரத்தி யேகமாய் ஒரு தேர்தல் கமிஷனரை மத்திய சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். அவர் தேர்தலின் அம்சங்கள் ஒவ்வொன்றையும் தாமே கவனித்தும் தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். தேர்தல் தொகுதிகள் நிர்ணயித்தல், தேர்தல் நடத்துவதற்கான சாமான்களைத் தயாரித்தல், முதலியன நடைபெற்று வருகின்றன.

சென்னை ராஜ்யத்தின் வாக்காளர் ஜாப்தா தயாரிப் பதற்கு 29 லட்ச ரூபாய் செலவாயிருக்கிறது. காகித விலை மட்டும் 6 லட்சம். தேர்தல் நடத்த 3 லட்சம் 'பாலட்' பெட்டிகளுக்குமேல் வேண்டியிருக்கின்றன. அவைகள்

எஃகுப் பெட்டிகளாகவேயிருக்க வேண்டுமென்று தீர் மானிக்கப்பட்டிருக்கிறது. சராசரி ஒரு பெட்டிக்கு 6 ரூபாய் விலையாகிறது. எனவே அந்த வகைக்கு குறைந்தது 20 லட்சம் செலவாகும். இனனும் தேர்தல் ஸ்தலங்கள் அதற்கு வேண்டிய இதர சாமான்கள், காவல் கட்டுப்பாடுக ளெல்லாம் இருக்கின்றன.

அஸ்திவார மிடுவதிலும் கூட்டு முயற்சி

இதற்கிடையில், அரசியல் கட்சியினர் பலர் தங்கள் கருத்துக்களை அறிவிக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டது. அர சாங்கம் இதற்கென பல்வேறு அரசியல் கட்சியினரை நேரில் அழைத்து விரிவான ஆராய்ச்சி நடத்தியது. நம் ராஜ்யத்திலுள்ள அரசியல் கட்சியினர் பலரும் அதில் கலந்துகொண்டது பாராட்டத்தக்கதாகும். ஜனநாயக வளர்ச்சிக்கு இத்தகைய காரியங்கள் எவ்வளவு அவசிய மானவை என்பதைப்பற்றி அதிகம் கூற அவசியமில்லை.

பொதுஜனத் தொடர்பு

ஜனநாயகத் தன்மையில் வளரும் அரசாங்கம், அவ்வப் போது தன்னுடைய அலுவல்கள் சம்பந்தமாகவும், பொது நல விஷயங்கள் சம்பந்தமாகவும், பொதுமக்களுடன் உறவு பூண்டு, அவர்களுக்குத் தேவையான விவரங்களை அறிவிக்க வேண்டியது அவசியம். இத் துறையில் செய்தி இலாகா தன்னால் இயன்ற அளவு தொண்டாற்றி வந்துள்ளது.

ஜில்லாக் குறிப்புகள்

மதுரை ஜில்லாவிலுள்ள ஓட்டர்கள் தொகை—1,32,1159.

மதுரை ஜில்லாவுக்சான சென்னை ராஜ்ய அசெம்பிளி தொகுதிகள்—15.

மத்திய மக்கள் சபைக்கான தொகுதிகள்—3.

அமைதியும் அபிவிருத்தியும்

தேசிய வாழ்க்கை சம்பந்தமான எல்லா ஸ்தாபனங்களிலும், சமூக பொருளாதார அரசியல், நீதி முறை பொருந்தி விளங்குதற்குரிய ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தி, அதைத் திறமையுடன் பாது காக்கும் வகையில் மக்களின் நலத்தைப் பேணி வளர்க்க அரசாங்கம் முயற்சி செய்யும்,

—இந்திய அரசியல் அமைபபு
ஷரதது—38

நாட்டின் மக்கள் நலமுடன்வாழ மக்கள் சர்க்கார் செய்துள்ளவற்றில், உள் நாட்டில் குழப்பங்களோ, கலவரங்களோ இல்லாமல் அமைதி நிலவச்செய்த பணி முக்கியமானதாகும், இந்த உள்நாட்டு அமைதிக்கு ஆதாரமும் ஜீவ நாடியுமாக இருப்பது போலீஸ் இலாகாவர்கும்"

விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியவர்களிடையே அர்சாங்கத்திடம் பீதியையும், துவேஷத்தையும் பரப்ப ஒரு சிலர் முயற்சித்ததையும், ஆனல் மக்களும், சர்க்காரின் போலீஸ் இலாகாவும் ஒத்துழைத்து பெருத்த அமளி எது

வும் ஏற்படாமல் தடுத்து நாட்டிலே அமைதியை நிலை நாட்டியதையும் நாம் அறிவோம்.

கிருஷ்ணா ஜில்லா எல்லையோரங்களிலும் ஹைதராபாத்திலும் இன்று வெகுவாகக் குறைந்துவிட்ட கலவரங்கள் முன்பு, மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் ஆபத்துண்டாக்கிய பெருங்கலவரமாக இருந்ததையும் எவரும் மறக்க முடியாது.

ஒரு காலத்தில், அதாவது அன்னிய ஆட்சியில் போலீஸார் மக்களின் நலன்கருதி பணியாற்ற இயலவில்லை. அதற்குக்காரணம் அன்றைய நிர்வாக அமைப்பாகும். இன்றோ அதாவது கடந்த ஐந்து ஆண்டுகளாக மக்களின் பிரதிநிதித்துவ ஆட்சி நடைபெறுகிறது. எனவே மக்களின் நலன் கருதி, அவர்களுடைய சொத்து சுதந்திர உயிர் உடமைக்குப் பாதுகாப்பளிப்பதே போலீஸாரின் இலட்சியமாக மாறி இருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை,

மதுரை ஜில்லாவிலும் கூட திண்டுக்கல், பழனி ஈரோடு, ஒட்டன்சத்திரம் போன்ற பிராந்தியங்களில் நாசவேலைசெய்த பேர்வழிகளை போலீஸார் பிடித்து, விபரீதங்கள் எதுவும் ஏற்படாமல் தடுத்து அமைதியை நிலை நாட்டியதை குறிப்பாக மதுரைவாசிகள் நன்கறிவர்.

ஜனநாயக ஆட்சி ஏற்பட்டதிலிருந்து போலீஸாரின் திறனும் பணிவும் அதிகரித்திருப்பதைப்போல, பொது மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்து அமைதிநாட்டும் பணியிலும் நல்ல பலன் ஏற்பட்டுள்ளது.

தீமைகள் ஒடுங்க

லஞ்சம், கள்ளச்சந்தை போன்ற சமூகத்தைக்கெடுக்கும் நாசசக்திகளை அடக்கி ஒடுக்குவதில் சர்க்கார் தீவிரமாயிருப்பதும், இந்த முயற்சியில் நல்ல பலன் கண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது லஞ்சம் கொடுத்தாலும் சரி, வாங்கினாலும் சரி, இருவகைக்குற்றங்களுக்கும் கடுமையான தண்டனை அளிக்க மக்கள் அரசாங்கத்தினர் கடந்த ஆண்டுகளில் தயங்கியதேயில்லை.

உயிர்ப்பலி தடை

ஆலயப்பிரவேசம், அற நிலையப்பாதுகாப்பு முதலிய சீர் திருத்தச்சட்டங்களுடன் இணைக்கப்படவேண்டிய உயிர்ப் பலித்தடைச்சட்டம் நமது மக்கள் சர்க்கார் பதவியேற்ற பிறகு நிறைவேற்றியுள்ளது மக்கள் தெய்வவழிபாட்டைப் புனிதத்தன்மையுடனும் நன்னம்பிக்கையுடனும் நடத்த வேண்டும். ஆனால் நேற்று வரை சிலர் வாயில்லாப்பிராணி களைக் கடவுளுக்கு பலிதருவதை நிறுத்தவில்லை. இந்தக் கொடுமையைக் குருட்டுப்பக்தியென்றோ, அசங்கியமான வழக்கமென்றோ அறியாதவர் இருக்கமுடியாது. தற்போது இந்தக்கொடுமையான வழக்கமும் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டுவிட்டது. அறநிலையங்களைச் சரிவர பரிபால னம் செய்வதன்மூலம் அவற்றின் பரிசுத்தன்மைக்குப் பங் கம் ஏற்படுவதற்கில்லை. அறநிலையங்களின் நிதியும் நற்காரி யத்திற்கன்றி தவருனமுறையில் செலவாகாது. இத்தகைய நோக்கத்துடன்தான் அறநிலையப் பாதுகாப்பு மசோதா நிறை வேற்றப்பட்டுள்ளது.

தேசியமயமாகும் தொழில்கள்

சமயத் துறையிலும் சீர்திருத்தத் துறையிலும் மேற்படி சட்டங்கள் மூலம் ஏற்படும் அபிவிருத்தியைப் போல தொழில் துறையிலும் சில காரியங்களைச் செய்யவேண்டி யிருக்கிறது. பெரிய தொழில்களைச் சர்க்காரே நேர் பார்வையில் எடுத்துக்கொள்வதை தேசிய மயமாதல் என்று பொருள்படும்.

நமது ராஜ்ய சர்க்கார் சென்னை மின்சார சப்ளையையும், நகர பஸ் டிரான்ஸ்போர்ட்டையும் தேசிய மயமாக்கி நடத்தி வருகின்றனர். இந்தத் திட்டத்தை விரிவாக்கி ராஜ்யம் பூராவும் அமுல் செய்ய சர்க்கார் தீர்மானித் துள்ளனர். இதன் மூலம் ராஜ்யத்தின் பொருளாதார நிலையும் சீர்திருந்த நல்ல சந்தர்ப்பமுண்டு என்பது அனை வரும் அறிந்த உண்மை. இன்னும் சில முக்கிய தொழில் களும், சீக்கிரமே தேசிய மயமாகும்.

மதுவிலக்கு

இந்தியாவிலேயே முதன் முதலாக வெற்றிகரமாக மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்த பெருமை இந்த ராஜ்யத்தையே சேரும். இதில் மட்டும் அல்ல. கிராமாபிவிருத்தி, மாதர் நலம், ஹரிஜன முன்னேற்றம் போன்றபல் வேறு அபிவிருத்திப் பணிகளிலும் இந்த ராஜ்யம் தான் முன்னணியில் உள்ளது.

மதுவிலக்கு தோற்றுவிடும் ; அதனுல் ராஜ்யப் பொருளாதாரம் சிதைந்துவிடும் என்றெல்லாம் ஆர்ப்பரித்தவர்கள் இன்று மதுவிலக்கு வெற்றி முழக்கங் கண்டு திகைத்து வாய்மூடி விட்டனர்.

மதுவிலக்கு இந்த நாட்டின் தொழிலாளர்களுக்கும் கிராம வாசிகளுக்கும் ஒரு வரப்பிரசாதம் மாதிரி. மக்களின் பெரு நன்மை கருதி நிறை வேற்றப்பட்ட இந்தப் பணி நாட்டின் புனர் நிர்மாணத்துக்குப் பேராதாரம் என்பதில் ஐயமில்லே.

ஆயினும் மதுவிலக்கால், வேலேயிழந்த மரமேறுந் தொழிலாளர் பிரச்னே சர்க்காருக்கு ஒரு பெரும் சோதனே யாயிருந்தது. ஆனுல் எத்தனேயோ சோதனேகளேச் சமாளித்து வெற்றி பெற்ற சர்க்கார் இதிலும் அப்படியே வெற்றி கண்டனர்.

மதுரை ஜில்லாவைப் பொறுத்தவரை எந்தெந்த வகையில் இந்தப் பிரச்னேயைச் சமாளித்தனர் என்று பார்க்கலாம்.

மதுவிலக்கின் காரணமாக இந்த ஜில்லாவில் 2,200 மரமேறுந் தொழிலாளர் வேலே யிழந்தனர். ஆனுல் தற்போது பனே வெல்லத் தயாரிப்புத் தொழிலில், விவசாயம், குடிசைத் தொழில்கள், சிறு வியாபாரம் ஆகிய வற்றில் இவர்களில் பெரும்பாலர் ஈடுபடுத்திப்பட்டுள்ளனர்.

1948–49-ல் ரூ. 39,146 பெறுமானமுள்ள 6,653 மணங்கு பனே வெல்லம் தயாரிக்கப் பெற்றது. 1949–50-லோ இந்த உற்பத்தி நாலு மடங்காகப் பெருகியுள்ளது. அதாவது ரூ. 1,66,639 பெறுமானமுள்ள 26,386 மணங்கு

தயாராயிற்று. பனை வெல்லத் தயாரிப்புக் கூட்டுறவு சங்கங்கள் 18-க்கு மேல் இந்த ஜில்லாவில் பணியாற்று கின்றன.

மதுவிலக்கால் மக்களிடையே வீண் செலவு குறைந்து மிச்சமாகுமல்லா ? இதனைச் சேமித்து வைக்க சர்க்காரே இந்த ஜில்லாவுக்கு மட்டும் 4,118 உண்டிப் பெட்டிகள் வழங்கியுள்ளனர். 1950-ம் ஆண்டு ஜனவரிமீ 31உ வரை இந்த முறையில் ரூ. 18,834 சேமிக்கப்பட்டுள்ளது. இது தவிர கிராம வளர்ச்சி கருதி கிராமச் சங்கங்களும், கிராம அபிவிருத்திப் பள்ளிகளும் பல நடத்தப் பெறுகின்றன.

மாதர் நலம்

ராஜ்ய சர்க்காரின் முன்னேற்றகரமான பணிகளில் மாதர் நலங்கருதி அமைத்திருக்கும் இலாகாவும் ஒன்றாகும். இந்திய மாதர்களின் அன்றைய ஸ்திதியைப் அதிகம் விவரிக்கத் தேவையில்லை. ஆனால், சுதந்திரப் போராட்டத்திலும், இந்த சீர்திருத்த இயக்கங்களிலும் ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக நின்று ஒன்றிப் போராடியதை, இந்திய மாதர்களின் தியாக நெறியை எவரும் மறக்க முடியாது.

ஆயினும், கிராமப் பெண்கள் பெரும்பாலார் குடிகாரப் புருஷர்களிடம் பட்ட கொடுமைகளும், அறியாமை காரணமாக ஏற்பட்ட அல்லல்களும் நீங்கி, சுகமும் சுதந்திரமும் பெறக்காரணமாக இருந்தது மதுவிலக்குப் பணியும் மாதர் நல இலாகாவின் தொண்டுமாகும். கிராமப் பெண்களுக்கு முன்பெல்லாம் போதிய படிப்பு இல்லை, பொது அறிவு பெறவாய்ப்பில்லை; நல்ல பொழுது போக்க வசதியில்லை. நல்லது கெட்டதை அறிய பயிற்சி இல்லை.

எனவே இந்த இலாகா, மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை அகற்றவும், சமூக சேவையில் ஊக்கமும் பயிற்சியும் அளிக்கவும் முன் வந்தது. எழுத்தறிவிப்பு, நல்ல பொழுது போக்கு வசதிகள், சிறு கைத்தொழில்களில் பயிற்சி, சித்திர வேலை, மருத்துவப் பயிற்சி போன்ற பல்வேறு

ஆக்கத் துறைகளிலும் பயிற்சி அளிக்கிறது இந்த இலாகா.

கிளைவாரி வேலை விவரம்

ராஜ்ய சர்க்காரின் மாதர் நல இலாகாவின் கிளை மதுரை ஜில்லாவில் மதுரை, கல்லுப்பட்டி, புதுப்பட்டி, சின்னாளப் பட்டி ஆகிய மூன்றிடங்களில் பணியாற்றுகின்றன. ஆரம்பமான முதல் இந்தக் கிளைகளின் பணி குறிப்பிடத் தக்க அளவுக்கு அபிவிருத்தியடைந்துள்ளது.

மதுரைக் கிளையில் முதியோர் கல்விப்பயிற்சி பெற்ற பெண்மணிகள் சுமார் 215-க்கு மேலாவர். இவர்களில் பலர் ஹிந்தி பரீட்சையிலும் தேர்வு பெற்றிருக்கின்றனர். தவிரவும் வருஷமொன்றுக்குச் சராசரி 160 பேர் கல்வி அறிவு பெறுகின்றனர்.

சின்னாளப்பட்டிக் கிளை 1948-ல் ஆரம்பிக்கப் பெற்றது. இந்தக் கிளையில் கீழக்கோட்டை, நடுவூர், மேட்டுப்பட்டி ஆகிய மூன்று சென்டர்கள் உள்ளன. இவற்றில் மேட்டுப் பட்டி அமோக அபி விருத்தி காட்டும் சென்டராகும். சுமார் 10,000 குடும் பங்களுடன் இந்தக் கிளையினர் ஒன்றிப் பழகி நற்பணி யாற்றுவது குறிப் பிடத்தக்கது. நூல் நூற்பு, நெசவு, தையல் ஆகிய கைவேலைகளுக்கு இங்கு நல்ல ஆதரவு. ஆண்டொன்றுக்கு சராசரி 658 பேர்கள் இங்கு கல்வி பயிலுகின்றனர்.

கல்லுப்பட்டிக் கிளையும் சிறப்பாக முன்னேறியுள்ளது.

வருஷந்தோறும் சராசரி 118 பேர்கள் இங்குள்ள முதியோர் கல்வி நிலையத்தில் படிக்கின்றனர். இதர ஆக்க வேலைகளான நூற்பு, சுகாதாரப்பணி, கூட்டுறவு ஆகிய துறைகளிலும் இங்கு நல்ல பயிற்சி அளிக்கப்பெறுகிறது.

புதுப்பட்டியில் ஆரம்பிக்கப் பெற்றுள்ள கிளையில் மூன்று சென்டர்கள் உள்ளன. இம்மூன்றிலும் 60 அங்கத்தினர்கள் உள்ளனர். சுகாதார சேவை இந்தக் கிளையில் முக்கியத்துவம் வகிக்கிறது. வருஷந்தோறும் 200 பேர்களுக்கு மேல் இங்கு சிகிச்சை பெறுகின்றனர்.

நீதி நிர்வாகப் பிரிவினை

மக்கள் சர்க்கார் பதவியேற்ற பிறகு நடைபெற்றுள்ள பல சீர்திருத்தப் பணிகளுள் நீதி நிர்வாகப் பிரிவினை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நீதி நிர்வாகப் பிரிவினை அமுலால், நீதி வழங்கும் ஜில்லாக் கோர்ட்டுகள், இனி ஹைகோர்ட்டுகளின் மேற்பார்வையி லிருக்கும். இதுகாறும் இருந்ததுபோல் சிவில், கிரிமினல் வழக்குகளிலோ, தீர்ப்புகளிலோ நிர்வாகத்தினர் தலையீடு இருக்கமுடியாது. எனவே நீதியைச் சரிவர வழங்க இனி எவ்வித வில்லங்கமுமில்லை. இந்தப் பிரிவினை தற்போது வட ஆற்காடு, செங்கற்பட்டு, அனந்தபூர், பெல்லாரி, சித்தூர், திருநெல்வேலி, தென் ஆற்காடு, ராமனுதபுரம், கடப்பை, கர்நூல், ஸ்ரீகாகுளம், விசாகப்பட்டணம், கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், நெல்லூர், ஆகிய 16 ஜில்லாக்களில் அமுலாகி நடைபெறுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலையையும், இதுகாறும் நடந்துள்ள அபிவிருத்தித் திட்டங்களையும் நிஷ்பட்சபாதமாக உற்று நோக்குவோருக்கு, எவ்வளவு இடையூறுகளிடையே சர்க்கார் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றியுள்ளனர் என்பது புரியும். எத்தனை எத்தனையோ சோதனைகள், தாளமுடியாத கொடுமைகள் பல இருந்தும், மக்களின் பிரதிநிதித்துவ சர்க்கார் திகைத்துவிடாமல், தயங்கிவிடாமல் மக்களின் ஒத்துழைப்பு என்ற

பெரும் துணைகொண்டு நிறைவேற்றியுள்ளது குறிப்பிடத் தக்கது.

அன்னிய ஆட்சி அகன்ற காலையில் பொதுவாக இந்த நாட்டின், குறிப்பாக இந்த ராஜ்யத்தின் நிலை எவ்வாறிருந் தது என்று விவரிக்காமலே அனைவருக்கும் தெரியும். ஆயி னும் தேசபக்தியிலே ஊறித் திளைத்தவர்கள், மக்கள் அரசு அமைப்பதே இலட்சியமாகக் கருதிப் போராடி வென்றவர் கள், மக்களின் கோரிக்கைக்கு இணங்கிப் பொறுப்பேற்ற னர். ஆட்சிப் பொறுப்பேற்றவர்கள் நேற்றைய கொடுமை களைக் களைந்து, எதிர்காலத்தில் நாட்டிலே பூரண இன்ப மும் நிரந்திர திருப்தியும், நிம்மதியும் நிலவ இன்றே சுபீட்சப் பாதை அமைத்திருப்பது கண்கூடு.

ஐந்தாண்டுத் திட்டம்

> * ஆண் பெண் உள்ளிட்ட எல்லாப் பிரஜைகளும் ஜீவனோபாயத்துக்காகப் போதிய வழிவகைகளைச் சமமாகப் பெறவேண்டும்.
> * பொது நலத்தை முன்னிட்டு; சமூக சொத்து சுதந்திரங்களின் சொந்தமும் கட்டுப்பாடும் வகுக்கப்படவேண்டும்.
> * செல்வமும் பொருள் உற்பத்தி சாதனங்களும் பொதுஜனங்களுக்கும் பாதகமாகாத ரீதியில் ஒரு சிலரிடம் சேர்ந்துவிடாதபடி பொருளாதார அமைப்பு இயங்கி வரும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.
>
> —இந்திய திட்டக் கமிஷனின் கொள்கைகள்.

காலம் என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. காலச்சக்கரத்தை யார்தான் தடை செய்ய முடியும்? ஆயினும் அதன் நியதியை உணர்ந்து, அதற்கேற்ப தங்கள் வாழ்வை ஆராய்ந்து அமைத்துக் கொள்வோரும் இல்லாமலில்லை. அத்தகையவர்கள் காலத்தோடு சேர்ந்து முன்னேறும் ஆற்றலைப் பெறுகின்றனர்.

சென்ற காலத்தை நினைவில் வைத்துக்கொண்டு, நிகழ் காலத்தில் கடமைகளைச் செய்த வண்ணமே, எதிர்

காலத்தைப்பற்றியும் சிந்திக்கும் திறமை, மனிதர்களுக்குள்ள ஒரு சிறப்பான ஆற்றலாகும். மிருகங்கள் அன்றாட வாழ்க்கையைப்பற்றிமட்டும் கவலைப்படுகின்றன. நேற்று பற்றிய நினைவும், நாளைய பற்றிய எண்ணமும் இல்லாத நிலை, நாகரிகம் வளராததன் அறிகுறி.

பொதுவான இந்த உண்மைகள் தனி மனிதனுக்கு மட்டும் பொருந்துவன அல்ல. மொத்த சமுதாயத்துக்கும், சிறப்பாக நம் நாட்டிற்கு, அப்படியே பொருந்தும்.

மக்கள் பிரதிநிதிகள் 1946-ம் ஆண்டு அரசாங்கத்தை ஏற்றபோது, எல்லாவித அதிகாரங்களையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஆங்கில அதிகாரவர்க்க அமைப்பும், ஆட்சிமுறையும் அப்போது இருந்து வந்தன. அவற்றுக்குட்பட்டே மக்கள் அரசாங்கம் செயலாற்ற வேண்டியிருந்தது. அதன் பிறகு 1947-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 15-ந் தேதியன்று இந்தியா சுதந்திரம் அடைந்ததும், அநேக புதிய பிரச்னைகளும் பொறுப்புகளும் ஏற்பட்டன. அவற்றை உடனடியாகத் தீர்ப்பதில் தங்கள் முழு கவனத்தையும் அரசாங்கம் செலுத்த வேண்டியதாயிற்று. இவை தவிர இரண்டாவது மகா யுத்தத்தின் விளைவாக உலகமெங்கும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

மக்கள் அரசாங்கம் கடந்த ஐந்தாண்டுகளாக இத்தனை இடையூறுகளுக்கிடையேயும், பல்வேறு துறைகளிலே சிறந்த காரியங்களை சாதித்திருப்பதை, இது வரை கூறிவந்த விவரங்களால் அறியலாம். நிகழ்கால பிரச்னைகளைத் தீர்ப்பதோடு இந்த அரசாங்கம் நின்றுவிடவில்லை. எதிர்கால க்ஷேமத்துக்காக அவசியமான திட்டமொன்றை அவர்கள் திறம்பட வகுத்துள்ளனர். அதற்கு ஐந்தாண்டுத் திட்டம் என்று பெயர். இந்திய நாட்டின் எல்லாத்தேவைகளையும் சரிவர ஆராய்ந்து, அவற்றைப் படிப்படியாகத் தீர்க்க வழிகோலப்பட்டது. இங்குள்ள இயற்கைச் செல்வங்களையெல்லாம் நன்கு பயன்படுத்துவதற்கான வழி துறைகள் விவரிக்கப்பட்டன. சாகுபடியாகாமல் கிடைக்கும் தரிசு நிலம், நிலத்துக்கடியிலுள்ள உலோகவகைகள், நதிகளில்

ஓடும் ஏராளமான நீர், சோம்பிக்கிடக்கும் அளவற்ற மனித சக்தி முதலியவற்றைத் தக்கவாறு உபயோகித்து, நாட்டின் செல்வ நிலையைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அகில இந்திய ரீதியில் தயாரான இந்தத்திட்டம், நம் சென்னை ராஜ்யத்திற்கு மிகச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முனைகிறது. இதை நிறைவேற்ற ஐந்தாண்டுகளுக்கு 137 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப் பெற்றிருக்கிறது.

மக்கள் சர்க்கார் ஏற்படாததற்கு முன்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம், கூட்டுறவு முதலிய தேசீய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 10,61,84,000 ரூபாய் செலவிடப்பட்டு வந்தது. ஜனப்பிரதிநிதிகள் ஆட்சிவந்ததும், இந்தச் செலவு 42,22,50,000 ரூபாய் ஆயிற்று. எனவே, தேசீய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னை விட இப்போது நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. இவற்றுள் முக்கியமாக, நீர்ப்பாசனத்துறையிலே பிரமிக்கத்தக்க அபிவிருத்தி காணப்படுகிறது. 150 வருஷ ஆங்கில ஆட்சியில் சுமார் 18 கோடி ரூபாய் மாத்திரமே, இந்த ராஜ்யத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகச் செலவிட்டார்கள். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் இதற்காக மக்கள் சர்க்கார் செலவிட்டுள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் சுமார் 10 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்திருக்கிறார்கள். இதன் விளைவாக, நாடெங்கும் அநேக நீர்ப்பாசனத்திட்ட வேலைகள் துரிதமாக நிறைவேறி வருகின்றன. சிறப்பாக, வறண்ட இடங்களிலும், ஜமீன் இனம் பிரதேசங்களிலும் இவை விசேஷமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

தவிர மற்ற ராஜ்யங்களோடு ஒத்திட்டுப்பார்த்தால், சென்னை ராஜ்யம் பலவகையினும் முன்னேறியிருப்பது நன்கு விளங்கும்.

அஸ்ஸாம், கிழக்கு—பஞ்சாப் ஆகியவை உள்பட எல்லா ராஜ்யங்கள் சேர்ந்து, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகிய

வற்றிற்கு 32 கோடி ரூபாய் செலவிடுகின்றனர். அவற்றுள் 13 கோடி ரூபாய் அதாவது மூன்றில் ஒரு பங்குக்குமேல் நம் ராஜ்யம் செலவழிக்கின்றது. பீஹார், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய ராஜ்யங்கள் சேர்ந்து 11 கோடி ரூபாய் செலவழிக்கின்றன. இவை யெல்லாவற்றையும் விட இரண்டு கோடிக்கு மேலாக, நம் ராஜ்யம் ஒன்றே செலவிடுகிறது. உத்தரப் பிரதேசத்தைவிட 3 மடங்கும், பீஹாரைவிட 6 மடங்கும், நம் ராஜ்யம் செலவிடுகின்றது. பம்பாய் ராஜ்யம் இந்த வகையில் செலவழிக்கும் ரூபாய் 8 கோடியேயாகும்.

நம் ராஜ்யத்தில் தேசீய அபிவிருத்திக்காகும் செலவில் சுமார் 50 சத விகிதம் நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றுக்கே செலவிடப்படுகிறது. இதற்காக வங்காளத்தில் 7 சத விகிதமும், பீஹாரில் 12 சத விகிதமும், பம்பாயில் 29 சத விகிதமும், மத்தியப் பிரதேசத்தில் 30 சத விகிதமும், ஒரிஸ்ஸாவில் 22 சத விகிதமும், உத்தரப் பிரதேசத்தில் 41 சத விகிதமும் செலவிடப்படுகின்றன.

அடுத்த ஐந்தாண்டுகளில் கீழ்க்காணும் முறையில் தேசீய அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கம் செலவிடும் :—

	கோடி ரூபாய்.
1. நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்கள்	80·4
2. விவசாயம், கிராமாபிவிருத்தி ...	21·9
3. கைத்தொழில்கள்	2·1
4. ரஸ்தா அபிவிருத்தி	5·0
5. கல்வி, சுகாதாரம், இருப்பிட வசதிகள், பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் முதலான மற்ற சமூக நிர்மாண வேலைகள்	27·6
ஆக மொத்தம் ..	137·0

நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்களுக்காக எல்லா ராஜ்யங்களுக்குமாகச் சேர்த்து மொத்தம் 191 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்துள்ளனர். இதில் சென்னை ராஜ்யம் ஒன்றே 80 கோடி ரூபாய் செலவிடும். மற்ற ராஜ்யங்களெல்லாம் சேர்த்து 111 கோடி செலவிடும். இதில், மற்றொரு முக்கிய விஷயம் கவனிக்கத்தக்கது. அதாவது, அந்தந்த ராஜ்யங்கள் நிறைவேற்றும் திட்டங்கள் அல்லாமல், பொதுவாக சில பெரிய திட்டங்களை மத்திய சர்க்காரே நிறைவேற்ற முடிவு செய்துள்ளனர். அவற்றிற்காக 176 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகைய திட்டங்களால் பஞ்சாப், பீஹார், மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா ஆகிய ராஜ்யங்களுக்கே அதிகமான பலன் ஏற்படும். நம் ராஜ்யத்துக்கு அது போன்ற உதவி அதிகம் இல்லை.

செலவிடுவதில் மட்டும், நம் ராஜ்யம் முன்னணியில் நிற்கவில்லை. சிறந்த பலனைக் காண்பதிலும் அது முன் நிற்கிறது. அடுத்த ஐந்தாண்டுகளில் உத்தரப் பிரதேசம் 800,000 டன், பீஹார் 874,000 டன், மேற்கு வங்காளம் 787,000 டன், பஞ்சாப் 650,000 டன், பம்பாய் 367,000 டன் தானியம் அதிகமாக உற்பத்தி செய்யும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை ராஜ்யம் 834,000 டன் உணவுப் பொருள் அதிகம் விளைவிக்கும். எனவே, பீஹாருக்கு அடுத்தபடியாக, அதிக உற்பத்தி செய்யும் ராஜ்யம் சென்னையேயாகும்.

இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின், ஒரு சிறப்பான அம்சம் அனுபவ சாத்தியமானதாக இருப்பதேயாகும். நாட்டின் எதிர்கால வாழ்வில் நோக்கங்கொண்ட அதே நேரத்தில், மக்களின் நிகழ்கால நிலையையும் சர்க்கார் மறக்கவில்லை. ஜனங்களுக்கு அதிக கஷ்டமின்றியே, இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதியைச் சேகரிக்க உத்தேசித்துள்ளனர். பொதுஜன சுபிட்சத்துக்கான காரியங்களை உடனடியாகச் செய்தால் மக்கள் தாமாகவே மனமுவந்து அரசாங்கத்துக்கு அதிக வருமானம் அளிக்கத் தயங்கமாட்டார்கள் அல்லவா?

சர்க்கார் வருமான விவரம் வருமாறு:—

	கோடி ரூபாய்
1. நிலவரி மூலம் சுமார்	30
2. அரசாங்கச் செலவில் சிக்கனம் செய்வது மூலம்	5
3. டெபாசிட் செலவினுல் மிகுதி யாகும் தொகை	8
4. அரசாங்கக் கடன் வசூல் மூலம் ...	17
5. ரிசர்வ் நிதியிலிருந்து திருப்பிப் பெறும் வகையில்	27
6. அதிகப்படி வரிவிதிப்பின் மூலம் ...	20
7. மத்திய சர்க்காரிடமிருந்து மானியம்	30
ஆக மொத்தம் ...	137

முன்பெல்லாம் நாட்டில் அமைதி நிலைநிறுத்தும் பொறுப்பைமட்டுமே அரசாங்கம் வகித்து வந்தது. சுருங்கச் சொன்னுல் போலீஸ் ராஜ்யமாக இருந்தது. ஆனுல் இன்றோ மக்கள் சர்க்கார் பராமரிப்பு ஆட்சியை நடத்துகின்றனர். அதாவது, பொது ஜன சர்க்காரின் வருமானமும் செலவும், மக்களின் சமூக, கலசார, பொருளாதார க்ஷேமத்தை இலட்சியமாகக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன. சாக்கா்ர் வசூலிக்கும் பணம் முழுவதும், மக்களின் பல்வேறு செளகரியங்களுக்கே திரும்பி வருகிறது. அதற்காக பல்வேறு சமூக நல வேலைகள் துரிதமாக நிறைவேற்றவே சர்க்கார் முயன்று வருகின்றனர். கடந்த ஐந்தாண்டுகளில் சிறந்த அபிவிருத்தியை ஏற்படுத்திய மக்கள் சர்க்கார் அடுத்த ஐந்தாண்டுகளில்' மேற் சொன்ன திட்டத்தை வெற்றியோடு நிறைவேற்றி, நாட்டின் செல்வ வளத்தைப் பெருக்கி, பொது ஜனங்கள் சுபிட்சமாக வாழ வகை செய்யும் என்பதில் ஐயமில்லை.

முக்கியக் குறிப்புகள்

பொது விவரம்

மதுரை ஜில்லாவின் மொத்த விஸ்தீரணம் 4,883 சதுர மைல்கள்.
ஜில்லாவிலுள்ள தாலுகாக்கள் தொகை—8.
அவையாவன :—மதுரை, திண்டுக்கல், பழனி, பெரியகுளம், திருமங்கலம், மேலூர், கோடைக்கானல், நிலக்கோட்டை.
ஜில்லாவிலுள்ள கிராமங்களின் தொகை—1,081.

ஜன சங்கியை

ஜில்லாவின் ஜனத்தொகை—2,884,994.
ஜில்லாவின் ஓட்டர்கள் தொகை—1,321,159.
ஜில்லாவுக்கான ராஜ்ய அசெம்ப்ளியின் தொகை—15.
மத்திய மக்கள் சபைக்கான தொகுதிகள்—3.

கல்வி

ஜில்லாவில் உள்ள கல்லூரிகள்—4.
அவைகளாவன :—மதுரை சர்க்கார் கல்லூரி, அமெரிக்கன் கல்லூரி, தியாகராயா கல்லூரி, லேடிடோக் பெண்கள் கல்லூரி.
ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள்—2.
கல்லுப்பட்டி, காந்திக் கிராமம்.
ஜில்லாவில் உள்ள முதியோர் பள்ளிகள்—40.
கட்டாய ஆரம்பக் கல்வி அமுலான கிராமாந்திரங்கள்—47.
ஜில்லா போர்டு நிர்வாகத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிகள்—730.
முனிசிபல் நடுத்தரப் பள்ளிகள்—3.
திண்டுக்கல், கோடைக்கானல், பழனி.
ஜில்லா போர்டு நடுத்தரப் பள்ளிகள்—8.
வத்தலக்குண்டு, மேலூர், பெரியகுளம், சோழவந்தான், உசிலம்பட்டி, உத்தமபாளையம், பண்ணைக்காடு, பேரையூர்.
மிஷன் பள்ளிகள்—5.
திண்டுக்கல், மதுரை (3), பசுமலை.
இதர பள்ளிகள்—12.
போடிநாயக்கனூர், மதுரை (5), சின்னாளப்பட்டி, தேனி, திருமங்கலம், கம்பம், பட்டிவீரன்பட்டி, வேங்கடாசலபுரம்.

சுகாதார வசதி

சர்க்கார் நேர் பார்வையிலுள்ள ஆஸ்பத்திரிகள்—6.
மதுரை, பழனி, திண்டுக்கல், கோடைக்கானல், பெரியகுளம், உசிலம்பட்டி.

லோக்கல் பண்டு ஆஸ்பத்திரிகள்

அலங்காநல்லூர், ஆண்டிப்பட்டி, வத்தலகுண்டு, சின்னமனூர், கம்பம், கூடலூர், இடையக்கோட்டை, கன்னிவாடி, கீரனூர், மேலூர், நத்தம், நிலக்கோட்டை, பண்ணைக்காடு, சாப்டூர், சோழவந்தான், தேவாரம், திருமங்கலம், திருப்பரங்குன்றம், உத்தமபாளையம், வடசந்தூர்.
முனிசிபல் ஆஸ்பத்திரிகள்—5,
போடிநாயக்கனூர், கீழ் மதுரை, வட ஆவணிவீதி, பொன்னகரம, மேலவாசல்.
இதர ஆஸ்பத்திரிகள்—6.

பஞ்சாயத்துக்கள்

ஜில்லாவில் உள்ள பெரிய பஞ்சாயத்துக்கள்—30.
சிறிய பஞ்சாயத்துக்கள்—255.

விவசாயம்

விவசாய டிமான்ஸ்டிரேட்டர்கள் ஸ்தலங்கள்—9.
மேற்படி ஸ்தலங்களாவன :—மதுரை, கோடைக்கானல், மேலூர், திருமங்கலம், பெரியகுளம், திண்டுக்கல், பழனி, நிலக்கோட்டை, உத்தமபாளையம்.

மின்சார வசதி

கிராமாபிவிருத்தி வட்டாரத்துள் அடங்கிய கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்க அனுமதித்த செலவு ரூ. 40,000.
ஜில்லாவில் மின்சார வசதி விஸ்தரிப்பால் பயன் அடைந்துள்ள கிராமங்கள் தொகை—90.
அவைகளாவன :—

திண்டுக்கல் தாலூகா

திண்டுக்கல் நகரம், சின்னப்பட்டி, பிட்டளப்பட்டி, செம்பட்டி, வக்கம்பட்டி, சேவலசரக்கு.

கோடைக்கானல் தாலூகா

கோடைக்கானல் நகரம், அம்மைநாயக்கனூர், ஆத்தூர், வத்தலகுண்டு, நிலக்கோட்டை, பட்டிவீரன்பட்டி, செல்லம்பட்டி.

பழனி தாலூகா

பழனி நகரம், அமரப்பூண்டி, ஆயக்குடி, சித்தரேவு, எரமநாயகன்பட்டி, நெய்க்காரப்பட்டி, பாப்பம்பட்டி, வத்தகௌண்டன்வலசு, கொத்தமங்கலம், சிவகிரிப்பட்டி, தாமரைக்குளம், தாத்தநாய்க்கன்பட்டி.

பெரியகுளம் தாலூகா

பெரியகுளம் நகரம், அல்லி நகரம், சின்னமனூர், கம்பம, ரங்கநாதபுரம், ஸ்ரீரங்கபுரம், தேனி, உத்தமபாளையம், வீரபாண்டி, வெங்கடாசலபுரம், வேப்பம்பட்டி, கொடுவிலார்ப்பள்ளி, தாடிச்சேரி, தொம்புச்சேரி, கொரம்பட்டி, லக்ஷ்மிபுரம், பித்தளைப்பட்டி, தொட்டஹட்டான்பட்டி, உப்பரப்பட்டி, உப்புக்கோட்டை, வடவீரநாயக்கன்பட்டி.

மதுரை தாலூகா

மதுரை நகரம், ஆண்டிப்பட்டி, ஆவினியாபுரம், ஹார்விப்பட்டி, பழங்காநத்தம், பனையூர், பசுமலை, திருப்பரங்குன்றம், வீரமாடயம், அழகாபுரி, கூத்தியாகுண்டு, சமயநல்லூர், சோழவந்தான், வடபழஞ்சி, ஆவணிபுரம், அய்யனுபுரம், விளாச்சேரி, விளாபுரம், தேனூர், வீரட்டானூர், விரகனூர், மடக்குளம், அச்சம்பத்து.

மேலூர் தாலூகா

திருவடவூர், தேக்குப்பட்டி, வேப்படப்பு.

திருமங்கலம் தாலூகா

தர்மத்துப்பட்டி, கள்ளிக்குடி, கப்பலூர், கிண்ணிமங்கலம், மறவன்குளம், ராயபாளையம், கட்டரம்பட்டி, சுந்தரராஜபுரம், அச்சம்பட்டி, ஆலம்பட்டி.

அபிவிருத்திப் பட்டியல்

மதுரை ஜில்லாவின் மொத்தப் பரப்பளவு	ஏக்கர். 3,115,716
விளை நிலப்பரப்பு	1,137,645
நெல் தானிய உற்பத்திஅளவு... ...	357,000
ராகி	60,200
சோளம்	82,000
கம்பு	12,500
வரகு	67,700
கடலைக்கொட்டை	50,500
சாமை	90,400
எள்	20,200
காணம் முதலியன	109,000
கரும்பு	4,040
பருத்தி, புகையிலை முதலியன ..	170,700
காய் கறிப் பயிர் வகை	44,000

விவசாயிகளுக்குக் கடந்த ஐந்தாண்டுகளில் அளிக்கப்பட்ட உர, விதை, உபகரண விவரம்.

பிண்ணாக்கு உரம்	19,347	டன்.
ரசாயன உரம்	5,486	,,
குப்பை உரம்	63,044	,,
பொறுக்கு விதைகள்	1,162	,,
இந்த விதைகளால் அதிகரித்துள்ள உற்பத்தி	5,000	,,
கடந்த ஐந்தாண்டுகளில் சராசரி அதிக உற்பத்தி	10	சத விகிதம்
கருவிகள், உரம், விதைகள் வாங்க சர்க்கார் கடந்த நாலாண்டுகளில் அளித்த கடன் உதவி	1,68,950	ரூபாய்
1950-ல் ஜில்லா பூராவுக்கும் மொத்தமாகச் சப்ளை செய்த உரத்துக் காகச் சர்க்காருக்கான செலவு ...	30,65,415	,,

விவசாயக் கருவிகள் விநியோகம்

புதுமுறைக் கலப்பைகள்	714
பம்பு செட்டுகள்	364
ஆயில் என்ஜின்கள்	28
மின்சார மோட்டார்கள்	37

பாசன வசதிகள்

பெரியாறு டிவிஷனில் கடந்த நாலாண்டுகளில் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்	733	
மேற்படி திட்டங்களுக்கான செலவு ...	9,48,677	ரூபாய்
இதர டிவிஷன்களில் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்	257	
மேற்படி திட்டங்களுக்கான செலவு ...	2,36,911	ரூபாய்
எனவே பெரியாறு டிவிஷனில் சராசரி வருஷமொன்றுக்கு நிறைவேறிய திட்டங்கள்	183	
சராசரி வருஷ செலவு	2,37,169	ரூபாய்
இதர டிவிஷனில் சராசரி வருஷமொன்றுக்கு நிறைவேறிய திட்டங்கள் ...	64	
சராசரி வருஷ செலவு	59,228	ரூபாய்
பரப்பலாறு திட்டத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ள தொகை	20,00,000	,,
சந்தனுவர்த்தினி திட்டத்துக்கு துகை	20,000	,,
ஆதிபுரம் குளம் வெட்டுக்கு துகை ...	75,000	,,
ஆனைக் குளம் அணைக்கட்டுக்கு துகை ...	14,500	,,
மைதள மண்ணடிக்குள மராமத்து ...	52,000	,,
போக்கு வரத்து வசதிகள்; வைகையின் குறுக்கே ஒரு தோணிப்பாலம் செலவு.	2,00,000	,,
மதுரை டிரங்க் ரோட், திண்டுக்கல் - பழனி ரோடில் காங்கிரீட் போட மதிப்பீட்டுச் செலவு	7,50,000	,,
கோடைக்கானல் ரோடில் தார் போடச் செலவு	85,000	,,

கல்வி, சுகாதார வசதி

கல்லுப்பட்டி ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிக் கட்டிடச் செலவு	1,50,000	ரூபாய்
திண்டுக்கல் ஆஸ்பத்திரி விஸ்தரிப்புக்கான செலவு	70,000	,,
மதுரை நகரக் குடிதண்ணீர் வினியோகத் திட்டத்துக்கான செலவு ...	2,90,150	,,
கோடைக்கானல் குடி தண்ணீர்த் திட்டச் செலவு	21,190	,,
ஆவினியாபுரம் குடி தண்ணீர்த் திட்டச் செலவு	93,000	,,
கோச்சடைத் தண்ணீர்ச் சுரப்பு அதிகரிப்புத் திட்டச் செலவு	3,00,000	,,

கிராமாபிவிருத்தி

திருமங்கலம் பிர்க்காவில் அடங்கிய கிராமங்கள் சுமார்	250	

இந்தப் பிர்க்காவில் குடி தண்ணீர் ஏற்பாட்டுக்காக ஆன செலவு ...	70,000	ரூபாய்.
கலெக்டரின் யுக்தானுசார நிதியிலிருந்து அபிவிருத்தித் திட்டங்களுக்கு அளித்த தொகை ...	39,820	,,
ரஸ்தாக்கள் அமைப்பதற்கான செலவு.	70,000	,,
1944–50-ம் வருஷம் வரை வெட்டப்பட்டுள்ள கிணறுகள் ...	25	
இவற்றிற்கான செலவு ...	35,552	ரூபாய்.
பழுது பார்க்கப்பெற்ற கிணறுகள் தொகை ...	32	
இவற்றிற்கான செலவு ...	26,705	ரூபாய்.
ஆக மொத்தம் செலவான தொகை ...	62,257	,,
இவற்றில் சர்க்கார் அளித்த தொகை ...	40,259	,,
பொது மக்கள் அளித்த தொகை ...	21,998	
1950-51-ம் வருஷத்தில் வெட்டப்பெற்ற புதுக் கிணறுகளின் தொகை.	10	
பழுது பார்க்கப் பெற்றவை ...	38	
இவற்றிற்கான செலவில் சர்க்கார் அளித்த தொகை ...	33,000	ரூபாய்.
பொது மக்கள் அளித்த தொகை ...	8,250	,,
எட்டு கிராமங்களுக்குத் தொடர் பேற்படுத்துப் புதிய ரஸ்தாக்களுக்கான செலவு ...	39,685	,,
இதில் மக்கள் அளித்த தொகை ...	20,000	,,
பள்ளிக்கூட நிர்மாணம், வாசகசாலை, சுத்திகரிப்பு போன்ற பல்வேறு வேலைகளுக்கு ஆன செலவு தொகை ...	1,18,062	,,
இதில் மக்கள் அளித்த தொகை ...	78,242	,,
இந்த பிர்க்கா வட்டாரத்தில் உள்ள ஹரிஜன சென்டர்கள் ...	12	
ஹரிஜன முதியோர் கல்வி நிலையங்கள்.	12	
ஹரிஜனங்களுக்கென்று வெட்டப்பட்டுள்ள கிணறுகள் ...	30	
இவற்றிற்கான செலவு ...	23,438	ரூபாய்.
திருமங்கலம் பிர்க்காவில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ...	117	
பஞ்சாயத்துக்கள் ...	71	
கிராம சேவா சங்கங்கள் ...	115	
மேற்படி பிர்க்காவில் உள்ள பிரதம வாசக சாலை ...	1	
கிளை வாசக சாலைகள் ...	55	
பிர்க்காவில் சர்க்காரால் விநியோகிக்கப்பட்டுள்ள ராட்டைகள் ...	1,058	
அகில பாரத சர்க்கா சங்கம் விநியோகித்துள்ள ராட்டைகள் ...	1,500	

கிராமவாசிகளின் சொந்த உழைப்பில் நிர்மாணிக்கப்பட்ட சாக்கடைகள் நீளம்	54,500	அடிகள்.
மேற்படிக்கு அவர்களே செய்து கொண்ட செலவு	81,750	ரூபாய்

கூட்டுறவு

1950-ம் வருஷ முடிய ஏற்பட்டுள்ள பால் சப்ளைக் கூட்டுறவுச் சங்கங்கள்.	60	
இவற்றிற்குச் சர்க்கார் அளித்துள்ள கடன் தொகை	1,51,330	ரூபாய்
நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ...	6,171	
இவற்றின் மூலம் தயாரான துணிகளின் பெறுமானம்	21,00,000	ரூபாய்.
1950-ம் வருஷம் முடிய ஏற்பட்டுள்ள விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ...	753	
இவற்றில் பல நோக்கச் சங்கங்கள் ...	58	
இவற்றின் மூலம் பலன் அடையும் விவசாயிகள் ஜில்லாவில் சுமார் .	82·8	சத விகிதம்
மதுரை வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சர்க்கார் கடனாக அளித்துள்ள தொகை	16,00,000	ரூபாய்
மேற்படி சங்கத்தினால் இது வரை கட்டி முடிக்கப்பெற்ற வீடுகள்	107	
முடிவடையும் தறுவாயிலிருப்பவை ...	131	
மதுரை ஜில்லாவில் உள்ள இதர கட்டிட நிர்மாணக் கூட்டுறவுச் சங்கங்கள் தொகை	22	
இவற்றிற்கு 1950-ம் வருஷத்தில் சர்க்கார் அளித்துள்ள கடன் தொகை ...	16,48,800	ரூபாய்.

ஸ்தல ஸ்தாபனம்

மதுரை முனிஸிபாலிடி மழைத் தண்ணீர் வடிகால் நிர்மாண வேலைக்காகச் செலவழித்த தொகை	5,50,000	ரூபாய்.
மேலூர் ரஸ்தாவைக் காங்கிரீட் ரோட்டாகச் செய்த செலவு	1,00,000	,,
திண்டுக்கல் முனிஸிபாலிடி ஆரம்ப நடுத்தரக்கல்வி அபிவிருத்திக்காகச் செய்யும் வருஷாந்திர சராசரிச் செலவு ...	1,40,000	,,
மதுரை ஜில்லா போர்டார் ரஸ்தா பராமரிப்புக்காக வருஷந்தோறும் செலவிடும் சராசரித் தொகை	8,00,000	,,
ஜில்லா போர்டிலுள்ள கட்டாய ஆரம்பக்கல்வி சென்டர்கள் ...	47	
இவற்றிற்குச் சர்க்கார் அளித்துள்ள மானியம்	2,56,758	ரூபாய்.

ஹரிஜன முன்னேற்றம்

ஜில்லாவில் உள்ள ஹரிஜன மாணவர் பள்ளிகள்	13	
சர்க்கார் மானிய உதவிபெறும் ஹாஸ்டல்கள் தொகை	30	
ஜில்லா ஹரிஜன சேவா சங்க மேற்பார்வையில்உள்ள ஹாஸ்டல்கள் ...	16	
இவை அனைத்துக்கும் அளிக்கப்படும் மானியத் தொகை	1,28,850	ரூபாய்.
1949–50-ம் வருஷத்தில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப் பெற்ற உபகாரச் சம்பளம்	30,660	..
1950–51-ம் வருஷத்தில் தங்கிப்பயிலும் மணவர்களுக்கு அளிக்கப் பெற்ற உபகாரச் சம்பளம்	74,184	..
இதர ஹரிஜன மாணவர்களுக்கு அளிக்கப்பெற்ற உபகாரச் சம்பளத் தொகை 1949–51-ம் வருஷம் வரை.	39,723	..
கடந்த நாலாண்டுகளில் அளிக்கப் பெற்ற குடியிருப்பு மனைக்கட்டுகள்.	142	

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

ஐந்தாண்டு அபிவிருத்தி

இராமநாதபுரம் ஜில்லா

சென்னை சர்க்கார்
செய்தி இலாகாவின் வெளியீடு
1951

[விலை, அணா 4.

PUBLIC LIBRARY
16 FEB 1952
MADRAS

இந்நூலின் இறுதியில் சேர்த்துள்ள ஜில்லாப் படத்தைத் தயாரித்து, அச்சடித்தும் கொடுத்தவர், சென்னை சர்க்கார் சர்வே இலாகாவினர் ஆவர். படத்தின் அளவு மிகப் பெரியதாய் இல்லாமையால், வெகு முக்கியமான குறிப்புகளை மட்டுமே அதில் காட்ட முடிந்தது.

இந்திய சர்க்கார் புதை பொருள் ஆராய்ச்சி இலாகாவினர் (Archæological Department) புராதனக்கலைகள் சம்பந்தமான பல அழகிய படங்களை வெளியிட அனுமதி தந்துதவினர். அவற்றுள் பெரும்பாலானவற்றை கடைசி அட்டைப்படத்தில் காணலாம்.

ஸ்ரீ எம். கே. ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் அளித்த சில படங்களும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன.

படங்கள்

மேல் அட்டை :—

முதல் பக்கம் :

பெரியது—

இராமேஸ்வரம் கோயில் உட்புறம்.

சிறியது—

குள மராமத்து வேலை.

கடைசி அட்டை :

தஞ்சாவூர் கோயில், திருச்சி மலைக்கோட்டை, உதகமண்டலம் காட்சி, கோடைக்கானல் ஏரி, ராமேஸ்வரம் கோயில் உட்புறக் கலைக் கூடம், புகளூர்ப் பாலம், மேட்டூர் நீர்த் தேக்கம், பாபநாசம் மின்சார நிலையம், திருவரங்கம் கோயில் சிற்பம், மாமல்லபுரம் சிற்பம், குற்றால நீர்வீழ்ச்சி.

49017
Y2:3:N51→N46t5
3131

மேன்மை தங்கிய சென்னை கவர்னர்
ஸ்ரீ ஸர் கிருஷ்ணகுமார் ஸின்ஹ்ஜி பவ்ஸின்ஹ்ஜி,
கே. ஸி. எஸ். ஐ., பவ்நகர் மஹாராஜா.

கனம் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம்
மராமத்து மந்திரி

கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்
சுகாதார மந்திரி

கனம் ஸ்ரீ ஜே. எல். பி. ரோச் விக்டோரியா
உணவு மந்திரி

னம் ஸ்ரீ பி. கோபால ரெட்டி
நிதி மந்திரி



கனம் ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா
முதல் மந்திரி

கனம் ஸ்ரீ வி. பெருமாள்சாமி ரெட்டி
கைத்தொழில மந்திரி



நம் ஸ்ரீ கே. மாதவ மேனன்
கல்வி மந்திரி

கனம் ஸ்ரீ பி. பரமேஸ்வரன்
கிராம அபிவிருத்தி மந்திரி

ஸ்ரீ ஹெச். சிதாராம ரெட்டி
ரெவின்யூ மந்திரி

கனம் ஸ்ரீ கே. சந்திர மௌலி
ஸ்தல ஸ்தாபன மந்திரி

கனம் டாக்டர் டி எஸ்.எஸ். ராஜன் அவர்கள் சுகாதார மந்திரி பதவியை 1951-ம் ௵ செப்டெம்பர் 17உ ராஜிநாமா செய்த பிறகு கனம் ஸ்ரீ களா வெங்கடராவ் செப்டெம்பர் 26உயிலிருந்து அப்பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முன்னுரை

பொதுஜனப் பிரதிநிதிகள் சென்னை ராஜ்ய ஆட்சி முறையை மேற்கொண்டு இப்போது ஐந்தாண்டுகளுக்கு மேலாகிறது. நமது தேசத்தின் சரித்திரத்திலேயே இந்த ஐந்து வருஷ காலமும் ஒரு சோதனை கட்டமாகும். முற்கால ஆட்சி முறையின் சின்னங்கள், தற்கால மாறுதல்கள் காரணமாகத் தோன்றும் இன்னல்கள், வருங்கால நல்வாழ்வுக்குரிய பலமான அஸ்திவாரம் கோலவேண்டிய கடமை ஆகிய எல்லாவற்றையும், அரசாங்கம் ஏக காலத்தில் கவனிக்க வேண்டியதாயிற்று.

இத்தகைய சோதனைகளுக்கும் நிர்ப்பந்தங்களுக்குமிடையே, சர்க்கார் தங்களை ஒரே லட்சியத்தை மறக்காமல் போற்றி வந்துள்ளனர். அதாவது, " எம் கடன் மக்களுக்குப் பணிசெய்து கிடப்பதே " என்னும் உயர்ந்த கொள்கையை அவர்கள் கடைப் பிடித்து வருகிறார்கள். மக்களுடைய நன்மையைக் கோரியும், அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றவும்தான், ஜனப் பிரதிநிதிகள் அரசாங்க பதவியை வகித்து வருகின்றனர்.

எத்தனையோ காலமாக நாம் கண்டு கொண்டிருந்த இலட்சியக் கனவுகள், கடந்த ஐந்தாண்டுகளில் நனவாகி இருக்கின்றன. மதுவிலக்கு, ஜமீன்முறை நீக்கம், நீதி–நிர்வாகப் பிரிவினை ஆகிய சீர்திருத்தங்கள், நம்முடைய எதிர்கால சந்ததியாருக்கு மிகச் சிறந்த நற்பயன் அளிப்பதோடு, சமூக அமைப்பிலேயே ஒரு புரட்சியை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மூல சாதனக்குறைவினால் ஏற்பட்ட முடக்கம், மற்றும் எத்தனையோ பெரிய சங்கடங்களுக்கும் இடையே, அநேக அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளன. இத்திட்டங்கள் கஷ்டமான உணவு நிலைமையை ஒரளவு சமாளிக்க உதவுவதோடு, பொதுவாகப் பொருளாதாரத் துறையில் ஸ்திரமான நிலையையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த காரணமாயிருக்கின்றன.

பிரிட்டிஷார் தங்கள் ஆட்சி காலம் பூராவும் நீர்ப்பாசனத்துக்காகச் செலவு செய்த தொகைக்கு மேலேயே, நாம் கடந்த ஐந்தாண்டுகளில், அதன் பொருட்டு இந்த ராஜ்யத்தில் செலவிட்டிருக்கிறோம். 1945–46ம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்த நீர்ப்பாசனச் செலவு, 1951–52-ம் வருஷத்தில், சர்க்காரின் வரவு செலவுத் திட்ட மதிப்பின்படி, 10 கோடி ரூபாய்க்கு மேலாகியுள்ளது. இப்போது நமது ராஜ்யத்தில் மொத்தம் 101 லட்சம் ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது.

தவிர, நமது சென்னை ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி இரு மடங்கு அதிகமாகியுள்ளது. மின்சார அபிவிருத்திக்கான ஐந்து வருஷத் திட்டத்தில் மூன்றில் இரு பங்கு பூர்த்தியாய் விட்டது. இதன் மூலம் சுமார் 1,600 கிராமங்களுக்கு மின்சாரம் சப்ளையாகிறது. கிராமங்களுக்கு மின்சார வசதி செய்துகொடுப்பதில் இந்தியா முழுவதிலும் சென்னை ராஜ்யமே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. 1945–46–ம் வருஷத்தில் மின்சாரத் துறையில் அரை கோடி ரூபாய்க்குக் கொஞ்சம் அதிகமாக மட்டும் சென்னை அரசாங்கத்தார் செலவிட்டனர். ஆனால், 1951–52-ம் ஆண்டிலோ, பட்ஜெட் மதிப்பின் பிரகாரம், ஒன்பது கோடி ரூபாய்க்குமேல் செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, ஐந்தாண்டுகளில் நீர்ப்பாசனத் துறையில் ஏறக்குறைய பத்து மடங்கும், மின்சாரத் துறையில் இருபது மடங்கும் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது விளங்கும்.

இத்தனை சாதனைகளுக்கும் பொது ஜனங்களின் பூரண ஒத்துழைப்பே காரணமாயிருந்தது. சர்க்காருடன் மக்கள் மனமுவந்து ஒத்துழைத்ததால்தான், அநேக காரியங்களை நிறைவேற்றுவது சாத்தியமாயிற்று. ஆகவே, இவற்றை எல்லாம் சாதித்த பெருமை, நிச்சயமாக இந்த ராஜ்ய மக்களையே சார்ந்ததாகும். அதாவது பொது ஜனங்களாகிய உங்களுக்கே அப்பெருமை உரியதாகும்.

கடந்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்பட்ட க்ஷேமாபிவிருத்திகளை விளக்கும் வெளியீடுகளில், இப்புத்தகம் ஒன்றாகும். உங்கள் சர்க்கார் என்னென்ன செய்தார்கள் என்பதை இதன் மூலம் உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். இதை அறிந்து கொள்ளவேண்டிய உரிமையும், இதுபற்றித் தீர்ப்பளிக்கும் பொறுப்பும் உங்களுக்கே உண்டு.

பி. எஸ். குமாரசாமி ராஜா

அறிமுகம்

> பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
> நற்றவ வானினும் நனி சிறந்தனவே

புத்துயிர் பெற்ற விவசாயத் தொழிலாளர்கள்; உழைப்புக் கேற்ற ஊதியம் தரும் நிலம்; சாகுபடிக்கு வேண்டிய தண்ணீரைச் சேர்த்து வைத்துக் கொடுக்கும் குளங்கள், குட்டைகள், கால்வாய்கள், கிணறுகள், இவை நிறைந்த ராமநாதபுரம் ஜில்லா.

விழித்தெழுந்தார்கள் விவசாயிகள். நீர் நிலைகளைச் செப்பனிட வீறுகொண்டு வேலை செய்கிறார்கள். தூண்டுகோலாக நிற்கின்றனர் மக்கள் சர்க்கார். தங்கள் நிலங்களைச் செழிப்புறச் செய்வதில்தான் அந்த விவசாயிகளுக்கு எத்தனை ஆர்வம்! சோர்வுற்றுத் தூங்கியகாலம் போய் இப்போது தோளிட்டு வேலை செயத் துணிந்தாயிற்று என்ற போக்கில் அவர்களுடைய ஊக்கம் செல்கிறது. இம்மாதிரி ஊக்கம் பெற்ற தொழிலாளர்களுக்கு வேண்டிய துணை புரிய நம் மக்கள் சர்க்கார் முன் வந்திருக்கின்றனர்.

நீர்ப்பாசன வேலைகள் மிகவும் சுறுசுறுப்பாய் நடக்கிறது. தூர்ந்து கிடந்த குளங்கள் பல அழகாய் வெட்டப்பட்டிருக்

கின்றன. மற்றும் பல ஏரிகளையும் கிணறுகளையும் பழுது பார்த்துக்கொண்டிருக்கின்றனர். ராமநாதபுரம் ஜில்லா வாசிகளின் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தமே உதயமாயிருக்கிறதென்று சொல்லலாம். அவர்களுடைய நீர்ப்பாசன அமைப்பு முயற்சிகள் பூர்த்தியாகும்பொழுது அந்த ஜில்லாவின் உணவு தானிய உற்பத்தி பன்மடங்கு பெருகும். அப்பொழுது அங்கு உணவு பற்றாக்குறை, பஞ்சம் என்ற நிலைமைகளுக்கே இடமிருக்காது.

ராமநாதபுரம் ஜில்லா, திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய ஜில்லாக்களின் மத்தியில் இருக்கிறது. மன்னார்குடாக்கடல் அதன் கிழக்கு எல்லையாக அமைந்துள்ளது. சுமார் 2,300 கிராமங்களடங்கிய இந்த ஜில்லா 4,851 சதுரமைல் பரப்புடையது. ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர், அருப்புக்கோட்டை, பரமக்குடி, முதுகுளத்தூர், ராமநாதபுரம், சிவகெங்கை, திருப்பத்தூர், திருவாடானை என 9 தாலூகாக்களாய் அதைப் பிரித்திருக்கிறார்கள்.

வைகை நதி இந்த ஜில்லா வழியாக ஓடிக் கடலில் சங்கமமாகிறது. கடலில் சேருவதற்கு முன் அந்நதி ராமநாதபுரம் பெரிய ஏரியில் விழுகிறது. ஏரிக்கு அதிகமாயுள்ள தண்ணீர் தான் கடலையடைகிறது. வைகையில் எவ்வளவு தண்ணீர் ஓடுகிறதென்பது அநேகமாய் யாவரும் அறிந்ததே. மழை பெய்தால் காட்டாறு மாதிரி பெருக்கெடுத்து ஓடும். இல்லையென்றால் அது வெறும் மணல் ஆறுதான்.

ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள இதர நதிகளான வைப்பாறு, குண்டாறு, மணிமுத்தாறு, விரிசலையாறு இவைகளும் வைகைநதிபோன்றவைகளே. எனவே இந்நதிகளை நம்பி விவசாயிகள் தங்கள் தொழிலைச்செய்யமுடியாது. குளங்களிலும், ஏரிகளிலும் தண்ணீரை அவர்கள் தேக்கி வைத்துக்கொள்வார்கள். கிணறுகளும் அதிகம் உண்டு. இந்த ஜில்லா பெரும்பாலும் ஜமீன் பூமியாக இருந்தமையால் இங்குள்ள நீர்நிலைகள் சரிவர செப்பனிடப்படாமல் நாட்டு வளமே சிறிது சிறிதாய்க் குறைந்துகொண்டு வந்தது.

ஜமீன்தாரி முறை எடுபட்டது இந்த ஜில்லாவுக்குப் புத்துயிரளித்திருக்கிறது.

ராமநாதபுரம் ஜில்லாவுக்குப் பெருமையளிப்பது 'சேதுக்கரை'. இது, ஜில்லாவின் கீழ்க்கோடியிலுள்ள ஒரு தீவு. இதில்தான் ராமேச்வரமும் தனுஷ்கோடியு மிருக்கின்றன. இவ்விரண்டு புண்ணியஸ்தலங்களுக்கு இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் யாத்ரீகர்கள் திரள் திரளாய் வருகிறார்கள். இராமாயணகாலத்தில் இந்தியாவையும் இலங்கைத்தீவையும் இணைக்கப் பாலங்கட்டியதாகச் சொல்வது இங்குதான். இந்தியாவின் மற்றெந்தப் பாகத்தையும் விட இங்கிருந்துதான் இலங்கை குறைந்த தூரத்திலிருக்கிறது. தனுஷ்கோடிக்கும், இலங்கையிலுள்ள தலைமன்னாருக்கும் இடையேயுள்ள கடல்வழி 24 மைல் தூரம்தான். இந்த தூரத்தை தென்ரயில்வே விசைக்கப்பல் இரண்டு மணி நேரத்தில் கடந்து விடுகிறது.

சேதுத்தீவையும் இந்தியாவின் பிரதானபாகத்தையும் பிரிப்பது பாம்பன் ஜலசந்தி. அதன் குறுக்கே சுமார் 3 மைல் நீளத்தில் ரயில் பாலம்போட்டிருக்கிறார்கள். இந்த பாலத்தில் ஒரு விசேஷ அம்சம் உளது. ரயில்போகும்போது ஒன்றுபோலிருக்கும் பாலத்தின் மத்தியிலொரு பகுதியை கப்பல் போவதற்கு, மேலே தூக்கும்படியான ஒரு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஜில்லாவின் பெருமைக்குரிய மற்றொரு அம்சம் இங்கு உற்பத்தியாகும் பருத்தி. சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர், அறுப்புக்கோட்டை முதலிய தாலூகாக்களில் ஏராளமான பருத்தி பயிரிடப்படுகிறது. எனவே அந்த பிரதேசங்களில் குறிப்பாய் சாத்தூர், ராஜபாளையம், விருதுநகர் முதலிய இடங்களில், ஜின்னிங், பிரஸிங் ஆலைகள் பல இருக்கின்றன. ராஜபாளையத்திலும், விருதுநகரிலும் நூல் ஆலைகள் இருக்கின்றன.

ராமநாதபுரம் ஜில்லாவில் பொதுவாய் பனைமரங்கள் அதிகம். வைகைக்கரையிலும் கடலோரங்களிலும் பல தென்னந் தோப்புகள் இருக்கின்றன. கடற்கரையில்

பங்கீட்டு முறையை எடுத்துவிட்டபோதிலும், சர்க்கார் ஆங்காங்கு நியாயவிலைக்கடைகள் மூலம், அகப்பட்ட உணவுதானியங்களை (அரிசி உள்பட) ஏழைமக்களுக்குப் பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

உணவு தானியப் பங்கீடு முறையை நடத்துவதில் சர்க்காருக்கு எவ்வித லாபமோ அல்லது சந்தோஷமோ கிடையாது. நிலைமையை பொது ஜனங்கள் எல்லோருக்கும் ஒன்றுபோல் நிரவ வேண்டுமென்ற நோக்கில்தான் இதைச் செய்து வருகிறார்கள். கையிருப்பு நிலைமை அபிவிருத்திக்குத் தக்கபடி பங்கீடு அளவையும் அதிகப்படுத்தி இறுதியில் முன்போல் பொது வர்த்தக நியதியில் விட்டுவிடத்தான் சர்க்கார் ஆசைப்படுகின்றனர்.

பற்றாக்குறையையும் பஞ்சத்தையும் ஒழிப்பதற்கான உணவு தானிய உற்பத்தியைப்பெருக்க சர்க்கார் எல்லா முயற்சியும் எடுத்து வருகிறார்கள். நீர்ப்பாசன வசதிகள் சாத்தியமான எல்லா மார்க்கங்களிலும் செய்து கொடுக்கப்படுகின்றன. ராஜ்ய முழுவதிலும் குள மராமத்துகள், கால்வாய், கிணறுகள் செப்பனிடுதல் முதலிய அலுவல்கள் மிக வேகமாய் நடைபெறுகின்றன.

சர்க்காரின் தானியக் கொள்முதலும் அதிகரிக்கத் துவங்கிவிட்டது. வெளிநாட்டு இறக்குமதியும் வேண்டுமளவுக்குச் செய்யப்படுகிறது. பரஸ்பர நல்லெண்ண நோக்கிலும் பல நாடுகள் இந்தியாவுக்கு உணவு தானிய உதவி செய்ய முன் வருகின்றன.

உணவு உற்பத்தி

ராமநாதபுரம் ஜில்லா பொதுவாகவே உணவு தானியத்தில் பற்றாக்குறையானது. அத்துடன் பருவ மழையும் பெய்யாது போனதால் சென்ற நான்கு வருஷங்களில் அங்கு உணவு நிலைமை மிகவும் மோசமாயிற்று. நிலைமையை சமாளிக்க சர்க்கார் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். தீவிர கொள்முதல் முறையை அனுஷ்டித்தும், போதாததற்கு தானியங்களை இறக்குமதி செய்தும் பங்கீடு மூலம்

மக்களுக்கு விநியோகித்தனர். உணவு தானிய விநியோகத்தில் சர்க்கார் இத்தனை கவனத்துடன் கட்டுப்பாடுகளை அமுல் நடத்தாவிடில் நிலைமை இன்னும் மோசமாகியிருக்கும். அரிசி, கோதுமை, இதர தானியங்களை அடியிற் கண்ட விவரப்படி ஒவ்வொரு வருஷமும் சர்க்கார் இந்த ஜில்லாவில் விநியோகம் செய்திருக்கின்றனர்.

வருஷம்,	அரிசி, டன்.	கோதுமை, டன்.	இதர தானியங்கள். டன்.
1945—46	74,629	595	11,710
1946—47	81,807	1,500	6,173
1947—48	61,618	1,280	15,354
1948—49	46,763	1,235	8,168
1949—50	48,618	6,000	13,479
1950—51 (ஏப்ரல் வரை)	17,429	2,658	1,881

சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை வருஷத்துக்கு 5½ லட்சம் அதிகரித்து வருகிறது. அதற்குத் தகுந்தாற்போல் ராஜ்யத்தின் உணவு உற்பத்தியும் வருஷத்திற்கு 70,000 டன் அதிகரிக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

உணவு தானிய உற்பத்திப் பெருக்கத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மக்கள் சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது. அதிக உணவு உற்பத்தித் திட்டம், சுய நிறைவுத் திட்டம் இவற்றை நிறைவேற்றுவதில் நம் சர்க்கார் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர். மக்கள் உண்ணும் உணவின் தரத்தை உயர்த்துவதற்காக நல்ல பழ வர்க்கங்களையும் காய் கறி வகைகளையும் பயிரிட மக்களை ஊக்குவிக்கின்றனர். ஆடு, கோழிப் பண்ணைகளையும் அதிகப்படுத்த சர்க்கார் ஏற்பாடு செய்கின்றனர். விவசாயிகளின் சீர்திருத்தத்திற்கான எல்லா நலன்களையும் மிக சிரத்தையுடன் கவனிக்கிறார்கள்.

அதிக உணவு உற்பத்தித் திட்டம் 1942—43-ம் வருஷத்திலேயே அமுலுக்கு வந்து விட்டது. ஆனால், சென்ற ஐந்து

வருஷங்களாகத்தான் அந்தத் திட்டத்தின் கீழ் அதி தீவிர மாய் வேலை நடக்கிறது. நிலத்தின் விளைச்சல் மகசூலை அதிக மாக்கவும், மீன் அபிவிருத்தி, பால் அபிவிருத்தி செய்வதி லும் அதிக சிரத்தை காட்டுகிறார்கள். 1944-ம்வருஷ முதல் நீர்ப்பாசனக் கிணறுகள் வெட்ட மானியம் கொடுக்க ஆரம் பித்தார்கள்.

அதிக வெள்ளாமையை உண்டு பண்ணுகிறவர்களுக்கு அரசாங்கம் பரிசு கொடுக்கின்றனர். பயிரிடுங் காலத்திலும் விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கின்றனர். அபிவிருத்தி செய்யப்பட்ட வித்துக்கள், ரசாயன உரங் கள், விவசாய கருவிகள் எல்லாம் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. விவசாயிகளின் வாழ்க் கைத் தரத்தையும், அந்தஸ்தையும் உயர்த்த சர்க்கார் வேண்டும் முயற்சி எடுத்துக் கொள்கின்றனர்.

சாகுபடி நிலத்தின் விஸ்தீர்ணத்தை அதிகப்படுத்து வதற்கு டிராக்டர்களும் மற்றும் யந்திர சாதனங்களும் விவசாயிகளுக்கு வாடகைக்கு கொடுக்கப்படுகின்றன. பல சிறிய நீர்ப்பாசன வசதிகளையும் செய்து வருகிறார்கள். புதுக் கிணறுகள் வெட்டவும் பழையவற்றை மராமத்துச் செய்யவும் விவசாயிகளுக்கு சர்க்கார் ரொக்க மானியங்கள் கொடுக்கின்றனர். மாஜி ராணுவத்தினரையும் மற்றும் நிலமில்லாத ஏழைகளையும் குடியேற்றும் திட்டங்களின் கீழ் ஒன்றுசேர்த்து அதிக நிலங்களை சாகுபடிக்குக்கொண்டு வர ஏற்பாடு செய்கிறார்கள்.

இந்த முயற்சிகளால் 1947–48-ல் சென்னை ராஜ்யத்தில் 26,675 ஏக்கரும், 1948–49-ல் 56,906 ஏக்கரும் அதிக நிலங் கள் சாகுபடிக்கு வந்திருக்கின்றன. உற்பத்தியும் முறையே 210,000 டன்னும் 162,000 டன்னும் அதிகரித்திருக்கிறது.

1949-ம் வருஷ ஆரம்பத்தில் இந்திய பிரதம மந்திரி, நாட்டின் உணவு சுய நிறைவுத் திட்டத்தை அறிவித்தார். மூன்றுவருஷங்களுக்குள் நம்தேசம் உணவுதானியத்தில் சுய நிறைவுள்ளதாய் விளங்கவேண்டுமென்று அவர் விரும் பினார். அந்தத்திட்டத்தை 1949-ம்வருஷ ஏப்ரல்மீ 1உ



முதல் நம் ராஜ்யத்தில் அமுலுக்குக் கொண்டு வந்தனர். நிலங்களைச் சீர்படுத்தி சாகுபடிக்கு லாயக்குள்ளனவாக்குதல், அதற்கு டிராக்டர்களைக் குறைந்த வாடகைக்கு உதவுதல், உரங்கள், நல்ல விதைகள் முதலியன விநியோகித்தல், முதலியவை அந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்.

ராமநாதபுரம் ஜில்லா 1910-ம் வருஷம் தனி ஜில்லாவாகப் பிரித்தமைக்கப்பட்டது. மதுரை ஜில்லாவின் பகுதிகளான ராமநாதபுரம், சிவகங்கை ஜமீன்களையும், திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாக்களையும் இணைத்து இந்த ஜில்லா அமைக்கப்பட்டிருக்கிறது.

விவசாய அபிவிருத்தி

இந்த ஜில்லாவின் விஸ்தீர்ணம் 3,088,090 ஏக்கர். இதில் 99,116 ஏக்கர் காடுகள்; 606,240 ஏக்கர் சாகுபடிக்கு லாயக்கான தரிசுகள். 961,706 ஏக்கர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. தரிசுகள் அநேகமாய் இந்த ஜில்லாவிலுள்ள ஜமீன் பிரதேசங்களில்தான் அதிகம். ஒடுக்கப்பட்டிருந்த ஜமீன் விவசாயிகளுக்கு நிலங்களைத் திருத்தி சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டுமென்ற ஆசை இல்லாது போயிற்று.

சென்ற நான்கு ஆண்டுகளில் இந்த தரிசு நிலத்தில் 6,300 ஏக்கர்களைத் திருத்தி சாகுபடிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த முயற்சிக்கு வேண்டிய டிராக்டர்களையும் மற்றும் அவசியமான உதவிகளையும் சர்க்கார் செய்திருக்கின்றனர்.

ராமநாதபுரம் ஜில்லாவில் பொதுவாக நீர்ப்பாசனத்துக்கான இயற்கை வசதிகள் எதுவுங் கிடையாது. கிணறுகள் ஊற்றுகள், குளங்கள், ஏரிகள் முதலியவற்றையே மக்கள் விவசாயத்துக்கு உபயோகிக்கிறார்கள். இந்த நீர் நிலைகள் மழையையே பெரிதும் நம்பியிருக்கின்றன. வருஷத்தில் சாதாரணமாய் தென்மேற்கு பருவ மழை 7·26 அங்குலமும், வடகிழக்கு பருவ மழை 18·52 அங்குலமும், கோடை மழை 7·93 அங்குலமுமாய் 33·71 அங்குலம் மழை பெய்யும். இந்த மழைத் தண்ணீரைத் தேக்கிவைத்து விவசாயிகள் தங்கள் பயிர்களுக்குப் பாய்ச்சுவார்கள்.

ஆனால், 1947–48-ல் 17·07 அங்குலமும், 1948–49-ல் 26·12 அங்குலமும், 1949–50-ல் 28·63 அங்குலமும்தான் மழை பெய்திருக்கிறது. இதனால் இந்த ஜில்லாவில் சாகுபடி மிகவும் பாதிக்கப்பட்டது. இயற்கையின் விபரீதத்தால் கஷ்டப்படும் விவசாயிகளுக்கு சர்க்கார் பல நிவாரண முறைகளைச் செய்து ஆதரவளிக்கிறார்கள். ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள நிலங்களுக்கு முழுதும் இரும்பினாலான ஒரு வகைக் கலப்பையை உபயோகித்தல் நலம் என்று எடுத்துச் சொல்கிறார்கள். அம்மாதிரியான கலப்பைகளும் சுமார் 300 குறைந்த விலைக்கு விற்றிருக்கிறார்கள். தவிர இதுவரை அங்குள்ள விவசாயிகள் எட்டு சென்டு நிலத்தில் 100 பவுண்டு விதையை விதைத்து அந்த நாற்றை ஒரு ஏக்கர் நிலத்தில் நட்டு வந்தார்கள். அப்படிச் செய்யவேண்டிய அவசியமில்லை என்று அவர்களுக்குப் போதிக்கப்பட்டது. 40 பவுண்டு விதையை 10 சென்டு நிலத்தில் விதைத்து அந்த நாற்றை ஒரு ஏக்கர் நிலத்தில் நட உபயோகிக்கலாமென்று சிபார்சு செய்தார்கள். அப்படிச் செய்ததில் அந்த விவசாயிகள் சென்ற நான்கு வருஷத்தில் ஒரு லட்ச ரூபாய்க்குமேல் லாபமடைந்தார்கள். 448 டன் விதைகளுக்குமேல் மிச்சப்பட்டது.

விதைகள், உரம் முதலியவற்றை வாங்குவதற்கு போதிய பணமில்லாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தத் தொல்லையை நீக்கும்

நோக்கத்தில் சர்க்கார் விவசாயிகளுக்கு தக்காவி கடன் கொடுத்து உதவியிருக்கின்றனர். சென்ற நான்கு ஆண்டுகளில் 9,468 விவசாயிகளுக்கு 6,71,570 ரூபாய் வரை கடன் உதவி செய்திருக்கின்றனர்.

விவசாயிகளுக்குப் பக்க வருமானமாக தேனீ வளர்ப்பதை இந்த ஜில்லாவில் ஆரம்பித்திருக்கிறார்கள் இதுவரை 184 தேன் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ. 11,910 பெறுமான 3,970 பவுண்டு தேன் சேகரித்திருக்கிறார்கள்.

விவசாய சம்பந்தமான பிரச்னைகளை விவாதித்து வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்து கொள்ளும் நோக்கத்தில் இந்த ஜில்லாவில் 176 விவசாய சங்கங்கள் வரை அமைத்திருக்கிறார்கள். 4,500 அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இந்த சங்கங்கள் அடிக்கடி கூடி விவசாய பிரச்னைகளைப்பற்றி விவாதித்து வருகின்றன.

கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்க ஆயில் என்ஜின்களையும், மின்சார மோட்டார்களையும் தவணை முறையில் விவசாயிகளுக்கு சர்க்கார் விற்கிறார்கள். 52 செட்டுகள் அப்படி விற்கப்பட்டிருக்கின்றன. 24 செட்டுகள் வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன.

குப்பை உர உற்பத்தியில் ஊக்கங் காட்டப்படுகிறது. இந்த முறையின் உபயோகத்தை விவசாயிகள் நன்கு தெரிந்து கொண்டனர். சென்ற நான்கு வருஷங்களில் 35,428 டன் குப்பை உரம் தயாரித்து அதை 7,085 ஏக்கர் நிலங்களுக்கு உபயோகித்தார்கள். அதன் மூலம் 885 டன் நெல் அதிகம் உற்பத்தியாகியுள்ளது.

தாலூகாவுக்கு ஒன்றாக 9 விவசாய மாதிரிப் பண்ணைகளைத் தேர்ந்தெடுத்து அவைகளின் சொந்தக்காரர்களுக்கு தலா 250 ரூபாய் மானியம் கொடுக்கப்படுகிறது.

தற்சமயம் ராமநாதபுரம் ஜில்லாவில் விளையும் பொருள்களும், விளை நில விஸ்தீர்ணமும் வருமாறு:—

	ஏக்கர்.		ஏக்கர்.
நெல்	399,000	கம்பு	140,320
சோளம்	62,100	தினை	1,800

	ஏக்கர்.		ஏக்கர்.
கேழ்வரகு	91,700	சாமை	12,900
வரகு	84,000	இதர தானியங்கள்.	75,600
பாசிப் பயறு	4,370	கொண்டைக் கடலை.	280
துவரை	4,960	கொள்ளு	16,900
உளுந்து	11,000	இதரப் பயறுகள்	3,200
பருத்தி	198,700	மிளகாய்	16,200
கரும்பு	600	எள்ளு	23,000
புகையிலை	1,740	வேர்க்கடலை	74,100

மீன் வளர்ச்சி

மீன் மிகவும் சத்துள்ள உணவு. அரிசியைப் பெரிதும் உணவாகக் கொண்டவர்களின் போஷாக்கில் ஏற்படும் குறைகளை மீன் உணவு தீர்த்து வைக்கிறதென்று ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றனர். தவிர, உணவு தானியம் பற்றாக் குறையாகவுள்ள காலங்களில், மீனை அதிகமாய் உபயோகிப்பதால் நெருக்கடி குறையுமென்று கருதுகின்றனர். அந்த நோக்கத்தில் சர்க்கார் மீன் இலாகாவை விஸ்தரித்து மீன் பிடிக்கும் தொழிலை அபிவிருத்தி செய்ய எல்லாமுயற்சிகளும் செய்து வருகிறார்கள்.

மீன் பிடிக்கும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகள், அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்வி வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்படுகின்றன. கூட்டுறவு சங்கங்கள் மூலம் அவர்களுடைய வாழ்க்கையை உயர்வடையச் செய்ய முயற்சிகள் நடக்கின்றன.

ராமநாதபுரம் ஜில்லாவில் மீன் பிடிக்கும் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் 5 இருக்கின்றன. இந்த சங்கங்கள் அவர்களுக்குத் தேவையான பணத்தைக் கடன் கொடுக்கிறது. அவர்கள் தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்ய

துடன், அதிக உணவு உற்பத்தித் திட்டத்துக்கும் உதவி செய்கிறார்கள்.

காடு வளர்த்தல்

காடுகள் பாதுகாப்பைச் சென்னை சர்க்கார் சட்ட மூலம் அமுல் செய்கின்றனர். காடுகளை அழிப்பதைக் குற்றமாகத் தண்டிப்பதுடன் மரங்களை அதிகம் பயிரிடவும் ஏற்பாடு செய்கிறார்கள். ஜமீன்தாரி முறையொழிப்பு மூலம் பல காடுகள் சர்க்கார் ஆட்சியின் கீழ் வந்திருக்கின்றன. பஞ்சாயத்துகளின் அதிகாரத்திலிருந்த காடுகளை சர்க்கார் நிர்வாகத்திற்கு மாற்றியுள்ளனர்.

காட்டு வளத்தை அபிவிருத்தி செய்வதில் நம் சர்க்கார் மிகுந்த சிரத்தை எடுத்து வருகிறார்கள். இதன் மூலம் காட்டு இலாகா மக்களுக்குப் பல நன்மைகள் செய்ய முடிகிறது. காடுகளுக்கு அருகாமையிலுள்ளவர்கள் கோடை காலங்களில் தங்கள் கால் நடைகளை காடுகளில் புல் மேய்த்துக் கொள்ளவும், கழனிகளுக்கு தழை உரங்கள் வெட்டிக் கொள்ளவும், அனுமதிக்கிறார்கள்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவில் சில பாகங்களும், திருப்பத்தூர் தாலூகாவில் பிரான்மலைப் பிரதேசங்களும், ராமநாதபுரத்தில் காட்டுப் பிரதேசங்கள், இதர சமதளப் பிரதேசங்கள் கரிசல், மணல், செம்மண் பாங்காய் விளங்குகின்றன. வைகை ஆற்றின் கரையோரங்கள் சிறிது செழிமையாய்க் காணப்படுகின்றன. அங்கு ஏராளமான தென்

னந்தோப்புகள் இருக்கின்றன. இதர காட்டுப்பிரதேசங்களில் அதிகமான மரங்களைப் பயிரிட்டு காடுகளை அபிவிருத்தி செய்வதில் தற்போது சர்க்கார் முற்பட்டிருக்கிறார்கள். ஜமீந்தாரிப் பிரதேசமாயிருந்தகாலத்தில் காணப்பட்ட அபிவிருத்தித்தடைகள் எல்லாம் இப்பொழுது மறைந்துவிட்டன. மக்கள் முழுமனதோடு சர்க்காருடன் ஒத்துழைக்கிறார்கள்.

ஜமீன்தாரி முறையொழிப்பு.

மக்கள் சர்க்கார் பொறுப்பேற்றதும் செய்ய முற்பட்ட சில முக்கிய சீர்திருத்தங்களில் ஜமீன்தாரி முறையொழிப்பும் ஒன்று என்பது எல்லோரும் அறிந்தது.

ஜமீன்தாரி முறையொழிப்புச் சட்டம் இயற்றியதும், குற்ற பரம்பரை சட்டத்தை ரத்து செய்ததும் சென்னை ராஜ்யத்திலேயே ராமநாதபுரம் ஜில்லா மக்களுக்கு மிகப் பெரிய நன்மையைச் செய்திருக்கின்றன.

ராமநாதபுரம் ஜில்லாவில், ராமநாதபுரம், சிவகங்கை, சிவகிரி, சேத்தூர் போன்ற பெரிய ஜமீன்களும் மற்றும் சிறிய ஜமீன்களுமாய்ச் சுமார் 14 ஜமீன் எஸ்டேட்டுகள் இருந்தன. ராமநாதபுரம் ஜமீன் 'ராஜா' பட்டமுள்ள பெரிய ஜமீன்தாரியாகும். இதை சென்னை ராஜ்யத்திலேயே பெரிய எஸ்டேட் என்று சொல்லலாம். வருஷத்தில் சுமார் 25 லட்ச ரூபாய் வருமானமுள்ளது. மதுரை ஜில்லாவுடன் சேர்ந்திருந்த ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் சில எஸ்டேட்டுகளையும் திருநெல்வேலி ஜில்லாவுடன் சேர்ந்திருந்த சில பிரதேசங்களையும் ஒன்றாய்ச் சேர்த்துத்தான் 1910-ம்வருஷத்தில் ராமநாதபுரம் ஜில்லா அமைக்கப்பட்டது. இங்குள்ள எஸ்டேட் விவசாயிகள் தங்கள் தொழிலில் எவ்வித உற்சாகமுமின்றி மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தனர். 1937-ம் வருஷத்தில் பொதுஜன சர்க்கார் முதலாவதாக பதவிக்கு வந்ததுமே இந்த ஜமீன் விவசாயிகளின் கஷ்டத்தைத் தீர்க்க முற்பட்டனர். பின்னர், 1946-ல் மீண்டும் மக்கள் சர்க்கார் ஏற்பட்டதும் 1948-ல்

ஜமீன்தாரி முறை ஒழிப்பு சட்டமாக்கப்பட்டது. அந்தச் சட்டத்தை அமுல் செய்து 1949-ம்௵ செப்டெம்பரில் முதலாவதாக 6 பெரிய ஜமீன் எஸ்டேட்டுகளையும், 36 சிறிய எஸ்டேட்டுகளையும் சர்க்கார் எடுத்துக்கொண்டனர். ஜமீன்தார்களையும் மிகவும் கஷ்டப்படுத்தாத முறையில் அவர்களுக்கு நியாயமான நஷ்ட ஈடு கொடுக்க சர்க்கார் தீர்மானித்தார்கள். ஜமீன் நிர்வாகத்தை சர்க்கார் எடுத்துக்கொள்ளும்பொழுது கூடுமான வரை அங்கு வேலை பார்த்துவரும் சிப்பந்திகளையே வைத்துக்கொள்ளவும் நம் சர்க்கார் நிச்சயித்தனர். 1950-ம் ௵ ஆகஸ்டுடன் ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஜமீன்தாரிகள் சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்டன.

ராஜ்யத்திலுள்ள எல்லா ஜமீன் எஸ்டேட்டுகளும் 1950-ம் ௵ டிசம்பருடன் சர்க்காரின் நிர்வாகத்துக்குள் வந்து விட்டன. சுமார் 20,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள 20,000 ஜமீன், இனும் கிராமங்களும் இங்கு இருக்கின்றன. இவைகள் எல்லாம் ரயத்துவாரி முறையில் திருத்தியமைக்கப்பட இன்னும் சில வருஷங்கள் பிடிக்கும்.

இதற்கிடையே நில உரிமைச் சீர்திருத்த கமிட்டியின் அறிக்கை தற்போது பொதுஜன அபிப்பிராயங்கோரி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. கமிட்டியின் இரண்டாவது அறிக்கையும் கூடிய சீக்கிரம் வெளியாகுமென்று சொல்லப்படுகிறது. வரப்போகிற நிலவரி சீர்திருத்தம் ஏழைகளுக்கு மிகவும் புரட்சிகரமான முறையில் நன்மையளிக்கக்கூடியதாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

பொது நல வசதிகள்

> மழையையே எதிர்பார்த்து நிற்க வேண்டிய புன்செய் நிலங்களுக்கு, நீர் நிலைகளின் மூலம் பாசன வசதிகளை ஏற்படுத்தினால், நாட்டின் வளம் பன்மடங்கு பெருகுவதோடு, அம் முயற்சியில் ஈடுபடுவோருக்கு அழியாப் புகழும் உண்டாகும்.
>
> —புறநானூறு.
>
> 18-ம் பாடலின் கருத்து.

'வரப்புயர' வென்று வாழ்த்தினாள் ஔவை மூதாட்டி. வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயருமென்று விளக்கமும் செய்தனர் புலவர்கள். வாழ்க்கையிலும் அதன் உண்மையை நாம் நேரில் காண்கிறோம். கரையை உயர்த்தி, தேக்கத்தைப் பெரிதாக்கி, அதில் நீர் பெருக்கி, அந்தத் தண்ணீரை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தும் இடங்கள் மிகவும் செழிப்புள்ளவைகளாகவே இருக்கின்றன.

ராமநாதபுரம் ஜில்லா அந்த இனத்தைச்சேர்ந்ததே. ஆனால் பூமி ஜமீன்தார்கள் ஆளுகைக்குள் இருந்த காலத்தில்

மாதர் நல நிலையத்தில்
'கோதை பிறந்த ஊர்'
பயனுள்ள தொழிற்
பயிற்சி
ஸ்ரீ வில்லிபுத்தூருக்குச் சிறப்பளிப்பன

அனைவருடைய அன்றாடத்தேவை
தீப்பெட்டிகளைத் தயாரிக்கும் தொழில்
பல்லாயிரக்கணக்கான தொழிலாளருக்கு வேலை

அங்குள்ள நீர்நிலைகள் சரியாகக்கவனிக்கப்படாமல் விடப்பட்டதால் விவசாயத்துக்குப் போதுமான தண்ணீரில்லாமல் அங்கு உற்பத்தி குறைந்தது. விவசாயிகளின் ஊக்கமும் குறைந்தது. உணவுதானியத்தில் பற்றுக்குறையும் பஞ்சமும் தோன்றவாரம்பித்தன. நல்ல சமயத்தில் மக்கள் சர்க்கார் ஜமீன்தாரி முறையை ரத்து செய்து,விவசாயிகளின் வரிப்பளுவையுங் குறைத்தார்கள். ஜமீன்தாரி பிரதேச நிலவரியை அருகிலுள்ள ரயத்து வாரி நிலவரி அளவுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த நடவடிக்கையால் விவசாயிகளின் நிலைமையில் பெருமளவுக்கு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது.

சாத்தூர் தாலூகா வடக்கு அமரநாடு கிராமத்தருகே உள்ள தம்பிக்கைநல்லான் குளத்தைப் புதுப்பித்துச் சுமார் 100 ஏக்கருக்கு மேல் சாகுபடிக்குக் கொண்டுவருவது; சாயக்குடியாற்றின் குறுக்கே அணை கட்டி, அதிலிருந்து ஒரு புதிய வரத்துக் கால் மூலம் சாத்தூர் தாலூகாவைச் சேர்ந்த கோபால சமுத்திரம் குளத்துக்கு தண்ணீர் கொண்டுபோய்



சுமார் 50 ஏக்கர் நிலத்தைப் புதிதாகச் சாகுபடி செய்வது; கமண்டல நதியிலுள்ள குருயூர் அணைக்கட்டிலிருந்து ஒரு புது வாய்க்கால் மூலம் மல்லாங்கிணறு பிரதேசத்திலுள்ள 11 ஏரிகளுக்கு நீர்வசதி செய்து சுமார் 600 ஏக்கர் நிலத்தைப்பாசன வசதிக்குள்ளாக்குவது; எதிர்க் கோட்டைப் பிர்க்காவிலுள்ள சுப்பிரமணியபுரம் கிராமத்தில் ஒரு புதிய ஏரியை அமைப்பது முதலிய

RAM.—2

திட்டங்கள் சர்க்காரின் பரிசீலனையிலிருக்கின்றன.

சென்னை ராஜ்யத்தை உணவு விஷயத்தில் சுய நிறைவுள்ளதாகச் செய்ய நம் சர்க்கார் சகலவித முயற்சிகளும் எடுத்து வருகிறார்கள். நீர்ப்பாசன அபிவிருத்தி மூலந்தான் அந்த லட்சியத்தை அடைய முடியுமென்று ஏராளமான பணத்தை அத்துறையில் சர்க்கார் செலவிடுகின்றனர்.

1946–47-ம் வருஷத்திலிருந்து 1952–53-ம் வருஷம் வரையிலுள்ள 7வருஷகாலத்திற்குள் நீர்ப்பாசனத்திற்காக 40 கோடி ரூபாய் செலவிட நம் சர்க்கார் திட்டம் போட்டனர். சென்ற 5 வருஷங்களில் 20 கோடி வரை செலவு செய்திருக்கின்றனர். அடுத்த இரண்டு வருஷங்களில் வருஷத்தில் 10 கோடி செலவு செய்ய உத்தேசித்திருக்கிறார்கள்.

1936–37 முதல் 1940–41-ம் வருஷம் வரை 3½ கோடி ரூபாயும், 1941–42 முதல் 1945–46 வரை 51 கோடி ரூபாயும் 1946-47 முதல் 1950-51 வரை 29 கோடி ரூபாயும், ராஜ்ய நீர்ப்பாசன திட்டங்களுக்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலிருந்து ஜனநாயக சர்க்கார் பொறுப்பேற்றபின் நீர்பாசன திட்டங்களில் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்களென்பது நன்கு புலனாகிறது. வருமான லாபகரமான திட்டங்களையே இதற்கு முன்னிருந்த சர்க்கார் மேற்கொண்டு வந்தது. ஆனால் தற்போது பொதுமக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய திட்டங்கள் சர்க்கார் வருமான விஷயத்தில் லாபமுள்ளதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதை நிறைவேற்றி வைப்பதென்ற கொள்கையை மக்கள் சர்க்கார் அனுஷ்டிக்கிறது.

தவிர, அந்தந்தப் பிராந்தியத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு விவசாயிகளே பண உதவிசெய்ய முன் வந்தால் அத்திட்டங்களை சர்க்கார் முதலில் எடுத்துக் கொள்கிறார்கள். இந்த இனத்தில் தோன்றியிருப்பது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மணிமுத்தாறு நீர் தேக்கத் திட்டமாகும். அத்திட்டத்திற்குக் கணக்கிடப்பட்ட தொகை 4 கோடி ரூபாய். அதில் சுமார் 1½ கோடிவரை

அங்குள்ள விவசாயிகள் முன் பணம் கடன் கொடுத்திருக்கிறார்கள். இந்த திட்டத்தின் மூலம் 20,000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதியளிக்கப்படுகிறது. 20,000 டன் தானியம் அதிகமாய் உற்பத்தியாகுமென்று கணக்கிடப் பட்டுள்ளது. இம்மாதிரி கோயம்புத்தூர் ஜில்லாவில் அமராவதித் திட்டம், மதுரை ஜில்லாவில் வைகைத்திட்டம் முதலியவைகளை நிறைவேற்ற முயற்சி நடக்கிறது.

நீர்ப் பாசன வேலைகளை சர்க்கார், குறுகிய கால திட்டங்கள், நடுத்தரத் திட்டங்கள், நீண்டகாலத் திட்டங்கள் என மூன்று பாகங்களாகப்பிரித்திருக்கிறார்கள். குறுகிய கால திட்டத்தின் கீழ் சுமார் 300 திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. 296 திட்டங்கள் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவைகளில் தமிழ் நாட்டில் 149 லட்ச ரூபாய் செலவில் 91 திட்டங்கள் உள்ளன. 1949-ம் வருஷ மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட ஏரி, குளங்கள் அபிவிருத்தி திட்டம் இந்த குறுகிய கால திட்டங்களின் மற்றொரு அம்சமேயாகும். இந்த இனத்தில் தமிழ் நாட்டில் 63 லட்ச ரூபாய் செலவில் 763 திட்டங்கள் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன.

இந்தச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நம் ராஜ்யத்தின் உணவு பற்றாக்குறையைத் தீர்த்துவிடாது. எனவே டெல்டா பிரதேசங்களுக்கான சில முக்கியமான வடிகால் திட்டங்கள் உள்பட 25 நடுத்தர திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அதில் 14 கோடி ரூபாய் செலவில் 9 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மலையாளத்தில் மலம்புழா, மேட்டூர்க் கால்வாய் திட்டங்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவை.

நீண்டகாலத் திட்டங்களில் மிகப்பெரிய திட்டங்கள், பவானிசாகர், துங்கபத்திரா, கிருஷ்ணா—பெண்ணாறு, ராமபாதசாகர் முதலியவை. முதல் இரண்டு திட்டங்களிலும் வேலை மிகத் துரிதமாய் நடந்து வருகிறது; மற்ற இரண்டும், பரிசீலனைக் கட்டத்திலுள்ளன. பண உதவி கிடைக்கும்பொழுது இந்தத் திட்டங்களை வேலைக்கு

எடுத்துக்கொள்ளலாமென்று சர்க்கார் கருதுகின்றனர். இந்தப் பெரிய திட்டங்களெல்லாம் நீர்ப்பாசன வசதியும் மின்சார உற்பத்தியும் சேர்ந்த திட்டங்களாகும்.

மின்சார முன்னேற்றம்

உலகமே தற்போது மின்சாரமயமாக மாறிவருகிற தென்று சொல்லலாம். மக்களின் அன்றாடவாழ்க்கையை உருவாக்குவதில் மின்சாரசக்தி பெரும்சாதனமாக விளங்கு கிறது. ஆகாயத்தில் பறப்பது முதல் அடுப்பு புகைகிறது வரை மின்சாரசக்தியினாலேயே ஆகிறது. எவ்வளவு கஷ்டமான வேலையையும் மிக சுலபமாக மின்சார சக்தியால் செய்ய முடிகிறது.

சென்னை ராஜ்யத்தின் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதில் சர்க்கார் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள்.



மக்களுக்கு மின்சாரத்தைத் திறம்பட விநியோகிக்கும் நோக்கத்தில் மின்சார உற்பத்தி ஸ்தாபனங்களை எல்லாம் சர்க்காரே எடுத்து நடத்துவதென்ற திட்டம் வகுத்திருக்கிறார்கள். இது 5 வருஷத் திட்டம். இதற்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தின் கீழ், சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா மின்சார உற்பத்தி ஸ்தாபனங்களையும் சர்க்கார் வாங்கிக்கொள்ள நிச்சயித்திருக்கின்றனர். ஆரம்பத்தில் சென்னை மின்சார சப்ளை கார்ப்பரேஷனை நம் சர்க்கார் 1947-ம் ஆகஸ்டு மீ 29உயில் விலைக்கு வாங்கி அதை இப்பொழுது மதராஸ் எலக்டிரிக்

ஸிஸ்டம் என்ற பெயரில் நடத்துகிறார்கள். ஒவ்வொரு வருஷத்திலும் சில ஸ்தாபனங்களாக எல்லா மின்சார உற்பத்தி நிலையங்களையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டு விடுவார்கள்.

தற்போது சென்னை சர்க்காரின் நிர்வாகத்தில், பைக்காரா, மேட்டூர், பாபநாசம் என்ற மூன்று தண்ணீர் சக்தி கொண்டு இயங்கும் மின்சார உற்பத்தி ஸ்தாபனங்களும், சென்னை, விஜயவாடா, விசாகப்பட்டினம், நெல்லூர், மதுரை என்ற 5 இடங்களில் நீராவியால் இயங்கும் மின்சார உற்பத்தி ஸ்தாபனங்களும் இருக்கின்றன. இவைகளிலிருந்து 7,700 மைல் நீள மின்சார விநியோகக் கம்பிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 180,000 கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தியாகிறது.

மேலும், இப்பொழுதிருக்கும் உற்பத்தி நிலையங்களை விஸ்தரிக்கவும், மச்கந்த், மோயாறு என்ற இரண்டு பெரிய புது உற்பத்தி ஸ்தாபனங்களை அமைக்கவும் சர்க்கார் திட்டம் போட்டு வேலை செய்கிறார்கள்.

இப்பொழுது உற்பத்தியாகும் மின்சார சக்தியில் 80 சதவிகிதம் விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் உபயோகிக்கப்படுகிறது. கிராமாந்திரப் பிரதேசத்தில் 2,000 கிராமங்களுக்கு மேல் மின்சார வசதி பெற்றிருக்கின்றன. விவசாயத்திற்கு தண்ணீர் இறைக்க 1,500 பம்பு செட்டுகளுக்கு அதிகம் மின்சாரம் கொடுக்கப்படுகிறது.

இராமநாதபுரம் ஜில்லாவில் 105 ஊர்களுக்கு மின்சார விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயத்துக்கும், கைத்தொழில்களுக்கும் சலுகை காட்டப்படுகிறது.

ரஸ்தா போக்குவரத்து

சென்னை சர்க்கார் சாலை இலாகா 1946-ம் வருஷம் அமைக்கப்பட்டது. 64 கோடி ரூபாய் செலவில் 25 வருஷ திட்டம் ஒன்றை வகுத்து இந்த இலாகா வேலை செய்கிறது. ராஜ்யத்திலுள்ள ரஸ்தாக்களைச் செப்பனிடவும் புது ரஸ்தாக்கள் போடவும் இந்த இலாகா கவனம் செலுத்து

கிறது. திட்டம் பூர்த்தியாகும்பொழுது ராஜ்யத்தில் 55,000 மைல் நீள ரஸ்தாக்கள் அமைக்கப்படும். அநேகமாய் எல்லா கிராமங்களும் ஒன்றுடன் ஒன்று ரஸ்தா மூலம் இணைக்கப்படும்.

இப்பொழுது சென்னை ராஜ்யத்தில் 37,000 மைல் நீளம் ரஸ்தாக்களிருக்கின்றன. 1947-ம் வருஷம் முதல் 1952-ம் வருஷம் முடியவுள்ள 5 வருஷங்களில் ரஸ்தா அபிவிருத்திக்கு $8\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கி செலவு செய்யப்படுகிறது.

1950–51-ம் வருஷ மத்தி வரை சுமார் 4 கோடி செலவாகியிருக்கிறது. 114 மைல் ரோடுகள் தார் போடப்பட்டிருக்கின்றன. 710 மைல் புது ரஸ்தாக்கள் போடப்பட்டிருக்கின்றன. 1,065 மைல் ரஸ்தாக்கள் கப்பி ரோடாக்கப்பட்டிருக்கின்றன. பல பாலங்கள் கட்டியிருக்கிறார்கள், புகலூர்-காவேரிப் பாலம், நெல்லூருக்கருகிலுள்ள பெண்ணாற்றுப் பாலம், ஆனைக்காரன்சத்திரம், கொள்ளிடம் பாலம் இவைகள் முக்கியமானவை. பாலங்களுக்கு மொத்தம் $2\frac{1}{4}$ கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது.



இராமநாதபுரம் ஜில்லாவில் பெரிய கிராமங்களை ரஸ்தாக்கள் மூலம் இணைக்க 5 வருஷ திட்டம் ஒன்று சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. 545 மைல் நீளம் ரஸ்தா அமைக்க சாலை இலாகா திட்டம் வகுத்திருக்கிறது. இது வரை 72 மைல் வரை ரஸ்தா போட்டு முடிக்கப்பட்டுள்ளது.

துறைமுக வசதிகள்

இராமநாதபுரம் ஜில்லாவின் முக்கிய துறைமுகம் தனுஷ்கோடி. இந்தியாவையும் இலங்கையையும் இருப்புப்பாதை மூலம் இணைக்கவல்ல சிறிய தூரக்கப்பல் போக்கு வரத்தை ஏற்படுத்தி 1914-ம் வருஷம் இத்துறைமுகம் முக்யத்துவம் பெற்றது. இதைத் தவிர இதற்கு வடக்கே தேவி பட்டணம், தொண்டி என்ற இரு சிறு துறைமுகங்கள் இருக்கின்றன. இவ்விடங்களில் அதிகமான வர்த்தகங்கள் நடக்கின்றன. இவை தவிர இராமநாதபுரம் கடற்கரையில் பல தோணித்துறைகளும் இருக்கின்றன. அவ்விடங்களிலிருந்து கிளிஞ்சல், நுறைக்கல், கரைகளிலிருந்து விறகுகள் முதலியன வெளியூர்களுக்கு ஏற்றுமதியாகின்றன. கோரல்கல் என்ற இந்த நுறைக்கல்லைக் கொண்டு கடற்கரை ஓரங்களிலுள்ள ஊர்களில் கட்டிடங்கள் கட்டுகிறார்கள். கிளிஞ்சல் சிப்பிகள் சுண்ணாம்பு தயாரிக்க உபயோகப்படுகின்றன.

கல்வி மறுமலர்ச்சி

> இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அமல் நடக்கத் தொடங்கிய பத்து வருஷ காலத்திற்குள், எல்லாக் குழந்தைகளுக்கும் பதிநான்கு வயது முடியும் வரையில் இலவசக் கட்டாயக் கல்விபோதிக்க அரசாங்கம் முயலும்.
>
> —இநதிய அரசியல அமைபபு.
> ஷரதது—45.

நாட்டின் ஜனநாயக வளர்ச்சிக்கு இப்பொழுது முக்கிய தேவையாகவுள்ளது நாட்டு மக்களின் கல்வி அபிவிருத்தி. இவ்விஷயத்தில் நம் பொதுஜன சர்க்கார் போதுமான கவனம் செலுத்துகிறார்கள். பொறுப்பேற்றதுமுதல் ஒவ்வொரு வருஷமும் அவர்கள் அதிகப் பணம் இத்துறையில் செலவு செய்து வருகின்றனர். 1946–47-ல் 6 கோடியாகவிருந்தது படிப்படியாக 1950–51-ல் 10 கோடியாக அதிகரித்தது. 1951–52-ம் வருஷத்தில் நம்ராஜ்ய கல்வி அபிவிருத்திக்கு சர்க்கார் 11½ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் கலாசாலை படிப்புக்கு, ரூ. 1,13,00,000, செகண்டரி கல்விக்கு, ரூ. 1,48,00,000 ஆரம்பக் கல்விக்கு ரூ. 7,09,00,000, விசேஷ

கல்விக்கு ரூ. 73 லட்சமும், இதரவகைகளுக்கு ரூ. 96 லட்சமும் செலவிட உத்தேசித்திருக்கிறார்கள்.

ராஜ்யத்தில் ஆதாரக் கல்வி அபிவிருத்திக்கு 10 லட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்ய சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.

1946-47-ம் வருஷத்தில் சென்னை ராஜ்யத்தில் 36,148 ஆரம்ப பாடசாலைகளும், 901 செகண்டரி பள்ளிக்கூடங்களும், 78 கல்லூரிகளும் இருந்தன. இப்பொழுது 100க்கு மேற்பட்ட கல்லூரிகளும், சுமார் 1,500செகண்டரி பள்ளிக்கூடங்களும், 38,000 வரை ஆரம்ப பாடசாலைகளும் உள்ளன. 1946-ல் ஒரு இஞ்ஜினீரிங் கல்லூரி தான் நம் ராஜ்யத்தில் இருந்தது. இப்பொழுது 5 இன்ஜினீரிங் கல்லூரிகள் இருக்கின்றன.

ஆதாரக் கல்வி

"எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் ஆதாரக் கல்வி முறையை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே சர்க்காரின் கொள்கையாகும்," என்று சென்னை கல்வி மந்திரி தெரிவித்தார்.



இதே நோக்கத்தில் இப்பொழுதுள்ள பயிற்சிப் பள்ளிகள் எல்லாம் ஆதாரக்கல்விப் பயிற்சிப் பாடசாலைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. தற்போது ராஜ்யத்தில் ஆதாரக் கல்வி முறைப் பயிற்சிப் பள்ளிகள் 48 இருக்கின்றன. ஆதாரக் கல்வி ஆரம்ப பாடசாலைகள் 348 உள்

ளன. படிப்படியாக ராஜ்யத்திலுள்ள எல்லா ஆரம்ப பள்ளிக்கூடங்களையும் ஆதாரக் கல்விச் சாலைகளாக மாற்ற சர்க்கார் நிச்சயித்திருக்கிறார்கள். ஆதாரக் கல்வி முறைதான் நம் நாட்டின் பிற்கால சந்ததிகளின் க்ஷேம நலனை வளர்க்கக்கூடியது. எப்பொருளையும், எந்தத் தொழிலையும் புத்தகவாயிலாயல்லாமல் நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளும் வசதியளிப்பது ஆதாரக் கல்வி முறை. இதை நம் நாட்டின் பிதாவான காந்தியடிகள்தான் முதன் முதலில் சிபார்சுசெய்தார்.

நடுத்தரக் கல்வி சீர்திருத்தம்

எஸ். எஸ். எல். சி. தேறிய ஒரு மாணவனின் எதிர்காலம் அவன் பெற்றோருக்கு ஒரு பிரச்னையாகவே இருந்து வந்தது. கல்லூரி படிப்புக்குப் போதிய பணம் வேண்டும். ஏதாவது வேலை பார்க்கலாமென்றால் குமஸ்தா வேலை தவிர வேறு எதற்கும் அவன் தகுதியற்றவனாய்க் காணப்படுகிறான். இதற்கென்ன செய்வதென்று தகப்பனார் விழிக்கிறார்.

இந்த கஷ்ட நிலையைப் போக்கும் வகையில் செகண்டரி படிப்பை தற்போது மக்கள் சர்க்கார் மாற்றியமைத்திருக்கின்றனர். உயர்தரப் படிப்புக்குப் போகாதவர்கள், எஸ். எஸ். எல். சி. படிப்பு முடிந்ததும் ஏதாவது ஒரு தொழில் செய்து ஜீவனம் நடத்த வாய்ப்பு அளிக்குமாறு அவர்களுக்கு செகண்டரி கல்வியிலேயே ஒரு தொழில் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சீர்திருத்தம் 1948–49-ம் வருஷத்தில் அமுலுக்கு வந்தது.

இதில் இன்னுமொரு விசேஷமுண்டு. இதற்குமுன் மாணவர்கள் ஆங்கிலம் மூலம் பாடங்களைக் கற்றுவந்தனர். இந்தச் சீர்திருத்த முறைப்படி எல்லாப் பாடங்களும் பிரதேசபாஷையில்தான் போதிக்கப்படவேண்டுமென்றாயிற்று. ஆங்கிலத்துக்கு இரண்டாவது ஸ்தானம் கொடுக்கப்பட்டது. ஹிந்தி கற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு

ஹிந்திகற்பிக்கவும் வசதிசெய்யப் பட்டிருக்கிறது.

கலாசாலைக் கல்வி அபிவிருத்தி

கல்வியின் அவசியத்தை எல்லாருமே உணர ஆரம்பித்து விட்டார்கள். எஸ். எஸ். எல். சி. பரீக்ஷையில் தேறிவரும் மாணவர்களின் எண்ணிக்கை வருஷா வருஷம் பத்தாயிரக்கணக்கில் அதிகரித்து வருகிறது. அநேகமாய் எல்லோரும் கல்லூரிப் படிப்புக்குப் போகவும் விரும்புகிறார்கள். ஆனால் கல்லூரிகளில் இடமில்லை. இந்தக் குறையைத் தீர்க்க சர்க்கார் பலவழிகளிலும் முயற்சிக்கின்றனர். ஏற்கனவே இருக்கும் கல்லூரிகளில் அதிக மாணவர்களைச் சேர்க்கவும், புதிதாய் கல்லூரிகளை அமைப்பதற்குப் போதுமான மானியங் கொடுத்து உதவவும் சர்க்கார் முற்பட்டுள்ளனர். எனவே 1946-ல் இருந்த 78 கல்லூரிகள் இப்பொழுது 100-க்கு மேல் அதிகரித்துள்ளன.

1951-ம் வருஷம் ஜூலை மாதம் 6-ம் தேதி தூத்துக்குடியில் புதிதாய் ஒரு கலாசாலையைத் திறந்திருக்கிறார்கள். இந்தக் கலாசாலைக்குக் கப்பலோட்டிய தமிழன் பெயரைச் சூட்டி "வ. உ. சி. கல்லூரி" என்று அழைக்கிறார்கள்.

முதியோர் கல்வி

நாட்டின் எழுத்தறிவின்மையைப் போக்க முதியோர்களுக்கும் கல்வி போதிக்கவேண்டியது அவசியமாகிறது. அத்துறையிலும் மக்கள் சர்க்கார் போதுமான சிரத்தை எடுத்துக் கொள்ளுகின்றனர். தற்சமயம் நம் ராஜ்யத்தில் வயது வந்தோருக்கான பள்ளிக்கூடங்கள் 1,166 இருக்கின்றன. 10 கிராமக் கல்லூரிகள் உள்ளன. 1951–52-ம் வருஷ பட்ஜட்டில் இந்த வகைக்காக 12 லட்சம் ரூபாயை சர்க்கார் ஒதுக்கியிருக்கின்றனர்.

தேசிய மாணவர் படை

சென்னை சர்க்காரின் அரிய சாதனைகளில் ஒன்று தேசிய மாணவர் படையமைப்பு. சென்னை ராஜ்யத்தில் 16

கலாசாலைகளிலும் 69 உயர்தரப்பள்ளிகளிலும் இந்தப்படை கள் அமைக்கப்பட்டுள்ளன. 1,959 கலாசாலை மாணவர் களைக்கொண்ட ஒரு டிவிஷனும், 4,050 பள்ளிக்கூட மாண வர்களைக்கொண்ட ஜூனியர் டிவிஷன் ஒன்றும் இருக் கின்றன.

இந்தப் பயிற்சியின் மூலம் நமது இளைஞர்கள், ஒழுக்கம், கட்டுப்பாடு முதலிய நற்குணங்களைப் பெறுவதுடன் ஆபத்துக்காலத்தில் நாட்டைக்காக்கும் வீரர்களாகவும் தயாராகிறார்கள்.

இந்தப்படையின் விமானப்பகுதி யொன்றை நிர் மாணிக்கும் விஷயம் சர்க்காரின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

இராமநாதபுரம் ஜில்லாவிலும் கல்விச்சாலைகள் தற் போது அதிகரிக்கப்பட்டுள்ளன. விருதுநகர், சிவகங்கை, காரைக்குடி இவ்விடங்களில் கலாசாலைகள் இருக்கின்றன.

இது தவிர காரைக்குடியில் ஒரு ரசாயன பயிற்சிக் கல்லூரி அமைக்கப்பட்டிருக்கிறது.

சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர், முதலிய இடங்களில் போதனா பயிற்சி பாடசாலைகள் இருக்கின்றன. ராமநாத புரம், மல்லிப்புத்தூர், பாளையம்பட்டி, ஜோகில்பட்டி முதலிய விடங்களில் ஆதாரக் கல்வி முறை பயிற்சிப் பள்ளிகள் அமைத்திருக்கிறார்கள்.

உயர்தர மத்தியதரப் பள்ளிக்கூடங்கள் இந்த ஜில்லா வில் 48 இருக்கின்றன.

நம் மக்கள் சர்க்கார் தொழில் வளர்ச்சியுடன் மொழி வளர்ச்சியிலும் அதிக அக்கறை எடுத்துக்கொள் கின்றனர். ராஜ்ய, பிரதேச பாஷைகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் சமஸ்கிருதம் இவைகளில் ஆஸ்தான கவிகளை நியமித்திருக்கிறார்கள். அவர்களுக்கு கவுரவ மானியம், விருதுகள் எல்லாம் அளித்திருக்கிறார்கள்.

பிரதேச மொழிகளில் பிரசுரமாகும் புத்தகங்களில் சிறந்தவற்றிற்கு இலக்கியப் பரிசு வழங்குகின்றனர்.

தமிழிலும், தெலுங்கிலும் களஞ்சிய நூல்களைத் தயாரிக்க சர்க்கார் உதவியளித்திருக்கிறார்கள். ஐந்து வருஷங்களில் தமிழ்க் களஞ்சியம் வெளிவருவதற்கான வேலைகள் மிகத்துரிதமாய் நடைபெறுகின்றன.

கலை வளர்ச்சியிலும் நம் சர்க்கார் பெருத்த ஆர்வங் காட்டுகின்றனர். நாடகக் கலைவளர்ச்சியை முன்னிட்டு, நாடகக் கமிட்டி அமைத்து நிலைமையை ஆராய்ச்சி செய்ய முற்பட்டனர். நாடகக் காட்சிகளுக்கு தமாஷாவரி இருந்ததை ரத்து செய்து விட்டனர்.

கர்நாடக சங்கீதத்தை நன்கு ஆராய்ச்சி செய்து வளர்க்கும் நோக்கத்தில் சென்னையில் ஒரு சங்கீத கலாசாலை அமைத்திருக்கிறார்கள். அதில் வாய்ப்பாட்டு வாத்தியங்கள் எல்லாம் பல உயர்தர வித்வான்களைக் கொண்டு கற்பிக்கப்படுகின்றன.

நம் ராஜ்ய மக்களிடையே கல்வியைப் பரப்ப பல துறைகளிலும் அபிவிருத்தி வேலைகளை மேற் கொண்டிருப்பதும், வழங்கப்படும் கல்வி, மக்களின் வாழ்க்கைக்கு சகல விதத்திலும் பயன் படக்கூடியதாய் இருக்கும் வகையில் நம் கல்வி முறைகளைத் திருத்தி யமைத்திருப்பதும் சென்னை சர்க்காரின் பாராட்டற்குரிய அம்சங்களாகும். அத்துடன் ராஜ்யத்தின் பிரதேச மொழிகளையும் பல்வேறு கலைகளையும் வளர்ப்பதில் சர்க்கார் காட்டும் ஆர்வம் ராஜ்ய மக்களுக்குப் பெருமை யளிக்கக்கூடியதாயிருக்கிறது.

பொது சுகாதாரம்

மக்களின் போஷாக்கு, வாழ்க்கைத்தரம் முதலியவற்றை உயர்த்தி, பொதுஜன சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதை, அரசாங்கம் தனது முதன்மையான கடமைகளுள் ஒன்ருகக் கருதும்.

—இநதிய அரசியல அமைபபு.
ஷரத்து—47.

நவ இந்திய சமுதாய நிர்மாணத்திற்கு அஸ்திவாரமாயுள்ளது பாரத மக்களின் தேக ஆரோக்கியம். அடிமை வாழ்க்கையில் இதுகாறும் அடிபட்ட மக்கள், தேக நலங்கெட்டு, பலமில்லாது, மெலிந்த ஒரு சமூகத்தினராய் வாழ்கின்றனர். இவர்களுக்குப் போதுமான வைத்திய வசதிகள் அளித்து, இனி நோய்கள் வராமலும் தடுத்து மக்களுக்குச் சுகவாழ்க்கையைக் கொடுக்க வேண்டியது மக்கள் சர்க்காரின் பொறுப்பாகும்.

" ஏந்த விதமான சிகிச்சை முறையை மக்கள் விரும்புகிருர்களோ, எவ்விதமான வைத்தியம் அவர்களுக்குத் தேவையோ, எம்மட்டில் மருந்துகள் கிடைப்பது சாத்தியமோ, அவற்றை எல்லாம் கொடுத்து வைத்திய

உதவி அளிப்பதென்பது சர்க்காரின் முக்கிய நோக்க மாக இருந்து வருகிறது'' என்று சுகாதார மந்திரி கூறி யிருக்கிறார்.

நாட்டிலுள்ள நோயாளிகள் எல்லோருக்கும் வைத் திய வசதி செய்து கொடுக்க வேண்டுமானால் ஆஸ்பத்திரி களை அதிகப்படுத்தவேண்டும். ஏற்கனவேயுள்ள ஆஸ்பத் திரிகளை விஸ்தரித்து அதிகமான படுக்கை வசதிகள் செய்ய வேண்டும். இதற்கு டாக்டர்கள், நர்ஸுகளின் தொகையை அதிகப்படுத்தவேண்டியதவசியம். தற்போது டாக்டர் பயிற்சி யளிப்பதற்குப் போதுமான வைத்திய கல்லூரிகள் இல்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு நம் சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ராஜ்யத் தின் வைத்திய வசதிக்காக 1946-ம் வருஷத்திற்கு முன் னுள்ள செலவு இப்பொழுது பன்மடங்கு அதிகரித்திருக் கிறது. ஆரோக்கிய திடகாத்திரமுள்ள சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் மக்கள் சர்க்கார்-பாடுபடுகின்றனர்.

ஆங்கில வைத்திய முறை டாக்டர்களின் எண்ணிக் கையை அதிகப்படுத்துவதுடன் இந்திய வைத்திய முறை பயிற்சி யளிப்பையும், கிராம வைத்தியர்களுக்குப் பயிற்சி யளிப்பதையும் அதிக ஊக்கத்துடன் சர்க்கார் கவனித்து வருகின்றனர். 19 லட்ச ரூபாய் செலவில் இந்திய வைத் திய கல்லூரியையும் பள்ளிக்கூடத்தையும் அபிவிருத்தி செய்கிறார்கள்.

ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள தலைமை ஆஸ்பத்திரியை யும் தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகளையும் விஸ்தரிக்கிறார் கள். அங்கு அதிகமான கட்டிடங்களைக் கட்டி படுக்கை வசதிகளையும் கூட்டுகிறார்கள். தர்ம சிந்தனையும் தாராள மனப்பான்மையுமுள்ள பல செல்வந்தர்கள் இந்தத் துறை யில் சர்க்காருக்குப் பணஉதவி செய்ய முன்வருகிறார்கள். சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் மாதம் 50 ரூபாய்க்குக் குறைந்த வருமான முள்ளவர்களுக்குத்தான் இலவச வைத்தியம் செய்யப்படுமென்றிருந்த அளவை 100 ரூபாயாக உயர்த்தி

யிருக்கிறார்கள். இது மத்தியதர வகுப்பினர்களுக்கு மிகவும் நன்மையளிக்கக்கூடியதாயிருக்கிறது. ரூ. 50 முதல் ரூ. 100 வரை சம்பளம் பெறக்கூடியவர்கள் தான் மக்களில் பெரும் பாலும் இருக்கிறார்கள். எனவே இச் சீர்திருத்தத்தை எல்லோரும் வரவேற்கின்றனர்.

கிராம வைத்திய சாலைகளையும் அதிகப்படுத்தி வருகிறார்கள். 1946-ல் ராஜ்யத்தில் இந்திய முறை கிராம வைத்திய சாலைகள் 624 இருந்தன. இவைகளுக்குச் செலவு அப்பொழுது சுமார் 4 லட்ச ரூபாய். இப்பொழுதோ 800-க்கு மேற்பட்ட வைத்திய சாலைகள் இருக்கின்றன. 10 லட்சத்திற்கு அதிகமாய் சர்க்கார் செலவு செய்கிறார்கள். கிராமாந்திரங்களில் தற்போது முக்கியமாய் அதிகப்படியான பிரசவ விடுதிகளையும் ஆரோக்கிய ஸ்தாபனங்களையும் அமைத்து வருகிறார்கள். இது, பொதுமக்களுக்கு மிகவும் உபகாரமாயிருக்கின்றது. இந்த முயற்சியை மக்கள் பாராட்டுகின்றனர். பிரசவ வசதி சிசுசம்ரக்ஷணை நிலையங்கள் 1947-ம் வருஷத்தில் சென்னை ராஜ்யத்தில் 318 இருந்தன. இப்பொழுது சற்றேறக்குறைய 500-ஆக அதிகரித்திருக்கிறது. இது தவிர ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படும் நிலையங்களுக்கு சர்க்கார் உதவி செய்கின்றனர். இந்தப் பிரசவ வைத்திய வசதிகளால் பெருமளவுக்கு நன்மை ஏற்பட்டுள்ளது. 1946-ம் வருஷத்தில் சராசரி 1,000 பிரசவித்த பெண்களில் 8 பேர் இறக்கும் துர் அதிர்ஷ்டம் இருந்தது. தற்போது அந்த சராசரி எண் 1,000-க்கு 6 ஆகக் குறைந்திருக்கிறது. அதே சமயத்தில் சிசு மரணம் 1,000-க்கு சராசரி 147-ஆகயிருந்தது இப்பொழுது 117 ஆகக் குறைந்துள்ளது. இது ஒரு பெரிய முன்னேற்ற மென்பதில் சந்தேகமில்லை.

முக்கியமான ஆஸ்பத்திரிகளில் இரத்த பாங்கிகள் அமைத்து, இரத்த நஷ்டம் ஏற்படும் வியாதியஸ்தர்களுக்குத் தகுந்த இரத்தத்தைச் செலுத்தி சிகிச்சை செய்கிறார்கள். இதுவொரு அரிய சிகிச்சை முறையாக விளங்குகிறது.

புற்று நோயைக் குணப்படுத்தும் முயற்சி நம் ராஜ்யத்

தில் மிகவும் அதிகரித்து வருகிறது. சர்க்காரும், தனிப்பட்ட சங்கங்களும் இவ்விஷயத்தில் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொள்ளுகின்றனர். ராஜ்ய முழுவதிலும் பல விடங்களில் புற்றுநோய் சிகிச்சை ஆஸ்பத்திரிகளை அமைக்கத் திட்டம் வகுத்திருக்கிறார்கள். தற்போது சென்னை நகரில் ஜெனரல் ஆஸ்பத்திரியிலும், எழும்பூர் பெண்கள் ஆஸ்பத்திரியிலும் புற்றுநோய் சிகிச்சைப் பகுதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

காசம், குஷ்டம் முதலிய ரோகங்களுக்கு பிரத்தியேக ஆஸ்பத்திரிகளை சர்க்காரே பல இடங்களில் அமைத்திருக்கிறார்கள். தவிர அம்மாதிரி ஆஸ்பத்திரிகளைத் தனிப்பட்டவர்கள் நடத்தினால் அதற்கு சர்க்கார் வேண்டிய ஒத்தாசை செய்கிறார்கள். க்ஷயரோகம் வராமல் தடுக்க பி. ஸி. ஜி. வாக்ஸிநேஷனை சென்னை சர்க்கார் பரீக்ஷார்த்தமாகச் செய்து வருகின்றனர்.

மற்றும் தொத்து நோய்களைத் தடுக்கச் சுகாதார இலாகா நன்கு வேலை செய்து வருகிறது. ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் விநியோகம், சாக்கடைப் போக்கு முதலியவற்றிற்கு சர்க்கார் வேண்டிய உதவி செய்து கொடுக்கின்றனர். கிராமப் பிரதேசங்களிலும் நல்ல குடி தண்ணீர் வசதிக்கும் சுகாதார முறை ஏற்பாடுகளுக்கும் நம் சர்க்கார் விசேஷ சிரத்தை எடுத்துக் கொள்கிறார்கள். மலேரியா என்னும் முறை ஜுரத்தை அடியோடு ஒழிக்க சர்க்கார் எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்கின்றனர். கொசுக்கள் பெருகுவதைத் தடை செய்யப் பல்வேறு உபாயங்களைக் கையாளுகிறார்கள். ஜுரத்திற்குச் சிகிச்சை செய்வதற்கான கொயினா உற்பத்தியையும் அதிகப்படுத்தி வருகிறார்கள். நம் ராஜ்யத்தில் நீலகிரியில் நடுவட்டமென்னுமிடத்தில் சர்க்காரால் நடத்தப்படும் கொயினா உற்பத்தி தொழிற்சாலை இருக்கிறது. கொயினா உற்பத்திக்கான சின்கொனா மரங்கள் நீல்கிரியிலும், ஆனைமலையிலும் ஏராளமாய்ப் பயிராகின்றன. இன்னும் கொசுக்களை அழிக்கக்கூடிய மருந்தைத் தயாரிக்க

உபயோகப்படும் பைரீத்திரம் என்னும் செடிகளும் நீலகிரியில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மலேரியாக் காய்ச்சலைத் தடுக்க 1946-ம் வருஷத்தில் சர்க்கார் 9 லட்சம் ரூபாய் செலவு செய்தனர். இப்பொழுது 13 லட்சம் செலவு செய்யப்படுகிறது. இதர தொத்துநோய்களையும் சரியானபடி எதிர்த்து சுகாதார முறைகளால் தடுத்து வருகிறார்கள். அப்படியிருந்தும் ஆங்காங்கு சில சமயங்களில் நோய்கள் தலைகாட்டிவிடுகின்றன. அவற்றை அறவே யொழிக்கப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

சூழ்நிலைச் சுத்தம்

ஊர்ச்சுத்தம், தெருச்சுத்தம், வீட்டுச்சுத்தம், தேக சுத்தம் இத்தனையும் சரிவர கவனிக்கப்பட்டால், நோயே வராதென்று நிச்சயமாய்க் கூறலாம். முதலிரண்டையும் சுகாதார இலாகா செய்துகொள்ளும். இலாகா சேவையாளர்களுக்கு ஊர்வாசிகள் வேண்டிய உதவி செய்வது இன்றியமையாதது. அத்துடன், தங்கள் தங்கள் வீடுகளையும் உடம்பையும் நன்கு சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டியது மக்களின் கடமையாகும். வீட்டுக்குள் குப்பை சேரவிடக்கூடாது. கண்டவிடங்களில் கழிவு ஜலம் கொட்டலாகாது. நல்ல சுத்தமான தண்ணீரையே ஸ்நானத்திற்கும் பானத்திற்கும் உபயோகிக்க வேண்டும். இந்த முறைகளெல்லாம் மக்களின் சொந்தப் பொறுப்பேயானாலும், பொதுநலத்தை முன்னிட்டு எல்லோரும் இவ்விதிகளை அனுஷ்டிக்கிறார்களாவென்று சர்க்கார் கண்காணித்து வருகிறார்கள்.

ராஜ்யமுழுதுக்கும் நல்ல குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க, சர்க்கார் பெருமுயற்சி எடுத்துக்கொள்கின்றனர். எந்த விதத்திலும் அசுத்தமாக்காமல் பாதுகாக்கப்படும் ஜலவிநியோக வசதித் திட்டமொன்றை வகுத்து, அதைப் படிப்படியாய் சர்க்கார் நிறைவேற்றி வருகிறார்கள்.

ஊர்களின் கழிவுத் தண்ணீரை ஊருக்கு வெளியே கொண்டுபோய் அதற்குச் சரியான போக்கு அளிக்க,

சுகாதார இலாகா பலவித முறைகளைக் கையாளுகிறது. சாக்கடைக் கால்வாய்களில், சென்னை, மதுரை இந்த நகரங்களில் உள்ளனபோன்று, பூமிக்குள் புதைத்துக் கட்டப்பட்டிருப்பவைகளே சிலாக்கியமானவை. இந்த வகைக்கு ஏராளமான பணச்செலவாகும். எனவே, அநேக இடங்களில் திறந்த சாக்கடைகளே ஜலம் நன்கு ஓடும்படி போதுமான வாட்டத்துடன் கட்டப்பட்டிருக்கின்றன.

இராமநாதபுரம் ஜில்லா தலைமை ஆஸ்பத்திரிக்குமாகாண க்ஷேமநல நிதி ஒரு எக்ஸ்ரே யந்திரத்தை 1949 பிப்ரவரியில் வழங்கியது. அதை நிறுவி உபயோகிக்க அந்த ஆஸ்பத்திரியில் இடமில்லாது போயிற்று. அந்தக் குறையைத் தீர்க்க இராமநாதபுரம் சேதுபதி முன்வந்தார். 30,000 ரூபாய் நன்கொடை யளித்தார். அதைக்கொண்டு ஒரு கட்டிடம் கட்டி அதில் அந்த எக்ஸ்ரே யந்திரத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். 1949 டிசம்பர் முதல் அது உபயோகப்படுகிறது.

அறுப்புக்கோட்டையில் ஒரு பிரசவ ஆஸ்பத்திரி 1950 ஜூன் மாதம் திறக்கப்பட்டது. அது முனிசிபாலிட்டியால் நிர்வகிக்கப்படுகிறது.

தேவகோட்டை முனிசிபல் பெண்கள் ஆஸ்பத்திரியில் ஐந்து படுக்கை வசதிகளுடன் ஒரு பிரசவ விடுதி சேர்க்கப்பட்டுள்ளது.

டாக்டர்கள் இல்லை என்ற காரணத்திற்காகப் பல வருஷங்களாய் மூடி வைக்கப்பட்டிருந்த 14 கிராம வைத்திய சாலைகள் 1949–50-ம் வருஷங்களில் மீண்டும் திறக்கப்பட்டிருக்கின்றன. திருப்புல்லாணியில் புதிதாய் ஒரு கிராம வைத்தியசாலை திறக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவில்லிப்புத்தூரிலுள்ள சர்க்கார் ஆஸ்பத்திரியில் ஒரு ஆப்ரேஷன் தியேட்டர், ஒரு பிரசவ விடுதி முதலியவற்றை அமைக்க சர்க்கார் 1,13,000 ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

சிவகங்கை சர்க்கார் ஆஸ்பத்திரியில் நோயாளிகளைப் பார்க்க வருபவர்கள் தங்குவதற்கு ஒரு ஷெட்டு கட்ட ஏற்பாடாகியிருக்கிறது.

கிராமச் சீரமைப்பு

இந்தியாவின் ஜீவன் அதனுடைய ஏழு லட்சம் கிராமங்களில்தான் இருக்கிறது; என்று இந்தக் கிராமங்கள் அனைத்தும் பிறர் கையை எதிர்பாராமல் தம்முடைய தேவையைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் சக்தியும் தகுதியும் பெறுகின்றனவோ, அன்றுதான், இந் நாடு பூரண சுதந்திரம் பெற்ற நாடாக முடியும்.

—காந்தியடிகள்.

மன திருப்தியுடன் கூடிய மக்கள்; பரம ஏழையோ பெரும் பணக்காரரோ அங்குகிடையாது; எல்லோருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் உண்டு. ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை நடத்த ஏதாவது ஒரு தொழில் செய்கிறார்கள்; ஆண்களும் பெண்களும் சம அந்தஸ்தோடு எப்பொழுதும் சுறு சுறுப்பாயிருக்கிறார்கள்; வேலை நேரத்தில் வேலை; விளையாடும் நேரத்தில் விளையாட்டு; வேளா வேளைக்கு ஓய்வு. இப்படிப்பட்ட ஒரு கிராமத்தை நம் நாட்டுப்பிதா தம் மனக் கண்ணால் பார்த்தார்.

கிராம சுய ஆட்சியே ராம ராஜ்ய மென்ற முடிவுக்கு

மகாத்மா வந்தார். இந்தியாவிலுள்ள 7 லட்சம் கிராமங் களையும் சுய நிறைவுள்ளனவாகச் செய்ய வேண்டுமென்று அவர் கனவு கண்டார்.

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின் இந்திய யூனியனில் சுமார் 5 லட்சம் கிராமங்கள் உள்ளன. அவைகளைச் சுய நிறைவுள்ளனவாக்க வேண்டியது இப்பொழுது ஜன நாயக சர்க்காரின் பொறுப்பாயிருக்கிறது. அத்துறையில் நடை பெற்று வரும் வேலைகளோ மகத்தானவை.

சென்னை ராஜ்யம் இவ் வேலையில் முன்னணியில் நிற் கிறது. ராஜ்யத்திலுள்ள கிராமங்களைப் பல பிர்க்காக்க ளாகப் பிரித்து ஆங்காங்கு அபிவிருத்தி வேலைகளைச் செய் யத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இதைச் சிறிது சிறிதாய் விஸ்தரிக்க சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். ஆரம்பத் தில் 34 பிர்க்காக்களில் வேலை துவங்கிற்று. 1946-ல் மக்கள் சர்க்கார் பொறுப்பேற்ற ஆண்டிலேயே இந்த வேலை துவக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது 84 பிர்க்காக்களில் அபிவிருத்தி வேலை நடக்கிறது. சுமார் 2,500 கிராமங்கள் இந்த பிர்க்காக்களில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

முக்கிய வசதிகள்

ராஜ்யத்திலுள்ள அபிவிருத்தி பிர்க்காக்களில் ஒவ் வொரு வருஷமும் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. குடி தண்ணீர் வசதிக்காக 537 புதுக் கிணறுகள் வெட்டி யிருக்கிறார்கள். 400 பழைய கிணறுகளையும் 67 இதர நீர் நிலை களையும் பழுது பார்த்திருக்கின்றனர். இந்த நீர் நிலை களை கிராமவாசிகள் எல்லோரும் ஜாதி வித்தியாசமின்றி உபயோகிக்கிறார்கள், கிராமங்களை ஒன்றுடன் ஒன்றை இணைக்கவும், அவைகளிலிருந்து அருகிலுள்ள பட்டணங் களுக்குப் போகவும் சுமார் 520 மைல் நீள ரஸ்தாக்கள் போட்டிருக்கிறார்கள்.

கிராம அபிவிருத்தியில் மிகவும் முக்கியமான அம்சங் களில் ஒன்று, மக்களின் கல்வி அபிவிருத்தி. இந்தத் துறையிலும் பிர்க்கா அபிவிருத்தி இலாகா அக்கறை எடுத்

துக்கொள்ள மறக்கவில்லை. ஆரம்ப பாடசாலைகள் 293-ம், இரவு பள்ளிக்கூடங்கள் 426-ம் நிறுவி இருக்கிறார்கள். ஆதாரக் கல்விப் பள்ளிகள் 28 ஆரம்பித்திருப்பது குறிப் பிடத்தக்கது. இதுபோக 91 ஆரம்பப் பள்ளிக்கூடங்களை ஆதாரக் கல்விப் பள்ளிகளாய் மாற்றியிருக்கிறார்கள். எழுத்தறிவின்மையைப் போக்கும் முறையில் முதியோர் கல்விச் சாலைகள் 345-ம், நூல் நிலையங்கள் 600-ம், வாசக சாலைகள் 190-ம் ஸ்தாபித்துள்ளனர்.

கதர் அபிவிருத்தி

மகாத்மாவுக்கு மிகவும் பிடித்தமான வேலை நூல் நூற் பது. நம் தேசீயப் புனரமைப்புத்திட்டத்தில் அதற்கு முக்கிய ஸ்தானம் அளித்தார். கிராமங்களின் உடை சம்பந்தப்பட்டவரை சுயநிறைவுள்ளனவாக வேண்டு மானால், கிராம மக்கள் தங்கள் ஆடைகளுக்கு வேண்டிய அளவு பருத்தியைப் பயிரிட்டு, பஞ்செடுத்துக் கொட்டை நீக்கி, நூல் நூற்று, கதராடை நெய்து கொள்ள வேண்டு மென்று அவர் கற்பித்தார். அந்த கதரபிவிருத்தியையும் நம் சர்க்கார் தமது பிர்க்கா அபிவிருத்தியில் ஒரு முக்கிய திட்டமாக இணைத்துள்ளனர். கிராம மக்களுக்குக் குறைந்த விலையில் ராட்டைகளை விநியோகிக்கிறார்கள்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

எந்த ஒரு க்ஷேம நல வேலையையும் தனிப்பட்டவர்கள் செய்வதென்பது மிகவும் சிரமமான விஷயம். போதுமான பணம் வேண்டும். ஆள்பலம் வேண்டும். எனவே, எதை யும் கூட்டுறவு முறையில் செய்வதானால் சுலபமாக விருக்கும்.

மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் கூட் டுறவு இயக்கம் மிகவும் பயன்படக் கூடியதாயிருக்கிறது. பொது மக்களிடையே பேராதரவும் பெற்று வளர்ந்து வருகிறது.

சாதாரணமாகக் கடன் கொடுக்கும் கூட்டுறவு சங்கங்க

ளாயிருந்தவைகளைப் பல்வகை வசதிச் சங்கங்களாய் மாற்றுவதில் சர்க்கார் ஈடுபட்டிருக்கிறார்கள். இதனால், விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் சௌகரியமேற்பட்டிருக்கிறது. மொத்தம் அமைக்கப்பட்ட 800 சங்கங்களில் 300 வரை பல்வகை வசதிச் சங்கங்களாய் வேலை செய்கின்றன: நில அடமான பாங்கிகளும் விவசாயிகளுக்கு நல்ல உதவி செய்கின்றன. மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுப் பண்டக சாலைகள் எல்லாம் ஏற்பட்டன. இவைகளால் மக்களுக்குப் பல விதத்திலும் நன்மை உண்டாகியிருக்கிறது. உற்பத்தியாளர்களின் பொருள்களை விற்பனை செய்து கொடுக்கவும், உற்பத்திக்கு முன் பணமாகக் கடன் கொடுக்கவும் விற்பனைச் சங்கங்களை நிறுவியிருக்கிறார்கள்.

இந்த வகையில் இன்னுமொரு முக்கியமான சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதுதான் நிலக்குடியேற்ற உதவிச் சங்கம். இதன் மூலம் ஏழைகளுக்கு இலவசமாகவோ அல்லது குறைந்த தொகைத் தவணை முறையிலோ நிலம் ஜாரி செய்கிறார்கள். நிலத்தைத் திருத்தவும், சாகுபடிக்கு வேண்டிய வசதியைச் செய்து கொள்ளவும் கடன் கொடுக்கிறார்கள், இதன் மூலம் ஏழைகளுக்கு உதவி கிடைக்கிறது. அதே சமயத்தில் நாட்டின் விவசாயமும் அபிவிருத்தியடைகிறது. இம்மாதிரி சங்கங்கள் நம் ராஜ்யத்தில் 40 வரை நிறுவியிருக்கிறார்கள். 5,000 அங்கத்தினர்கள் சங்கத்தில் சேர்ந்துள்ளனர். அவர்களுக்கு 22,000 ஏக்கர் வரை நிலம் ஜாரி செய்யப்பட்டிருக்கிறது. 12,000 ஏக்கர் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் ஜில்லாவில் 5 பிர்க்காக்களில்அபிவிருத்தி வேலை நடக்கிறது. ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவைச் சேர்ந்த மல்லி, நத்தம்பட்டியிலும் சாத்தூர் தாலூகாவைச் சேர்ந்த எதிர்க்கோட்டை, சிவகாசி, காளையார்குறிச்சியிலும் பிர்க்காக்கள் அமைத்திருக்கிறார்கள். கிராம சுய நிறைவுக்கு கதர் அபிவிருத்தி மிகவும் முக்கியமானதென்று அத்துறையில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.. இந்த 5

அபிவிருத்தி பிர்க்காக்களில் இது வரை 600-க்கு அதிகமான கைராட்டினங்களைக் குறைந்த விலைக்கு வினியோகித்திருக்கிறார்கள். மக்கள் மிகவும் ஆர்வத்துடன் நூல் நூற்கிறார்கள். மாதத்தில் சுமார் 4,500 சிட்டங்களுக்கு மேல் நூற்கிறார்கள்.

கிராம அபிவிருத்தி வேலை இந்த ஜில்லாவில் முதலாவது மல்லி பிர்க்காவில் தான் ஆரம்பமாயிற்று. 13 ரெவினியூ கிராமங்களும் 80 குக்கிராமங்களும் இந்த பிர்க்காவில் சேர்ந்திருக்கின்றன. இங்கு மக்களுடைய வாழ்க்கையிலே இன்று மகத்தான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. சுகாதாரம், கல்வி, விவசாயம், குடிசைக் கைத்தொழில் முதலிய பல துறைகளில் அங்குள்ள கிராமங்கள் நன்கு அபிவிருத்தியடைந்திருக்கின்றன.

அங்கிருந்த ஒரு ஊரணியும் 24 கிணறுகளும் நன்கு செப்பனிடப்பட்டிருக்கின்றன. 10 புது கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. குடி தண்ணீர்க் கஷ்டம் பெருமளவுக்குக் குறைந்திருக்கிறது. சுமார் 8 மைல் நீளத்தில் 11 ரஸ்தாக்கள் போட்டிருக்கிறார்கள். இதற்குக்கிராம மக்கள் பாராட்டத்தக்க அளவுக்கு நிலங்கொடுத்திருக்கிறார்கள்.

கிராமங்களில் மக்கள் ஸ்நானஞ் செய்வதற்கு வசதியளிக்கப்பட்டிருக்கிறது. சுகாதார முறையில் கக்கூஸ்களும் ஜலதாரைகளும் கட்டியிருக்கிறார்கள். ஓய்வு நேரங்களை உபயோககரமாய்ச் செலவு செய்ய நூல் நிலையங்களும், கிளப்புகளும் அமைத்திருக்கிறார்கள்.

கிராமக் கல்வி அபிவிருத்திக்கான ஆரம்ப பாடசாலைகள், முதியோர் கல்விச் சாலைகள் முதலியன நிறுவி இருக்கிறார்கள். புதிதாய் 4 பள்ளிக்கூட கட்டிடங்களுக்கு சர்க்கார் 3,875 ரூபாயும் கிராம மக்கள் 2,313 ரூபாயும் செலவு செய்திருக்கிறார்கள்.

கால் நடைப் பாதுகாப்பு, அபிவிருத்தி வேலைகளும் சிறந்த முறையில் கவனிக்கப்படுகின்றன. மானகேசரி என்னும் கிராமத்தில் ஒரு கால் நடை ஆஸ்பத்திரி 4,000 ரூபாய் செலவில் கட்டியிருக்கிறார்கள்.

தரிசாய்க் கிடந்த நிலங்களில் 174 ஏக்கரை நன்கு பண்படுத்தி சாகுபடிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். முக்கியமாய் விவசாய அபிவிருத்தியை முன்னிட்டு 11 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு

கிராம பெண்கள் க்ஷேமநல ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டு அவை நல்ல சேவை செய்து வருகின்றன. கிராமச் சீரமைப்புத் திட்டத்தில் கூட்டுறவு இயக்கம் மிகுந்த முக்யத்துவம் வாய்ந்ததாயிருக்கின்றது. கிராம மக்கள் எல்லோருமே கூட்டுறவு முறையின் நன்மையை நன்கு தெரிந்து கொண்டார்கள். தொழில் வாரியாக அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துத் தங்களுடைய பொருளாதார நிலைமையைச் சீர்படுத்திக் கொள்கிறார்கள்.

விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவும் சங்கங்கள் 476 இராமநாதபுரம் ஜில்லாவில் வேலை செய்கின்றன. இவைகளில் 155 சங்கங்கள் வெல்ல உற்பத்திக்கு உதவி செய்வன. 1949-ம் வருஷ ஆரம்பத்திலிருந்து எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்ற சர்க்கார் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒரு கூட்டுறவு நில அடமான பாங்கி இருக்கிறது. இது ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர் ஆகிய இரண்டு தாலூகாக்களுக்கும் உதவி செய்கிறது. அங்குள்ள விவசாயிகளுக்கு 20 வருஷ நீண்ட கால கடன்கள் கொடுத்து உதவுகிறது. சுமார் 4 லட்ச ரூபாய்களுக்கு அதிகமாய் அந்த பாங்கி கடனுதவி செய்திருக்கிறது.

இந்த ஜில்லாவில் 15 நகர பாங்கிகளும் 17 சிப்பந்திகள் சங்கங்களும் இருக்கின்றன. ராஜபாளையத்தில் ஒரு கடனுதவி ஸ்தாபனம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த பாங்கி சென்ற 5 ஆண்டுகளாய் உணவுதானியக் கொள்முதல், இறக்குமதி வேலைகளைச்செய்து வருகிறது.

விவசாயப் பொருள் விற்பனைச் சங்கங்கள் 9, உணவு தானிய கொள்முதல் இறக்குமதிச் சங்கங்கள் 4, ரசாயன உரம், விவசாயக் கருவிகள் முதலியன விநியோகச் சங்கங்கள் 5, இந்த ஜில்லாவில் அலுவல் நடத்துகின்றன. விவசாய அபிவிருத்திச் சங்கங்கள் 12 இருக்கின்றன. அவை உர விநியோகம், மின்சார பம்பு செட்டுகள் வாங்கிக் கொடுப்பது, விவசாயக் கருவிகளைச் செய்து உதவுவது முதலிய அலுவல்களைச் செய்கின்றன.

பால் விநியோகச் சங்கங்கள் 14 இருக்கின்றன. நன்கு வேலை செய்யும் சங்கங்களுக்கு சர்க்கார் வட்டியில்லாக் கடன் கொடுத்து உதவுகின்றனர்.

குடிசைக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 9 ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவற்றில் மானாமதுரையிலுள்ள மண் பாண்டம் செய்பவர்கள் சங்கம், உலோகத் தொழிலாளர் சங்கம், விருதுநகரிலுள்ள பெண்கள் குடிசைக் கைத்தொழில் சங்கம் இவைகள் நன்கு முன்னேறி வருகின்றன. சர்க்காரும் வேண்டிய உதவிகளைச் செய்கிறார்கள். ராஜபாளையத்தில் இரும்பு வேலைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமொன்று 1950-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர இந்த ஜில்லாவில் வீடுகட்ட பண உதவி செய்யும் சங்கங்கள் 8, மீன் பிடிப்பவர்கள் சங்கங்கள் 5, நெசவாளர் சங்கங்கள் 34 இருக்கின்றன. ஜில்லாவிலுள்ள 40,000-க்கு மேற்பட்ட கைத்தறிகளில் 8,000 வரை கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்து வேலை செய்கின்றன.

ஜில்லாவில் 114 கூட்டுறவு பண்டகசாலைகள் உள்ளன. அவைகளில் 33 பண்டகசாலைகள் உணவுதானியக் கொள்முதல் வேலை செய்கின்றன. நகரங்களில் 12 பண்டகசாலைகளும் கிராமங்களில் 84 பண்டக சாலைகளும் பங்கீடு முறையில் உணவுதானிய விநியோகம் செய்கின்றன.

மாணவர்கள் கூட்டுறவு பண்டக சாலைகள் 11 இருக்கின்றன.

குடிசைக் கைத்தொழில்

குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தியில் சர்க்கார் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றனர். கிராமத் தொழிலாள மக்களுக்கு நல்ல முறையில் கைத்தொழில்களை வளர்ப்பதற்கான மார்க்கங்களைப் போதிக்க நிபுணர்களை நியமித்திருக்கிறார்கள். அந்த நிபுணர்கள் கிராமங் கிராமமாகச் சென்று அங்குள்ள தொழிலாளர்களை நேரில் கண்டு பேசி வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார்கள். புதுவிதமான தொழில் கருவிகள் அங்குள்ள தொழிலாளர்களுக்கு இனாமாகக் கொடுக்கப்படுகின்றன.

இராமநாதபுரம் ஜில்லாவின் முக்கிய கைத்தொழில் பருத்தி ஜின்னிங், பிரஸிங், சாயம்போடுதல் நெசவு முதலியவைகளே. இவைகள் சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர், அறுப்புக்கோட்டை முதலிய தாலூகாக்களில் நடக்கின்றன. சாயம்போடுதலும் நெசவும் பெரும்பாலும் ஸ்ரீவில்லிபுத்தூர், அறுப்புக்கோட்டை தாலூகாக்களில் நடக்கின்றன. ராஜபாளையம், விருதுநகர் இரண்டு இடங்களிலும் நெசவு மில்கள் இருக்கின்றன. விருதுநகரில் கடலை எண்ணெய் அதிகம் தயாரிக்கப்படுகிறது. பரமக்குடி தாலூகாவைச் சேர்ந்த பரமக்குடி, எமனேஸ்வரம் இவ்விடங்களில் பட்டு நெசவு நடக்கிறது. சாத்தூர், சிவகாசி இவ்விடங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ஏராளமாயுள்ளன. ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவில் பித்தளை வெண்கல பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. திருப்பத்தூர் தாலூகாவிலுள்ள சிங்கம்புணரியில் ஏராளமாய்க் கயிறுகள் செய்கிறார்கள். மானாமதுரையிலும், அமராவதி புதூரிலும் ஓடுகள் செய்யப்படுகின்றன.

பஞ்சாயத்து ராஜ்யம்

கிராமப் பஞ்சாயத்துக்களை அமைப்பதற்கான வழிகோலி, தனித்தனி சுயாட்சி ஸ்தாபனங்களாகப் பணியாற்றுவதற்கு அவசியமான அதிகார உரிமைகளை அவற்றுக்கு அரசாங்கம் அளிக்கும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—40

எல்லா அதிகாரங்களும் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பதை விட, பல்வேறிடங்களில் பரவியிருப்பது ஒரு நாட்டின் நிரந்தர க்ஷேமத்துக்கு மிகவும் நன்மை பயக்கும் என்பது அனுபவ அறிஞரின் சித்தாந்தம். நம் நாட்டில் பன்னெடுங்காலமாகவே இக்கொள்கை நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. நாட்டில் எத்தனையோ அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும், கிராமாந்திரங்களில் பல நூற்றுண்டுகளாய் ஒரு விதமான அமைதி வாழ்வு நிலவிவந்ததென்று கூறலாம். அதற்கு முக்கியமான காரணங்களுள் ஒன்று பஞ்சாயத்து ஆட்சி.

'ஏரி வாரியர், பொன் வாரியர், பஞ்ச வாரியர்' முதலிய தொடர்கள் இன்று பலருக்குப் புதிதாகத் தோன்றலாம்.

ஆனால் சுமார் ஆயிரம் வருஷத்திற்கு முன்பெல்லாம், இவை சாதாரணமாக வழக்கத்தில் இருந்தவை. அந்நாளைய கிராமங்களில் குடவோலை மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்ச்சபையாருக்கு, இப்பெயர்கள் வழங்கப்பட்டன. திருநெல்வேலியைச் சார்ந்த மானூர் என்னும் இடத்துச் சாசனமும் இதை வலியுறுத்தும். செங்கல்பட்டு ஜில்லாவில் இருக்கும் உத்திரமேரூர் என்னுமிடத்தில் கிடைத்த சாசனம் இது பற்றிய விவரங்களை நன்குணர்த்துகிறது.

பொறுப்பு வாய்ந்த ஒரு சிலரை கிராம மக்கள் தேர்ந்தெடுத்து, அவர்களிடத்தில் கிராமத்தின் பல்வேறு பொது நலப் பணிகளை ஒப்படைத்திருந்தனர். கிராம சம்பந்தமான எல்லாத் தேவைகளையும் சௌகரியங்களையும் கவனித்து ஆவன செய்யவேண்டியது அவர்களுடைய கடமையாக இருந்தது.

பண்டைய முறைக்குப் புத்துயிர்

மிகப் பழையகாலம் முதல் நம் அனுஷ்டானத்தில் இருந்துவந்த இந்தப் பஞ்சாயத்து முறை, ஆங்கில ஆட்சியின்போது மிகவும் சீர்கேடடையத் தொடங்கியது. சில ஆண்டுகளுக்கு முன், பொதுவாக ஸ்தல ஸ்தாபன ஆட்சிக்கு ஊக்கமளிக்கப்பட்டபோது, ஏதோ பெயரளவிலே சில இடங்களில் பஞ்சாயத்துக்கள் நிறுவப்பட்டன. ஆனால் அவற்றிற்குப் போதுமான அதிகாரங்களும் நிதி வசதியும் இல்லாததால், ஜனங்களுக்கு அதிக நன்மை ஏற்படாமல் இருந்தது.

இந்த நிலையை மாற்ற, மக்கள் அரசாங்கம் முன் வந்தனர். பண்டைக் காலச் சிறப்புக்குக் காரணமாயிருந்த பஞ்சாயத்து முறையை இக்காலத் தேவைக் கேற்ப சிறந்த முறையில் திருத்தியமைத்தனர். அதன் பயனாக, சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம், 1950-ம் வருஷம் நிறைவேறியது.

இந்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் பஞ்சா

யத்துக்கள் கிராம சுயஆட்சிக்கான எல்லாவித வசதிகளுடன் விளங்கும். கிராம வாழ்க்கைக்கும் கிராமப் பொருளாதாரத்துக்கும் உகந்ததான ஸ்தல நிர்வாக முறையும், அதற்கு வேண்டிய அதிகாரங்களும் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்படும். இவைகளின்மீது மேலதிகாரக் கட்டுப்பாடு மிகவும் குறைந்த அளவுக்குத்தானிருக்கும். ஒவ்வொரு கிராமத்தையும், அதன் மக்களுடைய சமூக, பொருளாதார, கலாசாரங்களின் தேவைக்கு அவசியமானவற்றில் சுயநிறைவுள்ளனவாக நிர்மாணித்து, தாங்களே தங்கள் நிர்வாகத்தை நன்கு பராமரித்துவரும்படி செய்வதே இந்தச் சட்டத்தை வகுத்த மக்கள் சர்க்காரின் நோக்கமாகும். இந்தச் சட்டம் 1951-ம்ஞு ஏப்ரல்மீ முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வந்திருக்கிறது.

பஞ்சாயத்து அமைப்பு

500-க்குமேல் ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்து அமைக்கப்படும். குறைந்த ஜனத்தொகையுள்ள சில கிராமங்களை ஒன்ருய் இணைத்து, அவைகளுக்கு ஒரு கூட்டுப் பஞ்சாயத்து அமைக்கலாம். புதிய சட்டத்தின்கீழ் பஞ்சாயத்துக்கள் அமைப்பது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. அது முன்போல் சிலரின் இஷ்டத்தைப் பொறுத்ததல்ல. ஜனத்தொகை 5,000-க்கு மேலும் வருமானம் 10,000 ரூபாய்க்குக் குறையாமலும் உள்ளவை, முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்கள். மற்றவை இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்கள். புதுச் சட்டம் அமுலுக்கு வருமுன், ராஜ்யத்தில் மொத்தம் 8,335 பஞ்சாயத்துக்கள் இருந்தன. புதுச் சட்டத்தின்கீழ், இன்னும் 15,830 பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படவேண்டும்.

தற்போது முனிசிபாலிட்டிகளிலும் ஜில்லா போர்டுகளிலும், அங்கத்தினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் ஒருவரை அந்த அங்கத்தினர்கள் தலைவராய்த் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனல் புதுப் பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ்,

பஞ்சாயத்து சபைத் தலைவரும் ரகசிய ஓட்டு மூலம் நேரடியாகப் பொது மக்களால்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் தங்களுள் ஒருவரை உபதலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும். முன்னேற்ற மடையாத வகுப்பினருக்கு மட்டும், 10 வருஷ காலத்துக்கு பஞ்சாயத்துச் சபைகளில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படும். சட்ட சபை வாக்காளர் ஜாபிதாவே இந்தப் பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் உபயோகிக்கப்படுமாகையால் வயது வந்தோர் ஓட்டுரிமை அடிப்படையில்தான், தேர்தல் நடைபெறும்.

கடமைகளும் பொறுப்புகளும்

கிராமத்திலுள்ள ரோடுகளை மராமத்துச் செய்வதும், புது ரஸ்தாக்கள் அமைப்பதும், தெருக்களுக்கு விளக்குகள் போடுவதும், சுகாதார சாதனங்கள் நிறுவுவதும், பாதுகாப்புள்ள குடிதண்ணீர் விநியோகிப்பதும், அந்தந்தப் பஞ்சாயத்து சபைகளின் முக்கிய அலுவல்களாகும். இவை தவிர, மக்களின் வசதிக்காக ஆஸ்பத்திரிகள், பிரசவ, சிசு சம்ரக்ஷண நிலையங்கள், மார்க்கெட்டுகள், வண்டிப் பேட்டைகள், ரேடியோக்கள் முதலியவைகளும் ஏற்படுத்தலாம்.

முதல் வகுப்புப் பஞ்சாயத்துகளில் நிர்வாக சம்பந்தமான அவசியம் ஏற்படும் இடங்களில், நிர்வாக அதிகாரிகளை சர்க்கார் நியமிக்கும். சப்-ரிஜிஸ்ட்ரார் காரியாலயம் இல்லாத கிராமங்களில் அந்த நிர்வாக அதிகாரிக்கு தஸ்தாவேஜுகளைப் பதிவு செய்யும் அதிகாரமும் ஓரளவு கொடுக்கப்படும். சென்னை கிராமக் கோர்ட்டுகள் சட்டத்தின் சிவில் கிரிமினல் விவகார அலுவல்களை, புதுச் சட்டத்தின்படி, கிராம பஞ்சாயத்துக்களே அமுல் நடத்தும்.

பஞ்சாயத்தின் நிர்வாகத்துக்கு வேண்டிய நிதியைச் சேகரிக்க, பஞ்சாயத்து சபைக்கு வரி விதிக்கும் அதிகாரங்களை, சட்டம் அளிக்கிறது. இனி, பஞ்சாயத்துக்களின்மீது ஜில்லாபோர்டுக்கு மேலதிகாரம் எதுவுங்கிடையாது.

ஜில்லா கலெக்டரும் அந்தப் பிரதேசத்தின் அமைதி, பாதுகாப்பு நிர்வாகம் வரையில்தான் தலையிடலாம். இதர விஷயங்களில் ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டரின் மூலம், சர்க்கார் மேலதிகாரத்தைக் கொண்டுள்ளனர். ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டரின் கீழ, பிரதேச இன்ஸ்பெக்டர்கள் ஜில்லா பஞ்சாயத்து அதிகாரிகள், டெபுடி அதிகாரிகள் முதலியோர் இருந்து வருவர்.

1949–50-ல், ராஜ்யத்தில் 414 சிறிய பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டுள்ளன ; 60 சிறிய பஞ்சாயத்துக்கள் பெரிய பஞ்சாயத்துக்களாகவும் மாற்றப்பட்டுள்ளன ; அதாவது 1949-ம் வருஷ ஆரம்பத்தில் 7,241 ஆக இருந்த சிறிய பஞ்சாயத்துக்கள் எண்ணிக்கை, 7,595 ஆகவும், 414 பெரிய பஞ்சாயத்துக்கள் 474 ஆகவும் அதிகரித்தன. பழைய பஞ்சாயத்துச் சட்டப்படி ரூ 3,000 வருமானத்துக்குட்பட்டவை சிறிய பஞ்சாயத்தாகவும், மேற்பட்டவை பெரிய பஞ்சாயத்தாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

ஸ்தல ஸ்தாபனங்கள்

ராஜ்யத்தில் தற்போது 24 ஜில்லாபோர்டுகளும், 95 முனிசிபாலிட்டிகளும் இருக்கின்றன. இந்த ஸ்தல சுய ஆட்சி முறை அமலுக்கு வந்து நூறு ஆண்டுகள் நிறைந்து விட்டன.

ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரங்களை அதிகப்படுத்தவும் அவைகளின் வருமானத்தைப் பெருக்க வசதியளிக்கவும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

இராமநாதபுரம்ஜில்லாவில் ஒரு ஜில்லா போர்டும், தேவகோட்டை, காரைக்குடி, ராஜபாளையம், சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர், விருதுநகர், அறுப்புக்கோட்டை முதலிய 7 முனிசிபாலிடிகளும், 27 பெரிய பஞ்சாயத்து போர்டுகளும் 209 சிறிய பஞ்சாயத்துக்களும் ஸ்தல ஸ்தாபன ஆட்சி நடத்துகின்றன.

பொழுது போக்கு நிலையம்
ரேடியோ
ஊர்தோறும் பள்ளிக்கூடம்
இராமநாதபுரம் மல்லிபிர்க்காவில்
விவசாயத்துக்கு மின்சாரம்
கால்நடை ஆஸ்பத்திரி
கிராம நலம் பெருக,
கிராமங்களை இணைக்கும் புதிய ரஸ்தாக்கள்
சர்க்கார் பொதுமக்கள் கூட்டு முயற்சி
குடிநீர் வசதி


போதையூட்டும் மது இறக்குவதற்கல்ல
மதுரமான வெல்லம் தயாரிப்பதற்கு
இலைகளும் வீணாவதில்லை
காரைக்குடியில்.
புதிய கலாசாலை
கண்மாய் மராமத்து வேலையில் சர்க்காரின் தீவிர கவனம்

ஹரிஜன முன்னேற்றம்

> மக்களுள் பல துறைகளிலும் தாழ்ந்துள்ள வகுப்பினரின்—முக்கியமாக ஷெட்யூல் வகுப்பு, மலைஜாதி ஆகியவற்றைச் சேர்ந்தவரின்—கல்வி, பொருளாதார உரிமைகளை விசேஷ கவனத்துடன் அபிவிருத்தி செய்து, சமூக அநீதி, மற்றும் அதுபோன்ற எல்லா இடர்ப்பாடுகளினின்றும் அவர்களை அரசாங்கம் பாதுகாக்கும்.
>
> —இந்திய அரசியலமைப்பு.
> ஷரத்து—46

தீண்டாமை என்னும் சமூகத் தீமையை நம் ஜன நாயக சர்க்கார் சட்ட மூலம் அகற்றிவிட்டனர். நெடு நாளாக ஹரிஜனங்களுக்குப் பல சமூக உரிமைத் தடைகள் இருந்துவந்தன. அத் தடைகளை நீக்கி நம் சர்க்கார் ஹரிஜனங்களுக்கு சமூக வாழ்க்கையில் சமத்துவம் அளித்துள்ளார்கள்.

கல்வித் துறையிலும், பொருளாதாரத்திலும் மற்றும் அந்தஸ்திலும் ஹரிஜனங்களும் இதர முற்போக்கடையாத வகுப்பினர்களும் முன்னேறும் வண்ணம் சகல ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

மக்கள் சர்க்கார் 1946ல் பதவிக்கு வந்ததும் ஹரிஜன முன்னேற்றத்திற்கென்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினர். அந்தப்பணத்தை ஹரிஜன மக்களின் க்ஷேமநலத் திட்டங்களில் சரிவரப்பயன்படுத்த வழிவகுக்குமாறு ஒரு க்ஷேமநல கமிட்டியை அமைத்தனர். அந்தக்கமிட்டி செய்த சிபார்சின்படி ஹரிஜன க்ஷேமநலத்தைக் கவனிக்க சர்க்காரில் தனி இலாகா ஏற்படுத்தப்பட்டது.

முன்னேற்றமடையாத வகுப்பினர்களின் நிலைமையைச் சீரடையச் செய்யும் முயற்சியே சர்க்காரின் பிரதான அலுவலாகக் கொள்ளப்படுகிறது. இதை நடைமுறைக்குக் கொண்டுவரும் நோக்கிலேயே சர்க்கார், ஹரிஜன ஆலயப் பிரவேச சட்டத்தையும், சிவில் உரிமைத்தடையொழிப்புச் சட்டத்தையும் நிறைவேற்றினர்.

க்ஷேமநல இலாகா, ஹரிஜனமக்களின் அபிவிருத்தியை ஒவ்வொரு துறையிலும் ஏற்படுத்தி வருகிறது. கல்வித்துறையில் ஹரிஜனங்களுக்கென்று ராஜ்யம் முழுவதிலுமாக 1200 பள்ளிக்கூடங்களை அமைத்துள்ளனர். இங்கு மாணவர்களுக்குப் பகலுணவு அளிக்கப்படுகிறது. இதற்கு மட்டும் வருஷத்தில் 12 லட்சத்திற்கு அதிகம் செலவு செய்கிறார்கள். மாணவர்களின் உபகாரச் சம்பளமாக 6 லட்சமும் தனி ஹாஸ்டல்களுக்கு மானியமாக 13 லட்சமும் 1949–50ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1951–52ல் ஹரிஜன முன்னேற்றத்திற்கென்று 1,00,47,000 ரூபாயை சர்க்கார் ஒதுக்கியிருக்கின்றனர்.

வீடில்லாத ஏழை ஹரிஜனங்களுக்கு மனை நிலங்கள் வழங்க சர்க்கார் ஏற்பாடுசெய்து வருகிறார்கள். இதுவரை ராஜ்யத்தில் சர்க்கார் நிலங்களிலிருந்து 49,208 மனை நிலங்

களும், தனிப்பட்டவர் சொந்தநிலங்களை ஆர்ஜிதம்செய்து 46,001 மனைநிலங்களும் ஹரிஜனங்களுக்கு ஜாரிசெய்திருக்கிறார்கள். கொடுக்கப்பட்ட நிலங்களில் வீடுகட்டுவதற்குப் பணஉதவி செய்வதுபற்றியும் சர்க்கார் ஆலோசித்துவருகிறார்கள்.

சட்ட உதவி

ஹரிஜனங்கள், ஜாதி ஹிந்துக்கள் இவர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகளில் ஏழையாயுள்ள ஹரிஜனங்களின் வழக்கை சட்டபூர்வமாக நடத்த உதவியளிப்பதென்ற ஒரு முறையை நம் சர்க்கார் கைக்கொண்டிருக்கிறார்கள். ஜில்லா கலெக்டரின் சிபார்சின்பேரில் அவ்வுதவியளிக்கப்படும்.

இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள 9 தாலூகாக்களில், 7 தாலூகர்க்கள் ஜமீன் பிரதேசமாகவுள்ளன. எனவே இந்த ஜில்லா மக்களில் பேரும்பாலோர் முன்னேற்றமடையாத வகுப்பினராகவே இருந்தார்கள். இந்த ஜில்லாவில் குற்ற பரம்பரைச் சட்டமும் அதிகமாய் அமுல் நடத்தப்பட்டது. இப்பொழுது மக்கள் சர்க்கார் மக்களை இழிவுபடுத்தும் அந்தக் குற்ற பரம்பரைச் சட்டத்தை ரத்து செய்துவிட்டனர். பொதுஜன சர்க்கார் பதவிக்கு வந்ததும் இந்த ஜமீன்தாரி பிரதேச மக்களின் முன்னேற்றத்தில் விசேஷ கவனம் செலுத்தவாரம்பித்தார்கள்.

ஜில்லா ஹரிஜன க்ஷேம நல கமிட்டியை 1947-ம் வருஷத்தில் அமைத்தார்கள். இந்தக் கமிட்டியின் சிபார்சுகளில் சாத்தியமானவைகளை சர்க்கார் உடனுக்குடன் நிறைவேற்றிவருகிறார்கள்.

ஹரிஜன சேரிகளை அபிவிருத்தி செய்து சுகாதார வசதிகளை ஏற்படுத்தினர். சர்க்கார் நிலங்களை ஹரிஜன குடியிருப்புக்குக் கொடுத்து தவிர தனிப்பட்டவர்களின் நிலங்களை ஆர்ஜிதம் செய்தும் அவர்களுக்கு வழங்கினார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 சென்டு புன்செய் அல்லது 3 சென்டு நன்செய் நிலம் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் நிச்சயித்துள்ளனர். 1947 முதல் 1950 வரை இவ்

தங்கைத் தாலூகாவிலுள்ள பாகனேரி கிராமத்தில் மட்டும் 27 குடும்பங்களுக்கு வீடுகட்ட நிலம் ஜாரி செய்யப்பட்டிருக்கிறது. ரயத்துவாரி தாலூகாக்களான சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் இரண்டிலும் சுமார் 4 ஏக்கர் நிலம் ஹரிஜனங்களுக்கு ஜாரி செய்யப்பட்டிருக்கிறது.

1950–51-லிருந்து ஐந்து வருஷத்திட்டமொன்று வகுக்கப்பட்டிருக்கின்றது.

அதன் பிரகாரம் எல்லா ஹரிஜன குடும்பங்களுக்கும் வீடு கட்ட நிலம் கொடுக்கப்படவேண்டும். முதலாவதாக 860 வீடுகளுக்கு நிலம் ஜாரிசெய்வதுபற்றி ஏற்பாடு நடக்கிறது.

சென்ற நான்கு ஆண்டுகளில் இந்த ஜில்லாவிலுள்ள ஹரிஜன பகுதிகளில் குடிதண்ணீர் வசதிக்காக வெட்டப்பட்ட கிணறுகளும் அதற்கான செலவும் கீழ் வருமாறு:—

வருஷம்.	கிணறுகள்.	ரூ.	அ.	பை.
1947	17	6,034	8	0
1948	14	8,401	0	0
1949	16	7,311	0	0
1950	11	7,768	8	0
மொத்தம்	58	29,515	0	0

ஹரிஜனங்களின் கல்வி அபிவிருத்திக்காக 13 பள்ளிக்கூடங்களை மக்கள் சர்க்கார் திறந்திருக்கிறார்கள். அங்கு படிக்கும் மாணவர்களுக்குப் பகல் உணவி அளிப்பதில் 1948 முதல் 1950 வரை 21,002 ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். ஹரிஜன மாணவர்களின் சம்பள உதவி, ஹாஸ்டல் வசதி முதலியவற்றிற்கு 13,595 ரூபாய் செலவாயிருக்கிறது. அதற்குமேல் புத்தகம், உடை முதலியவற்றிற்கும் பண உதவி செய்திருக்கிறார்கள். இந்த ஜில்லாவில் பல இடங்களிலுமாக 11 ஹரிஜன ஹாஸ்டல்கள் நிர்வகிக்கப்படுகின்றன. அவைகளுக்கு சர்க்கார் போதுமான மானியம் கொடுக்கின்றனர்.

பல இடங்களில் ஹரிஜன முதியோர் கல்வி நிலையங்களும், ஹரிஜன க்ஷேம நலனுக்காக 32 பல நோக்க கூட்டுறவு சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தொழில் அபிவிருத்தி

விவசாயம், கைத்தொழில் அல்லது இதர துறைகளில் உழைக்கும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை, ஜீவனத்துக்கேற்ற ஊதியம், கண்ணியவாழ்க்கைத் தரத்துக்குக் கேற்ற வேலை நிபந்தனைகள், சமூக கலாசார வசதிகள், ஓய்வின் பூரண துகர்ச்சி முதலிய சௌகரியங்களைத் தகுந்த சட்டம் அல்லது பொருளாதார அமைப்பின் மூலம் அளிக்க அரசாங்கம் முயலும்.

—இந்திய அரசியல் அமைப்பு.
ஷரத்து—43.

ஒரு நாட்டின் தொழில் வளத்தைக் கொண்டே அதன் பொருளாதார நிலையும், சர்வதேச அந்தஸ்தும் உயரும். எனவே இத்துறையில் நம் சர்க்கார் அதிக கவனம் செலுத்துகிறார்கள். விவசாயத்துக்கு அடுத்ததாகக் கைத்தொழில் முக்கியத்துவம் பெறுகிறது.

சென்னை ராஜ்யத்தில் தற்போது 8 பஞ்சாலைகளும் 3 சிமெண்டு உற்பத்தி சாலைகளும், 13 கரும்பாலைகளும் இருக்கின்றன. இப் பெரிய கைத்தொழில்களை தனிக்கம்பெனிகளே நடத்துகின்றன. எனினும் இவற்றின் வளர்ச்சிக்கு சர்க்கார் வேண்டிய உதவியைச் செய்து வருகின்றனர்.

சர்க்கார், கைத்தொழில் உதவி சட்டத்தின் கீழ் உதவியளிப் பதைத் தவிர பெரிய கைத்தொழில்களுக்கு பண உதவி செய்ய கைத்தொழில் உதவிநிதி கார்ப்பரேஷனையும் அமைத் திருக்கிறார்கள். கயிறு, சோப்பு, மீன் எண்ணெய், பட்டு, காகிதம் முதலிய உற்பத்திகளை சர்க்காரே நடத்துகிறார்கள்.

சென்னை ராஜ்யத்தில் ஏராளமான கனிப்பொருள்கள் கிடைக்கின்றன. பல உலோகங்களும் கிடைக்கின்றன. ராஜ் யத்தின் சிலவிடங்களில் தங்கச் சுரங்கங்கள்கூட இருக் கின்றன. எனவே இதைப் பொன் விளையும் நாடு என்று சொல்வர். நெல்லூர் ஜில்லாவில் ஏராளமான மைக்கா வெட்டி எடுக்கிறார்கள். தென் ஆற்காட்டில் நெய்வேலிப் பிரதேசத்தில் ஒரு வித உயர்ந்த பழுப்பு நிலக்கரி இருப்ப தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை வெட்டி எடுக்க வேண்டிய வேலைகள் எல்லாம் வெகு துரிதமாய் நடைபெறு கின்றன. திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஜில்லாக் களில் சுண்ணாம்புக்கல் ஏராளமாய்க் கிடைக்கிறது. எனவே அவ்விடங்களில் சிமின்டு உற்பத்தி செய்யப்படு கிறது. திருநேல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில்தீக் குச்சி தொழிற்சாலைகள் அதிகம்.

இராமநாதபுரம் ஜில்லாவில், ஏராளமான பஞ்சு விளை கிறது. எனவே கரிசல் பூமியான ஸ்ரீ வில்லிப்புத்தூர் தாலூகா, சிவகாசி தாலூகா முதலிய விடங்களில் அதிகமான பஞ்சடிக்கும் ஆலைகளும், ராஜபாளையம், விருதுநகர் இவ்விரண்டு இடங்களிலும் நெசவு ஆலைகளும் இருக்கின்றன.



ஆஸ்பத்திரிகளுக்குப் பெரிதும் உபயோகப்படத் தக்க ஒரு வித உயர்ந்த ரகப்பருத்தி ராஜபாளையம் பிரதேசத்தில் உற்பத்தியாகிறது, அந்தப்பருத்தியைச் சுத்தப்படுத்திஆஸ்பத்திரி உபயோகத்துக்குத் தயாராக்கப் பிரத்தியேகமாக ஒரு பஞ்சாலை ராஜபாளையத்தில் வேலைசெய்கிறது. இந்த ஜில்லாவில் 63 தீப்பெட்டி தொழிற்சாலைகள் இருக்கின்றன புகையிலைத் தொழிற்சாலை ஒன்று காரைக்குடியிலிருக்கிறது.

தொழிலாளர் நலன்

கைத்தொழில் அபிவிருத்திக்கு முக்கியமாகத் தேவையானது திருப்தியுள்ள தொழிலாளர்கள். தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையில் திருப்தியுடனிருந்து தொழிலில் ஊக்கம் காட்டினுல்தான் உற்பத்திப் பெருக்கம் ஏற்படும். அப்படிப்பட்ட ஒரு நல்ல நிலைமையை ஸ்தாபிக்கவே நம் மக்கள் சர்க்கார் பிரயாசைப்பட்டு வருகிறுர்கள். அந்த மார்க்கத்தில் பல சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவைகளில் முக்கியமானது தொழில் முதலாளிகள்—தொழிலாளர்களுக்குள் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்க கைத்தொழில் டிரிப்யூனல்கள் அமைத்திருப்பதாகும். இதன் மூலம் தொழிலாளர்கள் நன்மையடைந்து வருகிறுர்கள். அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருந்த வேலை நிறுத்தங்களும் கதவடைப்புக்களும் மறைந்தன.

தொழிலாளர்களுக்குப் பல நன்மைகளைச் செய்யும் வகையில் பாக்டரி சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. கடைச் சிப்பந்திகள் சட்ட மூலம் கடைத்தொழிலாளர்கள் போதுமான ஓய்வும், வேலைநேர நிர்ணயமும் பெற்றிருக்கிறுர்கள். இன்னும் அரசாங்க இன்ஷூரன்ஸ் திட்டம், பிராவிடன்ட் நிதி முறை எல்லாம் அமுலுக்கு வந்துகொண்டிருக்கிறது. சென்னை ராஜ்யத்திலுள்ள பல முக்கிய தொழில்களில் தொழிலாளரின் குறைந்தபட்ச சம்பளத்தை சர்க்கார் நிர்ணயித்திருக்கிறுர்கள். மேலும் தொழிலாளர்களின் நியாயமான தேவைகளை பொதுஜன சர்க்கார் அப்போதைக்கப்போது கவனித்து ஆவன செய்து வருகின்றனர்.

வாக்குரிமை

மக்கள் சபைக்கும், ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்ட சபைக்கும், வயது வந்தோர் வாக்குரிமை என்னும் அடிப்படையின் கீழ் தேர்தல் நடைபெறும்.

—இநதிய அரசியல் அமைபபு.
ஷரத்து—326.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல் இந்திய மக்களின் இப்போதைய முக்கிய பொறுப்பாகும். உண்மையான ஜனநாயக முறை எந்த அளவுக்கு நம் நாட்டில் ஸ்தாபிக்கப்படுகிறதோ, அதற்குத் தகுந்தபடி சுதந்திரமும் நிலைக்கும்; சுய ஆட்சியும் நன்கு நடைபெறும். இந்த உயர்ந்த தத்துவங்களை மனதிற் கொண்டே இந்திய ஜனத் தலைவர்கள் அரசியல் நிர்ணய சபையை நிறுவி, சுதந்திர இந்திய ஜனநாயக அரசாங்க அமைப்புக்கான சட்டங்களை நிறைவேற்றினர்.

1950-ம் வருஷம் ஜனவரி மீ 26-ந் தேதியன்று இந்த அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற, மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட, மக்கள் சர்க்கார் நிர்வாகம்தான், இந்த அரசியல் சாசனத்தின்

நோக்கமாகும். எனவே மக்களுக்குத்தான் இங்கு பூரண அதிகாரம் உண்டு.

ஜனநாயக அரசியல் அமைப்புக்குள்ள பொறுப்பு அதிக மானதாகும். இதே மாதிரி ஜனநாயக ஆட்சியை விரும்பும் மக்களுடைய பொறுப்பும் அதிகமாகியுள்ளது. சுதந்திர மென்னும் குழந்தை, ஜனநாயகமென்னும் தொட்டிலில் தவழ்ந்து வளருவதற்கு, வாக்குரிமை சரியான சந்தர்ப்ப மளிக்கிறது.

துணிச்சலான தீர்மானம்

நம் தேசத் தலைவர்கள் எடுத்தவுடனேயே வயது வந் தோர் எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுக்கத் துணிந்தனர். வயது வந்தோர் ஓட்டுரிமை என்பது தேச ஆட்சியில் எவ்வளவு மகத்தான சக்தி வாய்ந்த தென்பதையும், அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் நம் தலைவர்கள் தெரிந்து கொள்ளாமலில்லை. ஆனால், ஜனநாயக சர்க்கா ரென்றால், அதில் மக்களில் பெரும்பாலானவர்களின் உண்மைப் பிரதிநிதிகள் நிர்வாகம் நடத்தவேண்டும் இந்த ஒரே நோக்கத்தில்தான், நம் தலைவர்கள் மிகவும் தைரியத் துடன் இம் முறையை அனுஷ்டிக்க முன்வந்திருக்கிறார்கள்.

ஜனநாயக மென்பது மக்களின் சர்க்கார். மக்கள் எல்லோரும் சேர்ந்து ஆட்சி புரியவேண்டும். அப்படிச் செய்வது நடைமுறையில் சாத்தியமானதல்ல. எனவே, மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர் களின்மூலம் ஆட்சி நடத்துவதென்ற சம்பிரதாயம் ஏற் படுத்தப்பட்டுள்ளது. சட்டசபை அங்கத்தினர்களை மக்கள் தேர்ந்தெடுத்து விடுகிறார்கள். அந்தச் சட்டசபை அங்கத்தினர்களில் பெரும்பாலானவர்களைக் கொண்ட அரசியல் கட்சியினர், தங்களுடைய தலைவரைத் தேர்ந் தெடுப்பர். அத் தலைவர் ராஜ்யத்தின் முதல் மந்திரியாக நியமிக்கப்படுவார். ராஜ்ய நிர்வாகத்தில் தமக்கு உதவி புரியச் சிலரைத் தம்சக மந்திரிகளாய் நியமிக்கவேண்டு மென்று, முதல் மந்திரி, ராஜ்ய கவர்னருக்கு சிபார்சு செய்

வார். இம்மாதிரி மந்திரி சபையமைக்கப்படும். மந்திரிகள் சட்டசபைக்கும், சட்டசபை, மக்களுக்கும் பொறுப்பாவர். இந்த பார்லிமென்டரி முறைகள் பூராவும், இந்திய அரசியல் சட்டத்தில் விவரமாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் தொகை அதிகரித்தல்

இந்த நியதி மூலம், 5 வருஷத்திற்கு ஒரு தடவை பொதுத் தேர்தல் இன்றியமையாததாகிறது. தேர்தலில் வாக்காளராவதற்குச் சில தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட யோக்கியதாம்ச நிபந்தனைகள் பிரகாரம், 1929-ம் வருஷம் ஜனத்தொகையில் 2 அல்லது 3 சத விகிதமும் 1937-ல் 14 சத விகிதமும் வாக்காளராஞர்கள். இப்பொழுது வயது வந்தோர் ஓட்டுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது, ராஜ்ய மக்களில் 21 வயது பூர்த்தியானவர்கள் எல்லோரும் வாக்காளர்கள்தான். இந்தியப் பிரஜையாக இருக்கவேண்டியதும், 21 வயது பூர்த்தியாக வேண்டுமென்பதுந்தான் வாக்காளராவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முக்கிய யோக்கியதாம்சங்கள். இவற்றின்படி ஜனத் தொகையில் ஏறக்குறைய பாதிப்பேர் வாக்காளராகிருர்கள்.

சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை 1951-ம் வருஷத்து ஜன சங்கியைக் கணக்குப்படி 56,952,332. அதில் ஆண்கள் 28,413,661. பெண்கள் 28,538,671. மொத்த ஜனத்தொகையில் ஆண்கள் 49·9 சத விகிதமும், பெண்கள் 50·1 சத விகிதமும் இருக்கிருர்கள். 1941-ம் வருஷத்து கணக்குப்படி ராஜ்யத்தின் ஜனத்தொகை 49,847,508. எனவே சென்ற பத்து வருஷங்களில் சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை 7,104,824 அதிகரித்திருக்கிறது. 1941-ல் ஒரு சதுர மைலுக்கு 390 பேர்கள் வசித்தார்கள். 1951-ல் 446 பேர் வசிக்கிருர்கள்.

1951-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 28 நாட்களிலும், சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஜன சங்கியைக் கணக்கெடுப்பவர்கள் வேலை செய்தார்கள். இதற்கு முன்ஞல் நடை

பெற்ற ஜனசங்கியைக் கணக்கெடுப்பு மாதிரியில்லாமல், இந்தக் கணக்கெடுப்பில் சர்க்காரால் அதிக கவனம் செலுத்தப்பட்டு, அதிகப்படியான புள்ளி விவரங்களும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

பிரதிநிதிகள் எண்ணிக்கை

தற்போதுள்ள வாக்காளர் ஜாபிதாக்களின் பிரகாரம் சென்னை ராஜ்யத்தில் 271 லட்சம் ஓட்டர்கள் இருக்கிறார்கள். இவர்கள் நம் ராஜ்ய சட்டசபைக்கு 375 அங்கத்தினர்களையும், மத்திய சட்டசபையான டெல்லி பார்லிமென்டின் மக்கள் சபைக்கு நம் ராஜ்யப் பிரதிநிதிகளாய் 75 அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சென்னை மேல் சபையில் மொத்தம் 72 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்களில் ஸ்தல ஸ்தாபனங்களின் மூலம் 24 பேரும், பட்டதாரிகள் தொகுதியிலிருந்து 6 பேரும், ஆசிரியர் தொகுதியிலிருந்து 6 பேரும், தேர்ந்தெடுக்கப்படுவர். சென்னை ராஜ்ய கீழ்ச் சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து, தனியாக 24 பேரை சென்னை மேல் சபைக்குத் தேர்ந்தெடுப்பார்கள். இவர்களைத் தவிர, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் 12 அங்கத்தினர்களை நியமனம் செய்வார்.

டெல்லி பார்லிமென்டின் மேல் சபையில் மொத்தம் 205 அங்கத்தினர்கள் இருப்பர். 'கவுன்ஸில் ஆப் ஸ்டேட்' எனப்படும் அந்தச் சபையில், சென்னை ராஜ்யத்தின் சார்பாக 27 பேர் அங்கம் வகிப்பார்கள்.

தவறான முறைகளைத் தவிர்க்க

பொதுவாக, தேர்தல் காலங்களில், இறந்தவர்கள் வந்து ஓட்டுப் போடுவதுதான் மிகவும் விசித்திரமானது. அபேட்சகர்களின் ஆட்கள் இதற்கென்று விசேஷ கவனம் செலுத்தி, ஜாபிதாவிலுள்ள பெயர்களில் இறந்துபோனவர்களுக்குப் பதில் நபர்களைத் தயார் செய்யக்கூடும். அவர்கள் வந்து இறந்து போனவர்கள் பெயர்களைத் தம்மதென்று

சொல்லி ஓட்டுப்போட்டு விட முடியும். இந்தக் கெடுதலைத் தடுப்பதற்கு, வரப்போகும் தேர்தலில் ஒரு அடையாள மிடும் முறையைக் கையாளவேண்டுமென்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. அதாவது, ஒருவர் ஓட்டுப் போட வருமபொழுது அவருடைய விரலில் ஒரு வித மை பூசப் படும். அந்த மை குறைந்தது ஒரு வாரம் அழியாமலிருக் கும். எனவே, எவரும் தப்பான பெயரில் மீண்டும் ஓட்டுப் போட முடியாது.

அகில இந்திய ரீதியில் பரிசீலனை

சென்னை ராஜ்யத்தில் தேர்தல் தொகுதிகள் பிரிப்பதில் ஜில்லா எல்லைகளை மட்டும் கூடுமானவரை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், முன்னேற்ற மில்லாத வகுப்பினர்களுக்கு ஸ்தானம் ஒதுக்கப்படும் தொகுதிகள் மட்டும் இரட்டை அங்கத்தினர் தொகுதி களாகவும், மற்றைய தொகுதிகள் ஒற்றை அங்கத்தினர் தொகுதிகளாகவேயிருக்கவேண்டுமென்றும், சென்னை சர்க் கார் சிபார்சு செய்தனர். அவ் விஷயம் சென்னை அசெம் பிளியிலும், கவுன்சிலிலும் நன்கு விவாதிக்கப்பட்டு, சர்க் காரின் சிபார்சு அங்கீகரிக்கப்பட்டது.

இதுபற்றிய எல்லா விஷயங்களிலும் அகில இந்திய ரீதியில் சரிவர ஆராய்ந்து, இந்தத் தேர்தலை நடத்த, பிரத்தி யேகமாய் ஒரு தேர்தல் கமிஷனரை மத்திய சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். அவர் தேர்தலின் அமசங்கள் ஒவ்வொன்றையும் தாமே கவனித்து தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். தேர்தல் தொகுதிகள் நிர்ணயித்தல், தேர்தல் நடத்துவதற்கான சாமான்களைத் தயாரித்தல், முதலியன நடைபெற்று வருகின்றன.

சென்னை ராஜ்யத்தின் வாக்காளர் ஜாப்தா தயாரிப்ப தற்கு 29 லட்ச ரூபாய் செலவாயிருக்கிறது. காகித விலை மட்டும் 6 லட்சம். தேர்தல் நடத்த 3 லட்சம் 'பாலட்' பெட்டிகளுக்குமேல் வேண்டியிருக்கின்றன. அவைகள் எஃகு பெட்டிகளாகவே இருக்கவேண்டுமென்று தீர்

மானிக்கப்பட்டிருக்கிறது. சராசரி ஒரு பெட்டிக்கு 6 ரூபாய் விலையாகிறது. எனவே, அந்த வகைக்கு குறைந்தது 20 லட்சம் செலவாகும். இன்னும் தேர்தல் ஸ்தலங்கள், அதற்கு வேண்டிய இதர சாமான்கள், காவல் கட்டுப்பாடுகளெல்லாம் இருக்கின்றன. இவற்றைப்பற்றிய எல்லா விவரங்களும் கவனிக்கப்பட்டு, எல்லாவித ஏற்பாடுகளும் வெகு விரைவாகவும் ஒழுங்காகவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அஸ்திவாரமிடுவதிலும் கூட்டு முயற்சி

இதற்கிடையில், அரசியல் கட்சியினர் பலர் தங்கள் கருத்துக்களை அறிவிக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டது. அரசாங்கம் இதற்கென பல்வேறு அரசியல் கட்சியினரை நேரில் அழைத்து விரிவான ஆராய்ச்சி நடத்தினர். நம் ராஜ்யத்திலுள்ள அரசியல் கட்சியினர் பலரும் அதில் கலந்துகொண்டது பாராட்டத்தக்கதாகும். ஜனநாயக வளர்ச்சிக்கு இத்தகைய காரியங்கள் எவ்வளவு அவசியமானவை என்பதைப்பற்றி அதிகம் கூற அவசியமில்லை.

பொதுஜனத் தொடர்பு

ஜனநாயகத் தன்மையில் வளரும் அரசாங்கம், அவ்வப்போது தன்னுடைய அலுவல்கள் சம்பந்தமாகவும், பொது நலவிஷயங்கள் சம்பந்தமாகவும், பொதுமக்களுடன் உறவு பூண்டு, அவர்களுக்குத் தேவையான விவரங்களை அறிவிக்க வேண்டியது அவசியம். இத்துறையில் செய்தி இலாகா தன்னால் இயன்ற அளவு தொண்டாற்றி வந்துள்ளது.

இராமநாதபுரம் ஜில்லாவில் 13 ராஜ்ய அசம்பிளித் தொகுதிகளும் 3 மத்திய மக்கள் சபைத் தொகுதிகளும் உள்ளன. ஜில்லாவின் மொத்த வோட்டர்கள் 1,067,492.

அமைதியும் அபிவிருத்தியும்

தேசிய வாழ்க்கை சம்பந்தமான எல்லா ஸ்தாபனங்களிலும், சமூக பொருளாதார, அரசியல், நீதி முறை பொருந்தி விளங்குதற்குரிய ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தி, அதை மிகத் திறமையுடன் பாதுகாக்கும் வகையில் மக்களின் நலத்தைப் பேணி வளர்க்க அரசாங்கம் முயற்சி செய்யும்.

—இந்திய அரசியல் அமைப்பு;
ஷரத்து—38.

நாட்டின் அடிமைத் தளை அறுத்தெறியப்பட்டது. மக்கள் சர்க்கார் ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது பொது மக்களின் வாழ்க்கையில் நல்ல அமைதியும் அதிகமான வசதிகளும் இருக்குமென்று எல்லோரும் எதிர் பார்ப்பது சகஜம். இதில் மக்களுக்கு ஏமாற்றம் ஏற்படாதவாறு, நாட்டில் ஏற்பட்ட பல தொல்லைகளை அகற்றி மக்கள் சர்க்கார் நன்மைகளைச் செய்திருக்கின்றனர்.

வாழ்க்கை நல வசதிகள்

நாடு சுதந்திரமடைந்ததும் மக்கள் சர்க்கார் ஆட்சியைக் கவிழ்க்க ஒரு சில நாச வேலைக்காரர்கள் தோன்றினர்.

ஆங்காங்கு கொலை கொள்ளைகள் நடத்தியும், ரயில்களைக் கவிழ்த்தும் தொல்லை கொடுத்து வந்தனர். இந்தக் கூட்டத்தை அடக்க நம் சர்க்கார் தீவிர நடவடிக்கைகள் எடுத்தனர். நாட்டின் போலீஸ் படையைப் போதிய அளவுக்கு விஸ்தரிக்க வேண்டிய அவசியமேற்பட்டது. போலீஸாரும் திறமையுடன் நடந்து அந்த நாச வேலைக் காரர்களை ஒடுக்குவதில் வெற்றி கண்டனர். போலீஸின் திறமையை எல்லோரும் பாராட்டினர்.

இராமநாதபுரம் ஜில்லாவிலும் 1947, 48, 49-ம் வருஷங்களில் சில சிறு கிளர்ச்சிகள் தோன்றின. நாச வேலைக் காரர்களின் நடவடிக்கைகளும் சிலவிடங்களில் காணப் பட்டன. ஆனால் அதை நம் போலீஸார் மிக சுலபமாய் அடக்கிவிட்டனர். ஜில்லாவில் 1948-ல் ஒன்றும், 1949-ல் 3 மாக 4 போலீஸ் ஸ்டேஷன்கள் புதிதாக ஏற்பட்டன.

பஸ் போக்குவரத்து

பொது மக்களின் போக்குவரத்து வசதியை முன்னிட்டு ராஜ்யத்திலுள்ள பஸ் போக்குவரத்து சர்விஸ்களையும் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமென்று நம் மக்கள் சர்க்கார் தீர்மானித்தனர். ஆரம்பத்தில் பரீக்ஷார்த்தமாக சென்னை நகர பஸ் சர்விஸை சர்க்கார் நடத்தவாரம்பித்த னர். இப்பொழுது பஸ் போக்குவரத்தில் முன்னிருந்ததை விடப் பன்மடங்கு வசதிகள் அதிகரித்திருக்கின்றன வென்பதில் சந்தேகமில்லை. நகர பஸ் சர்விஸை சர்க்காரே எடுத்து நடத்தும் பணியை 1946-ம் வருஷம் நம் சர்க்கார் துவக்கினர், 1948 ஜூன் மாதம் அது பூர்த்தியாயிற்று. முன் 198 பஸ்கள் ஓடிக்கொண்டிருந்த நகரில் இப்பொழுது 320 பஸ்கள் ஓடுகின்றன. பஸ்கள் போகும் பாதைகளையும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ஆபீஸ் நேரங்களில் ஏற்படும் அதிக நெருக்கடியைக் குறைக்க அநேக முறைகளை அனுஷ்டிக்கிறார்கள். இறுதியாக பெரிய பஸ்களை உபயோகிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதில் 42பேர் உட்கார இட வசதி இருக்கிறது.

நகரத்தில் பஸ் சர்விஸை சர்க்கார் எடுத்து நடத்துவது வெற்றிகரமாகவே நடைபெறுகிறது. ஜில்லாக்களிலும் பஸ் சர்விஸை சர்க்கார் எடுத்துக்கொள்ளத் திட்டம் போட்டனர். ஆனால் அது தற்காலிகமாய் ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது.

லஞ்சம் கள்ளமார்க்கெட்டு

பொது மக்களின் வாழ்க்கை நலனைப் பாதிக்கும் விஷயங்களில் லஞ்சப் பேயும் கள்ளமார்க்கட்டும் முக்கிய இடம்பெறுகின்றன. இவைகளை அடியோடு தொலைக்க நம் சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். லஞ்சம் வாங்குகிறவர்களைக் கண்டு பிடித்து சரியானபடி தண்டிப்பதுடன் மற்றவர்களுக்குப் படிப்பினையாக அச் செய்தியை நன்கு விளம்பரப்படுத்துகின்றனர்.

கள்ளமார்க்கெட்டுக்காரர் விஷயத்தில் போலீஸார் மிகத் தீவிரமாய்க் கண்காணித்து வருகிறார்கள். பொது மக்களின் ஒத்துழைப்புமிருந்தால் இத் தீமைகள் சீக்கிரம் ஒழியும்.

உயிர்பலி தடை

கடவுளின் பெயரால் கோயில்களின் முன் மிருகங்கள் பட்சிகளைப் பலியிடும் வழக்கத்தைத் தடுத்து சென்னை சர்க்கார் ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளனர். இது மிகுந்த ஜீவகாருண்யம் பொருந்தியதும் எல்லோராலும் வரவேற்கத் தக்கதாகவுமுள்ளவொரு செயல்.

பஞ்சநிவாரணம்

ராஜ்யத்தின் உணவு தானிய பற்றுக்குறை நிலைமையாலும், விலை ஏற்றத்தாலும், வெளியிலிருந்து இறக்குமதி செய்யும் வசதி குறைந்ததாலும் நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டது. அத்துடன் சென்ற நான்கு ஆண்டுகளாய் பருவ மழையும் தவறியதால் நாட்டில் பஞ்ச நிலை ஏற்பட்டதென்று சொல்லலாம்.


நாட்டின் பாதுகாப்புக்கு மாணவர் பயிற்சி
ஒருவருக்காயினும் ஓதுக கல்வி
முதியோர் பயிற்சி
பல்கலைக் கல்வி—விருதுநகரில் கலாசாலை
அ

ரண சிகிச்சை நிலையம்—திருப்பத்தூர்
ஆஸ்பத்திரி வசதிகள் விஸ்தரிப்பு
சிறந்த பருத்தி நிறைந்த ராஜபாளையம்
ரண சிகிச்சைக்கான பஞ்சு தயாரிக்கும் ஆலை

நிலைமையை நன்கு கவனித்த சர்க்கார் விளைச்சலில்லாத இந் நெருக்கடிப் பிரதேசங்களில் தக்கபடி வரிவஜாச் செய்ய உத்தரவிட்டனர். 1946–47-ல் ரூ. 38,951-ம், 1947–48-ல் ரூ. 84,473-ம், 1948–49-ல் ரூ. 49,343-ம், 1949–50-ல் ரூ. 2,03,864-ம் இராமநாதபுரம் ஜில்லாவில் சர்க்கார் வரி வஜாச் செய்தனர். வேலையில்லாதவர்களுக்கு ஜீவனோபாய மாக வேலை கொடுக்கவும் ஏற்பாடு செய்தனர்.

இராமநாதபுரம் ஜில்லா, முதுகுளத்தூர் தாலூகாவில் பொதுஜனங்கள் வேலை கிடைக்காமல் இதர ஜில்லாக் களுக்குப் போக முற்பட்டனர். அப்பொழுது அந்த ஜில்லா கலெக்டர் உடனே ரஸ்தா போடும் வேலைகளை மேற்கொண்டு வேலை இல்லாதவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கும்படி செய்தார். இம்மாதிரி மற்ற பிரதேசங் களிலும் குள மராமத்து வேலைகள் துவக்கப்பட்டன. இவற்றால் பஞ்சப் பிரதேசங்களில் ஜீவனமில்லாத மக்களுக்கு ஒருவாறு நிவாரணம் ஏற்பட்டது.

பூரண மதுவிலக்கு

ஏழைமக்களின் வருமானத்தைக் கொள்ளைகொண்டு அவர்களின் வாழ்க்கையையே பாழாக்கிவந்த குடிப்பழக்கம் ஒழிந்தது. ராஜயத்தில் மயக்கந்தரும் குடிவகைகள் இருக்க லாகாதென்று மக்கள் சர்க்கார் கருதினர். 1939-ம் வருஷத் திலேயே இதற்கான மசோதாவைக் கொண்டுவந்து சட்ட மாக்கி சேலம் ஜில்லாவில்மட்டும் மது விலக்கை ஆரம்பித் தனர். ஆனால் அதன் பிறகு அதை விஸ்தரிக்க முடியாமற் போயிற்று. பின்னால்வந்த அட்வைசர் ஆட்சி மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்துவிட்டனர்.

1946ல் மக்கள் சர்க்கார் மீண்டும் பொறுப்பேற்றதும் மதுவிலக்குச் சட்டத்தை நிறைவேற்றினர். 1946-ம் வரு ஷத்தில் 8 ஜில்லாக்களில் இந்தச் சட்டம் அமுல் நடத்தப் பட்டது. 1948-ம் அக்டோபர்மீ 2உ ராஜ்யத்தில் பூர்ண மதுவிலக்கை நிறைவேற்றினர். இதன் நன்மையை கிரா மங்களிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலையைக்கொண்டு

தான் மதிப்பிட முடியும். வருமானத்தை எல்லாம் குடியில் தொலைத்துவிட்டு பெண்டுபிள்ளைகளைத் தெருவில் அலைய விட்டுவந்த பலர் இப்பொழுது நல்ல முறையில் குடித்தனம் நடத்துகின்றனர். சிறிதுசிறிதாகப் பொருளும் சேர்த்து வருகின்றனர். மது விலக்குக் கொள்கையால் நன்மை யடைந்துவரும் பெண் மக்கள் சர்க்காரை வாயாற வாழ்த்துகிறார்கள்.

கள், சாராயக்கடைகளை எடுத்துவிட்டு அந்த இடங்களில் தேநீர்க் கடைகளை வைத்திருக்கிறார்கள். குடிப் பழக்கம் அதிகமாயுள்ளவர்களுக்கு அதை மறக்கும் வழி செய்யவேண்டிய வசதிகளை மதுவிலக்கு இலாகா அதிகாரிகள் செய்து வருகின்றனர். வேலை நேரங்கள்தவிர இதர வேளைகளில் அவர்களுடைய மனதைக்கவர நாடக, நடனக் காட்சிகள், பலவித கிராமவிளையாட்டுகள் முதலியவற்றை நடத்த ஏற்பாடு செய்கிறார்கள். கிராம ரேடியோக்கள் ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மதுவிலக்கு வந்ததால் பாதிக்கப்பட்டவர்கள் மாஜிகள் இறக்கும் தொழிலாளர்தான். இவர்களுடைய ஜீவனோபாயத்திற்கு சர்க்காரும் சமூகங்களும் பலவித ஏற்பாடுகளைச் செய்கின்றனர். கூட்டுறவு சங்கங்களில் அவர்களுக்கு வேலை தரப்படுகின்றன. வெல்லம், கருப்பட்டி உற்பத்திசெய்ய எல்லாவசதிகளும் அளிக்கப்படுகின்றன. தித்திப்பு பதநீரை பானத்திற்கு உபயோகிக்க அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

மதுவிலக்குச் சட்ட அமுலைத் திறம்படநடத்தி குடிப் பழக்கம் நாட்டில் தலைகாட்டாமல்செய்ய நம் மக்கள் சர்க்கார் திடமனதுடன் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

திருநெல்வேலிஜில்லாவுக்கு அடுத்ததாக இராமநாதபுரம் ஜில்லாவில்தான் கள் இறக்கும் தொழிலாளர் அதிகம். மொத்தம் 13,057 பேர்களில் 11,827 பேருக்கு வேலைதரும் வகையில் 157 பனைவெல்ல உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு பதனியை பானத்திற்கு.

விற்கவும்அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. மாஜிகள் இறக்கும் தொழிலாளர் பலர் விவசாயத்தொழிலிலும், கூலிவேலையிலும், ஆபீஸ்களில் பியுன், வாட்சு மென்வேலையிலும் மற்றும் ரயில்வே வேலையிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நீதி நிர்வாகப் பிரிவினை

இதுவரை நம் ராஜ்யத்தில் சிவில் விவகாரங்களை விசாரிக்க ஹைகோர்ட்டின் மேல் பார்வையில் பல அதிகாரிகளும், கிரிமினல் வழக்குகளை விசாரிக்க ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் மேல்பார்வையில் அதிகாரிகளும் இருந்தார்கள். ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டும் ஜில்லா கலெக்டருமாக ஒருவரே இருந்துவந்தார். வழக்கைத் தொடர அனுமதியளிப்பவரும், வழக்கை விசாரிப்பதை மேல்பார்வையிடுபவரும் ஒருவராக இருப்பது சரியாகயில்லையென்று மக்கள் சர்க்கார் கருதினர். எனவே ஜில்லா கலெக்டரும், மாஜிஸ்ட்ரேட்டுமாக வேறு வேறு அதிகாரிகள் இருந்தால்தான் சர்க்கார் நிர்வாக அதிகாரிகளின் தலையீடில்லாமல் நீதி இலாகா வேலை நடைபெறுமென்று அவர்கள் தீர்மானித்தனர். அதன்படி கிரிமினல் சிவில் எல்லா வழக்கு விசாரணைகளும் அவற்றை நடத்தும் அதிகாரிகளும் ஹைகோர்ட்டின் நேரடியான மேற்பார்வையில் வைக்கப்பட்டனர். இந்த நீதி நிர்வாக இலாகா பிரிவினையின் மூலம் விசாரணை நடத்துவதில் மக்களுக்கு நீதி மிகவும் நேர்மையுடன் வழங்கப்படுகிறது.

நீதி நிர்வாகப் பிரிவினை முதலாவதாக 1949-ஞு அக்டோபர்மீ 2-ம் தேதி செங்கல்பட்டு, வட ஆற்காடு ஜில்லாக்களில் கொண்டுவரப்பட்டது.

இந்த முறை அமுல் விஸ்தரிப்பு தொடர்ந்து நடைபெறுகிறது. 1950-ம்ஞு ஜனவரிமீ திருநெல்வேலி, அநந்தப்பூர், பெல்லாரி, சித்தூர் முதலிய ஜில்லாக்களுக்கு இச்சீர்திருத்தம் விஸ்தரிக்கப்பட்டது.

இராமநாதபுரம் ஜில்லாவில் 1950-ம்ஞு ஆகஸ்டுமீ 15-ம் தேதி இம் முறை அமுலுக்கு வந்தது.

மாதர் நலம்

ஆண்களோடு, பெண்களும் அவனி வாழ்க்கையில் அணி வகுத்து நிற்கவேண்டும்; சரி நிகர்சமான மாகத் திகழவேண்டும்; என்பதே தற்போதுள்ள முன்னேற்றக் கொள்கையாகும். இத்துறையில் சென்னை சர்க்கார் வெகு தூரம் முன்னேறி யுள்ளனர். மாதர் க்ஷேம நல இலாகா வொன்றைத் தனியாக அமைத்து பெண்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துகின்றனர்.

ராஜ்யத்தில் ஜில்லாதோறும் பெண்கள் க்ஷேமநல ஸ்தாபனங்களேற்படுத்தியிருக்கிறார்கள். அங்கு பெண்களுக்கு வேண்டிய மனை மாட்சிக் கல்வியும், தையல், பின்னல் போன்ற கைத்தொழில்களும் கற்பிக்கப்படுகின்றன. இராமநாதபுரம் ஜில்லாவில் மூன்று பெண்கள் க்ஷேம

நல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. கீழராஜகுலராமன், மானகசேரி, அச்சங்குளம் முதலிய கிராமங்களில் அவைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விடங்களில் பின்னல் வேலை, பாய் முடைதல், தையல் வேலை, சிசு போஷணை, மனைமாட்சிக் கலை முதலியவை கற்பிக்கப்படுகின்றன.

ஐந்தாண்டுத் திட்டம்

* ஆண் பெண் உள்ளிட்ட எல்லாப் பிரஜை களும் ஜீவனோபாயத்துக்காகப் போதிய வழிவகைகளைச் சமமாகப் பெறவேண்டும்.
* பொது நலத்தை முன்னிட்டு; சமூக சொத்து சுதந்திரங்களின் சொந்தமும் கட்டுப்பாடும் வகுக்கப்படவேண்டும்.
* செல்வமும் பொருள் உற்பத்தி சாதனங் களும் பொதுஜனங்களுக்கும் பாதகமாகாத ரீதியில் ஒரு சிலரிடம் சேர்ந்துவிடாதபடி பொருளாதார அமைப்பு இயங்கி வரும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்திய திட்டக் கமிஷனின் கொள்கைகள்.

காலம் என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. காலச்சக்கரத்தை யார்தான் தடை செய்ய முடியும்? ஆயினும் அதன் நியதியை உணர்ந்து, அதற் கேற்ப தங்கள் வாழ்வை ஆராய்ந்து அமைத்துக் கொள் வோரும் இல்லாமலில்லை. அத்தகையவர்கள் காலத்தோடு சேர்ந்து முன்னேறும் ஆற்றலைப் பெறுகின்றனர்.

சென்ற காலத்தை நினைவில் வைத்துக்கொண்டு, நிகழ் காலத்தில் கடமைகளைச் செய்த வண்ணமே, எதிர்

தைப் பற்றியும் சிந்திக்கும் திறமை, மனிதர்களுக்குள்ள ஒரு சிறப்பான ஆற்றலாகும். மிருகங்கள் அன்றாட வாழ்க்கையைப்பற்றிமட்டும் கவலைப்படுகின்றன. நேற்று பற்றிய நினைவும் நாளைபற்றிய எண்ணமும் இல்லாத நிலை, நாகரிகம் வளராததன் அறிகுறி.

பொதுவான இந்த உண்மைகள் தனி மனிதனுக்கு மட்டும் பொருந்துவன அல்ல. மொத்த சமுதாயத்துக்கும், சிறப்பாக நம் நாட்டிற்கு, அப்படியே பொருந்தும்.

மக்கள் பிரதிநிதிகள் 1946-ம் ஆண்டு அரசாங்கத்தை ஏற்றபோது, எல்லாவித அதிகாரங்களையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஆங்கில அதிகாரவர்க்க அமைப்பும், ஆட்சிமுறையும் அப்போது இருந்து வந்தன. அவற்றுக்குட்பட்டே மக்கள் அரசாங்கம் செயலாற்ற வேண்டியிருந்தது. அதன் பிறகு 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந்தேதியன்று இந்தியா சுதந்திரம் அடைந்ததும், அநேக புதிய பிரச்னைகளும் பொறுப்புகளும் ஏற்பட்டன. அவற்றை உடனடியாகத் தீர்ப்பதில் தங்கள் முழுகவனத்தையும் அரசாங்கம் செலுத்த வேண்டியதாயிற்று. இவை தவிர, இரண்டாவது மகா யுத்தத்தின் விளைவாக உலகமெங்கும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

மக்கள் அரசாங்கம் கடந்த ஐந்தாண்டுகளாக இத்தனை இடையூறுகளுக்கிடையேயும், பல்வேறு துறைகளிலே சிறந்த காரியங்களைச் சாதித்திருப்பதை, இதுவரை கூறிவந்த விவரங்களால் அறியலாம். நிகழ்கால பிரச்னைகளைத் தீர்ப்பதோடு இந்த அரசாங்கம் நின்றுவிடவில்லை. எதிர்கால க்ஷேமத்துக்காக அவசியமான திட்டமொன்றை அவர்கள் திறம்பட வகுத்துள்ளனர். அதற்கு ஐந்தாண்டுத் திட்டம் என்று பெயர். இந்திய நாட்டின் எல்லாத் தேவைகளையும் சரிவர ஆராய்ந்து, அவற்றைப் படிப்படியாகத் தீர்க்க வழிகோலப்பட்டது. இங்குள்ள இயற்கைச் செல்வங்களையெல்லாம் நன்கு பயன்படுத்துவதற்கான வழித் துறைகள் விவரிக்கப்பட்டன. சாகுபடியாகாமல் கிடக்கும் தரிசு நிலம், நிலத்தடியிலுள்ள உலோகவகைகள், நதிகளில்

ஓடும் ஏராளமான நீர், சோம்பிக்கிடக்கும் அளவற்ற மனித சக்தி முதலியவற்றைத் தக்கவாறு உபயோகித்து, நாட்டின் செல்வ நிலையைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அகில இந்திய ரீதியில் தயாரான இந்தத்திட்டம், நம்சென்னை ராஜ்யத்திற்கு மிகச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முனைகிறது. இதை நிறைவேற்ற ஐந்தாண்டுகளுக்கு 137 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப் பெற்றிருக்கிறது.

மக்கள் சர்க்கார் ஏற்படாததற்கு முன்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம், கூட்டுறவு முதலிய தேசீய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 10,61,84,000 ரூபாய் செலவிடப்பட்டு வந்தது. ஜனப்பிரதிநிதிகள் ஆட்சிவந்ததும், இந்தச் செலவு 42,22,50,000 ரூபாய் ஆயிற்று. எனவே, தேசீய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னைவிட இப்போது நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. இவற்றுள் முக்கியமாக நீர்ப்பாசனத்துறையிலே பிரமிக்கத்தக்க அபிவிருத்தி காணப்படுகிறது. 150 வருஷ ஆங்கில ஆட்சியில் சுமார் 18 கோடி ரூபாய் மாத்திரமே, இந்த ராஜ்யத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகச் செலவிட்டார்கள். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் இதற்காக மக்கள் சர்க்கார் செலவிட்டுள்ளனர். இந்த ஆண்டில்மட்டும் சுமார் 10 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்திருக்கிறார்கள். இதன் விளைவாக, நாடெங்கும் அநேக நீர்ப்பாசனத் திட்டவேலைகள் துரிதமாக நிறைவேறி வருகின்றன. சிறப்பாக, வறண்ட இடங்களிலும், ஜமீன் இனாம் பிரதேசங்களிலும் இவை விசேஷமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

தவிர மற்ற ராஜ்யங்களோடு ஒத்திட்டுப்பார்த்தால், சென்னை ராஜ்யம் பலவகையிலும் முன்னேறியிருப்பது நன்கு விளங்கும்.

அஸ்ஸாம், கிழக்கு பஞ்சாப் ஆகியவை உள்பட எல்லா ராஜ்யங்களும் சேர்ந்து, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகிய

வற்றிற்கு 32 கோடி ரூபாய் செலவிடுகின்றனர். அவற்றுள் 13 கோடி ரூபாய், அதாவது மூன்றில் ஒரு பங்குக்குமேல் நம் ராஜ்யம் செலவழிக்கின்றது. பீஹார், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய ராஜ்யங்கள் சேர்ந்து 11 கோடி ரூபாய் செலவழிக்கின்றன. இவை யெல்லாவற்றையும் விட இரண்டு கோடிக்கு மேலாக, நம் ராஜ்யம் ஒன்றே செலவிடுகிறது. உத்தரப் பிரதேசத்தை விட 3 மடங்கும், பீஹாரைவிட 6 மடங்கும், நம் ராஜ்யம் செலவிடுகின்றது. பம்பாய் ராஜ்யம் இந்த வகையில் செலவழிக்கும் ரூபாய் 8 கோடியாகும்.

நம் ராஜ்யத்தில் தேசீய அபிவிருத்திக்காகும் செலவில் சுமார் 50 சதவிகிதம் நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றுக்கே செலவிடப்படுகிறது. இதற்காக வங்காளத்தில் 7 சத விகிதமும், பீஹாரில் 12 சத விகிதமும், பம்பாயில் 29 சதவிகிதமும், மத்தியப் பிரதேசத்தில் 30 சத விகிதமும், ஒரிஸ்ஸாவில் 22 சதவிகிதமும், உத்தரப் பிரதேசத்தில் 41 சத விகிதமும் செலவிடப்படுகின்றன.

அடுத்த ஐந்தாண்டுகளில் கீழ்க்காணும் முறையில் தேசீய அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கம் செலவிடும்:—

	கோடி ரூபாய்.
1. நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்கள்	80·4
2. விவசாயம், கிராமாபிவிருத்தி ...	21·9
3. கைத்தொழில்கள்	2·1
4. ரஸ்தா அபிவிருத்தி	5·0
5. கல்வி, சுகாதாரம், இருப்பிட வசதிகள், பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் முதலான மற்ற சமூக நிர்மாண வேலைகள்	27 6
ஆக மொத்தம் ...	137·0

நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்களுக்காக எல்லா ராஜ்யங்களுக்குமாகச் சேர்த்து மொத்தம் 191 கோடி ரூபாய்

செலவிட உத்தேசித்துள்ளனர். இதில் சென்னை ராஜ்யம் ஒன்றே 80 கோடி செலவிடும். மற்ற ராஜ்யங்க ளெல்லாம் சேர்ந்து 111 கோடி செலவிடும். இதில், மற் றொரு முக்கிய விஷயம் கவனிக்கத்தக்கது. அதாவது, அந்தந்த ராஜ்யங்கள் நிறைவேற்றும் திட்டங்கள் அல்லா மல், பொதுவாக சில பெரிய திட்டங்களை மத்திய சர்க்காரே நிறைவேற்ற முடிவு செய்துள்ளனர். அவற்றிற் காக 176 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட் டுள்ளது. அத்தகைய திட்டங்களால் பஞ்சாப், பீஹார், மேற்கு வங்காளம், ஓரிஸ்ஸா ஆகிய ராஜ்யங்களுக்கே அதிகமான பலன் ஏற்படும். நம் ராஜ்யத்துக்கு அது போன்ற உதவி அதிகம் இல்லை.

செலவிடுவதில் மட்டும், நம் ராஜ்யம் முன்னணியில் நிற்கவில்லை. சிறந்த பலனைக் காண்பதிலும் அது முன் நிற்கிறது. அடுத்த ஐந்தாண்டுகளில் உத்தரப் பிரதேசம் 800,000 டன், பீகார் 874,000 டன், மேற்கு வங்காளம் 787,000 டன், பஞ்சாப் 650,000 டன், பம்பாய் 367,000 டன் தானியம் அதிகமாக உற்பத்தி செய்யும் என்று உத் தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை ராஜ்யம் 834,000 டன் உணவுப் பொருள அதிகம் விளைவிக்கும். எனவே, பீகாருக்கு அடுத்தபடியாக, அதிக உற்பத்தி செய்யும் ராஜ்யம் சென்னையேயாகும்.

இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின், ஒரு சிறப்பான அம் சம், அனுபவ சாத்தியமானதாக இருப்பதேயாகும். நாட் டின் எதிர்கால வாழ்வில் நோக்கங்கொண்ட அதே நேரத் தில், மக்களின் நிகழ் கால நிலைமையையும் சர்க்கார் மறக்க வில்லை. ஜனங்களுக்கு அதிக கஷ்டமின்றியே, இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதியைச் சேகரிக்க உத் தேசித்துள்ளனர்.

பொதுஜன சுபிட்சத்துக்கான காரியங்களை உடனடி யாகச் செய்தால் மக்கள் தாமாகவே முன்வந்து அரசாங்கத் துக்கு அதிக வருமானம் அளிக்கத் தயங்கமாட்டார்கள் அல்லவா ?

சர்க்கார் வருமான விவரம் வருமாறு:—

	கோடி ரூபாய்.
1. நிலவரி மூலம் சுமார்	30
2. அரசாங்கச் செலவில் சிக்கனம் செய்வது மூலம்	5
3. டெபாசிட் செலவினால் மிருதியாகும் தொகை	8
4. அரசாங்கக் கடன் வசூல் மூலம் ...	17
5. ரிசர்வ் நிதியிலிருந்து திருப்பிப் பெறும் வகையில்	27
6. அதிகப்படி வரிவிதிப்பின் மூலம் ...	20
7. மத்திய சர்க்காரிடமிருந்து மான்யம்	30
ஆகமொத்தம் ...	137

முன்பெல்லாம் நாட்டில் அமைதி நிலைநிறுத்தும் பொறுப்பைமட்டுமே அரசாங்கம் வகித்து வந்தது. சுருங்கச் சொன்னால் போலீஸ் ராஜ்யமாக இருந்தது. ஆனால் இன்றோ மக்கள் சர்க்கார் பராமரிப்பு ஆட்சியை நடத்துகின்றனர். அதாவது, பொது ஜன சர்க்காரின் வருமானமும் செலவும், மக்களின் சமூக, கலாசார, பொருளாதார க்ஷேமத்தை லட்சியமாகக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன. சர்க்கார் வசூலிக்கும் பணம் முழுவதும், மக்களின் பல்வேறு சௌகரியங்களுக்கே திரும்பி வருகிறது. அதற்காக பல்வேறு சமூகநல வேலைகளைத் துரிதமாக நிறைவேற்றவே சர்க்கார் முயன்று வருகின்றனர். கடந்த ஐந்தாண்டுகளில் சிறந்த அபிவிருத்தியை ஏற்படுத்திய மக்கள் சர்க்கார் அடுத்த ஐந்தாண்டுகளில் மேற்சொன்ன திட்டங்களை வெற்றியோடு நிறைவேற்றி, நாட்டின் செல்வவளத்தைப் பெருக்கி, பொது ஜனங்கள் சுபிட்சமாக வாழ வகை செய்யும் என்பதில் ஐயமில்லை.

முக்கியக் குறிப்புகள்

ஜில்லா விஸ்தீர்ணம்—4,851 சதுர மைல்.

தாலூகாக்கள்

ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர், அருப்புக்கோட்டை, பரமக்குடி, முதுகுளத்தூர், இராமநாதபுரம், சிவகெங்கை, திருப்பத்தூர், திருவாடானை, ஆக 9.

கிராமங்கள்—2,300.

ஜில்லா தலைமை காரியாலயம்—மதுரை.

ஜனத்தொகை :—1951-ம் வருஷத்தில் ஆண்கள் 9,96,382 ; பெண்கள் 10,82,368 ; மொததம் 20,78,750.

1941-ம் வருஷத்திய மொத்த ஜனத்தொகை 19,90,842.

பத்து வருஷத்தில் அதிகரிப்பு 87,908 அதாவது 4·4 சதவிகிதம்.

ஓட்டர்கள்—10,67,492.

சட்டசபைத் தொகுதிகள்

ஒற்றை அங்கத்தினா தொகுதிகள்—11.

இரட்டை அஙகத்தினா தொகுதிகள்—2.

மொத்த ஸ்தானங்கள்—15.

முனிசிபாலிட்டிகள்

தேவகோட்டை, காரைக்குடி, ராஜபாளையம், சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை, ஆக 7.

பஞ்சாயத்துக்கள்

பெரிது—27, சிறிது—209.

பிர்க்கா அபிவிருத்தி வட்டாரங்கள்

மல்லி, நத்தம்பட்டி, எதிர்க்கோட்டை, சிவகாசி, காளையார்குறிச்சி,

காலேஜ்கள்

விருதுநகர், சிவகெஙகை, காரைக்குடி.

போதனா பயிற்சி பள்ளிகள்

சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

ஆதாரக் கல்வி பயிற்சி பள்ளிகள்

மல்லிப்புத்தூர், இராமநாதபுரம், பாளையம்பட்டி, ஜோகில்பட்டி.

நடுத்தரப் பாடசாலைகள்

கீழக்கரை, விருதுநகா, காரைக்குடி, ராஜபாளையம், கமுதி, பரமக்குடி, திருப்பத்தூர், பி. ராமச்சந்திரபுரம், ரெட்டிபட்டி, திருத்தங்கல், தொண்டி, முத்துராமலிங்கபுரம், அழகியநல்லூர், பந்தல்குடி, பாகனேரி, சிப்பிபாறை, சத்திரப்பட்டி, தேவகோட்டை, இராமநாதபுரம்,

ஸ்ரீவில்லிப்புத்தூர், அபிராமம், அருப்புக்கோட்டை, கண்டனூர், மானுமதுரை, நாட்டரசன்கோட்டை, பள்ளத்தூர், சாத்தூர், சிவகெங்கை, சிவகாசி, கல்லல், இளையங்குடி, அமராவதிபுதூர், வத்திராயிருப்பு, நேமத்தான்பட்டி, தெக்கூர், மல்லங்கிரியார், கீழச்செவல்பட்டி, கிழஇருப்பனேரி, கல்லூரணி.

பெரிய தொழிற்சாலைகள்

பஞ்சாலைகள் 6, பஞ்சடிக்கும் தொழிற்சாலைகள் 20, தீக்குச்சித் தொழிற்சாலை 62, எண்ணெய் மில்கள் 3, புகையிலை தொழிற்சாலை 1.

வைத்திய சாலைகள்

ராமநாதபுரம், அருப்புக்கோட்டை, ராமேஸ்வரம், சிவகெங்கை, ஸ்ரீவில்லிப்புத்தூர், விருதுநகர், தேவகோட்டை, பரமக்குடி, ராஜபாளையம், தனுஷ்கோடி, இளஞ்சிராம்பண்ணை, இளையங்குடி, காளுடு காத்தான், காளையார்கோயில், கமுதி, கீழக்கரை, கீழசெவல்பட்டி, கண்டனூர், கீழஞ்சானி, குன்னக்குடி, கல்லல், முதுகுளத்தூர், மண்டபம், மானுமதுரை, நாட்டரசன்கோட்டை, ராஜசிங்கமங்கலம், சாத்தூர், ஆலங்குறிச்சி, சிங்கம்புணரி, ஷண்முகநாதபுரம், திருவாடானை, திருப்பத்தூர், தொண்டி, திருப்புவனம், திருச்சுழி, வத்தராயிருப்பு, காரைக்குடி, சிவகாசி, கோட்டையூர், பூலாங்குறிச்சி, கன்றமாணிக்கம்.

விவசாய டிபோக்கள்

சிவகாசி (சாத்தூர் ரோடு), சிவகெங்கை (ராம்நகர்), ஸ்ரீவில்லிப்புத்தூர் (ஒத்தை தெரு), திருப்பத்தூர் (பலை நிலையத்திற்கு எதிரே), முதுகுளத்தூர் (121]7), பரமக்குடி (மேல சத்திரம்), ராமநாதபுரம் (சாலைத் தெரு), தேவகோட்டை (சிலபணி விளுயகம் தெரு), அறுப்புக்கோட்டை (சொக்கலிங்கபுரம்), சாத்தூர் (படந்தால் ரோடு).

மாதர் க்ஷேம நல நிலையங்கள்

அச்சங்குளம், கீழராஜகுலராமன், மானகேசரி.

பாபநாசம் மின்சார நிலையத்திலிருந்து 1950-51-ம் வருஷம் முடிய மின்சாரம் பெற்ற இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள கிராமங்கள்.

சாத்தூர் தாலூகா :

சின்னமூப்பன்பட்டி, காட்டாளபட்டி, கொக்கிலாஞ்சேரி, கூரக்குண்டு, ராவளி, புளியங்குளம், சாத்தூர், சிவகாசி, சூலக்கரை, திருத்தங்கல், வள்ளியூர், குமாரலிங்கபுரம், செங்கமலநாயக்கர்புரம், ஆவடையாபுரம், வீரபட்டி, பாறைப்பட்டி, மீனம்பட்டி, வடமலபுரம், உதயாள், மேட்டுப்பட்டி, காட்டாளம்பட்டி, சந்திரசூரபுரம், கொள்ளேகிநகர்.

அறுப்புக்கோட்டை தாலூகா :

அறுப்புக்கோட்டை, கோபாலபுரம், பாளையம்பட்டி, திருச்சுழி கல்லூர்சந்தை, தோட்டங்குளம்.

திருவாடானை தாலூகா :

திருமாஞ்சோலை.

திருப்பத்தூர் தாலூகா :

மகிபாலம்பட்டி, ஏரணியூர், காந்தவராயன்பட்டி, ஏ. தெக்கூர், பூலாங்குறிச்சி, சேவூர், நெய்க்குப்பை, திருப்பத்தூர், காந்தார மாணிக்கம், பட்டமங்கலம், சொக்கநாதபுரம், அடப்பனந்தாள், செந்நினயால்.

சிவகெங்கை தாலூகா :

ஒக்கூர், கீழப்பூங்குடி, பாகனேரி, அலவாக்கோட்டை, கீழ மங்கலம், மதகுபட்டி, சோழபுரம்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகா :

ராமச்சந்திரபுரம், ராமலிங்கபுரம், நாச்சியார்பட்டி, பாப்பநாய்க் கன்பட்டி, அப்பாநாயக்கன்பட்டி, மானகசேரி, புதூர்.

லைசென்ஸ்தார் மூலம் மின்சார வினியோகம்

முதுகுளத்தூர் தாலூகா :

அபிராமம், கமுதி, நல்லகுறிச்சி.

பரமக்குடி தாலூகா :

எமனேஸ்வரம், தாயங்குடி, பரமக்குடி, ஆயக்குடி, அத்திக்கரை, புதூர், நயினார்கோயில், சத்திகாரகுடி, தெல்விசத்தநல்லூர், கசத நல்லூர், முத்துவலசை, கீழக்கோட்டை, நெம்மேரி, மூட்டக்குறிச்சி.

இராமநாதபுரம் தாலூகா :

கீழக்கரை, இராமநாதபுரம், சக்கரக்கோட்டை, திருப்புல்லாணி.

சிவகெங்கை தாலூகா :

மானாமதுரை, தயாபுரம்.

திருப்பத்தூர் தாலூகா :

கல்லல், செம்பனூர், சிங்கம்புணரி, கலபபூர், காரைக்குடி, கோவி லூர், மானகிரி, நாச்சியாபுரம், ஆர்யக்குடி, அமராவதிபுதூர், ஜமீன் தார்குடியிருப்பு.

சிவகெங்கை தாலூகா :

நாட்டரசன்கோட்டை, சிவகெங்கை.

இராமநாதபுரம் தாலூகா :

இராமேஸ்வரம் பஞ்சாயத்து போர்டும், கோவிலும்.

சாத்தூர் தாலூகா :

சிவகாசி.

ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகா :

ராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர், கரிசல்குளம், சம்மந்தபுரம், சிங்கம்மாள்புரம், அத்திகுளம், செவகுளம், வெங்கடேஸ்வரபுரம், படிக்காசுவைத்தான், விருதுநகர்.

அபிவிருத்திப் பட்டியல்

விவசாயம்

இராமனுதபுரத்தில் விளையும் பொருள்களும் விஸ்தீர்ணமும்.

நெல்	399,000	ஏக்கர்.
சோளம்	62,100	,,
கம்பு	140,320	,,
தினை	1,800	,,
பாசிப்பயறு	4,370	,,
துவரை	4,960	,,
உளுந்து	11,000	,,
பருத்தி	198,700	,,
கரும்பு	600	,,
புகையிலை	1,740	,,
கேழ்வரகு	91,700	,,
வரகு	84,000	,,
சாமை	12,900	,,
கொண்டைக் கடலை	280	,,
கொள்ளு	16,900	,,
இதர தானியங்கள்	75,600	,,
இதர பயறு வகை	3,200	,,
மிளகாய்	16,200	,,
எள்ளு	23,000	,,
வேர்க்கடலை	74,100	,,

நீர்ப்பாசனம்

சர்க்கார் ஏரிகள்	43	
1946–47-ம் வருஷத்திய மராமத்து செலவு.	36,259	ரூபாய்.
1947–48-ம் வருஷத்திய டிட்டோ	18,721	,,
1948–49-ம் வருஷத்திய டிட்டோ	45,260	,,
1949–50-ம் வருஷத்திய டிட்டோ	37,177	,,

புதுத் திட்டங்கள்

	சாகுபடிக்கு வரும் நிலம்.
சாத்தூர் தாலூகா தம்பிக்கை நல்லான் குளத்தைப் புதுப்பித்தல்	100 ஏக்கருக்கு மேல்.
சாயக்குடி ஆறு அணைக்கட்டிலிருந்து கோபால சமுத்திரம் குளத்துக்கு வரத்துக் கால்	50 ஏக்கர்.

கமண்டல நதி குருயூா அணைக்கட்டி விருந்து கால்வெட்டி மல்லாங்கிணறு பிரதேசத்தில் 11 ஏரிகளுக்கு நீர் ஊட்டல்	600	ஏக்கர்.

மின்சாரம்

105 ஊர்களுக்கு மின்சார வினியோகம் செய்யப்படுகிறது.

போக்கு வரத்து

ஐந்து வருஷத்திட்டத்தில் அமைக்க நிச்சயித்திருக்கும் ரஸ்தாக்களின் நீளம்	545	மைல்.
இது வரை போட்டு முடிக்கப்பட்டது ...	72	,,

துறைமுகங்கள்

தனுஷ்கோடி, தொண்டி, தேவிபட்டினம்.

கல்வி

இந்த ஜில்லாவிலுள்ள கல்லூரிகள் ...	3
ஷை நடுத்தரப் பள்ளிகள்.	48

வைத்திய சாலைகள்

ஜில்லாவிலுள்ள ஆஸ்பத்திரிகள் ...	41
திருப்பத்தூரில் பிரசித்தி பெற்ற கண் ஆஸ்பத்திரி	1

பிர்க்கா அபிவிருத்தி

வட்டாரங்கள்	5	
அங்கு வினியோகிக்கப்பட்டிருக்கும் ராட்டைகள்	600	
மாதம் அவைகளில் நூற்கப்படும் சிட்டங்கள்	4,500	
புது பள்ளிக்கூட கட்டிடங்கள் ...	4	
இந்த கட்டிடங்களுக்கு சர்க்கார் செய்த செலவு	3,875	ரூபாய்.
மக்கள் செய்த செலவு	2,313	,,

ஹரிஜன முன்னேற்றம்

ஹரிஜன மக்களுக்கு, சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இரண்டு ரயத்துவாரி பிரதேசங்களிலும் 4 ஏக்கர் நிலம் வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சிவகெங்கைதாலூகாவில் பாகனேரி கிராமத்தில் 29 குடும்பங்களுக்கு வீடு கட்ட நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் 860 வீடுகளுக்கு இந்த ஜில்லாவில் நிலங் கொடுக்க ஏற்பாடு நடக்கிறது.

நம் சுதந்திர சாசனம்

இந்திய அரசியலமைப்பின் பாயிரம் (பீடிகை)

"இந்தியாவின் மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு சம்பூர்ண அதிகார ஜனநாயகக் குடியரசாக அமைத்து, அதன் குடிகள் அனைவருக்கும் :

சமூகம், பொருளாதாரம், ராஜீயம்—ஆகியவற்றில் நீதியும்,

எண்ணம், வெளியீடு, கோட்பாடு, மதம், வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும்,

அந்தஸ்து, வாய்ப்பு ஆகியவற்றில் சமத்துவமும், கிடைக்குமாறு செய்யவும்,

தனியொருவரின் கண்ணியமும், தேச சமுதாயத்தின் ஒருமைப்பாடும் நிலைபெறும் வண்ணம் அவர்கள் அனைவரிடமும் சகோதரத்துவம் ஓங்குமாறு செய்யவும், மனப்பூர்வமாகச் சங்கற்பம் செய்துகொண்டமையால், நமது அரசியல் நிர்ணய சபையிலே 1951-ம் வருஷம் ஜனவரி மாதம் இருபத்தாறும் தேதியாகிய இன்று, இதனால் இந்த அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டு, சட்டம் இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்."

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS, MADRAS.

ஐந்தாண்டு அபிவிருத்தி

திருநெல்வேலி ஜில்லா

சென்னை சர்க்கார்
செய்தி இலாகாவின் வெளியீடு
1951

[விலை : அணா 4.

இந்நூலின் இறுதியில் சேர்த்துள்ள ஜில்லாப் படத்தைத் தயாரித்து, அச்சடித்தும் கொடுத்தவர், சென்னை சர்க்கார் சர்வே இலாகாவினர் ஆவர். படத்தின் அளவு மிகப் பெரியதாய் இல்லாமையால், வெகு முக்கியமான குறிப்புகளை மட்டுமே அதில் காட்ட முடிந்தது.

இந்திய சர்க்கார் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவின் (Archælogical Department) புராதனக்கலைகள் சம்பந்தமான பல அழகிய படங்களை வெளியிட அனுமதி தந்துதவினர் அவற்றுள் பெரும்பாலானவற்றை கடைசி அட்டைப்படத்தில் காணலாம்.

ஸ்ரீ எம். கே. ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் அளித்த சில படங்களும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன.

படங்கள்

மேல் அட்டை :—

முதல் பக்கம் :

பெரியது—

குற்றால நீர்வீழ்ச்சி

சிறியது –

மணிமுத்தாறு திட்டம்

கடைசி அட்டை :

தஞ்சாவூர் கோயில், திருச்சி மலைக்கோட்டை, உதகமண்டலம் காட்சி, கோடைக்கானல் ஏரி, ராமேஸ்வரம் கோயில் உட்புறக் கலைக் கூடம், புகளூர் பாலம், மேட்டூர் நீர்த் தேக்கம், பாபநாசம் மின்சார நிலையம், திருவரங்கம் கோயில் சிற்பம், மாமல்லபுரம் சிற்பம், குற்றால நீர்வீழ்ச்சி

மேன்மை தங்கிய சென்னை கவர்னர்
ஸ்ரீ ஸர் கிருஷ்ணகுமார் ஸின்ஹ்ஜி பவ்ஸின்ஹ்ஜி,
கே. ஸி. எஸ். ஐ., பவ்நகர் மஹாராஜா.

கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்
சுகாதார மந்திரி

கனம் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம்
மராமத்து மந்திரி

கனம் ஸ்ரீ ஜே. எல். பி. ரோச் விக்டோரியா
உணவு மந்திரி

கனம் ஸ்ரீ பி. கோபால ரெட்டி
நிதி மந்திரி

கனம் ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா
முதல் மந்திரி



கனம் ஸ்ரீ வி. பெருமாள்சாமி ரெட்டி
கைத்தொழில மந்திரி



கனம் ஸ்ரீ கே. மாதவ மேனன்
கல்வி மந்திரி

கனம் ஸ்ரீ பி. பரமேஸ்வரன்
கிராம அபிவிருத்தி மந்திரி

கனம் ஸ்ரீ ஹெச். சீதாராம ரெட்டி
ரெவின்யூ மந்திரி

கனம் ஸ்ரீ கே. சந்திர மௌலி
ஸ்தல ஸ்தாபன மந்திரி

கனம் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் அவர்கள் சுகாதார மந்திரி பதவியை 1951-ம் ௵ செப்டெம்பர் ௴ 17௳ ராஜிநாமா செய்த பிறகு கனம் ஸ்ரீ களா வெங்கடராவ் செப்டெம்பர் ௴ 26௳யிலிருந்து அப்பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முன்னுரை

பொது ஜனப் பிரதிநிதிகள் சென்னை ராஜ்ய ஆட்சி முறையை மேற்கொண்டு இப்போது ஐந்தாண்டுகளுக்கு மேலாகிறது. நமது தேசத்தின் சரித்திரத்திலேயே இந்த ஐந்து வருஷ காலமும் ஒரு சோதனைக் கட்டமாகும். முற்கால ஆட்சி முறையின் சின்னங்கள், தற்கால மாறுதல்கள் காரணமாகத் தோன்றும் இன்னல்கள், வருங்கால நல்வாழ்வுக்குரிய பலமான அஸ்திவாரம் கோலவேண்டிய கடமை ஆகிய எல்லாவற்றையும், அரசாங்கம் ஏக காலத்தில் கவனிக்க வேண்டியதாயிற்று.

இத்தகைய சோதனைகளுக்கும் நிர்ப்பந்தங்களுக்குமிடையே, சர்க்கார் தங்கள் ஒரே லட்சியத்தை மறக்காமல் போற்றி வந்துள்ளனர். அதாவது, "எம கடன் மக்களுக்குப் பணிசெய்து கிடப்பதே" என்னும் உயர்ந்த கொள்கையை அவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். மக்களுடைய நன்மையைக் கோரியும், அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றவுமதான், ஜனப் பிரதிநிதிகள் அரசாங்க பதவியை வகித்து வருகின்றனர்.

எத்தனையோ காலமாக நாம் கண்டு கொண்டிருந்த இலட்சியக் கனவுகள், கடந்த ஐந்தாண்டுகளில் நனவாகி இருக்கின்றன. மதுவிலக்கு, ஜமீன்முறை நீக்கம், நீதி - நிர்வாகப் பிரிவினை ஆகிய சீர்திருத்தங்கள், நம்முடைய எதிர்கால சந்ததியாருக்கு மிகச் சிறந்த நற்பயன் அளிப்பதோடு, சமூக அமைப்பிலேயே ஒரு புரட்சியை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மூல சாதனக்குறைவினால் ஏற்பட்ட முடக்கம், மற்றும் எத்தனையோ பெரிய சங்கடங்களுக்கும் இடையே, அநேக அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளன. இத்திட்டங்கள் கஷ்டமான உணவு நிலைமையை ஓரளவு சமாளிக்க உதவுவதோடு, பொதுவாகப் பொருளாதாரத் துறையில் ஸ்திரமான நிலையையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த காரணமாயிருக்கின்றன.

பிரிட்டிஷார் தங்கள் ஆட்சி காலம் பூராவும் நீர்ப்பாசனத்துக்காகச் செலவு செய்த தொகைக்கு மேலேயே, நாம் கடந்த ஐந்தாண்டுகளில், அதன் பொருட்டு இந்த ராஜ்யத்தில் செலவிட்டிருக்கிறோம். 1945—46-ம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்த நீர்ப்பாசனச் செலவு, 1951–52-ம் வருஷத்தில், சர்க்காரின் வரவு செலவுத் திட்ட மதிப்பின்படி, 10 கோடி ரூபாய்க்கு மேலாகியுள்ளது. இப்போது நமது ராஜ்யத்தில் மொத்தம் 101 லட்சம் ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது.

தவிர, நமது சென்னை ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி இரு மடங்கு அதிகமாகியுள்ளது. மின்சார அபிவிருத்திக்கான ஐந்து வருஷத் திட்டத்தில் மூன்றில் இரு பங்கு பூர்த்தியாகி விட்டது. இதன் மூலம் சுமார் 1,600 கிராமங்களுக்கு மின்சாரம் சப்ளையாகிறது. கிராமங்களுக்கு மின்சார வசதி செய்துகொடுப்பதில் இந்தியா முழுவதிலும் சென்னை ராஜ்யமே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. 1945—46–ம் வருஷத்தில் மின்சாரத் துறையில் அரை கோடி ரூபாய்க்குக் கொஞ்சம் அதிகமாக மட்டும் சென்னை அரசாங்கத்தார் செலவிட்டனர். ஆனால், 1951—52-ம் ஆண்டிலோ, பட்ஜெட் மதிப்பின் பிரகாரம், ஒன்பது கோடி ரூபாய்க்குமேல் செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, ஐந்தாண்டுகளில், நீர்ப்பாசனத் துறையில் ஏறக்குறைய பத்து மடங்கும், மின்சாரத் துறையில் இருபது மடங்கும், அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது விளங்கும்.

இத்தனை சாதனைகளுக்கும் பொது ஜனங்களின் பூரண ஒத்துழைப்பே காரணமாயிருந்தது. சர்க்காருடன் மக்கள் மனமுவந்து ஒத்துழைத்ததால்தான், அநேக காரியங்களை நிறைவேற்றுவது சாத்தியமாயிற்று. ஆகவே, இவற்றை எல்லாம் சாதித்த பெருமை, நிச்சயமாக இந்த ராஜ்ய மக்களையே சார்ந்ததாகும். அதாவது பொது ஜனங்களாகிய உங்களுக்கே அப்பெருமை உரியதாகும்.

கடந்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்பட்ட க்ஷேமாபிவிருத்திகளை விளக்கும் வெளியீடுகளில், இப்புத்தகம் ஒன்றாகும். உங்கள் சர்க்கார் என்னென்ன செய்தார்கள் என்பதை இதன் மூலம் உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். இதை அறிந்து கொள்ளவேண்டிய உரிமையும், இதுபற்றித் தீர்ப்பளிக்கும் பொறுப்பும் உங்களுக்கே உண்டு.

பி. எஸ். குமாரசாமி ராஜா

அறிமுகம்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே

திருநெல்வேலி ஜில்லாவிலே கப்பலோட்டிய தமிழன் பிறந்தான். கற்சிலையும் உயிர்த்தெழப்பாடிய கவி பாரதி தோன்றினான். எப்பொழுதும் தமிழன் வீரனே என்பதை நிலைநாட்டினான் கட்டபொம்மு. தமிழன்னையே திருநெல்வேலியிலுள்ள பொதிகை மலைச்சாரலில்தான் பிறந்தாள் என்பது அறிஞர் கருத்து.

தாம்பரபரணி நதிதீரம் என்பதே திருநெல்வேலி ஜில்லாவுக்கு மகுடமான மற்றொரு பெயராகத் திகழ்கின்றது. அந் நதி அங்குள்ள தனது உப நதிகளையும் சேர்த்துக்கொண்டு நெல்லை ஜில்லாவின் வளத்தைச் சிறக்கச் செய்கிறது. பொதிகைச் சாரலில் 6,125 அடி உயரமுள்ள அகத்தியமலையில் அது உற்பத்தியாகிறது. பொதிகை உச்சியில் பொங்கிய நங்கை, குறிஞ்சி நிலக் குன்றுகளில் துள்ளி விளையாடி, முல்லையில் பாய்கிறாள். இந்தப் பதினைந்து மைல் தூரத்தில் அந் நதியில் பல பெரிய அருவிகள் இருக்கின்றன. வாண தீர்த்தம், கல்யாண

தீர்த்தம், அகத்திய தீர்த்தம் என்பவைகளே முக்கிய அருவிகள். முதலிரு அருவிகளுக்கு இடையேதான் இந் நதியின் வேகத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்தி, பாபநாசம் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. பொதிகை மலையின் அடிவாரத்தில் பாபநாசமென்ற தீர்த்தக் கட்டமிருக்கிறது. இங்கிருந்து சமதளத்தில் 60 மைல் ஓடி, இந்நதி மன்னார் குடாக்கடலில் சங்கமமாகிறது.

தேனருவித் தண்பொருநை

தாம்பரபரணி நதியின் இருகரைகளிலும் அடுத்தடுத்து சைவ வைஷ்ணவ ஸ்தலங்கள் அமைந்திருக்கக் காணலாம். இந்த க்ஷேத்திரங்கள் திருநெல்வேலி ஜில்லாவின் செழிப்புற்ற நகரங்களாகவும் திகழ்கின்றன. சொரிமுத்தையன் கோவில், பாபநாசம், அம்பாசமுத்திரம், கல்லிடைக் குறிச்சி, சேரன்மாதேவி, திருநெல்வேலி, குறுக்குத்துறை, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி முதலியவை அந்த க்ஷேத்திரங்களில் முக்கியமானவையாகும். தாம்பரபரணியின் உபநதியான சித்திரா நதியின் ஆரம்பத்தில் திருக்குற்றாலமும், தாம்பரபரணி கடலில் சங்கமிக்கும் இடத்திற்கு அருகில் திருச்செந்தூரும் காட்சியளிக்கின்றன.

திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜ்யத்தின் தென் கோடியிலுள்ளது. அழகிய நெல்வயல்களையே ஊரைச் சுற்றிலும் வேலியாகக் கொண்ட நெல்லையம்பதியே இதன் தலைநகர்.

தாம்பரபரணியும் அதன் முக்கிய உபநதிகளான மணிமுத்தாறு, வராகநதி, கடனா நதி, சித்தாறு முதலியவைகளும், தென்காசி, சங்கரநயினார்கோயில், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், தாலூகாக்களில் ஓடி அங்குள்ள நிலங்களை வளம்பெறச் செய்கின்றன. இவைதவிர, கோயில்பட்டி தாலூகாவில் வைப்பாறும், உப்போடையும், நாங்குனேரித் தாலூகாவில் பச்சையாறு, நம்பியாறு, கருமணியாறுகளும் பாய்கின்றன.

நிலவளம்

விவசாயம், கால்நடைகள் ஆகியவற்றின் அபிவிருத்தியை நவீன விஞ்ஞான முறையில் அமைத்திட அரசாங்கம் முயலும்.

—இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஷரத்து—48.

"ஒரு விருந்துவப்பலூட்டும் வழக்கம் போச்சோ?" என்றார் விருந்தாளி.

"வாரந்தோறும் வாங்கியுண்ணுங் காலமாச்சே" என்று அதே மூச்சில் பதில் கூறினார் வீட்டுக்காரர்.

இது ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு வீட்டில் நடந்த நிகழ்ச்சியல்ல. அநேகமாய் ராஜ்ய முழுதும் நடைபெறக் கூடியதாகவே இருக்கிறது. ரேஷன் காலம் என்பதைக் கூட உணராமல், விருந்துக்குப்போய் நின்றால் வேறென்ன பதில் கிடைக்கமுடியும்?

எவ்வளவுதான் சொந்தக்காரராயிருக்கட்டுமே, அரிசியிருந்தாலல்லவா அன்னம் படைக்கமுடியும்? போதுமான விளைச்சலில்லை, தானியக் கையிருப்பில்லை, இறக்குமதியுமில்லை. ஒருவர் வயிறார உண்டு மற்றவர் பட்டினியால் வாடுவதென்பதும் சமூக நியதியல்ல. அதனாலேயே

கிடைத்ததை எல்லோரும் பகிர்ந்து உண்போம் என்ற நோக்கில், சர்க்கார் உணவுப் பங்கீட்டை நடத்துகின்றனர். அளந்து கொடுக்கும் தானியம், கையிருப்பின் அளவுக்கேற்ப அவ்வப்போது மாறுவதும் உண்டு. இந்த நிலைமையை எல்லோருமே நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டியது அவசியம்.

1946-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 30-ம் தேதி பிற்பகல் சென்னை ராஜ்யத்தில் மக்கள் சர்க்கார் பதவியேற்றனர். அப்பொழுது நாட்டின் நிலைமை என்ன? இரண்டாவது உலக யுத்தம் முடிந்த சமயம் அது. யுத்தத்தின் விளைவால் ஏற்பட்டிருந்த கஷ்டங்கள் பல. உற்பத்தி தடைப்பட்டிருந்ததாலும், போக்குவரத்து சாதனக் குறைவாலும், உலகப் பொருளாதார நிலையின் காரணத்தாலும், பொதுவாகவே எல்லாப் பொருள்களின் விலைவாசிகளும் அதிகரித்திருந்தன. எங்கு பார்க்கினும் இல்லாமையும், விலைப் பளுவும், கள்ள மார்க்கெட்டும் தலைவிரித்தாடின.

நெருக்கடியைச் சமாளித்தல்

இந்த நிலையில் மக்கள் சர்க்கார் கையிலே ஆட்சியை ஒப்புவித்தனர் பிரிட்டிஷார். மக்கள் பிரதிநிதிகள் தங்கள் பொறுப்பையுணர்ந்தனர். முதலாவதாக உணவு நெருக்கடியைச் சமாளிக்க முற்பட்டனர். உள்நாட்டு உபரி தானியங்களைக் கொள்முதல் செய்தனர் இந்திய சர்க்காரின் உதவி கொண்டு வெளி நாடுகளிலிருந்து தானியங்களை இறக்குமதி செய்தார்கள். இதைக்கொண்டு மக்களுக்குப் பங்கீடு முறை மூலம் தானியங்களைப் பகிர்ந்து கொடுத்தனர். சோதனைபோன்று நான்கு வருஷங்களாய்த் தொடர்ந்து சென்னை ராஜ்யத்தில் பருவ மழையும் தவறி விட்டது. சில விடங்களில் அகால மழை பெய்தும், புயலடித்தும் பயிர்களை அழித்துச் சேதப்படுத்தின.

உணவு தானியத்தில் சென்னை ஏற்கெனவே பற்றாக் குறை ராஜ்யம். இந்திய சர்க்கார், உபரி ராஜ்யங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யும்

தானியங்களை, பற்றுக்குறை ராஜ்யங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கின்றனர். இந்த வகையில் மத்திய சர்க்கார் வருஷத்தில் 100 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறார்கள். ராஜ்யத்தின் கொள் முதலையும், இந்திய சர்க்காரின் உதவியையும் கொண்டுதான், ராஜ்யத்தின் உணவு தானியப் பங்கீடு முறை நிர்வகிக்கப்படுகிறது. அரசாங்கக் களஞ்சியங்களில் இருக்கும் கையிருப்புக்குத்தக்கபடி பங்கீட்டைக் குறைத்தும், அதிகரித்தும் நிர்ணயித்து விநியோகிக்கிறார்கள்.

சுமார் 25 லட்சம் ஜனத்தொகையுள்ள திருநெல்வேலி ஜில்லாவின் வருஷத்தேவை 3 லட்சம் டன் தானியங்கள். சாதாரணமாக ஜில்லாவின் உற்பத்தி 2 லட்சம் டன். எனவே, ஒரு லட்சம் டன் பற்றுக் குறையாகிறது. இக்குறையை ஈடு செய்வதற்குச் சென்ற நான்கு ஆண்டுகளாய் சுமார் 2 லட்சம் டன் தானியங்களை இந்த ஜில்லாவுக்கு, ராஜ்ய இறக்குமதியிலிருந்து சர்க்கார் உதவி செய்திருக்கின்றனர்.

இத்துடன் நெல்லை ஜில்லாவின் தானிய உற்பத்தியைப் பெருக்க சர்க்கார் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர்.

உழுதுண்டு வாழ்வோம்

பரதக் கண்டமே பொதுவாக விவசாயத்தை நம்பி வாழும் பூமி. எங்கு பார்க்கினும் நீர் நிலைகளும் நதி வளங்களும் நிறைந்துள்ளன. பாரதத் தாயின் 36 கோடி மக்களில் பெரும்பாலோர் விவசாயிகளே. எனினும் இங்கு நாட்டுக்குப் போதுமான தானிய உற்பத்தி இல்லாமலிருக்கிறது! காரணம், உணவு தானிய உற்பத்தியில் மக்களுக்கு ஊக்கக் குறைவு ஏற்பட்டிருப்பதுதான். லாபம் கிடைக்கும் நோக்கில் விவசாயிகள், வேர்க்கடலை, புகையிலை, பருத்தி, கரும்பு போன்ற வாணிபப் பயிர்களை நெல்லுக்குப் பதில் அதிக உற்பத்தி செய்ய முனைந்தனர். உணவு தானிய உற்பத்தி குறைந்தது. இதே சமயத்தில் தேசத்தில் ஜனத்தொகை அதிகரித்து வருகிறது. (1951-ம்

ஆண்டு ஜனக்கணக்குப்படி 100-க்கு 9.4 விகிதம் ஜனத் தொகை சென்ற பத்து ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது). ஒரு பக்கம் உற்பத்திக் குறைவு, பருவமழை குறைவு, முதலியவைகளால் தேவைக்கு வேண்டிய உணவு பொருள்கள் கிடைக்காதது; மற்ருெரு பக்கம் ஜனத் தொகை அதிகரிப்பு. இந்தக் காரணங்களால்தான் நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந் நிலையைத்தவிர்ப்பதற்கு இரண்டுவித முயற்சிகள் அவசியம். ஒன்று, நிலத்தின் மகசூலை அதிகமாகும்படிசெய்யவேண்டும். மற்ருென்று, உணவு தானிய உற்பத்தி விஸ்தீர்ணத்தைப் பெருக்கவேண்டும். சென்ற ஐந்து ஆண்டுகளாக இவ் விரண்டு துறைகளிலும் இந்திய சர்க்காரும் ராஜ்ய சர்க் காரும் வேண்டிய கவனம்செலுத்தி வருகிருர்கள்.

விவசாய முன்னேற்றம்

முதலாவதாக, ஏற்கெனவே இருக்கும் நீர்ப்பாசனத் துறைகளைச் செப்பனிட்டு நல்ல நிலைமையில் வைத்துக் கொள்ள மக்கள் சர்க்கார் முற்பட்டனர். ராஜ்யம் முழுவ திலுமுள்ள குள மராமத்து, கால்வாய் மராமத்து வேலை களைத் துவக்கினர். 7,000 கிணறுகள்வரை பழுது பார்ப்ப தற்கு பண உதவி செய்தனர். 3,600 பம்புகள் அமைத்து கிணறுகளிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் இறைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்தில் சுமார் 18,000 டன் பொறுக்கு வித்துகள் விவசாயிகளுக்கு விநி யோகிக்கப்படுகின்றன. 1949-50 வருஷத்தில் மட்டும், 52,500 டன் ரசாயன உரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷத்திற்கு 1,23,000 டன் உரம் விநியோகிக்கத் திட்டம் போட்டிருக்கிருர்கள். தரிசு நிலங்களைச் சாகு படிக்குக்கொண்டுவர ட்ராக்டர்கள் குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன.

கோயில்பட்டியிலிருந்து தென்காசி வரையில் உள்ள பிரதேசத்தில் வலைப்பின்னல்போன்று சிறிதும் பெரிது மான பல நதிகள் குறுக்கும் நெடுக்கும் ஓடுகின்றன.

அங்கேயுள்ள எல்லா நதிகளின் தண்ணீரையும் விவசாயத்துக்கு உபயோகிக்கிறார்கள். மழையில்லாத காலத்தில் தான் தண்ணீர் தட்டு ஏற்பட்டு விடுகிறது.

இந்த ஜில்லாவிலுள்ள நிலம் 27,76,422 ஏக்கர்கள். இதில் 3,05,406 ஏக்கர் காடுகள். 3,88,699 ஏக்கர் சாகுபடிக்குவராமலிருக்கின்றன. மேலும் தரிசுகளும், சாகுபடிக்கு லாயக்காக்க வேண்டியதுமாயுள்ளவை 10,97,420 ஏக்கர். இப்பொழுது சாகுபடியிலுள்ள விஸ்தீரணம் 9,84,897 ஏக்கர். இந்த நிலங்களில் ஆற்றுப் பாசனமில்லாதவைகளுக்குப் பல வானமாரிக்குளங்களும், ஏராளமான கிணறுகளும் இருக்கின்றன. நீர்ப்பாசன வசதியுள்ள நன்செய்களில் நெல், வாழை, கிழங்கு வகைகள், பூம்பயிர்கள் முதலியன பயிராகின்றன. தாம்பரபரணி பாசனத்தில் கார், பிசானம் ஆகிய இருபோகங்களிலும், சித்தாற்றுப் பாசனத்தில் பிசானம் மட்டிலும் நெல் விளைகிறது. மொத்தம் 3,61,140 ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிடப்படுகிறது. 2 லட்சம் ஏக்கரில் கம்பும், 90,000 ஏக்கரில் சோளமும், 10,000 ஏக்கரில் ராகியும் விளைகிறது. வாணிபப் பயிர்களில் முக்கியமாக பருத்தி சுமார் 2½ லட்சம் ஏக்கர் கரிசல் நிலத்தில் பயிராகிறது.

ஆராய்ச்சியும் அதிக பலனும்

சென்னை சர்க்கார் விவசாய இலாகாவைச்சேர்ந்த 12 டிமான்ஸ்ட்ரேட்டர்கள் இந்த ஜில்லாவில் வேலை செய்கிறார்கள். இந்த இலாகா திருநெல்வேலி ஜில்லாவில் அம்பாசமுத்திரத்தில் ஒரு அரிசி ஆராய்ச்சி சாலையையும், கோயில்பட்டியில் ஒரு விவசாய ஆராய்ச்சி நிலையத்தையும் அமைத்திருக்கிறது. இவைகளிலிருந்து சென்ற நான்கு வருஷங்களில் 2,400 டன் பொறுக்கு விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அபிவிருத்தி வித்துக்களால் 15 முதல் 20 சத விகிதம் வரை உற்பத்தி அதிகமாயிற்று. சாகுபடிக்குப் போதுமான உரம் கிடைக்காததால் பசுந்தழை உரத்தை உபயோகிக்கும்படி விவசாய

இலாகா அறிவித்தது. மேலும், குப்பை உரம், கடலைப் பிண்ணுக்கு, ரசாயன உரங்கள் இவைகளை உபயோகிக்கும்படி விவசாய இலாகா ஊக்கமளித்தது. இதன் மூலம் உற்பத்தி பெருகி வருகிறது.

விவசாயத்துக்கு வேண்டிய வித்துக்கள், உரங்கள், விவசாயக் கருவிகள் முதலியன வாங்குவதற்கு விவசாயிகளுக்கு 76,456 ரூபாய்வரை சர்க்கார் 'தக்காவி' கடன் கொடுத்திருக்கின்றனர். ஏழைகளாயுள்ள விவசாயிகளுக்கு உரமும் வித்துக்களும் இலவசமாய்க் கொடுத்திருக்கிறார்கள்.

புது கிணறுகள் வெட்டும் மானியத் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி ஜில்லாவுக்கு 47 லட்ச ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 6,675 புதுக்கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். 2,660 கிணறுகள் வெட்டப்பட்டுவருகின்றன. 687 பழைய கிணறுகள் செப்பனிடப்பட்டிருக்கின்றன.

நிலத்தின் வெள்ளாமையை அதிகப்படுத்துவதுடன் சாகுபடி விஸ்தீரணத்தையும் பெருக்கி வருகிறார்கள்.



இத் துறையில் ஒரு லட்சத்துக்கு மேல் மானியம் கொடுத்திருக்கிறார்கள். யந்திரக் கலப்பைகளை குறைந்த வாடகைக்குக் கொடுத்து உதவுகிறார்கள். மின்சாரப் பம்புகள் 'ஆயில் என்ஜின்கள்' வாடகைக்குக் கொடுக்கிறார்கள். வண்டிப் பட்டைகளாய் 1,000 டன்னும், அச்சுகள் 45 டன்னும் இதர சாமான்களாய் 50 டன்னும் இரும்பு, உருக்குகள் விநியோகித்திருக்கிறார்கள்.

இவைகளுக்கெல்லாம் மேலாக, விவசாயத்தில் மக்களை ஊக்குவிப்பதற்கென மற்றுமொரு முறை அனுஷ்டிக்கப் படுகிறது. ஜில்லாவிலேயே அதிக வெள்ளாமை கண்டு முதலெடுக்கிறவர்களுக்குப் பரிசு கொடுக்கும் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளனர். இது விவசாயிகளிடையே பெருத்த உற்சாகத்தை ஊட்டியிருக்கிறது. இந்த முயற்சிகளால் திருநெல்வேலி ஜில்லாவில் உணவுப் பயிர் சாகுபடி விஸ்தீரணம் 70,000 ஏக்கர் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

காலக் கோளாறு

மேலே கூறப்பட்ட அதிக உணவு உற்பத்தி ஏற்பாடுகள் ஜில்லாவின் பற்றுக்குறையைப் பெருமளவுக்குப் போக்கியிருக்கவேண்டும். ஆனால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. காரணம், இயற்கை செய்த மோசந்தான். சாதாரணமாக நெல்லை ஜில்லாவில் வருஷத்தில் தென்மேற்குப் பருவ மழை 3·4 அங்குலமும், வடகிழக்குப் பருவ மழை 20·8 அங்குலமும், கோடை மழை 6·2 அங்குலமும் சராசரி பெய்யும். வருஷ சராசரி 30·4 அங்குலம். அடியிற்கண்ட விவரத்தைப் பார்த்தால் சென்ற மூன்று வருஷங்களில் மழை எவ்வளவு குறைவாய்ப் பெய்திருக்கிறதென்பது விளங்கும்.

	1947–48.	1948–49.	1949–50.
தென்மேற்கு பருவமழை...	2·97	5·29	6·44
வடகிழக்கு பருவமழை ..	9·16	20·32	9·55
கோடை மழை	4·80	2·16	5·90
வருஷ மழை ...	16·93	27·77	21·89

இந்த நிலைமையில் மக்கள் சர்க்கார் பலவித அதிக உற்பத்தித் திட்டங்களை மேற்கொண்டதின் காரணமாகத் தான், உணவு நெருக்கடி இத்துடனாவது நிற்கிறதென்பது

னாமெல்லோரும் நன்கு அறிந்துகொள்ளவேண்டிய விஷய மாகும்.

கால்நடைச் செல்வம்

சென்னை ராஜ்யத்தின் கால்நடைகளையும், கோழி, வாத்துக்களையும் பெருக்க, சர்க்கார் பல முயற்சிகளைச் செய்து வருகின்றனர். நம்ராஜ்யத்தில் இரண்டு கோடிக்கு மேல் மாடுகளும், ஒரு கோடிக்குமேல் ஆடுகளும் இருக்கின்றன. இவைகளை உயர்ந்தரகக் கால்நடைகளாய் அபிவிருத்தி செய்ய ஏற்பாடு நடக்கிறது. சிந்தி, ஓங்கோல், காங்கேயம், ஹலிகார் முதலிய ரகங்களே சிறந்தவை. இவை களில் பொலிகாளைகளைப் பராமரித்து, கால்நடை இலாகா இந்த ரகங்களை அபிவிருத்தி செய்கின்றனர். செயற்கை முறையில் பசுக்களைக் கருத்தரிக்கச் செய்யவும் அந்த இலாகா வழி கண்டுபிடித்திருக்கிறது.

திருநெல்வேலி ஜில்லா கால்நடை ஆஸ்பத்திரியில் 2 காங்கேயம் பொலிகாளைகளும், ஒரு சிந்தியும் ஒரு முரா எருமையும் ரோட் ஐலன்ட் சிவப்பு கோழிகளும் வைத்திருக்கிறார்கள். கால்நடை இன அபிவிருத்திக்கு ஒவ்வொரு வருஷத்திலும் சர்க்கார் அதிகப் பணம் செலவு செய்துவருகின்றனர். ஜில்லாவில் மொத்தம் 60 பொலி காளைகள் இருக்கின்றன.

கால் நடைகளுக்குச் சிகிச்சை செய்வதற்காக ஜில்லா பூராவிலுமாக 10 ஆஸ்பத்திரிகளும், முதல் சிகிச்சை

ஸ்தாபனங்களும் இருக்கின்றன. கால்நடைகளுக்கு வைத்தியம் செய்யப் பயிற்சியளிக்கும் கல்லூரியில் அதிக மாணவர்களைச் சேர்த்து கால்நடை வைத்திய டாக்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த சர்க்கார் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்கிறார்கள்.

கடலோரக் கைத்தொழில்கள்

மீன் சாப்பிடுவதுமூலம் உணவு நெருக்கடிகளை வெகு வாய்த்தவிர்க்கலாம். மீனில் புரதச்சத்தும், வைட்டமின்கள் ஏ, பி, டியும் இருக்கின்றன. தவிர இரும்பு, சுண்ணும்பு, பாஸ்பரஸ் முதலிய சத்துக்களும் அதில் நிறைந்துள்ளன. எனவே அதிக அரிசி சாப்பிடுகிறவர்களின் உணவு சத்துக் குறைகளை நிவர்த்திக்கக் கூடியதாயிருக்கிறது மீன் உணவு.

மீன்பிடிக்கும் தொழிலைப் பலவிதத்திலும் அபிவிருத்தி செய்ய சென்னை சர்க்கார் மீன் இலாகா முயற்சிக்கிறது. மீன்பிடிப்பவர்களுக்குக் கூட்டுறவு சங்கங்களும், அவர்களின் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்களும் சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

மீன் இலாகாவின் அலுவல்களில் ஒரு விசேஷத் திட்டம், திருநெல்வேலி ஜில்லாவில் அமைந்திருக்கிறது. அதுதான் முத்துக் குளிப்பது. தூத்துக்குடியில் முத்து, சங்கு குளிப்பு காரியாலயமொன்றிருக்கிறது. சங்கு குளிப்பு அங்கு ஒரு நிரந்தரமான அலுவல். முத்துக் குளிப்பு மட்டும் பல வருஷங்களுக்கு ஒரு முறை நடைபெறும். முத்துக்குளிப்பு முகாம் ஒரு நவீன நகரமாகவே விளங்கும்.

இந்த ஜில்லாவின் கடற்கரை 85 மைல் நீளமுள்ளது. சென்னை ராஜ்யத்தின் இரண்டாவது பெரிய துறைமுகமாகக் கருதப்படும் தூத்துக்குடி இங்குதானிருக்கிறது. கப்பல் ஓட்டிய தமிழன் 'வ. உ. சி.' என்ற பெயரில் இன்று இங்கிருந்து கொளும்புக்குக் கப்பல் ஓடிக்கொண்டிருக்கிறது.

உப்பு உற்பத்தி

திருநெல்வேலியில் தூத்துக்குடி, காயல்பட்டினம், ஆறுமுகனேரி, குலசேகரன்பட்டினம் போன்ற விடங்களில் உப்பு விளைகிறது. ஆறுமுகனேரியில் 22 ஆயிரம் பாத்திகளுள்ள 6 உப்பளங்கள் இருக்கின்றன. அவைகளில் சிறப்பு வாய்ந்தது ராஜா அளம். இதில் 7 ஆயிரம் பாத்திகள் உள்ளன. இந்த அளத்தைப் பல முதலாளிகள் மத்திய சர்க்காரிடமிருந்து குத்தகைக்கு எடுத்திருந்தார்கள். இருபது, இருபது வருஷங்களாக சென்ற 1948-ம் வருஷ மார்ச்சுமீ 31-ம் தேதியுடன் மூன்றாவது 20 வருஷ குத்தகை முடிவடைந்தது.

அந்த அளத்தில் கூட்டுறவு முறையில் உப்பு உற்பத்தி செய்ய தங்களுக்கு அனுமதிவேண்டுமென்று ஆறுமுகனேரி உப்புத் தொழிலாளர் சங்கம் கோரியது. சென்னை சர்க்காரும் பலமாக சிபார்சு செய்தனர். பரீக்ஷார்த்தமாக 1,720 பாத்திகளை மத்திய சர்க்கார் கொடுத்திருக்கின்றனர். உப்புத் தொழிலாளர்களையே டைரக்டர்களாகக் கொண்ட கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. 492 அங்கத்தினர்கள் அதில் இருக்கிறார்கள். சுமார் 2½ வருஷ காலமாக உப்பு உற்பத்தி திறம்பட நடந்து வருகிறது. இம்மாதிரி சங்கத்திற்கு இந்தியாவிலேயே இது எடுத்துக்காட்டாகவிருக்கிறது. தூத்துக்குடியிலும் இதுபோன்ற ஒரு சங்கம் நிறுவப்பட்டுள்ளது. சர்க்கார் அந்தச் சங்கத்திற்கு 55 ஏக்கர் நிலம் உப்பளத்துக்காகக் கொடுத்திருக்கின்றனர்.

காடுகள் அபிவிருத்தி

சென்னை ராஜ்யத்தில் காடுகளை அபிவிருத்தி செய்வதை சர்க்கார் தங்கள் யுத்த பிற்காலத் திட்டங்களில் ஒன்றாய்க்கொண்டிருக்கின்றனர். சுமார், 3,000 சதுரமைல் பரப்புள்ள பஞ்சாயத்துக் காடுகளை சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறது. 20 வருஷத் திட்டம் ஒன்று வகுத்து, சவுக்கு சாகுபடி செய்ய நிச்சயித்திருக்கிறார்கள். மதுரை,

ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் குள உள்வாய்களிலும் மற்றுமுள்ள தரிசுகளிலுமாக 12,000 ஏக்கரில் சவுக்குப் பயிரிட சர்க்கார் ஓர் ஆரம்ப திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். நமது ராஜ்யத்துக்கு வேண்டிய வாட்டில் பட்டைகளை நீலகிரியிலும், பழனிமலையிலும் பயிராக்க ஏற்பாடு நடக்கிறது. காடுகளை அபிவிருத்தி செய்ய வனமஹோற்சவ காலங்களில் ஏராளமான மரங்களை நடுகிறார்கள். திருநெல்வேலியில் காட்டை ஒட்டியுள்ள கிராமவாசிகளுக்குக் காட்டிலாகா பலவித வசதிகளைச் செய்துகொடுக்கிறது. மழையில்லாத காலங்களில் விவசாயிகள் தங்கள் ஆடுமாடுகளைக் காடுகளில் இலவசமாய்ப் புல் மேய்த்துக்கொள்ளவும், கூப்புகளில் விவசாயத்துக்கு வேண்டிய மரக்கருவிகளைப் பெற்றுக்கொள்ளவும், பசுந்தழைகளை உரத்துக்காகக் காட்டிலிருந்து வெட்டிக்கொள்ளவும் வசதி யளித்திருக்கிறார்கள். மலைவாசிகளுக்கு நிலங்களும் கொடுக்கிறார்கள்.

இந்த வசதிகள் செய்வதாய் நீண்டகாலமாகவே கூறப்பட்டிருந்தபோதிலும், மக்கள் சர்க்கார் பதவிக்கு வந்த பிறகுதான் விவசாயிகள் இந்தச் சலுகைகளை அனுபவிக்க முடிந்தது.

நில உரிமைச் சீர்திருத்தம்

நாட்டின் விவசாய அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக இருந்துவந்த ஒரு பெருந்தடையை நம்மக்கள் சர்க்கார் இப்

பொழுது நீக்கியிருக்கின்றனர். இதுதான் ஜமீன்தாரி நிலச் சீர்திருத்தத் திட்டம்.

நிலவரி வசூல் செய்வதற்காக 'கும்பெனி' காலத்தில் ஒரு சிலர் நியமிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு விவசாயி களிடமிருந்து வரி வசூலிக்க உரிமை கிடைத்தது. நிலத்தை உழுது பயிர் செய்கிறவர்களுக்கு நிலத்தில் உரிமை கிடை யாது. இந்த ஏற்பாடுதான் ஜமீன்தாரி முறையாக உரு வெடுத்துப் போற்றி வளர்க்கப்பட்டு வந்தது. இதனால் ஜமீன்தாரி நிலங்களைப் பயிரிடுகிறவர்கள் அந்த நிலத்தில் யாதொரு பற்றும் உரிமையுமில்லாமல் வெறும் உழைப் பாளிகளாகவே இருந்தனர். இவர்களைக் கசக்கிப் பிழிந்து வரி வசூல் செய்யப்பட்டு வந்தது.

1939-ல் முதலாவது மக்கள் சர்க்கார் பதவியிலிருந்த காலத்திலேயே இந்த ஜமீன்தாரி முறையைச் சீர்படுத்தத் திட்டமிட்டார்கள். நிலைமையை விசாரிக்க, கமிட்டியும் நிறுவப்பட்டது. அந்தச் சீர்திருத்தத்தைப் பூர்த்தி செய்யு முன் மக்கள் சர்க்கார் பதவியினின்றும் விலக நேரிட்டது. அதன்பின் 1946-ல் மீண்டும் ஜனப் பிரதிநிதிகள் ஆட்சி அமைந்ததும், விட்டுப்போன இந்த பிரச்னையை எடுத்துக் கொண்டனர். ஜமீன் நில விவசாயிகளும் தங்கள் உரிமையைக் கோரி கிளர்ச்சி செய்தனர். ஜமீன்தாரி முறை யொழிப்பு, ரயத்துவாரி முறைக்கேற்ப ஜமீன் நிலவரியைக் குறைப்பது, நிலச்சொந்தக்காரருக்கும் குத்தகைதாருக்கு முள்ள தொடர்பை நிர்ணயிப்பது என்ற மூன்று சீர்திருத் தங்களும் மிகவும் அவசியமும் அவசரமுமாகுமென்று சர்க்கார் கருதினர்.

வரிச்சுமை குறைத்தல்

1947-ம் வருஷத்தில் எஸ்டேட் நிலவரிக் குறைப்பு சட்டம் நிறைவேறியது. அதன்பிரகாரம் ஜமீன், இனும் நிலங்களின் வரியை அருகிலுள்ள ரயத்துவாரி நிலவரியின் அளவுக்குக் குறைத்தார்கள். 1948-ல் ஜமீன்தாரி முறை சீர்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்தது. ஜமீன் பிரதேச

விவசாயிகளுக்கு இதர விவசாயிகளைப் போன்று நில உரிமையளிக்கப்பட்டது. 1950-ம் வருஷ முடிவில் சென்னை ராஜ்யத்தில் 2,810 ஜமீன் எஸ்டேட்டுகளும், 3,500 இனும் கிராமங்களும் ரயத்துவாரி முறைக்குக் கொண்டுவரப் பட்டன. விவசாயிகளுக்கு நன்மை செய்ய முற்பட்ட மக்கள் சர்க்கார் ஜமீன்தார்களின் நலத்தை ஒரேயடியாகப் புறக்கணித்து விடவில்லை. சுமார் 16 கோடி ரூபாய் வரை ஒதுக்கி அந்த ஜமீன்தார்களுக்கு நியாயமான நஷ்டஈடு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

ஜமீன்தாரி முறையொழிப்புச் சட்டத்தின்கீழ், திருநெல் வேலி ஜில்லாவிலுள்ள ஜமீன் எஸ்டேட்டுகளில் பெரும் பாலும் 1951-ம்ஞு ஜனவரிமீ 3வ ரயத்துவாரி முறைக்கு மாற்றப்பட்டன. மக்கள் சர்க்காரின் இந்தச் செய்கையால் ஜமீன் நில விவசாயிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. வரிக்குறைப்புச் சட்டத்தின்படி ஏக்கருக்கு 84 ரூபாயாயிருந்ததை 22 ரூபாயாகவும், 30 ரூபாயை 7 ரூபாயாகவும் குறைத்திருக்கின்றனர். இதனால் விவசாயி களின் வரிச்சுமை எவ்வளவு தூரம் இறங்கியிருக்கிறது என்பது விளங்கும். ஜமீன் விவசாயிகளின் நெடு நாளைய அபிலாஷை இப்போது நிறைவேறிவிட்டது.

பொது நல வசதிகள்

மழையையே எதிர்பார்த்து நிற்க வேண்டிய புன்செய் நிலங்களுக்கு, நீர் நிலைகளின் மூலம் பாசன வசதிகளை ஏற்படுத்தினால், நாட்டின் வளம பன்மடங்கு பெருகுவதோடு அம் முயற்சியில் ஈடுபடுவோருக்கு அழியாப் புகழும் உண்டாகும்.

புறநானூறு

18-ம பாட்டின கருதது.

ஆதாய முண்டானால்தான் யாரும் மூல தனம் போட்டு ஒரு தொழிலை ஆரம்பிக்க முயல்வார்கள். முன்னிருந்த சர்க்காரின் கொள்கையும் அப்படியே இருந்துவந்தது. போதுமான லாபங்கிடையாதென்ற காரணத்தால், பல நீர்ப்பாசனத் திட்டங்கள் பரிசீலனைக் கட்டத்திலேயே நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

மக்கள் சர்க்கார் பதவிக்கு வந்ததும், அந்த வர்த்தக லாப முறைக் கொள்கையைக் கைவிட்டனர். லாபமோ, நஷ்டமோ, மக்களின் க்ஷேம நலத்துக்கு அனுகூலமாயிருக்குமானால், அந்தத் திட்டத்தை உடனே நிறைவேற்றத் தொடங்க சர்க்கார் தயங்கவில்லை. நீர்ப்பாசன அபி


தேசியப் பெரியோர் பிறப்பிடம்
தூத்துக்குடியில் கப்பல்
மாணவர் படைப்பயிற்சி
வ. உ. சி. கல்லூரி
தென்காசிக் கோயில்



CONNEMARA PUBLIC LIBRARY
16 FEB 1952
MADRAS

திருச்சீரலைவாய் முருகன் கோயில்

புதிய பிரசவ ஆஸ்பத்திரி—திருச்செந்தூர்

ரஸ்தா வசதிகள்

காயல்பட்டினம் முதலான 11 கிராமங்களுக்கு தாம்பரவருணி நீரளிக்கும் திட்டம்

மின்சார சக்தி அளிக்கப்பட்டிருக்கிறது. வருஷத்தில் 62 லட்சம் யூனிட்டுகளுக்குமேல் செலவாகிறது. 89 தொழிற் சாலைகள் மின்சார சக்தி கொண்டு இயங்குகின்றன. கோயில்பட்டி தாலூகாவில், முக்கியமாய் பஞ்சடிக்கும் தொழிற்சாலைகள் மின்சாரம் உபயோகிக்கின்றன.

நமது மக்கள் சர்க்கார் விவசாயத்துக்கு மின்சார சக்தியை வேண்டுமட்டும் விநியோகம் செய்ய பெரிதும் சிரத்தை எடுத்து வருகிறார்கள். 1946 முதல் 50 முடிய, 154 விவசாய அலுவல்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1950–51-ஆம் வருஷத்தில் பல விஸ்தரிப்பு வேலைகளையும் சர்க்கார் நடத்தியுள்ளனர். தென்காசித் தாலூகாவில் கடையநல்லூர், இடகால், நயினார் அகரம் விஸ்தரிப்புக்கு 2,24,217 ரூபாயும், கோயில் பட்டி தாலூகாவில் இளயரசநேந்தல் விஸ்தரிப்புக்கு 1,78,526 ரூபாயும், கடம்பூர், சின்னமணியாச்சி விஸ்தரிப்புக்கு 3,16,155 ரூபாயும் சர்க்கார் செலவு செய்திருக்கிறார்கள். இந்த விஸ்தரிப்பு முழுதும் விவசாயத்துக்கு உதவியளிக்கும் முறையில்தான் செய்யப்படுகிறது. இன்னும் பல விஸ்தரிப்புத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. மின்சா வசதிகள் அளிக்கப்பட்ட கிராமங்களின் தோற்றமே தற்போது முற்றிலும் மாறி யிருக்கிறது.



மேலும், திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், நாங்குனேரி தாலூகாவிலுள்ள கிராமங்களுக்கும், சுரண்டை, சுந்தர பாண்டியபுரம் முதலிய கிராமங்களுக்கும் மின்சார

சக்தியை விஸ்தரிப்பதற்கு நமது சர்க்கார் கீழேகண்டபடி பணம் செலவுசெய்ய அனுமதியளித்திருக்கிறார்கள்.

	ரூபாய்.
திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் விஸ்தரிப்பு.	45,74,000
நாங்குனேரி தாலூகா விஸ்தரிப்பு ...	42,53,000
சுரண்டை, சுந்தரபாண்டியபுரம் விஸ்தரிப்பு	11,48,000

சென்னை ராஜ்யத்தின் மின்சார உற்பத்தி விநியோகத்தில் பொதுவாய் நம் சர்க்கார் மிகுந்த சிரத்தை காட்டுகிறார்கள். ராஜ்யத்திலுள்ள மின்சார உற்பத்தி விநியோக வேலைகளைப் பூராவும் சர்க்காரே நடத்தவேண்டுமென்ற கொள்கையை அவர்கள் கொண்டுள்ளனர். அந்த நோக்கத்தில் சென்னை நகரிலுள்ள பெரிய மின்சார உற்பத்தி ஸ்தாபனமான சென்னை மின்சார சப்ளை கார்ப்பரேஷனை சர்க்கார் 1947-ம் ஆகஸ்ட்டு மீ 29உ-யில் விலைக்கு வாங்கினர். மற்றும் ராஜயத்திலுள்ள மின்சார உற்பத்தி நிலையங்களை சர்க்கார் எடுத்துக்கொள்வதற்கு ஐந்து வருஷத் திட்டமொன்று வகுத்திருக்கின்றனர்.

தற்போது சென்னை ராஜ்யத்தில் பைக்காரா, மேட்டூர், பாபநாசம் ஆகிய ஜல உதவிகொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களும், சென்னையில் நீராவி உதவி கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையமும், மற்றும் பல உப நிலையங்களும் இருக்கின்றன. மொத்தம் ராஜ்யத்தில் 7,500 மைல் நீளம் மின்சார விநியோகக் கம்பிகள் அமைத்திருக்கிறார்கள். 164,000 கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தியாகிறது. 1946-ம் இருந்த மின்சார உற்பத்தி இப்பொழுது இரட்டித்திருக்கிறது.

சர்க்காரிடமிருந்து மின்சார சக்தியைப்பெற்று உபயோகிக்கும் கைத்தொழில்களில், பஞ்சாலைகள், சிமெண்டு தொழிற்சாலைகள், ரயில்வே தொழிற்சாலைகள், கப்பல் கட்டும் ஸ்தாபனங்கள் ஆகியன முக்கியமானவை. உற்பத்தியாகும் மின்சார சக்தியில் 80 சத விகிதம் விவசாயத்துக்கும் கைத்தொழில்களுக்கும் உபயோகிக்கப் படுகிறது. சென்னை சர்க்கார் இதுவரை மின்சார

உற்பத்தி சம்பந்தமாய் 15 கோடி ரூபாய்வரை மூலதனம் போட்டிருக்கிறார்கள். ராஜ்யத்திலுள்ள மின்சார உற்பத்தி ஸ்தாபனங்களை தேசீய மயமாக்குவதற்கு சர்க்கார் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றனர்.

மக்கள் சர்க்காரின் புது மின்சார உற்பத்தித் திட்டங்களான மச்கந்த், மொய்யாறு, துங்கபத்திரா, மேகதாது, பெரியாறு முதலியவை நிறைவேற்றப்பட்ட பிறகு, நம் ராஜ்யத்தின் மின்சார விநியோகம் பன்மடங்கு பெருகு மென்பதில் ஐயமில்லை.

போக்குவரத்து வசதிகள்

1946-ம்வருஷ ஏப்ரல் மாதத்தில் சாலை இலாகா ஒன்றை நம் சர்க்கார் அமைத்தனர். ராஜ்யத்திலுள்ள ரஸ்தாக்களை, தேசீய பெருஞ் சாலைகள் (2,049 மைல்), ராஜ்ய பெருஞ் சாலைகள் (3,069), ஜில்லா போர்டு பெரிய ரஸ்தாக்கள் (15,055 மைல்), இதர ரஸ்தாக்கள் (7,968 மைல்), கிராம பாட்டைகள் (8,822 மைல்) எனப் பிரித்தார்கள். தேசீய பெருஞ்சாலைகளை இந்திய சர்க்காரின் நிதியைக்கொண்டு ராஜ்ய சாலை இலாகா நிர்வகிக்குமென்றும், இதர ரோடுகளும் பாட்டைகளும் ராஜ்ய நிதியால் நிர்வகிக்கப்படுமென்றும் நிர்ணயித்தார்கள். ஜில்லா போர்டு, கிராம ரஸ்தாக்களுக்கு ஓரளவு பண உதவிசெய்யும்.



சென்னை ராஜ்யத்திற்கு 64 கோடி ரூபாய் செலவில்

ரஸ்தா போட, 25 வருஷத்திட்டமொன்று வகுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் பூர்த்தியானால், நம் ராஜ்யத்திலுள்ள ரஸ்தாக்களின் மொத்த நீளம் 55,000 மைல்களாகும். அநேகமாய் எல்லா கிராமங்களும் பாட்டைகளால் இணைக்கப்பட்டுவிடும். முதலாவது ஐந்து வருஷத் திட்டத்தில் 1947 முதல் 52 வரை 8·7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, வேலை நடக்கிறது. ஜனத்தொகை 500-க்கு அதிகமாயுள்ள கிராமங்கள் நம் ராஜ்யத்தில் 23,700 இருக்கின்றன. அதில் 11,600 கிராமங்களுக்கு ரஸ்தா வசதிகளுள்ளன. மற்றவைகளுக்கு ரஸ்தா அமைக்கவேண்டும்.

திருநெல்வேலி ஜில்லாவில் முக்கிய துறைமுகம் தூத்துக்குடி. அது பெரிய வியாபார ஸ்தலங்களில் ஒன்று. முனிசிபல் பட்டினம். அங்குள்ள வியாபாரிகள் எல்லோருக்குமே அநேகமாய் கொளும்பு வியாபாரத்தில் சம்பந்தமிருக்கும். அவர்கள் கொளும்புக்குப் போகும்போதும் வரும்போதும், கப்பல் திருச்செந்தூருக்கு எதிரேயுள்ள சமயத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியை வணங்கி வழிபடுவார்கள். செந்தூரான் துணை என்றே அவர்களுடைய வரவு செலவு கணக்கை ஆரம்பிப்பார்கள். அவ் வியாபாரிகள் தூத்துக்குடியிலிருந்து வருஷத்துக்கு ஒரு முறையாவது திருச்செந்தூர் சென்று முருகனைத் தரிசிப்பது வழக்கம். மாதந் தோறும் செல்வாருமுண்டு. தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூர், நேர் தெற்கே 13 மைல் தூரத்திலுள்ளது. அங்கே போவதற்கு, தூத்துக்குடியிலிருந்து தென் மேற்கே 24 மைல் தூரத்திலிருக்கும் ஸ்ரீவைகுண்டத்திற்குச் சென்று, பிறகு அங்கிருந்து 18 மைல் தென் கிழக்கேபோய் திருச்செந்தூரை அடையவேண்டும். இதுதான் இப்பொழுதுள்ள குறைந்த நீள ரஸ்தா பாதை.

மகத்தான சேவை

• இது சம்பந்தமாய் மக்களின் கஷ்டத்தை நிவர்த்திக்கும் நோக்கத்தில், பொதுஜன சர்க்கார் ஒரு மகத்தான சேவையைச்செய்ய முற்பட்டிருக்கிறார்கள். தூத்துக்குடியிலிருந்து

கடற்கரையோரமாகவே திருச்செந்தூருக்கு ஒரு ரஸ்தாவை யமைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ரஸ்தாவுக்கு நான்கு லட்ச ரூபாய் செலவு மதிப்பிடப்பட்டிருக்கிறது. ரஸ்தா வேலையும் துரிதமாய் நடந்து வருகிறது. இந்தப் புது ரஸ்தா தாம்பரபரணி ஆற்றைக் கடக்குமிடத்தில் ஆறு லட்ச ரூபாய் செலவில் பாலங்கட்ட திட்டமிட்டிருக்கிறது.

மேலும், ஜில்லா ரோடுகளில் சிறிது சிறிதாய்ப் பல சீர் திருத்தங்களை சர்க்கார் செய்து வருகின்றனர். தூத்துக்குடி, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம் இவ்விடங்களுக் கருகில் சுமார் 10 மைல் நீள ரஸ்தாக்களுக்கு 5½ லட்ச ரூபாய் செலவில் சிமென்டு போட்டிருக்கிறார்கள். மற்றும் சில இடங்களில் 20,000 ரூபாய் செலவில் தார் ரோடு போட்டிருக்கிறார்கள்.

கிராம ரஸ்தாக்கள்

அநேக கிராம பாட்டைகளும் புதிதாய் அமைக்கப்படு கின்றன. ஏற்கெனவே இருந்த ரஸ்தாக்களைக் கப்பி ரோடு களாய் அபிவிருத்தி செய்தும் வருகின்றனர். ரஸ்தாக்களில் அவசியமாயுள்ள நதிகளின்மேல் பாலங்கள் கட்டுகிறார்கள். சாலை இலாகா ஆரம்பித்த சொற்ப காலத்திற்குள், மக்களுக்குப் போக்குவரத்துக்கான சௌகரியங்களை ஏராளமாய்ச் செய்து கொடுத்திருக்கிறது. இவற்றில் கிராம பாட்டைகள் மிகவும் முக்கியமானவையாகும். சர்க்கார் பண உதவி கொண்டு மூன்று லட்ச ரூபாய் செலவில் 40 மைல் நீளத்திற்கு கிராம ரஸ்தாக்கள் போட்டிருக்கிறார்கள். ஐந்து லட்ச ரூபாய் ஒதுக்கி, 80 மைல் நீளத்தில் புதிய சாலைகள் அமைக்க வேலை நடந்து வருகிறது. (இவற்றின் விவரம் இறுதியில் தனியே கொடுக்கப்பட்டிருக்கிறது.)

கல்வி மறுமலர்ச்சி

இந்த அரசியல் அமைப்புச் சட்டம் அமுல் நடக்கத் தொடங்கிய பத்து வருஷ காலத்திற்குள், எல்லாக் குழந்தைகளுக்கும் பதினான்கு வயது முடியும் வரையில் இலவசக் கட்டாயக் கல்வி போதிக்க அரசாங்கம் முயலும்.

—இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்
ஷரத்து—45

கல்விக்குள்ள பெருமை என்றுமுளது. கல்வியைத் தெய்வமாய்த் தொழுவதன்றோ தமிழர் மரபு? சிறிது காலம் மேல்நாட்டு நாகரீகம் இங்கும் தாண்டவமாடியபோதிலும், நாம் சுதந்திரமடைந்ததும் மங்கிக்கிடந்த நம் பண்புகள் ஒவ்வொன்றாய் ஒளிபெறுகின்றன.

மொழி வளர்ச்சிக்கு நம் சர்க்கார் முழு ஆதரவு காட்டுகின்றனர். கலைக் களஞ்சியங்கள் தொகுக்கப்படுகின்றன. இதற்கு முதல் தவணையாக நம் சர்க்கார் 5 லட்ச ரூபாய் அனுமதித்திருக்கிறார்கள். சென்னை புராதனக் கலை நூல் நிலையம், தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையம் இவ்விரண்டிலுமுள்ள கையெழுத்துப் பிரதிகளை அச்சிட, ஆரம்பத்தில் ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு

வருஷத்திலும் வெளியிடப்படும் உயர்ந்த தமிழ்ப் புத்தகங்களுக்குப் பரிசளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

மொழி வளர்ச்சியில் ஆர்வம்

எல்லாவற்றிற்கும் மேலாக, புலவர் போற்றுதலைப் புதுப்பித்து, மக்கள் சர்க்கார் பெரும் புகழீட்டியுள்ளனர். சென்னையின் பிரதேச மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மற்றும் சமஸ்கிருதம் ஆகியவைகளில் ஆஸ்தான கவிகளை நியமித்திருக்கிறார்கள். கவி பாரதியை உயிருள்ளபோது போற்றும் பாக்கியம் தமிழர்களுக்குக் கிட்டாது போனாலும், இப்பொழுதாவது அவருடைய அரிய நூல்களின் கையெழுத்துப் பிரதிகளை வாங்கி அச்சிட்டு வெளியிட சர்க்கார் ஏற்பாடு செய்திருப்பது பாராட்டற்பாலது.

ஆதாரக் கல்விக்கு அஸ்திவாரம்

அந்நிய ஆட்சியின் கீழ் அனுஷ்டிக்கப்பட்ட கல்வி முறையை நம் நாட்டிற்கு ஏற்றாற்போல் மாற்றியமைக்க வேண்டியது மிகவும் அவசியமென்று மக்கள் சர்க்கார் உணர்ந்தனர். நாட்டின் ஜனநாயக வளர்ச்சிக்கும், வகுப்புவாத பேதங்கள் ஒழியவும், மக்களின் பொறுப்புணர்ச்சி பெருகவும், தேசத்தின் க்ஷேமநல அபிவிருத்திக்குமான கல்வி முறையைப் புகுத்தவேண்டுமென்று அவர்கள் கருதினர். பதவி ஏற்றது முதலே நம் சர்க்கார் இம் முயற்சியில் ஈடுபட்டார்கள். 44 கோடி ரூபாய் செலவில் 15 வருஷத் திட்டமொன்று வகுத்தார்கள். அதன் மூலம் நாட்டின் கல்வித் திட்டத்தை மாற்றியமைப்பதுடன், நாட்டிலுள்ளோர் யாவரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாயிருக்க வேண்டுமென்றும் அவர்கள் திட்டமிட்டனர்.

நாட்டின் பிதாவான மகாத்மா நம் சமுதாயத்துக்கு ஈந்த வரப்பிரசாதங்களுக்குள் சிறந்தது, ஆதாரக்கல்வி முறை என்று சொல்லலாம். தேசியச் சூழ்நிலைகளின் உதவி கொண்டு, நடைமுறை அனுபவ சாதனங்களினால் விஷயங்

களை மாணவர்களுக்குப் போதிப்பதே இந்த முறையின் உயர்ந்த லட்சியமாகும். குழந்தைகளின் ஆரம்பக்கல்வியை ஆதாரக்கல்வி முறைக்குக் கொண்டுவரத்தான் சர்க்கார் திட்டம் போட்டு வேலை நடத்துகின்றனர். தற்சமயம் ராஜ்யத்திலுள்ள பயிற்சிப் பள்ளிக்கூடங்களை படிப்படியாக ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிகளாய் மாற்றி வருகிறார்கள். புது பயிற்சி சாலைகளும் நிறுவி வருகிறார்கள். இப்பொழுது சென்னை ராஜ்யத்தில் சுமார் 4,000-க்கு மேற்பட்டவர்கள் 48 பள்ளிக்கூடங்களில் பயிற்சி பெறுகிறார்கள். நம் ராஜ்யத்தில் ஆதாரக் கல்வி ஆரம்பப் பாடசாலைகள் இப்பொழுது 348 இருக்கின்றன. ராஜ்யத்திலுள்ள 39,000 ஆரம்பக் கல்விப் பள்ளிகளையும், ஆதாரக் கல்விச் சாலைகளாகக் கூடியசீக்கிரம் மாற்றுவது சர்க்காரின் முக்கிய கொள்கையாயிருக்கிறது. கட்டாய இலவசக் கல்வித் திட்டத்தை விஸ்தரிப்பதற்காக சர்க்கார் இவ் வருஷத்தில் 5 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.

நடுத்தரக் கல்வி

கல்வி உலகில் உயர்தரப் பள்ளிக்கூடப் படிப்பு ஒரு நடுத்தரக் கட்டமாய் யமைந்துள்ளது. இந்தத் திட்டம் சம்பிரதாய ரீதியானதுதா னென்றும், வெறும் ஏட்டுச் சுரைக்காயா யிருக்கிறதென்றும், 'எஸ். எஸ். எல். ஸி.' படிப்பை முடித்த ஒரு மாணவனின் எதிர் காலம் அவன் பெற்றோருக்கு ஒரு பிரச்னையாகவே இருந்து வருகிறதென்றும் சர்க்கார் கண்டனர். இந்த நிலையைப் போக்கும்



நோக்கத்தில், உயர்தரப்பள்ளிப் படிப்பில் ஒரு மாறுதலைச் செய்ய அவர்கள் முற்பட்டனர். இத் திருத்த முறையில், கல்லூரிப் படிப்புக்குப் போகாதவர்கள் ஒரு தொழிலைக் கற்றுக்கொள்வதற்கு வசதியளிக்கப்பட்டிருக்கிறது. மாண வர்கள் எதையும் சுலபமாய்க் கற்றுக்கொள்வதற்காக எல்லாப் பாடங்களும் பிரதேசப் பாஷையிலேயே போதிக்கப் படுகின்றன. ஆங்கிலத்துக்கு இரண்டாவது ஸ்தானமே கொடுத்தார்கள். தேசிய பாஷை கற்க விரும்புகிறவர் களுக்கு ஹிந்தி போதிக்கவும் வசதி செய்துள்ளார்கள். 1945-ம் வருஷத்தில் இருந்த உயர்தரப் பள்ளிக்கூடங் களின் எண்ணிக்கை இப்பொழுது சர்க்காரின் முயற்சி யால் இரட்டித்திருக்கிறது. ஆண்களுக்கு 599 பாடசாலை களும், பெண்களுக்கு 146 பாடசாலைகளும் இருந்தன. இப் பொழுது 1,130 ஆண் பாடசாலைகளும் 224 பெண் பாட சாலைகளுமாக அதிகரித்திருக்கின்றன. உயர்தரப் பள்ளிப் படிப்பில் தொழில் கல்விக்கெனப் பிரிக்கும் முறை 1948–49-ம்ஆு முதல் அமுல் செய்யப்படுகிறது. மொத்தம் 140 பள்ளிக்கூடங்களில் தொழில் கல்வி போதிக்கிறார்கள். நிர்வாக முறை, கைத்தொழில் பயிற்சிக்கு அஸ்திவாரம், மனைமாட்சி முதலிய பாடங்கள் முக்கியமாய் தற்போது சொல்லித்தரப்படுகின்றன.

கல்லூரிக் கல்வி

உயர்தரக் கல்வி கற்க விரும்பும் மாணவர்களின் வசதியை முன்னிட்டு, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு கலாசாலையாவது அமைக்கவேண்டுமென்பது நம் சர்க்கா ரின் நோக்கம். பதினேழு புதிய கலாசாலைகள் துவக்க சர்க்கார் ஆதரவளித்துள்ளனர். தற்போது கலாசாலையே இல்லாத ஜில்லா நீலகிரி ஒன்றுதான். காலக்கிரமத்தில் அங்கும் ஒரு கலாசாலை நிறுவப்படும். பாளையங்கோட்டை யிலுள்ள ஸாரா டக்கர் பெண்கள் கல்லூரி பெண் கல்வி யில் நல்ல முன்னேற்றமளித்து வருகிறது. ஏற்கனவே இந்த ஜில்லாவில் மூன்று கலாசாலைகள் இருந்தன. 1946-ம்

வருஷத்திற்குப்பின் தூத்துக்குடியில் செயின்ட் மேரீஸ் கலாசாலையும், பாளையங்கோட்டையில் செயின்ட் சேவியர் பயிற்சிக் கல்லூரியும் சர்க்கார் உதவிகொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. தூத்துக்குடியில் வ. உ. சி. கல்லூரி ஒன்று இவ் வருஷம் ஆரம்பமாயிருக்கிறது. தற்போது திருநெல்வேலி ஜில்லாவில் ஐந்து கலாசாலைகள் இருக்கின்றன.

ஆரம்ப கல்வி பள்ளிக்கூடங்கள் இருமடங்காகி யிருக்கின்றன. 1946-ல் 1,822 ஆரம்பப்பள்ளிகளில் 2 லட்சம் மாணவர்கள் வரை படித்தார்கள். இப்பொழுது 2,300 பள்ளிகள் இருக்கின்றன. 2½ லட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள். 20 ஆதாரக் கல்விச்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் சர்க்கார் பதவிக்கு வந்த பிறகு இந்த ஜில்லாவில் 14 உயர்தரப் பள்ளிக்கூடங்கள் சர்க்கார் உதவிபெற்று நடக்கின்றன. சுமார் 5,000 அதிக மாணவர்களுக்கு இதன்மூலம் படிப்பு வசதி ஏற்பட்டிருக்கிறது. திருநெல்வேலியில் நான்கு ஆசிரியர் பயிற்சி பாடசாலைகள் இருக்கின்றன. 350 பேர் வரை ஆசிரியர் பயிற்சி பெற்று வருகிறார்கள். நடுத்தரக் கல்வி பள்ளிக்கூடத்தில் தொழில் கல்வி போதிப்பது சம்பந்தமாய், திருநெல்வேலி கால்டுவெல் ஹைஸ்கூல், பத்தமடை ஹைஸ்கூல், ஸ்ரீவைகுண்டம் குமரகுருபர சுவாமிகள் ஹைஸ்கூல் இவற்றில் எஞ்ஜினீயரிங் பாடமும், வடக்கன்குளம் ஹைஸ்கூல், ஸ்ரீவைகுண்டம் ஹைஸ்கூல் இரண்டிலும் நிர்வாக முறை பாடமும், கோயில்பட்டி போர்டு ஹைஸ்கூலில் விவசாய பாடமும், அம்பாசமுத்திரம் ஹைஸ்கூலிலும், இடையன்குடி ஹைஸ்கூலிலும் போதனாப்பயிற்சி முறை பாடமும் கற்பிக்கப்படுகின்றன.

பெண்களின் கல்வி முன்னேற்றத்திலும், எழுத்தறிவின்மையை நாட்டை விட்டோட்டுவதிலும், நம் சர்க்கார் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர். நம் ராஜ்யத்தில் 1946–47-ம் வருஷத்தில் 36,148 ஆரம்பப் பள்ளிக்கூடங்களும், 901 உயர்தரப் பாடசாலைகளும், 78 கலாசாலைகளும் இருந்தன. தற்போது அவைகள் முறையே

37,812-ம் 1,247-ம் 98 மாக அதிகரித்திருக்கின்றன. ராஜ்யத்தின் கல்வி அபிவிருத்திக்கு 1946–47-ல் சர்க்கார் 5·9 கோடி ரூபாய் செலவு செய்தனர். அந்த செலவு 1950–51-ல் ரூ. 10·3 கோடியாகவும், 1951–52-ல் ரூ. 11·39 கோடியாகவும் அதிகப்பட்டிருக்கிறது.

முதியோர் கல்வி

ஜனநாயகம் நிலைக்கவேண்டுமானால் ஒவ்வொருவரும் கல்வி கற்கவேண்டியது அவசியம். எழுதப்படிக்கத் தெரியாதவரே இந் நாட்டிலில்லை என்ற நிலைமை ஏற்படவேண்டும். அதற்குக் குழந்தைகளுக்கு மட்டும் கல்வி வசதி செய்து விட்டால் போதாது. முதியவர்களும் கல்வி கற்கும்படி செய்யவேண்டும். இந்த வேலையை இதுவரை சமூக சீர்திருத்தவாதிகளே கவனித்து வந்தனர். 1948–49-ம் வருஷத்தில் முதியோர் கல்விக்கான திட்டமொன்றை சர்க்கார் வகுத்தனர். எழுத்தறிவுக்கென கல்வி நிலையங்கள் ஸ்தாபித்தல், முதியோர் கல்வி போதனுமுறை பயிற்சியளித்தல், முதியோர்களுக்கு கிராமக் கல்லூரிகள் ஆரம்பித்தல், காண்பதின் மூலம் கற்றல் போன்ற வழிகளிலே வயது வந்தவர்களுக்கு பிரஜா உரிமை, சமூகக் கடமையாகிய விஷயங்களை அறிவுறுத்தல் முதலியன இத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இத் திட்டத்தை அமுல் செய்வதற்கு இந்திய சர்க்காரும் மானியம் அளிக்கின்றனர்.

தற்சமயம் நம் ராஜ்யத்தில் முதியோர் பள்ளிக்கூடங்கள் 1,166 இருக்கின்றன. சுமார் 24,000 பேர் படிக்கிறார்கள். ஆண்களுக்கு 7-ம், பெண்களுக்கு 3-மாக மொத்தம் 10 கிராமக் கல்லூரிகள் நடைபெறுகின்றன. திருநெல்வேலி ஜில்லாவில் 50 முதியோர் கல்விச் சாலைகள் உள்ளன.

தொழில் நுணுக்கப் பயிற்சி

மக்கள் சர்க்கார் பதவியேற்றதும் அவர்களுடைய முதல் கடமைகளில் தொழிற் கல்வி புனருத்தாரணமும் ஒன்ருய்

அமைந்தது. ராஜ்ய கைத்தொழில் அபிவிருத்திக்குத் தகுந்த முறையில், சென்ற ஐந்து ஆண்டுகளில் நம் சர்க்கார் தொழில் நுணுக்கப் பயிற்சியளிக்கும் பணியில் முனைந்தனர். பயிற்சி பெற்ற அறிவுள்ள தொழிலாளர்களே நாட்டின் பொருளாதாரப் படகுக்குச் சுக்கானாக அமைகிறார்கள். அவர்களின் தொகையைப் பெருக்குவதன் மூலந்தான், நாட்டின் கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய முடியுமென்று நம் சர்க்கார் உணர்ந்தனர்.

பல்தொழிற் பயிற்சியளிக்கும் ஸ்தாபனங்களும், தொழிற் கல்வி பாடசாலைகளும் ராஜ்யத்தில் பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன. மத்திய பல்தொழிற் பயிற்சி ஸ்தாபனமொன்றை சென்னை நகரிலும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரிலொன்றுமாக தமிழ் நாட்டுக்கு இரு ஸ்தாபனங்களையும் அமைத்தனர். மற்றும் ஆந்திர தேசத்திற்கு மூன்றும், மலையாளத்திற்கு ஒன்றும், தென் கன்னட ஜில்லாவுக்கு ஒன்றுமாக ஐந்து ஸ்தாபனங்களையும் சர்க்கார் அமைத்திருக்கின்றனர். சென்ற நான்கு வருஷங்களில் இந்த எட்டு ஸ்தாபனங்களிலிருந்து 2,100 மாணவர்கள் பயிற்சி பெற்று வந்திருக்கிறார்கள்.

சென்னை ராஜ்யத்தில் 1945-ம் வருஷத்துக்குமுன் ஒரு எஞ்ஜினீயரிங் கல்லூரிதான் இருந்தது. இப்பொழுது ஐந்து எஞ்ஜினீயரிங் கல்லூரிகள் இருக்கின்றன.

நூல் நிலையங்கள்

பலவிடங்களில் நூல் நிலையங்களை நிறுவி ஆங்கு மக்களுக்கு உபயோகமான பல்வேறு புத்தகங்களையும் எல்லோரும் சுலபமாக எடுத்துப் படிக்கும் வசதியைச் செய்வது, சமூக அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத சாதனமாகும். நாடெங்கும் நூல் நிலையங்களை நிறுவும் நோக்கத்தோடு, சென்னை நூல் நிலையச் சட்டமொன்று 1948-ல் நிறை வேறியது. இம்மாதிரி சட்டம் இந்தியாவிலேயே இதுதான் முதலாவதாகும். இந்தச் சட்டத்தின் கீழ், அநேக ஊர்களில் நூல் நிலையங்கள் அமைக்கப்படும்.

கிராமப் பிரதேசங்களுக்குப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு ஊர் ஊராய்ச்செல்லும் வாகன நூல் நிலையங் களும் ஏற்படுத்தப்படும்.

தேசீய மாணவர் படை

நம் சர்க்காரின் அரிய சாதனைகளில் ஒன்று, தேசீய மாணவர் படை அமைப்பாகும். இதில் கல்லூரி மாண வர்கள் 1,959 பேர் அடங்கிய 'சீனியர்' பிரிவு ஒன்றும், 4,050 பள்ளிக்கூட மாணவர்களடங்கிய 'ஜூனியர்' பிரிவு ஒன்றும் இருக்கின்றன. நமது இளைஞர்கள் ஒழுக்கம், கட்டுப்பாடு முதலிய நற்குணங்களைப் பெறுவதற்கான பயிற்சியை இதன் மூலம் அடைகிறார்கள். ஆபத்துக் காலத்தில் நாட்டைக்காக்க அவர்கள் தயாராகிறார்கள்.

தற்போது நம் ராஜ்யத்தில் 16 கல்லூரிகளிலும், 69 உயர்தரப்பள்ளிகளிலும் தேசீய மாணவர் படை யூனிட்டு களிருக்கின்றன. தேசீய மாணவர் படையின் விமானப் பகுதியொன்றை நிர்மாணிக்கும் விஷயம் சர்க்காரின் ஆலோசனையிலிருந்து வருகிறது.

பொது சுகாதாரம்

> மக்களின் போஷாக்கு, வாழ்க்கைத்தரம் முதலியவற்றை உயர்த்தி, பொதுஜன சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதை அரசாங்கம் தனது முதன்மையான கடமைகளுள் ஒன்றாகக் கருதும்.
>
> —இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஷரத்து—47.

வறுமையும், வலிவின்மையும் நோய்க்கு இடங்கொடுக்கும் சாதனங்கள். சாதாரணமாய் திடசாலிகளை நோய் அணுகுவதில்லை. சென்ற சில நூற்றாண்டுகளாக நம் நாட்டு மக்கள் அரசியலில் எப்படி அடிமைப்பட்டிருந்தார்களோ, அதே போல் நோய்களுக்கும் அடிமைப்பட்டு மாய்ந்து வந்தார்கள். சுதந்திர ஆட்சி பெற்றதும் மக்கள் சர்க்காரின் கவனம், நோய் நொடிகளைத் தீர்க்கும் திட்டங்களில் செலுத்தப்பட்டது. வேண்டிய தடை முறைகளை அனுஷ்டித்து இனி தொத்து நோய் நம் நாட்டில் தோன்றாமல் தடுப்பதும், வந்த நோயை விரட்டியடிக்கப் போதுமான வைத்திய வசதிகளை மிகவிரைவில் அமைப்பதும் நம் பொதுஜன சர்க்காரின் நோக்கமாயிருக்கிறது. இதனால்

நம் எதிர்கால பிரஜைகள் நோயின்றி திடகாத்திரமுள்ள வர்களாயிருக்க வேண்டுமென்பது நம் சர்க்காரின் இலட்சி யம். அந்த இலட்சியத்தையடைய நமக்குத் தேவை யானதும், மக்கள் விரும்பக்கூடியதும், சாத்தியமானதுமா யுள்ள எந்த வைத்திய முறையையும் அனுஷ்டிக்க நம் சர்க்கார் தயங்கார். இதைத் தெளிவாக நம் சுகாதார இலாகா மந்திரி தெரிவித்துள்ளார்.

வசதிகளை அதிகரித்தல்

இந்த இலட்சியப் பாதையில் வெற்றிகரமாய் முன்னேற வேண்டுமானால் அநேக அபிவிருத்தி வேலைகளை அவசர மாய்ச் செய்தாகவேண்டும். ராஜ்யத்திலுள்ள ஆஸ்பத்திரி களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும். ஏற் கெனவே 1946-ம் வருஷம் இருந்ததைவிட இப்பொழுது ஆஸ்பத்திரிகள் அதிகப்பட்டுத்தானிருக்கின்றன. இந்த ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளும் 2 கோடியிலிருந்து 3 கோடியாக அதிகரித்திருக்கிறார்கள். வைத்திய வசதிச் செலவும் 1¾ கோடியிலிருந்து 2½ கோடி ரூபாயாக அதிகப்பட்டது. நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் நோய்கள் அதிகரித்து விட்டதாக எண்ணுவது தவறு. இதுவரை தகுந்த வைத்திய வசதி கள் இல்லாமையால் நோயாளிகள் பலர் ஆஸ்பத்திரி களுக்குப் போவதில்லை; போவதற்கு ஆஸ்பத்திரிகளும் அதிகமில்லை. ஆஸ்பத்திரிகளும், வைத்திய வசதிகளும் அதிகரித்ததும், சிகிச்சை பெறவரும் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதில் அதிசயமில்லை. ஆஸ் பத்திரிகள் அதிகப்படுத்த, அதிகமான டாக்டர்களும், நர்ஸுகளும், சுகாதார அதிகாரிகளும் வேண்டும். இவர்களைப் பயில்விக்க, அதிகப்படியான வைத்தியக் கல்லூரிகள் தேவை. இந்திய வைத்தியமுறை டாக்டர் களும் அதிகப்படவேண்டும். கிராம வைத்தியர்களுக் கும் ஓரளவு பயிற்சி யளிக்க சர்க்கார் திட்டம் வகுத் துள்ளனர்.

ஜில்லா, தாலூகா தலைமை நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளை விஸ்தரித்து, அதிகமான நோயாளிகளுக்கு இட வசதி செய்யப்பட்டது. கிராமப் பிரதேசங்களில் பல சுகாதார நிலையங்களைத் திறந்துள்ளனர். சர்க்காரின் இந்த அபிவிருத்தி வேலைகளுக்காக, தியாக சித்தமுள்ள பலர் நன்கொடை யளிக்க முன்வருவது பாராட்டற்குரியது. மேலே கூறப்பட்ட மார்க்கங்களில் நம் மக்கள் சர்க்கார் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்கின்றனர். ஜில்லா, தாலூகா தலைநகர ஆஸ்பத்திரிகளிலுள்ள படுக்கை வசதிகளை அதிகப்படுத்தவும், நவீன முறையில் சிகிச்சை யளிக்கவும் சர்க்கார் முயற்சி செய்கிருர்கள்.

திருநெல்வேலி ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியில் இரண்டு புது வார்டுகள் கட்டியிருக்கிருர்கள். படுக்கை வசதியை 95-லிருந்து 135-ஆக அதிகப்படுத்திருக்கிருர்கள். புது முறையில் தேர்ச்சிபெற்ற பல கவுரவ டாக்டர்களை நியமித்திருக்கிருர்கள். க்ஷயரோக நிபுணரொருவரும், காது, மூக்கு, தொண்டை நோய்களை சிகிச்சை செய்ய ஒரு நிபுணரும் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். ஜில்லாவுக்கு இரத்த பாங்க் ஒன்றை அமைக்க சர்க்கார் அதிக அக்கரை எடுக்கின்றனர். தலைமை ஆஸ்பத்திரிக்கு ஒரு ஆம்புலன்ஸ் கார், வாங்கியிருக்கிருர்கள்.

திருநெல்வேலி சுற்றுப்புறங்களில் பெண்களுக்கு வைத்தியவசதியளிப்பதில், வண்ணுர்பேட்டை பெண்கள் ஆஸ்பத்திரி மிகவும் பெயர் வாய்ந்தது. அந்த ஆஸ்பத்திரியில் 43 படுக்கை வசதிகள் தானிருந்தன. அவை 60-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

நவீன சாதனங்கள்

தூத்துக்குடியில் சிவில் சர்ஜன் அந்தஸ்திலுள்ள டாக்டரின் மேல்பார்வையில், ஒரு பெரிய ஆஸ்பத்திரி வேலை செய்து வருகிறது. இதற்குப் புதுக்கட்டிடம் நவீன வசதிகளுடன் அமைக்க 15 லட்ச ரூபாய் சர்க்காரால் அனுமதிக்கப்பட்டு வேலைநடந்துகொண்டிருக்கிறது. இந்த

ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே சாதனம் ஒன்று தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கண் வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நாங்குனேரி, சங்கரன்கோவில் தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகளை விஸ்தரிக்கும் நோக்கத்தில், அதிக வார்டுகள் கட்டப்படுகின்றன. பாளையங்கோட்டை, திருநெல்வேலி, திருச்செந்தூர் முதலிய இடங்களில் மருத்துவ வசதிகளை அதிகப்படுத்த ஏற்பாடு செய்கிறார்கள்.

ராதாபுரம், வடக்கு வள்ளியூர், கழுகுமலை, பரமன் குறிச்சி, வடக்கன்குளம் முதலிய ஊர்களில் புதிதாய் கிராம வைத்தியசாலைகள் திறக்கத் திட்டமிட்டிருக்கிறது.

கிராம வைத்திய சாலைகள்

சென்னை ராஜ்யத்தில் 1946-ம் வருஷத்தில் 624 கிராம வைத்திய சாலைகள் இருந்தன. தற்போது 712 இருக்கின்றன. இந்த வகையில் சர்க்காரின் செலவு மூன்று மடங்காகியிருக்கிறது. 3 லட்சமாயிருந்த செலவு 10 லட்ச ரூபாயாக அதிகரித்துள்ளது.

குஷ்டரோக நிவாரண ஆஸ்பத்திரிகள், முகாம்கள் முதலியன சர்க்காரால் நிர்வகிக்கப்படுகின்றன. வேறு யாராவது தார்மீக மனப்பான்மையில் ஆஸ்பத்திரிகள் அமைப்பார்களானல், அந்த ஆஸ்பத்திரிகளுக்கு சர்க்கார் உதவி செய்கின்றனர்.

சென்னை ராஜ்யத்தில் வைத்தியக் கல்லூரிகளை அதிகப்படுத்த சர்க்கார் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். அத்துடன் இந்திய வைத்திய முறையை அபிவிருத்தி செய்யவும் சிரத்தை எடுத்துக்கொள்கின்றனர். 19 லட்ச ரூபாய் செலவில் இந்திய வைத்திய முறை கல்லூரியும், பள்ளிக்கூடமும் உயர்ந்த சாதனங்களுடன் உருவாக்கப்படுகின்றன.

நோயைத் தடுத்தல்

நோய் வந்தபின் அதைப்போக்குவதற்கு சிகிச்சை செய்

வதைப் பார்க்கிலும், அது வராமலே தடுப்பதுதான் சிலாக்கியமானது. இந்த முறையிலேயே சுகாதார இலாகா வேலை செய்கிறது. மக்களுக்கு இந்த இலாகாவின் சேவை மகத்தானது. மக்களிடையே, காற்று, ஜலம், உணவு இவைகள் மூலம் நோய்கள் பரவுகின்றன. எனவே இந்த ஒவ்வொரு அம்சத்தையும் அதிகாரிகள் நன்கு பரிசீலனை செய்து வியாதிகளைத் தடைசெய்யும் முறைகளை வகுத்திருக்கிறார்கள். அந்த சுகாதார விதிகளை அனுசரித்து சுகாதார அதிகாரிகள், நாட்டில் நோய் பரவாவண்ணம் பார்த்து வருகிறார்கள்.

மலேரியா காய்ச்சலைத் தடுக்க 1946-ம் வருஷத்தில் சர்க்கார் 9 லட்சம் ரூபாய் செலவு செய்தனர். இப்பொழுது 13 லட்சம் செலவு செய்யப்படுகிறது. இதர தொத்து நோய்களையும் சரியானபடி எதிர்த்து சுகாதார முறைகளால் தடுத்து வருகிறார்கள். அப்படியிருந்தும் ஆங்காங்கு சில சமயங்களில் நோய்கள் தலைகாட்டிவிடுகின்றன. அவற்றை அறவே யொழிக்கப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

சூழ்நிலைச் சுத்தம்

ஊர்ச்சுத்தம், தெருச்சுத்தம், வீட்டுச்சுத்தம், தேக சுத்தம் இத்தனையும் சரிவர கவனிக்கப்பட்டால், நோயே வராதென்று நிச்சயமாய்க் கூறலாம். முதலிரண்டையும் சுகாதார இலாகா செய்துகொள்ளும். இலாகா சேவையாளர்களுக்கு ஊர்வாசிகள் வேண்டிய உதவி செய்வது இன்றியமையாதது. அத்துடன், தங்கள் தங்கள் வீடுகளையும் உடம்பையும் நன்கு சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டியது மக்களின் கடமையாகும். வீட்டுக்குள் குப்பை சேரவிடக்கூடாது. கண்டவிடங்களில் கழிவு ஜலம் கொட்டலாகாது. நல்ல சுத்தமான தண்ணீரையே ஸ்நானத்திற்கும் பானத்திற்கும் உபயோகிக்க வேண்டும். இந்த முறைகளெல்லாம் மக்கள் சொந்த பொறுப்பேயானாலும், பொதுநலத்தை முன்னிட்டு எல்

லோரும் இவ்விதிகளை அனுஷ்டிக்கிறார்களா வென்று சர்க்கார் கண்காணித்து வருகிறார்கள்.

ராஜ்யமுழுதுக்கும் நல்ல குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க, சர்க்கார் பெருமுயற்சி எடுத்துக்கொள்கின்றனர். எந்த விதத்திலும் அசுத்தமாக்காமல் பாதுகாக்கப்படும் ஜலவினியோக வசதி திட்டமொன்றை வகுத்து, அதைப் படிப்படியாய் சர்க்கார் நிறைவேற்றி வருகிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் பாளையங்கோட்டை முனிசிபல் பட்டணத்துக்கு 25·23 லட்சம் ரூபாய் செலவில் குடிதண்ணீர் வினியோக வேலை நடந்துகொண்டிருக்கிறது. 40,000 ரூபாய் செலவில் தூத்துக்குடி ஜலவினியோக முறையைச் சீர்திருத்தி யிருக்கிறார்கள். திருச்செந்தூர் தாலூகாவில் 11 கிராமங்களுக்கு ஒரு கூட்டுமுறை குடிதண்ணீர் திட்டத்தை வகுத்து, வேலை நடந்துவருகிறது. இந்த விவரம் பின்னால் தரப்பட்டுள்ளது.

ஊர்களின் கழிவுத் தண்ணீரை ஊருக்கு வெளியே கொண்டுபோய் அதற்குச் சரியான போக்கு அளிக்க, சுகாதார இலாகா பலவித முறைகளைக் கையாளுகிறது. சாக்கடைக் கால்வாய்களில், சென்னை, மதுரை இந்த நகரங்களில் உள்ளனபோன்று, பூமிக்குள் புதைத்துக் கட்டப்பட்டிருப்பவைகளே சிலாக்கியமானவை. இந்த வகைக்கு ஏராளமான பணச்செலவாகும். எனவே, அநேக இடங்களில் திறந்த சாக்கடைகளே ஜலம் நன்கு ஓடும்படி போதுமான வாட்டத்துடன் கட்டப்பட்டிருக்கின்றன. சென்னை ராஜ்யத்தில் மூன்றாவதாக, தூத்துக்குடியில் பூமியின்கீழ் புதைந்து கிடக்கும் சாக்கடை கட்டப்படுகிறது. இதற்கு சுமார் 31 லட்ச ரூபாய் செலவு மதிப்பிட்டிருக்கிறார்கள்.

கிராமச் சீரமைப்பு

> *இந்தியாவின் ஜீவன் அதனுடைய ஏழு லட்சம் கிராமங்களிஸ்தான் இருக்கிறது; என்று இந்தக் கிராமங்கள் அனைத்தும் பிறர் கையை எதிர்பாராமல், தம்முடைய தேவையைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் சக்தியும் தகுதியும் பெறுகின்றனவோ, அன்றுதான் இந் நாடு பூரண சுதந்திரம் பெற்ற நாடாக முடியும்.*
>
> —மகாத்மா காந்தியடிகள்

சென்னை ராஜ்யத்தில் கிராம அபிவிருத்தி வேலையை 1946-ம் வருஷ இறுதியில் சர்க்கார் மேற்கொண்டனர். அனுபவம் வாய்ந்த நிர்மாண சேவைத் தொண்டர்களைக் கொண்ட கமிட்டியொன்று அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டி அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தது. ஆரம்பத்தில் 34 பிர்க்காக்களில் வேலை துவக்கப்பட்டது. ஒவ்வொரு பிர்க்காவிலும் 5 முதல் 10 கிராமங்கள் வரை இணைக்கப்பட்டன. உணவு தானியங்களிலும், குடிசைக் கைத்தொழில் மூலப் பொருள்களிலும் பிர்க்காக்கள் சுய நிறைவுள்ளனவாக ஆக்கப்படவேண்டுமென்பது அபிவிருத்தி திட்டத்தின் முக்கியக் கொள்கை. ரோடுகள்

போடுதல், குடி தண்ணீருக்கும், விவசாயத்துக்குமான கிணறுகள் வெட்டுதல், சுகாதார சாதனங்களை அமைத்தல் முதலியன கிராம அபிவிருத்தியின் இதர வேலைத் திட்டங்கள். இந்த வேலைகளை பிர்க்கா அபிவிருத்தி இலாகா செய்ய ஆரம்பித்ததும் மக்கள் அந்த வேலைகளுக்குத் தங்களாலான உதவியைச் செய்கிறார்கள். பணமாகவும், பொருள்களாகவும், உழைப்பாகவும் அவர்கள் உதவுகிறார்கள். புது ரோடுகள் போட நிலங்களைப் பொது மக்கள் இனாமாகக் கொடுக்கிறார்கள். கல், சரளை, மண் கொடுக்கிறார்கள். இம்மாதிரியாக ஒரு வேலைக்குக் கணக்கிடப்படும் செலவில் பாதிக்கு மேல் அந்த பிர்க்கா மக்கள் கொடுத்து விடுகிறார்கள். தங்கள் கிராமம் பல விதத்திலும் நன்கு அபிவிருத்தியடைய வேண்டுமென்ற ஆவல் கிராமவாசிகளுக்கு இருக்கிறது. சர்க்காரின் ஆதரவைக்கண்டு அவர்களுக்கு அந்தத் திட்டத்தில் ஒரு நம்பிக்கையும், அதை எப்படியும் நிறைவேற்றுவதென்பதில் ஊக்கமும் ஏற்பட்டுவிட்டன. எனவே, பிர்க்கா அபிவிருத்தி வேலை மிகவும் துரிதமாய் நடைபெறுகிறது. இப்பொழுது ராஜ்யத்தில் 84 பிர்க்காக்களில் கிராம முன்னேற்ற வேலை வெற்றியுடன் நிறைவேறி வருகிறது. அவற்றில் 2,394 கிராமங்களை இணைத்திருக்கிறார்கள்.

கூட்டு முயற்சி

பிர்க்காக்களில் செய்யப்படும் பல வசதிகளுக்குமேல் கிராமங்களில் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கவும், கிராம பஞ்சாயத்துக்களை நிறுவவும், கிராமங்களுக்கு மின்சார வசதிகளைச் செய்து கொடுக்கவும் சர்க்கார் ஏற்பாடு செய்கிறார்கள். அநேகமாய் பிர்க்கா பிரதேசங்களிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் கூட்டுறவு சங்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. சில குறிப்பிட்ட பிர்க்காக்களுக்கு பல வகை வசதிக் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க, சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். அவசியத்தையும் சவுகரியத்தையும் பொறுத்து, இச்சங்க அமைப்பு இதர பிர்க்காக்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

கிராம மக்கள் இதுவரை கட்சிபேதங்களை ஏற்படுத்திக்கொண்டு சண்டை சச்சரவுகளுடன் வாழ்ந்து வந்தார்கள். பிர்க்கா அபிவிருத்தித்திட்டங்கள் மூலம் கூட்டு வேலைகளே அதிகம் செய்யப்படுவதால், கிராம வாசிகளுக்குள் ஒற்றுமை ஏற்பட சரியான வாய்ப்பு கிடைத்து விட்டது. பொது நலத்துக்காகவே ஒவ்வொருவரும் பாடுபடவேண்டுமென்ற உணர்ச்சி தோன்றிவிட்டது. ஜாதி வித்தியாசங்கள்கூட பெருமளவுக்கு மறைந்துவிட்டன. எல்லோரும் பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கிறார்கள்; ஒரே பள்ளியில் கல்வி கற்கிறார்கள்; திட்ட வேலைகளையும் சேர்ந்தே நிறைவேற்றுகிறார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் பிர்க்கா அபிவிருத்தி வேலைகள் நான்கு பிரதேசங்களில் நடக்கின்றன. பழங்கோட்டை, திருவேங்கடம், நிலித நல்லூர், சங்கரன்கோவில் என்ற 4 பிர்க்காக்களில் மொத்தம் 212 கிராமங்கள் இணைக்கப்பட்டுள்ளன. பிர்க்கா அபிவிருத்தி அதிகாரிகளும், கிராம சேவையாளர்களும் மிக ஊக்கத்துடன் வேலைசெய்து வருகிறார்கள். பிர்க்காக்களின் போக்கு வரத்து வசதியமைப்புக்காக ஒரு லட்ச ரூபாயும், குடிதண்ணீர் வசதி செய்ய ஒரு லட்ச ரூபாயும், இதர பொது நல வேலைகளுக்காக 46,800 ரூபாயும் சர்க்கார் இதுவரை அனுமதித்திருக்கிறார்கள். கிராம மக்கள் தாங்கள் வசிக்கும் பிரதேசங்களை மிகச் சுத்தமாய் வைத்துக்கொள்வதற்குப் போதிக்கப் படுகிறார்கள். இந்த நான்கு பிர்க்காக்களில் 47 கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். 30 ரோடுகள் போட்டிருக்கிறார்கள்.

முக்கிய வசதிகள்

ராஜ்யத்திலுள்ள அபிவிருத்தி பிர்க்காக்களில் ஒவ்வொரு வருஷமும் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. குடி தண்ணீர் வசதிக்காக 537 புதுக் கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். 400 பழைய கிணறுகளையும் 67 இதர நீர் நிலைகளையும் பழுது பார்த்திருக்கின்றனர். இந்த நீர் நிலை

களை கிராமவாசிகள் எல்லோரும் ஜாதி வித்தியாசமின்றி உபயோகிக்கிறார்கள். கிராமங்களை ஒன்றுடன் ஒன்றை இணைக்கவும், அவைகளிலிருந்து அருகிலுள்ள பட்டணங்களுக்குப் போகவும் சுமார் 520 மைல் நீள ரஸ்தாக்கள் போட்டிருக்கிறார்கள்.

கிராம அபிவிருத்தியில் மிகவும் முக்கியமான அம்சங்களில் ஒன்று, மக்களின் கல்வி அபிவிருத்தி. இந்தத் துறையிலும் பிர்க்கா அபிவிருத்தி இலாகா அக்கரை எடுத்துக்கொள்ள மறக்கவில்லை. ஆரம்ப பாடசாலைகள் 293-ம், இரவு பள்ளிக்கூடங்கள் 426-ம் நிறுவி இருக்கிறார்கள். ஆதாரக் கல்விப் பள்ளிகள் 28 ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர 91 ஆரம்ப பள்ளிக்கூடங்களை ஆதாரக் கல்விப் பள்ளிகளாய் மாற்றியிருக்கிறார்கள். எழுத்தறிவின்மைப் போக்கும் முறையில் முதியோர் கல்விச் சாலைகள் 345-ம், நூல் நிலையங்கள் 600-ம், வாசக சாலைகள் 190-ம் ஸ்தாபித்துள்ளனர்.

இந்த ஜில்லாவிலுள்ள பிர்க்காக்களில் மூன்று ஆரம்ப பள்ளிகள் புதிதாய் அமைத்திருக்கிறார்கள். இரண்டு முதியோர் கல்விசாலைகளும், மூன்று இரவு பள்ளிக்கூடங்களும் திறந்திருக்கிறார்கள். அவ்விடங்களில் 34 நூல் நிலையங்களும், எட்டு பொதுஜன ரேடியோக்களும் நிறுவியுள்ளார்கள். சென்னை ராஜ்யத்திலுள்ள பிர்க்கா அபிவிருத்திப் பிரதேசத்தில் 120 ரேடியோ செட்டுகள் அமைத்திருக்கிறார்கள்.

கதர் அபிவிருத்தி

மகாத்மாவுக்கு மிகவும் பிடித்தமான வேலை நூல் நூற்பது. நம் தேசீயப் புனரமைப்புத்திட்டத்தில் அதற்கான முக்கிய ஸ்தானம் அளித்தார். கிராமங்கள் உடை சம்பந்தப்பட்டவரை சுயநிறைவுள்ளனவாக வேண்டுமானால், கிராம மக்கள் தங்கள் ஆடைகளுக்கு வேண்டிய அளவு பருத்தியைப் பயிரிட்டு, பஞ்செடுத்துக் கொட்டை நீக்கி, நூல் நூற்று, கதராடை நெய்து கொள்ள வேண்டு

மென்று அவர் கற்பித்தார். அந்த கதரபிவிருத்தியையும் நம் சர்க்கார் தமது பிர்க்கா அபிவிருத்தியில் ஒரு முக்கிய திட்டமாக இணைத்துள்ளனர். கிராம மக்களுக்குக் குறைந்த விலையில் ராட்டைகளை விநியோகிக்கிறார்கள். நெல்லை ஜில்லா அபிவிருத்தி பிர்க்காக்களில் 400 ராட்டைகளைப் பாதி விலைக்கு அபிவிருத்தி இலாகா விநியோகித்திருக்கிறது. மக்களும் உற்சாகத்துடன் நூற்கிறார்கள்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

எந்த ஒரு க்ஷேம நல வேலையையும் தனிப்பட்டவர்கள் செய்வதென்பது மிகவும் சிரமமான விஷயம். போதுமான பணம் வேண்டும். ஆள்பலம் வேண்டும். எனவே, எதையும் கூட்டுறவு முறையில் செய்வதானால் சுலபமாகவிருக்கும்.

மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் கூட்டுறவு இயக்கம் மிகவும் பயன்படக் கூடியதாயிருக்கிறது. பொது மக்களிடையே பேராதரவும் பெற்று வளர்ந்து வருகிறது.

சாதாரணமாகக் கடன் கொடுக்கும் கூட்டுறவு சங்கங்களாயிருந்தவைகளை பல்வகை வசதிச் சங்கங்களாய் மாற்றுவதில் சர்க்கார் ஈடுபட்டிருக்கிறார்கள். இதனால் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் சௌகரியமேற்பட்டிருக்கிறது. மொத்தம் அமைக்கப்பட்ட 800 சங்கங்களில் 300 வரை பல்வகை வசதி சங்கங்களாய் வேலை செய்கின்றன. நில அடமான பாங்கிகளும் விவசாயிகளுக்கு நல்ல உதவி செய்கின்றன. மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்க்ள், பால் விநியோகக் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகள் எல்லாம் ஏற்பட்டன. இவைகளால் மக்களுக்குப் பல விதத்திலும் நன்மை உண்டாகியிருக்கிறது. உற்பத்தியாளர்களின் பொருள்களை விற்பனை செய்து கொடுக்கவும், உற்பத்திக்கு முன்பணமாகக் கடன் கொடுக்கவும், விற்பனை சங்கங்களை நிறுவியிருக்கிறார்கள்.

இந்த வகையில் இன்னுமொரு முக்கியமான சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதுதான் நிலக் குடியேற்ற உதவி சங்கம். இதன் மூலம் ஏழைகளுக்கு இலவசமாகவோ அல்லது குறைந்த தொகைத் தவணை முறையிலோ நிலம் ஜாரி செய்கிருர்கள். நிலத்தைத் திருத்தவும், சாகுபடிக்கு வேண்டிய வசதியைச் செய்து கொள்ளவும் கடன் கொடுக்கிருர்கள். இதன் மூலம் ஏழைகளுக்கு உதவி கிடைக்கிறது. அதே சமயத்தில் நாட்டின் விவசாயமும் அபிவிருத்தியடைகிறது. இம்மாதிரி சங்கங்கள் 40 வரை நிறுவியிருக்கிருர்கள். 5,000 அங்கத்தினர்கள் சங்கத்தில் சேர்ந்துள்ளனர். அவர்களுக்கு 22,000 ஏக்கர் வரை நிலம் ஜாரி செய்யப்பட்டிருக்கிறது. 12,000 ஏக்கர் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நெல்லை ஜில்லாவிலுள்ள மொத்தம் 972 கிராமங்களில் 679 கிராமங்கள் வரை நன்மையடையத்தக்க அளவில், 544 கிராமக் கடன் சங்கங்களும், 8கூட்டுறவு விற்பனை சங்கங்களோடு இணைக்கப்பட்ட 22 விவசாயக் கடன் சங்கங்களும் வேலைசெய்து வருகின்றன.

தொழில் முயற்சி

திருநெல்வேலி, கைத்தறிகள் அதிகமாயுள்ள ஜில்லாக்களில் ஒன்று. 45 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் கைத்தறி நெசவாளர் நெருக்கடி ஏற்பட்டபொழுது அவர்களுக்கு அரசாங்க உத்தரவாதத்தின்மேல் கூட்டுறவு பாங்கி மூலம் 20 ஆயிரம் ரூபாய் வரை வட்டியில்லாமல் கடன் உதவி செய்யப்பட்டது.

கைத்தொழில் வளர்ச்சிக்கென இந்த ஜில்லாவில் 14 சங்கங்கள் வேலை செய்கின்றன. வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கமொன்று பாளையங்கோட்டையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் 100-க்கு மேற்பட்ட வீடுகள் கட்டியிருக்கிருர்கள்.

பெண்களுக்கென குடிசைக் கைத்தொழில் கூட்டுறவு சங்கங்கள் 2, நெல்லை ஜில்லாவில் வேலை செய்கின்றன.

இந்தச் சங்கங்களில் மொத்தம் 204 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். தையல்வேலை, பூவேலை, பின்னல் முதலிய வேலைகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பூவேலை செய்த மேஜைத்துணி, படுக்கைத்துப்பட்டி, தலையணை உறைகள், கைக்குட்டைகள், ஜம்பர்கள், ஜாக்கட்டுகள் முதலியவற்றை அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள்.

அப்பளம் செய்வோர் கூட்டுறவுசங்கமொன்றும், உப்புத் தொழிலாளர் சங்கமொன்றும் அங்கு வேலை செய்கின்றன. கீழப்பாவூர் விச்வகர்மா கூட்டுறவு சங்கம் ஒன்று விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்கிறது.

நிலக்குடியேற்ற உதவி சங்கங்கள் மூன்று இந்த ஜில்லாவில், கீழ்ப்பெருமானேரி, புளியங்குளம், கச்சிறுவிளை முதலிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கூட்டுறவு சங்கங்கள் பல கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு அனுகூலமாயிருக்கின்றன. கிராமப் புனருத்தாரண திட்டத்தின் கீழ், குடிசைக் கைத்தொழில்களுக்கு அதிக முக்யத்துவம் கொடுத்திருக்கிறார்கள். கயிறு, பாய் முதலியன பின்னல், மண் பாண்டங்கள் செய்தல், கொல்லர் வேலை, தச்சுவேலை, பனை வெல்லம் பனங்கற்கண்டு உற்பத்தி செய்தல் முதலியன குடிசைக் கைத்தொழில்களாய்க் கொள்ளப்பட்டு, அவைகளுக்கு சர்க்கார் வேண்டும் உதவிகளைச் செய்கிறார்கள். இந்தக் குடிசைத்தொழில்களால் கிராமங்களின் பொருளாதாரம் நன்கு அபிவிருத்தியடைய முடியும்.

திருநெல்வேலி ஜில்லாவின் முக்கிய குடிசைக் கைத்தொழில், பனைவெல்லம் பனங்கற்கண்டு உற்பத்தியே. திருச்செந்தூரை அடுத்துள்ள தேரிக்காட்டில் ஏராளமான

பனங்காடுகள் இருக்கின்றன. எனவே அங்கு பனை வெல்லமும் கற்கண்டும் செய்கிறார்கள். திருச்செந்தூர் தாலூகாவைச்சேர்ந்த உடன்குடியில் பெரும் அளவில் பனங்கற்கண்டு உற்பத்தியாகிறது. அந்தவெல்லமும் கற்கண்டும் அநேகமாய் தூத்துக்குடி சந்தைக்கு வந்து விடும். ஜில்லாவின் இதர பாகங்களிலும் சிறுசிறு அளவில் வெல்ல உற்பத்தி நடக்கிறது.

அம்பாசமுத்திரம் தாலூகாவில் கீழஆம்பூர் என்று ஒரு கிராமமிருக்கிறது. அக்கிராமத்தின் ஒருபுறத்தே சில குன்றுகள் சிதறிக் கிடக்கின்றன. அவைகளின் மத்தியில் நீர் நிலையொன்று அழகாயமைந்திருக்கிறது. அதன் கரையில் சுமார் 20 வீடுகள் இருக்கின்றன. அதில் சலுப்பச்செட்டியார் என்ற ஒரு வகுப்பினர் வசிக்கின்றனர். அந்தப்பக்கத்தில் 'சூந்து' என்று சொல்லக்கூடிய ஒருவகைச் சணலைப் பயிரிட்டு, அந்தச் செடியைப் பதனிட்டு நார் கிழித்து, அதைக்கொண்டு ஒருவகைக் கோணித்தாட்டு நெய்கிறார்கள். அதை அந்த ஜில்லாவில் 'ரெட்டு' என்று கூறுவது வழக்கம். இந்த 'ரெட்டு' சாய்வு நாற்காலி களுக்கும், மற்றும் வீடுகளில் படுதாக்களுக்கும் உபயோகப் படுகின்றது.

குடிதண்ணீர் திட்டம்

கிராமப் புனருத்தாரணத்தில் ஒரு புரட்சிகரமான அம்சத்தைத் திருநெல்வேலி ஜில்லா சாதித்திருக்கிறது. இந்த முறையில் இந்தியாவிலேயே இதுதான் முதன்மை யானதாகும். அநேகமாய் திருச்செந்தூர் தாலூகா பூராவும் உவர் நிலம். அங்கு நல்ல குடிதண்ணீர் கிடைப்பது அரிது. ஒவ்வொரு வருஷத்திலும் கோடைக் காலத்தில் குடிக்கத் தண்ணீரில்லாது மக்கள் படுங்கஷ்டம் சொல்லமுடியாது. இந்தத் துயரத்தை நிரந்தரமாய்த் தீர்க்கும் ஒரு மகத்தான நிர்மாணத்திட்டத்தை, நம் சர்க்கார் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

காயல்பட்டினம், புன்னக்காயல், ஆறுமுகனேரி, திருச்

செந்தூர், வீரபாண்டியன் பட்டணம், அடைக்கலாபுரம், லக்ஷ்மிமாநகரம், கந்தசாமிபுரம், சேர்ந்தமங்கலம், ஆத்தூர், மேல ஆத்தூர் ஆக பதினோரு கிராமங்களுக்குக் கூட்டாக குடிதண்ணீர் வசதிசெய்துகொடுக்கும் திட்டமொன்று 1949-ம் ஆண்டு அக்டோபர் மீ 2உ -யில் ஆரம்பமாகியது. இந்தத் திட்டம் கூடியசீக்கிரம் முடிவடைந்து விடும். இதன் விளைவாக அந்தக் கிராம வாசிகளான சுமார் 75,000 பேர் தாம்பரபரணி தண்ணீரை அள்ளி உண்ண முடியும். ஒரு தனி கிராமத்தால் இந்தத் தண்ணீர் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. எனவே ஒரு கூட்டுமுறைத் திட்டம் வகுக்கப்பட்டது. ஆத்தூர் நீர்ப்பாசன கால்வாயிலிருந்து தண்ணீரைத் தேக்கி, சுகாதார முறைப்படி வடிகட்டிப் பிறகு குழாய்கள் மூலம் இந்த பதினோரு கிராமங்களுக்கும் விநியோகிக்கப்படும். இந்தத் திட்டத்திற்குக் கணக்கிடப் பட்டிருக்கும் மொத்த செலவு 37½ லட்ச ரூபாய். இந்தத் திட்டத்தை அனுமதித்ததில், நம் மக்கள் சர்க்கார் ஓர் அரும் பெருங் காரியத்தைச் சாதித்துள்ளனர்.

தென்பாண்டிக் கடல் நடுவே...



வள்ளங்களைப்பிணைத்துச் செல்லும் மோட்டார் படகு

தனித்தனியே சங்கு தேடித்திரியும் குஞ்சுவள்ளங்கள்

கடல் அன்னையின் மடியில் குதித்தல்

தாயளிக்கும் பரிசு—வெற்றிச்சங்கு

ஆனந்தக்களிப்பு—செல்வப் பெருக்கு

ஆராய்ச்சியும், அதிகபலனும்

நவீன விவசாய சாதனங்கள்

கோயில்பட்டி விவசாயப்பண்ணை

அம்பா சமுத்திரத்தில் --



நெல்லையப்பதி கோயில்

அதிக பலன்

பஞ்சாயத்து ராஜ்யம்

கிராமப் பஞ்சாயத்துக்களை அமைப்பதற்கான வழிகோலி, தனித்தனி சுயாட்சி ஸ்தாபனங்களாகப் பணியாற்றுவதற்கு அவசியமான அதிகார உரிமைகளை அவற்றுக்கு அரசாங்கம் அளிக்கும்.

—இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்
ஷரத்து—40.

எல்லா அதிகாரங்களும் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பதை விட, பல்வேறிடங்களில் பரவியிருப்பது ஒரு நாட்டின் நிரந்தர க்ஷேமத்துக்கு மிகவும் நன்மை பயக்கும் என்பது அனுபவ அறிஞரின் சித்தாந்தம். நம் நாட்டில் பன்னெடுங்காலமாகவே இக்கொள்கை நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. காலதேவனின் திருவிளையாடல்கள் காரணமாக நாட்டில் எத்தனையோ அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும், கிராமாந்திரங்களில் பல நூற்றாண்டுகளாய் ஒரு விதமான அமைதி வாழ்வு நிலவி வந்ததென்று கூறலாம். அதற்கு முக்கியமான காரணங்களுள் ஒன்று, பஞ்சாயத்து ஆட்சி.

'ஏரி வாரியர், பொன் வாரியர், பஞ்ச வாரியர்' முதலிய

தொடர்கள் இன்று பலருக்குப் புதிதாகத் தெரியலாம். ஆனால் சுமார் ஆயிரம் வருஷத்திற்கு முன்பெல்லாம், இவை சாதாரணமாக வழக்கத்தில் இருந்தவை. அந்நாளைய கிராமங்களில் குடவோலை மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்ச்சபையாருக்கு, இப்பெயர்கள் வழங்கப்பட்டன. திருநெல்வேலியைச் சார்ந்த மானூர் என்னும் இடத்துச் சாசனமும் இதை வலியுறுத்தும். செங்கல்பட்டு ஜில்லாவில் இருக்கும் உத்திரமேரூர் என்னுமிடத்தில் கிடைத்த சாசனம் இது பற்றிய விவரங்களை நன்குணர்த்துகிறது.

பொறுப்பு வாய்ந்த ஒரு சிலரை கிராம மக்கள் தேர்ந்தெடுத்து, அவர்களிடத்தில் கிராமத்தின் பல்வேறு பொது நலப் பணிகளை ஒப்படைத்திருந்தனர். கிராம சம்பந்தமான எல்லாத் தேவைகளையும் சௌகரியங்களையும் கவனித்து ஆவன செய்யவேண்டியது, அவர்களுடைய கடமையாக இருந்தது.

பண்டைய முறைக்குப் புத்துயிர்

மிகப் பழையகாலம் முதல் நம் அனுஷ்டானத்தில் இருந்துவந்த இந்தப் பஞ்சாயத்து முறை, ஆங்கில ஆட்சியின் போது மிகவும் சீர்கேடடையத் தொடங்கியது. சில ஆண்டுகளுக்கு முன், பொதுவாக ஸ்தல ஸ்தாபன ஆட்சிக்கு ஊக்கமளிக்கப்பட்டபோது, ஏதோ பெயரளவிலே சில இடங்களில் பஞ்சாயத்துக்கள் நிறுவப்பட்டன. ஆனால் அவற்றிற்குப் போதுமான அதிகாரங்களும் நிதி வசதியும் இல்லாததால், ஜனங்களுக்கு அதிக நன்மை ஏற்படாமல் இருந்தது.

இந்த நிலையை மாற்ற, மக்கள் அரசாங்கம் முன் வந்தனர். பண்டைக் காலச் சிறப்புக்குக் காரணமாயிருந்த பஞ்சாயத்து முறையை இக்காலத் தேவைக் கேற்ப சிறந்த முறையில் திருத்தியமைத்தனர். அதன் பயனாக, சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம், 1950-ம் வருஷம் நிறைவேறியது.

இந்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் பஞ்சாயத்துக்கள் கிராம சுயஆட்சிக்கான எல்லாவித வசதிகளுடன் விளங்கும். கிராம வாழ்க்கைக்கும் கிராமப் பொருளாதாரத்துக்கும் உகந்ததான ஸ்தல நிர்வாக முறையும், அதற்கு வேண்டிய அதிகாரங்களும் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்படும். இவைகளின்மீது மேலதிகாரக் கட்டுப்பாடு மிகவும் குறைந்த அளவுக்குத்தானிருக்கும். ஒவ்வொரு கிராமத்தையும், அதன் மக்களுடைய சமூக, பொருளாதார, கலாசாரங்களின் தேவைக்கு அவசியமானவற்றில் சுயநிறைவுள்ளனவாக நிர்மாணித்து, தாங்களே தங்கள் நிர்வாகத்தை நன்கு பராமரித்துவரும்படி செய்வதே இந்தச் சட்டத்தைவகுத்த மக்கள் சர்க்காரின் நோக்கமாகும். இந்தச் சட்டம் 1951-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வந்திருக்கிறது.

பஞ்சாயத்து அமைப்பு

ஒரு கிராமத்தின் ஜனத்தொகை 500-க்கு மேலிருந்தால் அங்கே பஞ்சாயத்து அமைக்கப்படும். குறைந்த ஜனத்தொகையுள்ள சில கிராமங்களை ஒன்றாய் இணைத்து, அவைகளுக்கு ஒரு கூட்டுப் பஞ்சாயத்து அமைக்கலாம். புதிய சட்டத்தின்கீழ் பஞ்சாயத்துக்கள் அமைப்பது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. அது முன்போல் சிலரின் இஷ்டத்தைப் பொறுத்ததல்ல. ஜனத்தொகை 5,000-க்கு மேலும் வருமானம் 10,000 ரூபாய்க்குக் குறையாமலும் உள்ளவை, முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்கள். மற்றவை இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்கள். புதுச் சட்டம் அமுலுக்கு வருமுன், ராஜ்யத்தில் மொத்தம் 8,335 பஞ்சாயத்துக்கள் இருந்தன. புதுச் சட்டத்தின்கீழ், இன்னும் 15,830 பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படவேண்டும்.

தற்போது முனிசிபாலிட்டிகளிலும் ஜில்லாபோர்டுகளிலும், அங்கத்தினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் ஒருவரை அந்த அங்கத்தினர்கள் தலைவராய் தேர்ந்தெடுக்கி

ஞர்கள். ஆனால் புதுப் பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ், பஞ்சாயத்து சபைத் தலைவரும் ரகசிய ஓட்டு மூலம் நேரடியாகப் பொது மக்களால்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் தங்களுள் ஒருவரை உபதலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும். முன்னேற்ற மடையாத வகுப்பினருக்கு மட்டும், 10 வருஷ காலத்துக்கு பஞ்சாயத்துச் சபைகளில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படும். சட்ட சபை வாக்காளர் ஜாபிதாவே இந்தப் பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் உபயோகிக்கப்படுமாகையால், தேர்தல், வயது வந்தோர்ஓட்டுரிமை அடிப்படையில் தான் நடைபெறும்.

கடமைகளும் பொறுப்புகளும்

அந்தந்த கிராமத்திலுள்ள ரோடுகளை மராமத்து செய்வதும், புது ரஸ்தாக்கள் அமைப்பதும், தெருக்களுக்கு விளக்குகள் போடுவதும், சுகாதார சாதனங்கள் நிறுவுவதும், பாதுகாப்புள்ள குடிதண்ணீர் விநியோகிப்பதும், அந்தந்த பஞ்சாயத்து சபைகளின் முக்கிய அலுவல்களாகும். இவை தவிர, மக்களின் வசதிக்காக ஆஸ்பத்திரிகள், பிரசவ சிசு சம்ரக்ஷண நிலையங்கள், மார்க்கெட்டுகள், வண்டிப் பேட்டைகள், ரேடியோக்கள் முதலியவைகளும் ஏற்படுத்தலாம்.

முதல் வகுப்பு பஞ்சாயத்துகளில் நிர்வாக சம்பந்தமான அவசியம் ஏற்படும் இடங்களில், நிர்வாக அதிகாரிகளை சர்க்கார் நியமிக்கும். சப்-ரிஜஸ்ட்ரார் காரியாலயம் இல்லாத கிராமங்களில் அந்த நிர்வாக அதிகாரிக்கு ஓரளவு தஸ்தாவேஜுகளைப் பதிவு செய்யும் அதிகாரமும் கொடுக்கப்படும். சென்னை கிராமக் கோர்ட்டுகள் சட்டத்தின் சிவில் கிரிமினல் விவகார அலுவல்களை, புதுச் சட்டத்தின் படி, கிராம பஞ்சாயத்துக்களே அமல் நடத்தும்.

பஞ்சாயத்தின் நிர்வாகத்துக்கு வேண்டிய நிதியைச் சேகரிக்க, பஞ்சாயத்து சபைக்கு வரிவிதிக்கும் அதிகாரங்களை, சட்டம் அளிக்கிறது. இனி, பஞ்சாயத்துக்களின்மீது

ஜில்லாபோர்டுக்கு மேலதிகாரம் எதுவுங்கிடையாது. ஜில்லா கலெக்டரும் அந்தப் பிரதேசத்தின் அமைதி, பாது காப்பு நிர்வாகம் வரையில்தான் தலையிடலாம். இதர விஷயங்களில் ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டரின் மூலம், சர்க்கார் மேலதிகாரத்தைக் கொண்டுள்ளனர். ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டரின் கீழ், பிரதேச இன்ஸ்பெக்டர் கள், ஜில்லா பஞ்சாயத்து அதிகாரிகள், டெபுடி அதிகாரி கள் முதலியோர் இருந்து வருவர்.

1949–50-ல், ராஜ்யத்தில் 414 சிறிய பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டுள்ளன; 60 சிறிய பஞ்சாயத்துக்கள் பெரிய பஞ் சாயத்துக்களாகவும் மாற்றப்பட்டுள்ளன. அதாவது 49-ம் வருஷ ஆரம்பத்தில் 7,241 ஆக இருந்த சிறிய பஞ்சாயத் துக்கள் எண்ணிக்கை, 7,595 ஆகவும், 414 பெரிய பஞ் சாயத்துக்கள் 474 ஆகவும் அதிகரித்தன. பழைய பஞ் சாயத்துச் சட்டப்படி ரூ. 3,000 வருமானத்துக்குள் பட் டவை சிறிய பஞ்சாயத்தாகவும், மேற்பட்டவை பெரிய பஞ்சாயத்தாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

ஸ்தல ஸ்தாபனங்கள்

ராஜ்யத்தில் தற்போது 24 ஜில்லாபோர்டுகளும், 95 முனிசிபாலிட்டிகளும் இருக்கின்றன. இந்த ஸ்தல சுய ஆட்சி முறை அமுலுக்கு வந்து நூறு ஆண்டுகள் நிறைந்து விட்டன.

ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரங்களை அதிகப்படுத்த வும் அவைகளின் வருமானத்தைப் பெருக்க வசதியளிக்க வும் அரசாங்கம் ஆலோசித்து வருகின்றனர்.

திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு ஜில்லாபோர்டும், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம், தூத்துக்குடி ஆக நான்கு முனிசிபாலிட்டிகளும், 46 பெரிய பஞ்சாயத்துகளும், 159 சிறிய பஞ்சாயத்துகளும் இருக் கின்றன. இந்த ஸ்தாபனங்களின் க்ஷேமநல வேலைகளுக்கு சர்க்கார் பல லட்ச ரூபாய்கள் மானியமாகவும் கடனாகவும் கொடுத்து வருகிறார்கள்.

ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் உதவிய மானிய விவரம்:—

1945–46	1946–47	1947–48	1948–49	1949–50	மொத்தம்
ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
திருநெல்வேலி ஜில்லா போர்டு.					
7,99,052	8,94,801	3,94,161	8,93,061	6,97,810	36,78,885
திருநெல்வேலி முனிசிபாலிடி.					
94,957	97,534	84,640	1,67,802	1,00,950	5,45,883
தூத்துக்குடி முனிசிபாலிடி.					
22,960	29,370	30,195	29,874	32,378	1,44,777
பாளையங்கோட்டை முனிசிபாலிடி.					
68,352	69,232	79,175	89,094	62,429	3,68,282

திருநெல்வேலி ஜில்லா தென்காசி தாலூகாவில்தான் திருக்குற்றாலம் இருக்கிறது. இது அந்த ஜில்லாவில் புகழ் பெற்ற ஒரு சுகவாச ஸ்தலமாய் விளங்குகிறது. தென் மேற்குப் பருவ மழை ஆரம்பமானதும், நம் ராஜ்யத்தின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் குற்றாலம் அருவியில் ஸ்நானம் செய்வதற்காக அங்கே செல்கிறார்கள். வரவர இந்த ஸ்தலத்தின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. அதற்கேற்றபடி அந்த ஊரையும், அருவியையும், அருவிக் கரையையும், கோவிலையும் அபிவிருத்தி செய்துவருகிறார்கள். குற்றாலம் நகரமைப்புத் திட்டம் ஒன்று சர்க்காரால் சமீபத்தில் அனுமதிக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது. கோவிலையும், அருவியையும் சுற்றியுள்ள சுமார் 400 ஏக்கர் பிரதேசத்தில் புது ரோடுகள் போடுவது, இருக்கும் சில ரஸ்தாக்களை அகலப்படுத்துவது, பள்ளிக்கூடம், விளையாடு மிடங்கள் அமைப்பது, வீடுகளைக் கட்ட வசதி செய்து கொடுப்பது முதலிய திட்டங்கள் அதில் சேர்ந்துள்ளன.

ஹரிஜன முன்னேற்றம்

> *மக்களுள் பல துறைகளிலும் தாழ்ந்துள்ள வகுப்பினரின்—முக்கியமாக ஷெட்யூல் வகுப்பு, மலைஜாதி ஆகியவற்றைச் சேர்ந்தவரின்—கல்வி, பொருளாதார உரிமைகளை விசேஷ கவனத்துடன் அபிவிருத்தி செய்து, சமூக அநீதி, மற்றும் அது போன்ற எல்லா இடர்ப்பாடுகளினின்றும் அவர்களை அரசாங்கம் பாதுகாக்கும்.*
>
> —இநதிய அரசியல அமைபபுச சடடம ஷரதது—46.

ஹரிஜன வகுப்பினரின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்தி, இதர ஜாதி ஹிந்துக்களுடன் சமமாக வைத்துவிட வேண்டுமென்று மகாத்மா தம் வாழ்நாள் முழுதும் உழைத்து வந்தார். கூடுமானவரை ஹரிஜனங்களிடையே அவர் வசித்து வரவும் முற்பட்டார்.

வாழ்க்கைத் துறைகளில் முன்னேற்றமடையாத சில வகுப்பினர் நாட்டில் இருக்கின்றனர். சமூக சம்பிரதாய முறைகளால் கஷ்டப்படும் வகுப்பினரின் ஜாபிதா ஒன்றை சென்னை சர்க்கார் தயாரித்திருக்கின்றனர். இந்த ஜாபிதா வகுப்பினரும், ஆதிவாசிகளும், சில மலைஜாதியினரும்,

சர்க்காரால் குறிப்பிடப்படும் மற்றும் சிலரும் முன்னேற்ற மடையாதவர்களாய்க் கருதப்படுகின்றனர். சென்னை ராஜ்யத்தில் இந்த வகுப்பினர்களின் மொத்தத் தொகை 80 லட்சம். இவர்களில் 73 லட்சம் பேர் கிராமங்களிலும் 7 லட்சம் பேர் பட்டணங்களிலும் வசிக்கின்றனர். பட்டணங்களில் வசிக்கும் ஹரிஜனங்கள் நிலைமை ஒருவாறு சகிக்கக்கூடியது எனலாம். கிராமங்களிலோ ஹரிஜனங்கள் நிலைமை மிகவும் மோசமாக இருந்து வந்திருக்கிறது. நமது மக்கள் சர்க்காரின் முக்கியப் பொறுப்புக்களில், ஹரிஜனங்களையும் முன்னேற்றமடையாத மற்ற வகுப்பினரையும் சீரடையச் செய்வதற்கான முயற்சியே பிரதானமாக இருந்து வருகிறது.

ஒரு கோடி ரூபாய்

மக்கள் சர்க்கார் 1946-ல் பதவியேற்றதும் ஹரிஜன முன்னேற்றத்திற்கென்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினர். அதை நல்ல முறையில் அந்த வகுப்பினரின் அபிவிருத்திக்காகச் செலவு செய்வதற்குத் திட்டங்கள் வகுக்க, 1947-ல் ஹரிஜன க்ஷேமநலக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. கமிட்டியின் சிபார்சுக்கிணங்க 1949ஆு ஏப்ரல் முதல் ஹரிஜன க்ஷேமாபிவிருத்தியைக் கவனிக்கத் தனி இலாகா அமைக்கப்பட்டது. ஹரிஜன முன்னேற்றத்திற்கென்று முதன் முதலாக விசேஷ கவனம் செலுத்தியது இந்தியாவிலேயே சென்னை ராஜ்யம் தான். தீண்டாமை என்னும் கொடிய வழக்கம் ஹரிஜன

மக்களைப் பன்னெடுங் காலம் மிகவும் தாழ்ந்த நிலையில் வாழச் செய்தது; சமூக, பொருளாதார, கல்வி, அந்தஸ்து முதலிய எல்லாத் துறைகளிலுமே அவர்களைத் தலைதூக்கவிடாமல் அடக்கி ஒடுக்கிவைத்

திருந்தது. மக்கள் சர்க்கார் ஆட்சியேற்றதும், ஹரிஜன ஆலயப்பிரவேசச் சட்டத்தையும், ஹரிஜன சிவில் உரிமைத் தடை யொழிப்புச் சட்டத்தையும் நிறைவேற்றினர். இந்தச் சட்டங்கள் ஹரிஜன மக்களுக்கு மனித உரிமைகளை அளித்துள்ளன.

பிற்போக்கு வகுப்பினர்

ஆதிவாசிகளும், மலைஜாதியினரும் இந்த ராஜ்யத்தில் சுமார் 10 லட்சம் பேர் இருக்கின்றனர். இவர்கள் இதர பொது மக்களிடமிருந்து பிரிந்து, கூட்டம் கூட்டமாக மலைப் பிரதேசங்களில் வாழ்கின்றனர். இவர்கள் தொகையில் பெரும்பாலோர் கோதாவரி, விசாகப்பட்டணம் ஜில்லாக்களிலுள்ள ஏஜன்ஸி பிரதேசத்தில் வசிக்கின்றனர். மற்றவர்கள் நீலகிரி, கர்நூல், சேலம், கோயம்புத்தூர், மலையாளம், தென் கன்னடம் முதலிய ஜில்லாக்களிலுள்ள மலைகளிலும் காடுகளிலும் வசிக்கின்றனர். இவர்களுடைய க்ஷேமாபிவிருத்தியை ஜில்லா கலெக்டர்களே கவனித்து வருகிறார்கள். ஏஜன்ஸி பிரதேசத்திற்கு ஒரு விசேஷ அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். கள்ளர்கள், குறவர்கள், ஏனுதிகள், ஏகாலிகள், இருளர்கள் முதலிய வகுப்பினரின் க்ஷேமாபிவிருத்தி வேலை, தொழில் கமிஷனரிடமிருந்து, 1949-ம் வருஷம் ஹரிஜன க்ஷேமாபிவிருத்தி இலாகாவுக்கு மாற்றப்பட்டது. ஏழை ஹரிஜனங்களுக்கு வீடுகட்ட நிலங்கொடுப்பதும், அவர்களின் கல்விக்காகப் பள்ளிக்கூடங்கள் அமைப்பதும், உபகாரச் சம்பளம் வழங்குவதும், புத்தகங்களுக்கும் ஹாஸ்டல் வசதிகளுக்கும் மானியங்கள் கொடுப்பதும், அவர்கள் குடியிருக்குமிடங்களில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதும், விவசாயஞ் செய்ய நிலங்கள் கொடுப்பதுமான பல க்ஷேம நல வேலைகளை அந்த இலாகா செய்து வருகிறது.

படிப்பும் பகலுணவும்

ஹரிஜன குழந்தைகளின் சவுகரியத்தை முன்னிட்டு

இந்த இலாகா சென்னை ராஜ்யத்தில் 1,200 ஆரம்பப்பள்ளிக் கூடங்களை நடத்துகிறார்கள். இந்தப் பள்ளிகளில் மாணவர்களுக்குப் பகல் உணவு அளிக்கப்படுகிறது. இதற்கு மட்டும் வருஷத்தில் 12 லட்ச ரூபாய்களுக்கு மேல் செலவாகிறது. ஹரிஜனங்களின் கல்வி அபிவிருத்திக்கு சர்க்கார் ஏராளமான பணம் செலவு செய்கின்றனர். மாணவர்களின் உபகாரச் சம்பளமாக 6 லட்சமும், தனி ஹாஸ்டல்களுக்குமானியமாக 13 லட்சமும் 1949–50-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1951–52-ம் வருஷத்துக்கு ஹரிஜன முன்னேற்றத்துக்கு மொத்தத்தில் 1,10,47,000 ரூபாய் சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வீடில்லா ஏழை ஹரிஜனங்கள் எல்லோருக்கும் இலவசமாய் மனைகள் வழங்கச் செய்யவேண்டுமென்று சர்க்கார் சமீபத்தில் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் 3 சென்டு நன்செய் அல்லது 5 சென்டு புன்செய் நிலம் கொடுக்கவேண்டுமென்று அந்த உத்தரவு கூறுகிறது. நடைமுறை வருஷத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தது 1,000 மனைகள் ஆர்ஜிதம் செய்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று கலெக்டர்களுக்கு சர்க்கார் அறிவித்திருக்கின்றனர். 1949–50-ல் 9 ஏக்கர் விஸ்தீரணமுள்ள 191 மனைகள் பல ஜில்லாக்களில் சர்க்கார் நிலங்களிலிருந்து ஜாரி செய்யப்பட்டன. ஆரம்பத்திலிருந்து மொத்தம் 49,208 சர்க்கார் நில மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தனிப்பட்டவர் சொந்த நிலத்தை சர்க்கார் விலைக்கு வாங்கி அதை ஹரிஜனங்களுக்கு வழங்கியது மொத்தம் 46,001 மனைகள். இந்த நில ஆர்ஜிதத்துக்கு ஆகும் செலவு பூராவையும் சர்க்காரே ஏற்றுக்கொண்டு ஹரிஜனங்களுக்கு இலவசமாகவே நிலங்களை ஜாரி செய்ய சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். இந்த வகையில் நடப்பு வருஷத்தில் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு மட்டும் 2½ லட்ச ரூபாயும் இதர ஜில்லாக்களுக்கு 2 லட்ச ரூபாயும் செலவு செய்ய உத்தேசித்திருக்கின்றனர்.

மனையிருந்தால் போதுமா? வீடு கட்டப் பணத்திற்கு

எங்கே போவது என்பது ஹரிஜனங்களின் அடுத்த பிரச்னை யாக இருக்கிறது. இதை எந்த அளவுக்கு சர்க்காரால் தீர்க்க முடியுமென்பது பற்றி ஆலோசனை நடக்கிறது. சீக்கிரம் தக்க உதவி அளிக்கப்படலாம்.

மற்றும் பல வசதிகள்

சமீப காலம் வரையில் பள்ளிக்கூடங்களில் நான்காவது பாரமும் அதற்கு மேலுள்ள வகுப்புகளுக்குந்தான் 'ரெசி டென்ஷியல்' உபகார மானியம் கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது ஒன்ருவது பாரம் முதல் மூன்ருவது பாரம் வரையில் படிக்கும் மாணவர்களுக்கும் தலா 150 ரூபாய் ஹாஸ்டலில் தங்குவதற்காக உபகார மானியம் அளிக்க சர்க்கார் நிச்சயித்திருக்கின்றனர்.

ஹரிஜனங்கள், ஜாதி ஹிந்துக்கள் இவர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகளில் ஏழையாயுள்ள ஹரிஜனங்களின் வழக்கை நடத்த, சட்ட உதவியளிப்பதென்ற ஒரு முறையை சர்க்கார் கைக்கொண்டிருக்கிருர்கள். ஜில்லா கலெக்டர்களுடைய சிபார்சின் பேரில் அவ்வுதவி தரப்படும். அரசியல் சட்டத்தின் கீழ் ஹரிஜனங்களுக்குச் சில பாது காப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமான முழு விவரங்களையும் பரிசீலிக்க நம் ராஷ்டிரபதி ஒரு கமிஷனரை நியமித்திருக்கிருர். இதன் மூலம் ஹரிஜனங் களுக்கு விரைவில் மேலும் சிறந்த முன்னேற்றம் ஏற்படு மென்று எதிர்பார்க்கலாம்.

திருநெல்வேலி ஜில்லாவிலும் ஹரிஜன மக்களின் க்ஷேமாபிவிருத்திக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப் படுகின்றன. பல கிராமங்களில் ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்க நில ஆர்ஜித வேலைகள் நடந்து வருகின்றன. அவர்கள் குடியிருக்கும் பல இடங்களில் 54 ஆயிர ரூபாய் செலவில் கிணறுகளும், 4 ஆயிர ரூபாயில் பாட்டைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் பல கிராமங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது. இது வரை ஹரிஜனங்களுக்கு

13 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் திறந்திருக்கிறார்கள். 850 மாணவர்கள் வரை படிக்கிறார்கள். அவர்களுக்குப் பகல் உணவு பள்ளியில் கொடுக்கப்படுகிறது. இதுவரை 2,500 மாணவர்களுக்கு மேல் உபகாரச் சம்பளம் பெற்றிருக்கிறார்கள். துணிகள் வாங்குவதற்கும் அவர்களுக்கு உதவி செய்கிறார்கள். இந்த வகையில் 2 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாயிருக்கிறது. 936 ஹரிஜன மாணவர்கள் ஹாஸ்டல்களில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் 15 ரூபாய் வீதம் வருஷத்தில் 10 மாதங்களுக்கு மானியம் கொடுக்கப்படுகிறது.

முன்னேற்ற மடையாத வகுப்பினர்கள் யார் என்பதை நிர்ணயிப்பதில் மிகுந்த கஷ்டம் எப்பொழுதும் இருந்து வருகிறது. ஹரிஜனங்கள் தவிர 130 இதர வகுப்பினர்கள் கல்வி சம்பந்தமாய் முற்போக்கில்லாமலிருக்கிறார்களென்று சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இவர்களுடைய கல்வி அபிவிருத்திக்கு 1948–49-ல் 8 லட்ச ரூபாயும், 1949–50-ல் 5 லட்சம் ரூபாயும், 1950–51-ல் ஒரு லட்ச ரூபாயும், சர்க்கார் செலவு செய்திருக்கிறார்கள்.

சென்னை நகரிலுள்ள தக்கர் பாபா வித்தியாலயம் போன்ற பல ஹரிஜன தொழிற்பாடசாலைகள் ராஜ்யம் முழுதிலும் நிறுவப்பட்டிருக்கின்றன. சர்க்கார் இவைகளுக்குப் போதுமான மானியம் கொடுத்துவருகிறார்கள்.

தொழில் அபிவிருத்தி

> *விவசாயம், கைத்தொழில் அல்லது இதர துறைகளில் உழைக்கும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை, ஜீவனத்துக்கேற்ற ஊதியம், கண்ணிய வாழ்க்கைத் தரத்துக்கேற்ற வேலை நிபந்தனைகள், சமூக; கலாசார வசதிகள், ஓய்வின் பூரண நுகர்ச்சி முதலிய சௌகரியங்களைத் தகுந்த சட்டம் அல்லது பொருளாதார அமைப்பின் மூலம் அளிக்க அரசாங்கம் முயலும்.*
>
> —இநதிய அரசியல அமைபபுச சடடம ஷரதது—43.

ஒரு தேசத்தின் கைத்தொழில் அபிவிருத்தியைப் பொறுத்தே, அந்நாட்டின் பொருளாதாரம் அமையும். நாட்டின் பொருளாதார நிலைமைக்குத் தக்கபடி தான் அங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரமும் அந்தஸ்தும் உயர்வடையும். இந்த உண்மையை நாம் மேலைய நாடுகளில் பார்க்கலாம். கைத்தொழில் அபிவிருத்திக்கான மூலப் பொருள்களும் தொழில் சக்தியும் நம் இந்திய நாட்டில் குறைவில்லை. அவைகளைப் போதுமானவாறு உபயோகிக்க வசதியில்லாமல் போயிற்று. அதன் காரணமாக நம் தாய்

நாடு, ஒவ்வொன்றுக்கும் அயல் நாட்டை எதிர்பாக்க வேண்டியதாயிருக்கிறது. யுத்தத்திற்கு முன்புகூட நம் தேசத்தில் ஏராளமான ஜவுளி மில்களும், சணல் மில்களும், சிமென்டு தொழிற்சாலைகளும், சர்க்கரை தொழிற்சாலைகளும், தீப்பெட்டி தொழிற்சாலைகளும் இருந்தன. ஆனால் அவைகள் நம் நாட்டின் தேவைகளைப் பூர்த்திச் செய்யும் அளவுக்கு உற்பத்தி செய்யவில்லை.

சென்னை ராஜ்யத்தில் ஏராளமான கனிப் பொருள்கள் கிடைக்கின்றன; உலோகங்கள் பலவும் நாம்பெறலாம். ராஜ்யத்தின் சில விடங்களில் தங்கச் சுரங்கங்கள் இருப்பதால் நம் நாட்டை பொன் விளையும் நாடு என்று கூறுவதுண்டு. மேலும் 'மைக்கா' நம் ராஜ்யத்தில் நெல்லூர் ஜில்லாவில் ஏராளமாய் வெட்டி எடுக்கப்படுகின்றது. தென் ஆற்காட்டிலே யுள்ள பரந்த பிரதேசத்தில் பழுப்பு நிலக்கரி இருப்பதாகவும், இது உலகத்திலேயே மிகச்சிறந்த நிலக்கரி என்றும் நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். இந் நிலக்கரிச் சுரங்கத்தைப் பயன் படும்படி செய்வதற்கான ஏற்பாடு குறித்து, நம் சர்க்கார் யோசித்து வருகிறார்கள். சிமென்டு உற்பத்தியும் நம் ராஜ்யத்தில் பெரிதும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஜில்லாக்களில் சுண்ணும்புக்கல் கிடைப்பதால், அவ்விடங்களில் சிமென்டு தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன.

முக்கிய ஆலைகள்

சென்னை ராஜ்யத்தில் பருத்தி நூல் நூற்பு, நெசவு மில்கள் 81 இருக்கின்றன. அவைகளில் சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். சென்னை ராஜ்யத்திலுள்ள சுமார் 400 எஞ்ஜினீயரிங் தொழிற்சாலைகளில் 25,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். சர்க்கரை உற்பத்தியும் பெருமளவுக்கு அதிகரித்திருக்கிறது, ராஜ்யத்தில் தற்போது 13 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. வருஷத்தில் 52,000 டன் சர்க்கரை இவற்

றில் உற்பத்தியாகிறது. இந்தக் கைத்தொழில்களின் வளர்ச்சியில் சர்க்கார் விசேஷ சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர்.

திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களில் தீக்குச்சித் தொழிற்சாலைகள் 76-க்கு மேல் இருக்கின்றன. இவைகளில் 5,000-க்கு மேற்பட்ட தொழிலாளர் வேலை செய்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லா தாழையூத்தில் அமைக்கப் பட்டிருக்கும் சிமென்டு தொழிற்சாலை வருஷத்தில் ஒரு லட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடியது.

ஜவுளி, சர்க்கரை, சிமென்டு, வனஸ்பதி, மோட்டார்கார் முதலிய தொழிற்சாலைகளின் அபிவிருத்தியில் நம் சர்க்கார் விசேஷ அக்கறை காட்டுகின்றனர். சமீபத்தில் 352,000 கதிர்களை 23 புது ஜவுளி மில்களுக்கும் 12 பழைய மில்களுக்கும் பகிர்ந்து கொடுத்தனர். சர்க்கரை வருஷ உற்பத்தியை 120,000 டன் ஆக நிர்ணயித்து, அந்த அடிப்படையில் சர்க்கரை ஆலைகளை அதிகப்படுத்த சர்க்கார் முயற்சிசெய்து வருகின்றனர்.



நிதி உதவி அளிக்க ஏற்பாடு

சோப்பு, கயிறு, மீன் எண்ணெய், பட்டு, காகிதம், பீங்கான் சாமான்கள் உற்பத்தி தொழிற்சாலைகளை தற்போது நம் ராஜ்ய சர்க்காரே நடத்துகின்றனர். இதர கைத்தொழில்களுக்கு வேண்டிய பண உதவி செய்கிறார்கள். அரசாங்க நிதி உதவி பெற்று நடக்கும் தொழிற்சாலைகள் நம் ராஜ்யத்தில் பல இருக்

கின்றன. திருநெல்வேலி ஜில்லாவில் கழுகுமலை சோப் தொழிற்சாலைக்கு 1,900 ரூபாயும், தூத்துக்குடி நூல் நூற்பு மில்லுக்கு 5 லட்ச ரூபாயும், சர்க்கார் கடன் உதவி செய்திருக்கிறார்கள். நாசரத், அடைக்கலாபுரம், பாளையங் கோட்டை, தூத்துக்குடி, வடக்கன்குளம், சாத்தான்குளம் முதலிய இடங்களில் கைத்தொழில் பள்ளிக்கூடங்களை நடத்த சர்க்கார் வருஷத்தில் 8,000 ரூபாய் வரை பண உதவி செய்கின்றனர்.

பனந்தும்பு தயாரிப்பது திருநெல்வேலி ஜில்லாவுக்குத் தனிப்பட்டதான ஒரு கைத்தொழில். இதன் அபிவிருத்தி யைக்கவனிக்க, ஒரு பிரதேச ஆலோசனை போர்டை சர்க்கார் நியமித்துள்ளனர். கைத்தொழில்களுக்கு சர்க்கார் நிதி உதவி செய்வதுபோக, அதிகமான தொகை கடன் கேட் பவர்களுக்கு வசதியளிக்கும் நோக்கத்தில் கைத்தொழில் நிதி உதவி கார்ப்பரேஷன் என்ற ஸ்தாபனத்தை நிறுவி இருக்கிறார்கள். இதன் மூலதனம் 2 கோடி ரூபாய். சர்க்கார் பாதிக்கு மேல் பங்கெடுத்துக் கொள்கிறது. பாக்கியிருக்கும் பங்குகளை தொழில் சமூகத்தினருக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். இதன் மூலம் பெரிய பெரிய கைத்தொழில்களெல்லாம் பண உதவி பெறமுடியும்.

சங்கரன்கோவில், கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம் தாலூகாக்களில் பருத்தி விளையும் கரிசல் காடுகளில் ஏராள மான 'ஜின்னிங்' ஆலைகள் இருக்கின்றன. இவைகளில் கொட்டை நீக்கப்பட்ட பிறகு, பஞ்சு, தூத்துக்குடியி லுள்ள நூல் நூற்கும் மில்லுக்கு வந்து சேரும். தூத்துக் குடியிலும் விக்கிரமசிங்கபுரத்திலும் இரண்டு பெரிய பஞ்சு ஆலைகளிருக்கின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கு வேலை செய்கின்றனர்.

தொழிலாளர் நலன்

தொழில் அபிவிருத்தியை விரும்பினால், தொழிலாள ருடைய க்ஷேம நலனை கவனிக்கவேண்டியது மிகவும்

அவசியம். தொழிலாளர்களின் ஊதியம், அந்தஸ்து, வாழ்க்கைத் தரம் எல்லாவற்றையுமே உயர்த்தும் முறையில், சர்க்கார் பலவித சட்டங்களை வகுத்திருக்கின்றனர். தொழிற்சாலை சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன. கடைச் சிப்பந்திகள் சட்டமொன்று சமீபத்தில் அமுலுக்கு வந்தது. இவைகளின் மூலம் தொழிலாளர்களின் வேலை நேரம், ஓய்வு, விடுமுறை நாட்கள், சம்பளம், கிராக்கிப்படி முதலியன நிர்ணயிக்கப்படுகின்றன. இது தவிர, சென்னை ராஜ்யத்தில் அநேகமாய் எல்லாவித தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச சம்பளத்தையும் சர்க்கார் நிர்ணயித்திருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்படுந் தகராறுகளைத் தீர்த்துவைக்க 'டிரிப்யூனல்கள்' நியமிக்கப்பட்டிருக்கின்றன. தொழில் உலக அமைதிக்கு இந்த முறை மிகவும் உபயோகமாயிருக்கின்றது.

யுத்த பிற்காலத் திட்டங்களில் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்ட, வேலை தேடித்தரும் ஸ்தாபனம் முதலில் மாஜி ராணுவத்தினருக்காக ஏற்பட்டது. தற்போது அது ராஜ்ய முழுதிலும் நல்ல வேலை செய்து வருகிறது. பொதுவாக வேலையில்லாமலிருக்கும் எல்லாத் தொழிலாளர்களுக்குமே உபகாரமாயிருக்கிறது. ஜில்லாதோறும் வேலை தேடித் தரும் ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேலை தேடித் தருவது மட்டுமின்றி, இந்த ஸ்தாபனங்கள் மூலம் தொழில் நுணுக்கப் பயிற்சியுமளிக்கப்படுகிறது.

திருநெல்வேலி ஜில்லாவுக்கு வேலை தேடித்தரும் ஸ்தாபனம் பாளையங்கோட்டையில் 1947-ம் வருஷம் நிறுவப்பட்டது. முதலில் மாஜி ராணுவத்தினருக்காக ஆரம்பித்து, 1948-ம் வருடம் மார்ச்சு முதல் எல்லோருக்கும் உதவியளிக்கிறது.

வாக்குரிமை

மக்கள் சபைக்கும், ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்ட சபைக்கும், வயது வந்தோர் வாக்குரிமை என்னும் அடிப்படையின் கீழ் தேர்தல் நடைபெறும்.

—இநதிய அரசியல அமைபபுச சடடம ஷரதது—326

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல் இந்திய மக்களின் இப்போதைய முக்கியப் பொறுப்பாகும். உண்மையான ஜனநாயக முறை எந்த அளவுக்கு நம் நாட்டில் ஸ்தாபிக்கப்படுகிறதோ, அதற்குத் தகுந்தபடி சுதந்திரமும் நிலைக்கும்; சுய ஆட்சியும் நன்கு நடைபெறும். இந்த உயர்ந்த தத்துவங்களை மனதிற் கொண்டே, இந்திய ஜனத் தலைவர்கள் அரசியல் நிர்ணய சபை நிறுவி, சுதந்திர இந்திய ஜனநாயக அரசாங்க அமைப்புக்கான சட்டங்களை நிறைவேற்றினர்.

1950-ம் வருஷம் ஜனவரிமீ 26-ந் தேதியன்று இந்த அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற, மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட, மக்கள் சர்க்கார் நிர்வாகம்தான், இந்த அரசியல் சாசனத்தின்

நோக்கமாகும். எனவே, மக்களுக்குத்தான் இங்கு பூரண அதிகாரம் உண்டு.

ஜனநாயக அரசியல் அமைப்புக்குள்ள பொறுப்பு அதிகமானதாகும். இதே மாதிரி ஜனநாயக ஆட்சி விரும்பும் மக்களுடைய பொறுப்பும் அதிகமாகியுள்ளது. சுதந்திரமென்னும் குழந்தை, ஜனநாயகமென்னும் தொட்டிலில் தவழ்ந்து வளருவதற்கு, வாக்குரிமை சரியான சந்தர்ப்பமளிக்கிறது.

துணிச்சலான தீர்மானம்

நம் தேசத் தலைவர்கள் எடுத்தவுடனேயே வயது 'வந்தோர் எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுக்கத் துணிந்தனர். வயது வந்தோர் ஓட்டுரிமை என்பது தேச ஆட்சியில் எவ்வளவு மகத்தான சக்தி வாய்ந்த தென்பதையும், அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் நம் தலைவர்கள் தெரிந்து கொள்ளாமலில்லை. ஆனால் ஜனநாயக சர்க்காரென்றால், அதில் மக்களில் பெரும்பாலானவர்களின் உண்மைப் பிரதிநிதிகள் நிர்வாகம் நடத்த வேண்டும். இந்த ஒரே நோக்கத்தில்தான், நம் தலைவர்கள் மிகவும் தைரியத்துடன் இம் முறையை அனுஷ்டிக்க முன் வந்திருக்கிறார்கள்.

ஜனநாயக மென்பது மக்களின் சர்க்கார். மக்கள் எல்லோரும் சேர்ந்து ஆட்சி புரியவேண்டும். அப்படிச் செய்வது நடைமுறையில் சாத்தியமானதல்ல. எனவே, மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களின்மூலம் ஆட்சி நடத்துவதென்ற சம்பிரதாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்டசபை அங்கத்தினர்களை மக்கள் தேர்ந்தெடுத்து விடுகிறார்கள். அந்தச் சட்டசபை அங்கத்தினர்களில் பெரும்பாலானவர்களைக் கொண்ட அரசியல் கட்சியினர், தங்களுடைய தலைவரைத் தேர்ந்தெடுப்பர். அத் தலைவர் ராஜ்யத்தின் முதல் மந்திரியாக நியமிக்கப்படுவார். ராஜ்ய நிர்வாகத்தில் தமக்கு உதவி புரியச் சிலரை தம் சக மந்திரிகளாய் நியமிக்கவேண்டு

மென்று, முதல் மந்திரி, ராஜ்ய கவர்னருக்கு சிபாரிசு செய்வார். இம்மாதிரி மந்திரி சபையமைக்கப்படும். மந்திரிகள் சட்ட சபைக்கும், சட்டசபை மக்களுக்கும் பொறுப்பாவர். இந்தப் பார்லிமெண்டரி முறைகள் பூராவும் இந்திய அரசியல் சட்டத்தில் விவரமாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் தொகை அதிகரித்தல்

இந்த நியதி மூலம், 5 வருஷத்திற்கு ஒரு தடவை பொதுத்தேர்தல் இன்றியமையாததாகிறது. தேர்தலில் வாக்காளராவதற்குச் சில தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட யோகியதாம்ச நிபந்தனைகள் பிரகாரம், 1920-ம் வருஷம் ஜனத்தொகையில் 2 அல்லது 3 சதவிகிதமும், 1937-ல் 14 சதவிகிதமும் வாக்காளரானார்கள். இப்பொழுது வயது வந்தோர் ஓட்டுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது, ராஜ்ய மக்களில் 21 வயது பூர்த்தியானவர்கள் எல்லோரும் வாக்காளர்கள்தான். இந்தியப் பிரஜையாக இருக்கவேண்டியதும், 21 வயது பூர்த்தியாக வேண்டுமென்பதுதான், வாக்காளராவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முக்கிய யோக்கியதாம்சங்கள். இவற்றின்படி ஜனத்தொகையில் ஏறக்குறைய பாதிப்பேர் வாக்காளராகிறார்கள்.

சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை, 1951-ம் வருஷத்து ஜன சங்கியைக் கணக்குப்படி, 56,952,332. அதில் ஆண்கள் 28,413,661. பெண்கள் 28,538,671. மொத்த ஜனத்தொகையில் ஆண்கள் 49·9 சத விகிதமும், பெண்கள் 50·1 சத விகிதமும் இருக்கிறார்கள். 1941-ம் வருஷத்து கணக்குப்படி ராஜ்யத்தின் ஜனத்தொகை 49,847,508. எனவே சென்ற பத்து வருஷங்களில் சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை 7,104,824 அதிகரித்திருக்கிறது. 1941-ல் ஒரு சதுர மைலுக்கு 390 பேர்கள் வசித்தார்கள்; 1951-ல் 446 பேர் வசிக்கிறார்கள்.

1951-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 28 நாட்களிலும், சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஜனசங்கியைக் கணக்கெடுப்பவர்


ஆதாரக் கல்வி பயிற்சி—குருவிகுளம்
கருப்பட்டி தயாரிப்பு
பனைமரம் அளிக்கும் பல்வித நல்தொழில்

நீரைத் தேக்கி, நிதியைப் பெருக்குவோம்

பாபநாசம் நீர்த்தேக்கம்

மணிமுத்தாறு திட்டப் பிரதேசம்

ங்களின் திட்டம்—மணிமுத்தாறு

மின்சார நிலையம்—பாபநாசம்

தேக்கம்

கள் வேலை செய்தார்கள். இதற்கு முன்னுல் நடைபெற்ற ஜன சங்கியைக் கணக்கெடுப்பு மாதிரியில்லாமல், இந்தக் கணக்கெடுப்பில் சர்க்காரால் அதிக கவனம் செலுத்தப் பட்டு, அதிகப்படியான புள்ளி விவரங்களும் தயாரிக்கப் பட்டிருக்கின்றன.

பிரதிநிதிகள் எண்ணிக்கை

தற்போதுள்ள வாக்காளர் ஜாப்தாக்களின் பிரகாரம் சென்னை ராஜ்யத்தில் 271 லட்சம் ஓட்டர்கள் இருக்கிறார் கள். இவர்கள் நம் ராஜ்ய சட்டசபைக்கு 375 அங்கத் தினர்களையும், மத்திய சட்டசபையான டெல்லி பார்லி மென்டில் மக்கள் சபைக்கு நம் ராஜ்யப் பிரதிநிதிகளாய் 75 அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சென்னை மேல் சபையில் மொத்தம் 72 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்களில் ஸ்தல ஸ்தாபனங்களின் மூலம் 24 பேரும், பட்டதாரித் தொகுதியிலிருந்து 6 பேரும், ஆசிரி யர் தொகுதியிலிருந்து 6 பேரும் தேர்ந்தெடுக்கப்படுவர், சென்னை ராஜ்ய கீழ்ச் சட்டசபை அங்கததினர்கள் எல் லோரும் சேர்ந்து, தனியாக 24 பேரை சென்னை மேல் சபைக்குத் தேர்ந்தெடுப்பார்கள். இவர்களைத் தவிர, மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் 12 அங்கத்தினர்களை நியமனம் செய்வார்.

டெல்லி பார்லிமென்டின் மேல் சபையில் மொத்தம் 205 அங்கத்தினர்கள் இருப்பர். 'கவுன்ஸில் ஆப் ஸ்டேட்' எனப்படும் அந்தச் சபையில், சென்னை ராஜ்யத்தின் சார் பாக 27 பேர் அங்கம் வகிப்பார்கள்.

தவருன முறைகளைத் தவிர்க்க

பொதுவாக, தேர்தல் காலங்களில், இறந்தவர்கள் வந்து ஓட்டுப் போடுவதுதான் மிகவும் விசித்திரமானது. அபேட்சகர்களின் ஆட்கள் இதற்கென்று விசேஷ கவனம் செலுத்தி, ஜாப்தாவிலுள்ள பெயர்களில் இறந்துபோனவர் களுக்குப் பதில் நபர்கள் தயார் செய்யக்கூடும். அவர்கள்

வந்து இறந்து போனவர்கள் பெயர்களைத் தம்மதென்று சொல்லி ஓட்டுப்போட்டு விட முடியும். இந்தக் கெடுதலைத் தடுப்பதற்கு, வரப்போகும் தேர்தலில் ஒரு அடையாள மிடும் முறையைக் கையாளவேண்டுமென்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஒருவர் ஓட்டுப் போடவரும்பொழுது அவருடைய விரலில் ஒரு வித மை பூசப்படும். அந்த மை குறைந்தது ஒரு வாரம் அழியாமலிருக்கும். எனவே, எவரும் தப்பான பெயரில் மீண்டும் ஓட்டுப் போடமுடியாது.

அகில இந்திய ரீதியில் பரிசீலனை

சென்னை ராஜ்யத்தில் தேர்தல் தொகுதிகள் பிரிப்பதில் ஜில்லா எல்லைகளை மட்டும் கூடுமானவரை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், முன்னேற்ற மில்லாத வகுப்பினர்களுக்கு ஸ்தானம் ஒதுக்கப்படும் தொகுதிகள் மட்டும் இரட்டை அங்கத்தினர் தொகுதி களாகவும், மற்றைய தொகுதிகள் ஒற்றை அங்கத்தினர் தொகுதிகளாகவே யிருக்கவேண்டுமென்றும், சென்னை சர்க்கார் சிபாரிசு செய்தனர். அவ் விஷயம் சென்னை அசம்பிளி யிலும், கவுன்சிலிலும் நன்கு விவாதிக்கப்பட்டு சர்க்காரின் சிபாரிசு அங்கீகரிக்கப்பட்டது.

இது பற்றிய எல்லா விஷயங்களையும் அகில இந்திய ரீதியில் சரிவர ஆராய்ந்து, இந்தத் தேர்தலை நடத்த, பிரத்தி யேகமாய் ஒரு தேர்தல் கமிஷனரை மத்திய சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். அவர் தேர்தலின் அம்சங்கள் ஒவ்வொன்றையும் தாமே கவனித்தும் தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். தேர்தல் தொகுதிகள் நிர்ணயித்தல், தேர்தல் நடத்துவதற்கான சாமான்களைத் தயாரித்தல், முதலியன நடைபெற்று வருகின்றன.

சென்னை ராஜ்யத்தின் வாக்காளர் ஜாப்தா தயாரிப் பதற்கு 29 லட்ச ரூபாய் செலவாயிருக்கிறது. காகித விலை மட்டும் 6 லட்சம். தேர்தல் நடத்த 3 லட்சம் 'பாலட்' பெட்டிகளுக்கு மேல் வேண்டியிருக்கின்றன. அவைகள்

எஃகு பெட்டிகளாகவே யிருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சராசரி ஒரு பெட்டிக்கு 6 ரூபாய் விலையாகிறது. எனவே அந்த வகைக்கு குறைந்தது 20 லட்சம் செலவாகும். இன்னும் தேர்தல் ஸ்தலங்கள், அதற்கு வேண்டிய இதர சாமான்கள், காவல் கட்டுப்பாடுகளெல்லாம் இருக்கின்றன.

அஸ்திவார மிடுவதிலும் கூட்டு முயற்சி

இதற்கிடையில், அரசியல் கட்சினர் பலர் தங்கள் கருத்துக்களை அறிவிக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டது. அரசாங்கம் இதற்கென பல்வேறு அரசியல் கட்சியினரை நேரில் அழைத்து விரிவான ஆராய்ச்சி நடத்தியது. நம் ராஜ்யத்திலுள்ள அரசியல் கட்சியினர் பலரும் அதில் கலந்துகொண்டது பாராட்டத்தக்கதாகும். ஜனநாயக வளர்ச்சிக்கு இத்தகைய காரியங்கள் எவ்வளவு அவசியமானவை என்பதைப்பற்றி அதிகம் கூற அவசியமில்லை.

பொதுஜனத் தொடர்பு

ஜனநாயகத் தன்மையில் வளரும் அரசாங்கம், அவ்வப்போது தன்னுடைய அலுவல்கள் சம்பந்தமாகவும், பொது நல விஷயங்கள் சம்பந்தமாகவும், பொதுமக்களுடன் உறவு பூண்டு, அவர்களுக்குத் தேவையான விவரங்களை அறிவிக்க வேண்டியது அவசியம். இத் துறையில் செய்தி இலாகா தன்னால் இயன்ற அளவு தொண்டாற்றி வந்துள்ளது.

ஜில்லா விவரங்கள்

திருநெல்வேலி ஜில்லாவின் ஜனத்தொகை 1941-ம் வருஷ கணக்குப்படி 2,237,379. 1951-ம் வருஷ கணக்குப்படி 2,447,949. பத்து வருஷத்தில் 210,570 அதிகரித்திருக்கிறது. இந்த அதிகரிப்பு சத விகிதம் 9·4. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மொத்த வோட்டர்கள் 1,224,376. ஜில்லா தேர்தல் தொகுதிகள் 14. ராஜ்யஅசம்பிளி ஸ்தாபனங்கள் 17. மத்திய மக்கள் சபைக்கு ஜில்லா பிரதிநிதிகள் 3,

அமைதியும் அபிவிருத்தியும்

தேசிய வாழ்க்கை சம்பந்தமான எல்லா ஸ்தாபனங்களிலும், சமூக, பொருளாதார, அரசியல், நீதி முறை பொருந்தி விளங்குதற்குரிய ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தி, அதைத் திறமையுடன் பாதுகாக்கும் வகையில் மக்களின் நலத்தைப் பேணி வளர்க்க அரசாங்கம் முயற்சி செய்யும்.

—இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்
ஷரத்து—38.

ஜனநாயகமுறை நன்கு வெற்றிகரமாய் நடைபெற, ஆட்சியாளரின் போக்குக்கு ஆக்க வகையான எதிர்ப்பு அவசியம். அந்த எதிர்ப்பு, சர்க்காரின் பொறுப்பை உணர்த்துவதாகவும், பல நல்ல காரியங்களைச் செய்ய சர்க்காரைத் தூண்டுவதாகவும் இருக்கவேண்டும். ஆனால் நம் மக்கள் சர்க்கார் பதவியேற்றதும் சர்க்காரை எதிர்க்கும் நோக்கத்தில் சிலர் நாசவேலையில் ஈடுபட்டனர். ரயில்களைக் கவிழ்ப்பதும், இரவில் கிராமங்களில் புகுந்து கொள்ளையடிப்பதும், கொலைகள் செய்வதுமான பல இழி தொழில்களை மேற்கொண்டனர். இச் செயல்கள் பெரும்பாலும் ஹைதராபாத் எல்லைப் பிரதேசங்களிலும்,

ராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களிலும் அடிக்கடி நடைபெற்றன. ஒரு சிலர் தஞ்சாவூர் ஜில்லாவில் விவசாயத் தொழிலாளரைக் கிளப்பி விட்டு வேடிக்கைப் பார்த்தனர். நம் சர்க்கார் இந்தக் கூட்டத்தினருக்கு எவ்வளவோ நல்லுபதேசங்கள் செய்து பார்த்தனர்; பயன்படவில்லை. பொதுமக்களின் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் வகையில் அவர்கள் செயல்கள் இருந்தன. 1947-ல் சென்னை பொதுஜன அமைதிப் பாதுகாப்பு அவசரச் சட்டம் ஒன்றை சர்க்கார் பிரகடனம் செய்தனர். அதன் பிரகாரம் பொது மக்களுக்குத் தொல்லை தரும் செயல்களில் இறங்குகிறவர்களையும், அவ்வாறு செய்ய முயலுவதாகச் சந்தேகப்படுபவர்களையும் பாதுகாப்பில் வைத்தனர். சில அரசியல் கட்சிகளையும், சங்கங்களையும், கோஷ்டிகளையும் சட்ட ஆராதமானவை என அறிவித்தனர். போலீஸ் படைகளை விஸ்தரித்தனர். துப்பறியும் இலாகா மிகவும் தீவிரமாய் வேலைசெய்ய வாரம்பித்தது. 1946-ல் போலீஸ் இலாகா செலவு 4 கோடி ரூபாய். 1949-ல் 7 கோடி ரூபாய். தனிப்பட்ட நிர்வாகத்திலிருந்த நெருப்பணைக்கும் படை, போலீஸுடன் இணைக்கப்பட்டது. மதுவிலக்குச் சட்ட அமுலும் சிறிது சிறிதாக போலீஸ் இலாகாவுக்கு மாற்றப்படுகிறது.

நாசவேலைக் கூட்டத்தாரை நசுக்க

நாசவேலைக்காரர்களை அடக்குவதில் போலீஸ் இலாகா புரிந்துவரும் சேவை பிரதானமானது. சட்ட சபையில் எதிர்க்கட்சி அங்கத்தினர்கூட போலீஸ் இலாகாவைப் பாராட்டினார்கள். சமூகப் பயங்கர வாதிகள் இப்பொழுது இருக்குமிடம் தெரியாமல் ஒழிந்தனர்.

திருநெல்வேலி ஜில்லாவில் 1949-ல் பாபநாசம், விக்ரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம், மன்னார்கோவில், தூத்துக்குடி முதலிய இடங்களில் சமூக விரோதிகளின் தொல்லைகள் சிறிது அதிகமாயிருந்தன. பலவிடங்களில் நாட்டு வெடிகள் போடப்பட்டன. 1950-ம் வருஷம் பிப்ரவரி 17உ

தூத்துக்குடிக்கும் மீளவிட்டான் ஸ்டேஷனுக்கும் இடையே ஒரு சாமான் ரயில்வண்டி கவிழ்க்கப்பட்டது. இதற்குக் காரணமானவர்களைப் போலீஸார் கண்டுபிடித்து விட்டனர். மற்றும் அங்கிருந்த தொல்லைகளையும் நன்கு அடக்கிவிட்டனர்.

பஞ்ச நிவாரணம்

பலவித காரணங்களை முன்னிட்டு, தேசத்தில் உணவு தானியப் பற்றுக்குறை ஏற்பட்டது. அத்துடன், ஜவுளி பஞ்சமும், குடியிருப்பு வீடு கிடைக்காத கஷ்டமும் சேர்ந்து கொண்டன. இந்தத் தொல்லைகளைப் போக்க நம் சர்க்கார் அவர்களாலான எல்லா முயற்சிகளையும் 'எடுத்துக்கொண் டனர். இன்னும் தொடர்ந்து முயற்சித்து வருகிறார்கள். இப்படிப்பட்ட கஷ்ட சமயத்தில், பட்ட காலிலே படும் என்பதற்கேற்ப, சென்ற நான்கு வருஷகாலமாய் நம் நாட்டில் பருவமழையும் சரிவரப் பெய்யவில்லை. நிலங் களில் விளைச்சல் மிகவும் குறைந்துவிட்டது. விவசாயி களுக்குக் கஷ்டம் அதிகம். மழையில்லாமல் போன துடன் நிற்காமல், பலவிடங்களில் அமித மழையும் புயல் காற்றும் ஏற்பட்டு, கொஞ்சங் கொஞ்சம் இருந்த பயிர் களையும் நாசமாக்கிவிட்டன.

மழையுமில்லை. நிலங்களில் விளைச்சலுமில்லை. சாப்பாட் டுக்கே திண்டாட்டம். அவ்வேளையில் விவசாயிகள் நிலங் களுக்குத் தீர்வை எங்கிருந்து செலுத்துவார்கள்? சர்க்கார் இந் நிலையைக் கவனித்தது. இப் பஞ்ச நிலைமைக்குத் தக்கபடி அவர்களுக்கு நிவாரண வசதி செய்யவேண்டு மென்று நிச்சயித்தனர். நஷ்டத்திற்குத் தகுந்தவாறு ஒவ் வொரு வருஷத்திலும் வரிகளை வஜா செய்தனர். இறுதி யாக முழுவரி வஜா செய்துவிட்டனர். 1946–47-ல் ரூ. 2,22,034-ம், 1947–48-ல் ரூ. 7,88,186-ம், 1948–49-ல் ரூ. 2,48,775-ம், 1949–50-ல் ரூ. 7,60,229-ம் வரிவஜா செய்திருக்கிறார்கள். சாப்பாட்டுக்குத் தானியமில்லாமல் கஷ்டப்படும் பிரதேசங்களில் தானியக் கடைகளை

ஸ்தாபித்தனர். வேலையில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்காக பல மராமத்து வேலைகளை ஜில்லாவாரியாக ஆரம்பித்தனர். மிகவும் கஷ்டப்படும் ஏழைக் குடும்பங்களுக்கு ரொக்க உதவியும் சர்க்கார் செய்தனர். திருநெல்வேலி ஜில்லாவில் 15,500 ரூபாய் வரை அம்மாதிரி ரொக்க உதவி செய்யப்பட்டிருக்கிறது.

பெரிதும் பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட விளாத்திக்குளம் பிரதேசத்தில் 6 கஞ்சி தொட்டிகள் அமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளனர். பலர் நன்கொடை யளித்திருக்கிருர்கள்.

மதுவரக்கன் மாய்ந்தான்

1937-ம் வருஷத்தில் முதலாவது காங்கிரஸ் மந்திரி சபை பதவி ஏற்றதுமே மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பரீக்ஷார்த்தமாக ஆரம்பத்தில் அதை சேலம் ஜில்லாவில் மட்டும் அமுல் நடத்தினர். அந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்து வெற்றிபெறு முன் மந்திரி சபை பதவியிலிருந்து விலகும்படியான ஒரு சந்தர்ப்பம் நேர்ந்தது. அப்பொழுது ஆட்சிபுரிந்த, ஆலோசகர் சர்க்கார், மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்து விட்டனர். பின்னர் 1946-ல் மக்கள் ஆட்சி மீண்டும் ஆரம்பமானதும், மதுவரக்கனைத் தொலைக்கும் வேலையில் நம் சர்க்கார் முனைந்தனர்.

படிப்படியே விஸ்தரித்தல்

1946-ம்வருஷ அக்டோபர் முதல் தேதியிலிருந்து சேலம் முதலிய எட்டு ஜில்லாக்களில் மதுவிலக்கு முறை கொண்டு வரப்பட்டது. வருஷத்தில் எட்டு ஜில்லாவாக இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டு, 1948-ம்வருஷ அக்டோபர்மீ 2-ம் தேதி சென்னை ராஜ்யமுழுவதிலும் பூர்ண மதுவிலக்கு அனுஷ்டிக்கப்பட்டது. மதுவரக்கன் மாண்ட அத்தினத்தை நம் மக்கள் எவ்வாறு குதூகலத்துடன் கொண்டாடினர்களென்பது இன்றும் எல்லோருக்கும் நன்கு நினைவிருக்கும்.

மதுவிலக்குச் சட்டத்தால் ஏழை மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் மாறுதலைப் பார்த்தவர்கள்தான் இந்த தார்மீக முன்னேற்றத் திட்டத்தைப் பாராட்ட முடியும். நிரந்தரக் கடனாளியாக இருந்த குடியானவர்கள் இன்று சிறிது பணம் சேமித்து மனைவி மக்களை ஆதரித்து மகிழ்கின்றனர். குடி தொலைந்தது ; மக்களின் மதி மயக்கமும் தீர்ந்தது ; பொதுவாகத் தொழிலாளி வர்க்கமும், குறிப்பாக அவர்கள் மனைவிமார்களும் நம் சர்க்காரின் கருணையை வாயாரப் புகழ்கின்றனர்.

மதுவிலக்கு அமுலுக்கு வருமுன், கலால் இலாகா மூலம் சர்க்காருக்கு 17 கோடிரூபாய்க்குமேல் வருமானம் இருந்தது. சர்க்காரின் மதுவிலக்குக் கொள்கையால், வருஷந்தோறும் அந்த 17 கோடி ரூபாய் நஷ்டமானதுடன் மதுவிலக்கு சட்டத்தை அமுல் நடத்த 4 கோடிக்குமேல் சர்க்காருக்குச் செலவும் ஏற்படுகிறது. ஆனால் சமூகத்துக்கு இதனால் கிடைக்கும் லாபமோ மிக அதிகம். கலால் வருமானம் 17 கோடியென்றால், குடியில் ஏழை மக்கள் செல்விட்ட தொகை அதைப் போல் நான்கு மடங்கு எனக்கூறலாம். இப்போது அந்தப் பணம் ஏழை மக்களுக்கு லாபம். கள்ளுக்குச் செலவான பணம் வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களுக்காக உபயோகப்படுகிறது. இதனால் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்கிறது. நேரடியாக 17 கோடி ரூபாய் சர்க்காருக்கு நஷ்டமென்றால், அதைப் போல் நான்கு மடங்குத் தொகை சமூகத்திற்கு லாபமாகும்.

கள்ளுக் கடைகளுக்குப் பதிலாக பெரும்பாலும் இப்பொழுது தேநீர் கடைகளும், காபி ஹோட்டல்களும் இருக்கின்றன. அரக்கனின் கூச்சலும் அடிதடிகளும் இன்றி அங்கு அமைதி நிலவுகிறது. பழக்கமாகக் குடித்துக்கொண்டிருந்தவர்களுக்கு அப்பழக்கத்தை மாற்ற சர்க்கார் மதுவிலக்கு இலாகாவே பலவித உல்லாசப் பொழுது போக்கு சாதனங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். ரேடியோக்கள், நடனம், கதாகாலக்ஷேபங்கள், சடுகுடுபோன்ற விளையாட்டுகள் எல்லாம் அவர்களுக்காக நடத்தப்படுகின்றன.

மாஜி கள்ளிறக்குவோர் பிரச்னை.

மக்கள் சர்க்காரின் மதுவிலக்குத் திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சிலருண்டு என்றால், அவர்கள் மாஜி கள் இறக்கும் தொழிலாளர்களே. கள் ஒழிக்கப்பட்டதால் இவர்களுக்கு வேலையில்லை. இவர்களுடைய வாழ்க்கைக்கு என்ன செய்வது? இதை சர்க்கார் தீவிரமாய் ஆலோசித்தனர். வெல்ல உற்பத்திக்காக பதநீர் இறக்க அனுமதிப்பது, கூட்டுறவு சங்கங்கள் பல ஏற்படுத்தி அதில் மாஜி கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு வேலை வசதிகள் செய்து கொடுப்பது, பல இலாகாக்களிலும் அவர்களை வேலைக்கு நியமித்துக்கொள்வது என்ற பல திட்டங்கள் மூலம், மாஜி கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கு ஜீவன வசதியளிப்பதென்று நம் சர்க்கார் தீர்மானித்தனர். திருநெல்வேலி ஜில்லாவில் மட்டும் 392 வெல்லம் தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டன. கிட்டத்தட்ட 45,000 மாஜி கள்ளிறக்குகிறவர்கள் இந்த சங்கங்களில் அங்கத்தினர்களாய்ச் சேர்க்கப்பட்டனர். அவர்களின் பங்குத் தொகையாக 53,900 ரூபாய் சர்க்காரால் கொடுக்கப்பட்டது. பதநீரைப் பானமாக விற்கப் பல இடங்களில் சர்க்கார் அனுமதித்திருக்கின்றனர். பதநீர் விற்க 4,200 பேர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டுள்ளது. 1950-ம் வருஷம் முடிய சுமார் 95,16,000 ரூபாய் பெறுமான 1,770,000 மணங்கு வெல்லம், இந்தச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. 9 பால் சப்ளை சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 36,708 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய குடும்பத்தினர்களான 1,83,600 பேர்களுக்கு ஜீவனவசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

நீதி நிர்வாகப பிரிவினை

1949-ம௵ அக்டோபர்மீ 2-ம் தேதி நம் ராஜ்யத்தின் ஆட்சி முறையில் ஒரு புதிய சகாப்தம் உதயமாயிற்று. நீதி வழங்குதலும், நிர்வாக பரிபாலனமும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டன. சிவில் வழக்குகளை விசாரிக்கும் ஜட்ஜ்களும்,

கிரிமினல் வழக்குகளை விசாரிக்கும் மாஜிஸ்ட்ரேட்டுகளும் எல்லோருமே ஹைகோர்ட்டின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டனர். அதற்கு முன்னர் மாஜிஸ்ரேட்டுகள் ஜில்லா நிர்வாக அதிகாரியான கலெக்டர்களின் அதிகாரத்தின் கீழிருந்தனர். இந்தப் புது முறையின் மூலம் நீதி வழங்குதலுக்கு பூர்ண சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

நீதி, நிர்வாகப் பிரிவு, முதலாவதாய் செங்கல்பட்டு, வட ஆற்காடு ஆகிய இரண்டு ஜில்லாக்களில் கொண்டு வரப்பட்டது. பிறகு, படிப்படியாய் 16 ஜில்லாக்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் 1951-ம் ௵ ஜனவரி ௴ 1௳ முதல் இந்தத் திட்டம் அமுலிலிருந்து வருகிறது.

மாதர் நலம்

ராஜ்யத்தின் ஜனத்தொகையில் பாதிக்குமேல் பெண்கள் இருக்கிறார்கள். எனவே, நாட்டின் உயர்வு இவர்களின் க்ஷேமநல அபிவிருத்தியைப் பொருத்ததாயிருக்கிறது. பெண்கள் முதலாவதாக வீடுகளிலும், பின் சமூகத்தினிடையேயும் அபிவிருத்திக்கான உதவிகளைப் பெறவேண்டும். இதற்காக, சென்னை சர்க்கார் தனி ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்தியாவிலேயே சர்க்கார் நடத்தும் மாதர் நல இலாகா சென்னை ராஜ்யம் ஒன்றில்தானிருக்கிறது. பெண்களுக்கு உதவியளிக்கும் முறையில் பட்டணங்களிலும் கிராமாந்தரங்களிலும் பெண்கள் க்ஷேமநல ஸ்தாப

னங்கள் அமைத்திருக்கின்றனர். குடும்பத்திற்கு வேண்டிய மனைமாட்சி முறைகள், அந்த ஸ்தாபனங்களில் பெண்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. ஸ்தாபனத்தில் சேர்ந்து படிக்கும் பெண்களுக்கு 8-வது வகுப்புக்குண்டான பொது அறிவும், மனைமாட்சி, பாலசேவை, ஆசிரியை பயிற்சி, நூல் நூற்றல், நெசவு, தையல் வேலை, அல்லது க்ஷேமநல ஸ்தாபனம் அமைத்தல் போன்ற பாடங்களில் ஏதாவது ஒன்றையும் கற்பிக்கிறார்கள்.

பெண்கள் க்ஷேமாபிவிருத்தி இலாகா ஏழு வருஷத் திட்டமொன்றை வகுத்துள்ளது. அதன் பிரகாரம் ஒவ்வொரு ஜில்லாவிலும் 10 ஸ்தாபனங்கள் அமைக்க வேண்டும். கஸ்தூர்பா டிரஸ்டும் ஒவ்வொரு ஜில்லாவிலும் 10 ஸ்தாபனங்களை அமைக்கும். ஆக 20 ஸ்தாபனங்கள் வேலை செய்யும். தமிழ்நாடு கிராம ஸ்தாபன அமைப்பாளர்கள் காந்தி நகர சேவா விடுதியில் பயிற்சி பெறுவார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் 4 கிளை ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகள் திருநெல்வேலி, குருவிகுளம், தேவர் குளம், கரிவலம்வந்தநல்லூர் முதலிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழிலும், ஹிந்தியிலும் முக்கியமாய் முதியோர் கல்வி அபிவிருத்தி வேலைகள் இந்த ஸ்தாபனங்களில் நடைபெறுகின்றன. நூல் நூற்றல், நெசவுத் தொழில், பின்னல் வேலை, பாய் முடைதல், தையல் வேலை முதலியவைகளும் கற்பிக்கப்படுகின்றன.

சமுதாய இழிவுகள் நீங்க

நம் நாட்டின் பண்பாட்டுக்கும், பண்டைய பெருமைக்கும் களங்கமாக இருந்த பல்வேறு பழக்க வழக்கங்களை அறவே நீக்க, மக்கள் அரசாங்கம் மறக்கவில்லை. உதாரணமாக, தேவதாசி முறை, குற்ற பரம்பரைச் சட்டம், இருதார முறை, உயிர்ப் பலியிடல் முதலியவற்றை ஒழிக்கும் சட்டங்களைக் கூறலாம். இந்துமத ஆலயங்கள், அற நிலையங்கள் ஆகியவற்றைத் தக்கவாறு பாதுகாத்து நிர்வகிக்கவும் ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டம்

- ஆண் பெண் உள்ளிட்ட எல்லாப் பிரஜைகளும் ஜீவனோபாயத்துக்காகப் போதிய வழிவகைகளைச் சமமாகப் பெறவேண்டும்.
- பொது நலத்தை முன்னிட்டு, சமூக சொத்து சுதந்திரங்களின் சொந்தமும் கட்டுப்பாடும் வகுக்கப்படவேண்டும்.
- செல்வமும் பொருள் உற்பத்திச் சாதனங்களும் பொதுஜனங்களுக்குப் பாதகமாகாத ரீதியில் ஒருசிலரிடம் சேர்த்துவிடாதபடி, பொருளாதார அமைப்பு இயங்கி வரும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

இந்திய திட்டக் கமிஷன் கொள்கைகள்.

காலம் என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. காலச்சக்கரத்தை யார்தான் தடைசெய்ய முடியும்? ஆயினும் அதன் நியதியை உணர்ந்து, அதற்கேற்ப தங்கள் வாழ்வை ஆராய்ந்து அமைத்துக்கொள்வோரும் இல்லாமலில்லை. அத்தகையவர்கள் காலத்தோடு சேர்ந்து முன்னேறும் ஆற்றலைப் பெறுகின்றனர்.

சென்ற காலத்தை நினைவில் வைத்துக்கொண்டு, நிகழ் காலத்தில் கடமைகளைச் செய்தவண்ணமே, எதிர் காலத்தைப்பற்றியும் சிந்திக்கும் திறமை, மனிதர்களுக்

குள்ள ஒரு சிறப்பான ஆற்றலாகும். மிருகங்கள் அன்றாட வாழ்க்கையைப்பற்றிமட்டும் கவலைப்படுகின்றன. நேற்று பற்றிய நினைவும், நாளைய பற்றிய எண்ணமும் இல்லாத நிலை, நாகரிகம் வளராததன் அறிகுறி.

பொதுவான இந்த உண்மைகள் தனி மனிதனுக்கு மட்டும் பொருந்துவன அல்ல. மொத்த சமுதாயத்துக்கும், சிறப்பாக நம் நாட்டிற்கும், அப்படியே பொருந்தும்.

மக்கள் பிரதிநிதிகள் 1946-ம் ஆண்டு அரசாங்கத்தை ஏற்றபோது, எல்லாவித அதிகாரங்களையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஆங்கில அதிகாரவர்க்க அமைப்பும், ஆட்சி முறையும் அப்போது இருந்து வந்தன. அவற்றுக்குட் பட்டே மக்கள் அரசாங்கம் செயலாற்ற வேண்டியிருந்தது. அதன் பிறகு 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி யன்று இந்தியா சுதந்திரம் அடைந்ததும், அநேக புதிய பிரச்னைகளும் பொறுப்புகளும் ஏற்பட்டன. அவற்றை உடனடியாகத் தீர்ப்பதில் தங்கள் முழுகவனத்தையும் அரசாங்கம் செலுத்த வேண்டியதாயிற்று. இவை தவிர, இரண்டாவது மகா யுத்தத்தின் விளைவாக உலகமெங்கும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

எதிர்கால நலன்

மக்கள் அரசாங்கம் கடந்த ஐந்தாண்டுகளாக இத்தனை இடையூறுகளுக்கிடையேயும், பல்வேறு துறைகளிலே சிறந்த காரியங்களைச் சாதித்திருப்பதை, இது வரை கூறி வந்த விவரங்களால் அறியலாம். நிகழ்கால பிரச்னைகளைத் தீர்ப்பதோடு இந்த அரசாங்கம் நின்றுவிடவில்லை. எதிர் கால க்ஷேமத்துக்காக அவசியமான திட்டமொன்றை அவர்கள் திறம்பட வகுத்துள்ளனர். அதற்கு ஐந்தாண்டுத் திட்டம் என்று பெயர். இந்திய நாட்டின் எல்லாத்தேவை களையும் சரிவர ஆராய்ந்து, அவற்றைப் படிப்படியாகத் தீர்க்க வழிகோலப்பட்டது. இங்குள்ள இயற்கைச் செல்வங்களை யெல்லாம் நன்கு பயன்படுவதற்கான வழி துறைகள் விவரிக்கப்பட்டன. சாகுபடியாகாமல் கிடக்கும்

தரிசு நிலம், நிலத்துக்கடியிலுள்ள உலோகவகைகள், நதிகளில் ஓடும் ஏராளமான நீர், சோம்பிக்கிடக்கும் அளவற்ற மனித சக்தி முதலியவற்றைத் தக்கவாறு உபயோகித்து நாட்டின் செல்வ நிலையைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அகில இந்திய ரீதியில் தயாரான இந்தத்திட்டம், நம் சென்னை ராஜ்யத்திற்கு மிகச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முனைகிறது. இதை நிறைவேற்ற ஐந்தாண்டுகளுக்கு 137 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப் பெற்றிருக்கிறது.

மக்கள் சர்க்கார் ஏற்படாததற்கு முன்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம், கூட்டுறவு முதலிய தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 10,61,84,000 ரூபாய் செலவிடப் பட்டு வந்தது. ஜனப்பிரதிநிதிகள் ஆட்சிவந்ததும், இந்தச் செலவு 42,22,50,000 ரூபாய் ஆயிற்று. எனவே, தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னைவிட இப்போது நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. இவற்றுள் முக்கியமாக, நீர்ப்பாசனத்துறையிலே பிரமிக்கத்தக்க அபிவிருத்தி காணப்படுகிறது. 150 வருஷ ஆங்கில ஆட்சியில் சுமார் 18 கோடி ரூபாய் மாத்திரமே, இந்த ராஜ்யத்தின் நீர்ப் பாசனத் திட்டங்களுக்காகச் செலவிட்டார்கள். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் இதற்காக மக்கள் சர்க்கார் செலவிட்டுள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் சுமார் 10 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்திருக்கிறார்கள். இதன் விளைவாக, நாடெங்கும் அநேக நீர்ப்பாசனத்திட்ட வேலைகள் துரிதமாக நிறைவேறி வருகின்றன. சிறப்பாக, வறண்ட இடங்களிலும், ஜமீன் இனாம் பிரதேசங்களிலும் இவை விசேஷமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிடல்

அஸ்ஸாம், கிழக்கு பஞ்சாப் ஆகியவை உள்பட எல்லா ராஜ்யங்களும் சேர்ந்து, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகிய

வற்றிற்கு 32 கோடி ரூபாய் செலவிடுகின்றனர். அவற்றுள் 13 கோடி ரூபாய், அதாவது மூன்றில் ஒருபங்குக்குமேல் நம் ராஜ்யம் செலவழிக்கின்றது. பீஹார், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய ராஜ்யங்கள் சேர்ந்து 11 கோடி ரூபாய் செலவழிக்கின்றன. இவை யெல்லாவற்றையும்விட இரண்டு கோடிக்குமேலாக, நம் ராஜ்யம் ஒன்றே செல விடுகிறது. உத்தரப் பிரதேசத்தை விட 3 மடங்கும், பீஹாரைவிட 6 மடங்கும், நம் ராஜ்யம் செலவிடுகின்றது, பம்பாய் ராஜ்யம் இந்த வகையில் செவழிக்கும் ரூபாய் 8 கோடியேயாகும்.

நம் ராஜ்யத்தில் தேசிய அபிவிருத்திக்காகும் செலவில் சுமார் 50 சத விகிதம் நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகிய வற்றுக்கே செலவிடப்படுகிறது. இதற்காக வங்காளத்தில் 7 சத விகிதமும், பீஹாரில் 12 சத விகிதமும், பம்பாயில் 29 சதவிகிதமும், மத்தியப் பிரதேசத்தில் 30 சத விகிதமும், ஒரிஸ்ஸாவில் 22 சத விகிதமும், உத்தரப் பிரதேசத்தில் 41 சத விகிதமும் செலவிடப்படுகின்றன.

அடுத்த ஐந்தாண்டுகளில் கீழ்க்காணும் முறையில் தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கம் செலவிடும்:—

	கோடி ரூபாய்.
1. நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்கள்.	80·4
2. விவசாயம், கிராமாபிவிருத்தி ...	21·9
3. கைத்தொழில்கள்	2·1
4. ரஸ்தா அபிவிருத்தி	5·0
5. கல்வி, சுகாதாரம், இருப்பிட வசதிகள், பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் முதலான மற்ற சமூக நிர்மாண வேலைகள்	27·6
ஆக மொத்தம் ...	137·0

நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்களுக்காக எல்லா ராஜ்யங்களுக்குமாகச் சேர்த்து மொத்தம் 191 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்துள்ளனர். இதில் சென்னை ராஜ்யம் ஒன்றே 80 கோடி ரூபாய் செலவிடும். மற்ற ராஜ்யங்களெல்லாம் சேர்ந்து 111 கோடி செலவிடும். இதில் மற்றொரு முக்கிய விஷயம் கவனிக்கத்தக்கது. அதாவது, அந்தந்த ராஜ்யங்கள் நிறைவேற்றும் திட்டங்கள் அல்லாமல், பொதுவாக சில பெரிய திட்டங்களை மத்திய சர்க்காரே நிறைவேற்ற முடிவுசெய்துள்ளனர். அவற்றிற்காக 176 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகைய திட்டங்களால் பஞ்சாப், பீஹார், மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா ஆகிய ராஜ்யங்களுக்கே அதிகமான பலன் ஏற்படும். நம் ராஜ்யத்துக்கு அது போன்ற உதவி அதிகம் இல்லை.

செலவிடுவதில் மட்டும், நம்ராஜ்யம் முன்னணியில் நிற்கவில்லை. சிறந்த பலனைக் காண்பதிலும் அது முன் நிற்கிறது. அடுத்த ஐந்தாண்டுகளில் உத்தரப் பிரதேசம் 800,000 டன், பீஹார் 874,000 டன், மேற்கு வங்காளம் 787,000 டன், பஞ்சாப் 650,000 டன், பம்பாய் 367,000 டன் தானியம் அதிகமாக உற்பத்தி செய்யும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை ராஜ்யம் 834,000 டன் உணவுப் பொருள் அதிகம் விளைவிக்கும். எனவே, பீஹாருக்கு அடுத்தபடியாக, அதிக உற்பத்தி செய்யும் ராஜ்யம் சென்னையேயாகும்.

அனுபவ சாத்தியமானது

நாட்டின் எதிர் கால வாழ்வில் நோக்கங்கொண்ட அதே நேரத்தில், நிகழ் கால நிலையையும் சர்க்கார் மறக்கவில்லை. ஜனங்களுக்கு அதிக கஷ்டமின்றியே, இந்தத் திட்டத்திற்கான நிதியைச் சேகரிக்க உத்தேசித்துள்ளனர். பொது ஜன சுபிட்சத்துக்கான காரியங்களை உடனடியாகச் செய்தால், மக்கள் தாமாகவே மனமுவந்து அரசாங்கத்துக்கு அதிக வருமானம் அளிக்கத் தயங்கமாட்டார்கள் அல்லவா?

சர்க்கார் வருமான விவரம் வருமாறு :—

	கோடி ரூபாய்.
1. நிலவரி மூலம் சுமார்	30
2. அரசாங்கச் செலவில் சிக்கனம் செய்வது மூலம்	5
3. டெபாசிட் செலவினால் மிகுதியாகும் தொகை	8
4. அரசாங்கக் கடன் வசூல் மூலம் ...	17
5. ரிசர்வ் நிதியிலிருந்து திருப்பிப் பெறும் வகையில்	27
6. அதிகப்படி வரி விதிப்பின் மூலம்...	20
7. மத்திய சர்க்காரிடமிருந்து மான்யம்	30
ஆக மொத்தம் ...	137

முன்பெல்லாம் நாட்டில் அமைதி நிலைநிறுத்தும் பொறுப்பைமட்டுமே அரசாங்கம் வகித்து வந்தது. சுருங்கச் சொன்னால், போலீஸ் ராஜ்யமாக இருந்தது. ஆனால் இன்றோ, மக்கள் சர்க்கார் பராமரிப்பு ஆட்சியை நடத்து கின்றனர். அதாவது, பொதுஜன சர்க்காரின் வருமான மும் செலவும், மக்களின் சமூக, கலாசார, பொருளாதார க்ஷேமத்தை லட்சியமாகக் கொண்டே நிர்ணயிக்கப்படு கின்றன. சர்க்கார் வசூலிக்கும் பணம் முழுவதும், மக் களின் பல்வேறு சௌகரியங்களுக்கே திரும்பி வருகிறது. அதற்காக, பல்வேறு சமூக நல வேலைகள் துரிதமாக நிறை வேற்றவே சர்க்கார் முயன்று வருகின்றனர். கடந்த ஐந்தாண்டுகளில் சிறந்த அபிவிருத்தியை ஏற்படுத்திய மக்கள் சர்க்கார், அடுத்த ஐந்தாண்டுகளில் மேற்சொன்ன திட்டத்தை வெற்றியோடு நிறைவேற்றி, நாட்டின் செல்வ வளத்தைப் பெருக்கி, பொது ஜனங்கள் சுபிட்சமாக வாழ வகை செய்வார்கள் என்பதில் ஐயமில்லை.

முக்கிய குறிப்புகள்

பொது விவரம்

ஜில்லா விஸ்தீர்ணம்—சதுர மைல்கள் ...	4,342
ஜில்லாவிலுள்ள தாலூகாக்கள்	8
மொத்த ரெவினியூ கிராமங்கள்	972

ஜன சங்கியை

1941-ம் வருஷ ஜனத் தொகை	2,237,379
1951-ம் வருஷ ஜனத் தொகை	2 447 949
இவற்றில் ஆண்கள	1,189,232
பெண்கள்	1,258,717
அதிகரிப்பு சத விகிதம்	9·4
வயதுவந்தோர் வோட்டுரிமை முறையில் ஜில்லாவிலுள்ள மொத்த ஒட்டர்கள் ...	1,224,376
சட்ட சபைத் தொகுதிகள :—	
ஒற்றை அங்கத்தினர் தொகுதிகள்	11
பல அங்கத்தினர் தொகுதிகள்...	3

ஜில்லா தலைமை காரியாலயம்

கொக்கர்குளம், திருநெல்வேலி.

தாலூகாக்கள்

திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் தென்காசி, சங்கரன்கோவில், கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், நாங்குனேரி.

முனிசிபாலிட்டிகள்

பாளையங்கோட்டை, திருநெல்வேலி, தூத்துக்குடி, மேலப்பாளையம்

மேஜர் பஞ்சாயத்துக்கள்	46
மைனர் பஞ்சாயத்துக்கள்	170

பிர்க்கா அபிவிருத்தி வட்டாரங்கள்

சங்கரன்கோவில் தாலூகா :—பழங்கோட்டை, திருவேங்கடம், நீலிதநல்லூர், சங்கரன்கோவில்.

கல்வி ஸ்தாபனங்கள

கல்லூரிகள் :—பாளையங்கோட்டை செயின்ட் சேவியர்ஸ் காலேஜ்.
பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் காலேஜ்.
பாளையங்கோட்டை சாராடக்கர் பெண்கள் காலேஜ்.
பாளையங்கோட்டை செயின்ட் சேவியர்ஸ் பயிற்சி காலேஜ்.
திருநெல்வேலி ஜங்ஷன், மதுரை திரவியம் தாயுமானவர் ஹிந்து காலேஜ்,
தூத்துக்குடி செயின்ட் மேரீஸ் பெண்கள் காலேஜ்.
தூத்துக்குடி வ. உ. சி. காலேஜ்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

திருநெல்வேலி சர்க்கார் பயிற்சி பள்ளிக்கூடம்.
பாளையங்கோட்டை பிஷப் சார்ஜன்ட் பயிற்சி பள்ளிக்கூடம்.

ஆதாரக் கல்வி பயிற்சிப் பள்ளிகள்

கோவில்பட்டி சர்க்கார் ஆதாரக்கல்வி பயிற்சி பள்ளிக்கூடம்.
குருவிகுளம் சர்க்கார் ஆதாரக் கல்வி பயிற்சி பள்ளிக்கூடம்.

உயர்தர, மத்தியதர பாடசாலைகள் (59)

முனிசிபல் நிர்வாகம் (2)

பேட்டை (மத்திய), மேலவீரராகவபுரம் (மத்திய).

ஜில்லா போர்டு நிர்வாகம் (14)

கடையநல்லூர், கோவில்பட்டி, நான்குனேரி, சங்கரன்கோவில், தென்காசி, திருச்செந்தூர் விளாத்திகுளம் வள்ளியூர், புதூர், கழுகுமலை முடித்தானேந்தல் புளியங்குடி, குருவிகுளம், கய்த்தாறு.

சர்க்கார் உதவி பெற்ற மிஷன் நிர்வாகம் (21)

இளயங்குடி, மணப்பாடு மெஞ்ஞானபுரம், நாசரத், பாளையங்கோட்டை (2 சாயர்புரம் திருநெல்வேலி தூத்துக்குடி (3), வடக்கன்குளம் (2) நல்லூர் டோனாவூர் பண்ணைவிளை, சுரண்டை சாத்தான்குளம், விக்கிரமசிங்கபுரம், வளளியூர், விரபாண்டியபுரம்.

சர்க்கார் உதவி பெற்ற இதர நிர்வாகம் (22)

அம்பாசமுத்திரம் கோபாலசமுத்திரம் இட்டமொளி, கல்லிடைக்குறிச்சி, மேலப்பாளையம் (முஸ்லிம்), பத்தமடை, ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி 2, தூததுக்குடி (4) குலசேகரன்பட்டணம் எட்டையாபுரம், சிவகிரி ஆழ்வார்திருநகரி இலஞ்சி, களக்காடு (முஸ்லிம் மததிய), முக்கூடல் மததிய), விரவநல்லூர் (மத்திய), கடயம்.

அபிவிருத்தித திட்டஙகள்

பாபநாசம மின்சார உற்பத்தி (முடிவடைந்தது).

மணிமுத்தாறு நீர்த்தேக்கம் (வேலை நடக்கிறது).

கிராம கூட்டு குடிதண்ணீர் திட்டம் (திருசசெந்தூர் முதலிய 11 கிராமஙகள்) (வேலை நடக்கிறது).

விவசாய ஆராயசசி சாலைகள்

அம்பாசமுத்திரம் அரிசி ஆராய்ச்சி சாலை.

கோவில்பட்டி விவசாய ஆராய்ச்சி சாலை.

பெரிய தொழிற் சாலைகள்

பஞ்சாலைகள் .—கோவில்பட்டி 2, தூத்துக்குடி 1, விக்கிரமசிங்கபுரம் 1 சத்திரம்புதுக்குளம் 1.

சர்க்கரை மில் :—ஆழ்வார்திருநகரி 1.

சிமிண்டு தொழிற்சாலை :—தாழையூத்து.

ஆரோககிய வாசஸதலஙகள்

திருக்குற்றாலம், பாபநாசம், கோவில்பட்டி.

வைத்திய சாலைகள

சர்க்கார் தலைமை ஆஸ்பத்திரி :—பாளையங்கோட்டை.

சர்க்கார் ஆஸ்பத்திரிகள :—அம்பாசமுத்திரம், நான்குனேரி, சஙகரனகோவில் தென்காசி, தூத்துக்குடி.

சர்ககார் டிஸபென்சரி :—பாபநாசம.

ஸதல ஸதாபன ஆஸபத்திரி :—கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம், ஆறுமுகனேரி, ஆழ்வார்திருநகரி, எட்டையாபுரம், ஏர்வாடி, கடயம், கடையநல்லூர், களக்காடு, கயத்தாறு காயல்பட்டணம், குலசேகரன்பட்டணம, ஓட்டப்பிடாரம், பணகுடி, சேர்மாதேவி. செனடாமரம்.

லோகல் பண்டு டிஸ்பென்சரி :—சாத்தாங்குளம், சிவகிரி, திருச்செந்தூா வீரவநல்லூர், விளாத்திகுளம், வீரகேரளம்புதூர், வடக்கன்குளம்.

ஊர் ஊராய்ச் சென்று வைத்தியம் செய்யும் டிஸ்பென்சரி :— வெள்ளையம்மாள்புரம் புதியம்புத்தூர்.

முனிசிபல் ஆஸ்பத்திரி :—திருநெல்வேலி, மேலவீரராகவபுரம், மேலப்பாளையம், பேட்டை.

விகடோரியா ஆஸ்பத்திரி :—மணப்பாட்

செயினட் இமானுவேல் ஆஸ்பத்திரி :—இடையன்குடி.

செயினட் ரவேல் ஆஸபத்திரி :—சாயர்புரம்.

செயினட் லூக்ஸ ஆஸ்பத்திரி :—நாசரத.

செயின்ட் அநதோனி ஆஸ்பத்திரி :—கிருஸ்தியாநகரம்.

தாமஸ் டிஸ்பென்சரி :—மெஞ்ஞானபுரம்.

சர்க்கார். பெண்கள் ஆஸ்பத்திரி :—வண்ணார்பேட்டை.
லோக்கல்பண்டு பெண்கள் டிஸ்பென்சரி :—கலாங்குடியிருப்பு.
முனிசிபல் டிஸ்பென்சரி :—பாளையங்கோட்டை, தூத்துக்குடி.

விவசாய டிப்போக்கள்

திருநெல்வேலி—ஹை ரோடு திருநெல்வேலி ஜங்ஷன் (கலெக்டர் பங்களாவுக்கு எதிரே).

நான்குனேரி—நம்பி நகர்.
ஸ்ரீவைகுண்டம்—தெப்பகுளம் தெரு.
திருச்செந்தூர்—தெற்கு ரத வீதி.
அம்பாசமுத்திரம—தெற்கு ரத வீதி.
தென்காசி—சுவாமி சன்னதித் தெரு.
சங்கரன்கோவில்—"கோமதி நிவாஸ்" ராமசாமியாபுரம் தெரு.
கோவில்பட்டி—வக்கீல் தெரு.
விளாத்திகுளம்—அக்ரகாரம் தெரு.

திருநெலவேலி ஜில்லாவில் விளையும் பொருள்களும் விஸ்தீரணமும் :—

	ஏக்கர்.
நெல்	361,140
சோளம்	90,000
கம்பு	2,00,000
கேழ்வரகு	34,920
சாமை	௦5,200
வரகு	10,800
எள்	39,500
வேர்க்கடலை	18,500
பருத்தி	2,50,000
வாழை	6,480
பாசிப் பயறு...	6,825
உளுந்து	9,831
கொள்ளு	23,169
மிளகாய்	22,900
வெங்காயம்...	3,040
	1,600,845

1950-51-ம் வருஷம் முடிய திருநெல்வேலி ஜில்லாவில் சர்க்காரால் மின்சாரம் விநியோகிக்கப்படும் நகரங்களும் கிராமங்களும்.

[பாபநாசம் மின்சார உற்பத்தி நிலையத்திலிருந்து விநியோகிக்கப் படுகிறது.]

கோவிலபட்டி தாலூகா

எட்டையாபுரம், கோவில்பட்டி, புதுக்குடி, காலம்பட்டி, நாலாட்டின்புதூர், கடம்பூர், திருமலாபுரம், சின்னமணியாச்சி, வில்லிசேரி, முடுக்குமீண்டாம்பட்டி, இடசேவல், சத்திரப்பட்டி.

தென்காசி தாலூகா

குற்றாலம், எரப்பண்ணி, இலஞ்சி, கடயம், கீழகடயம், கிழப்புலியூர், மாதவரம், மத்தாளம்பாறை, முதலியார்பட்டி, பொம்பத்தூர், பொட்டல்புதூர், தென்காசி, வல்லம், அமபாசமுத்திரம், அரியநாயகிபுரம், கல்லிடைக்குறிச்சி, காரைக்குறிச்சி, முக்கூடல், முண்டந்துறை, பாபநாசம், பத்தமடை, பிராஞ்சேரி, சேர்மாதேவி, வாணியங்குளம், வீரவநல்லூர், வெள்ளோரடை, விக்கரமசிங்கபுரம், ஆழ்வார்குறிச்சி, ஆம்பூர், அத்தாளநல்லூர், பிரமதேசம், மேலகரம், இடகால், புதுக்குடி.

அம்பாசமுத்திரம் தாலூகா

சிரிமாஸ்புரம, ஹரிகேசவநல்லூர், கூனியூர், மானுபரநல்லூர், மன்னார்கோயில், மேலச்செவல், முடியப்பபுரம், ராதாபுரம், சீனியாபுரம், சேரன்கோயில்பத்து, திருப்புடைமருதூர், வாகைக்குளம், வெள்ளாஙகுளி, கோடாரஙகுளம், ஊர்க்காடு, சிஙகம்பாறை, கோபாலசமுததிரம, அடச்சர்ணி, பாப்பானகுளம.

திருநெலவேலி தாலூகா

கெஙகைகொண்டான், தாழையூத்து.

லைசென்ஸ்தார்களால் மின்சாரம விநியோகிககப்படும் கிராமங்கள்.

லைசென்ஸ்தார்

திருநெலவேலி - தூத்துககுடி

திருநெல்வேலி, பாளையஙகோட்டை, பேட்டை, மேலப்பாளையம, தச்சநல்லூர், சத்திரம்புதுககுளம், வல்லநாடு, பெருமாள்புரம் குடியிருபபு, கரையிருப்பு, இனும் தேனீர்க்குளம், தூத்துக்குடி, மஙகளகிரி.

1947—48-க்குப் பிறகு திருநெல்வேலி ஜில்லாவில் பூர்த்தியான ரஸ்தா வேலைகள்.

பாளையஙகோட்டை - தூத்துக்குடி ரஸ்தாவில் 8 மைல் சிமிண்டு போடபபட்டது

அமபாசமுத்திரம் - தென்காசி ரஸ்தாவில் 8 மைல் சிமிண்டு போடப்பட்டது.

கோவில்பட்டி தாலூகா

இளவேலஙகால் - மலைப்பட்டி, குறுக்குச்சாலை - எட்டையாபுரம் ரஸ்தாவிலிருநது சோளபுரம், விளாத்திகுளம் - வேம்பார், விளாத்திகுளம் - பெருநாளி, கயத்தாறு - கழுகுமலை, மேல அரசடி - தருவைக்குளம், கோவில்பட்டி - கடலையூர், கோபாலபுரம - வெள்ளாளஙகோட்டை, ஆசூர் - கப்பாலியமபட்டி, எட்டையாபுரம் - அருப்புக்கோட்டை ரஸ்தாவிலிருந்து கரிசல்குளம், ராஜபதி - மேலக்கரநதை, எட்டையாபுரம் - கீரக்காய்ப்பட்டி ரஸ்தாக்கள.

சஙகரனகோவில் தாலூகா

அப்பனேரி - சிததிரம்பட்டி, தேவகுளம் - கழுகுமலை, குருக்கள்பட்டி - நீலிதநல்லூர், கீழ் நீலிதநல்லூர் - இலநதைக்குளம், விஸ்வநாதபேரி - தென்மலை ரஸதாக்கள்.

ஸ்ரீவைகுணடம் தாலூகா

தோளப்பன்பண்ணை - மணக்கரை, மீயாம்புளி - வல்லநாடு, அறணுபுரம் - பேய்க்குளம், பொட்டலூரணி - கொம்புக்காரநததம், ஸ்ரீவைகுண்டம் - கொஙகராயன்குறிச்சி, வல்லநாடு - கலியாவூர், வாகைககுளம் - கடலஙகுளம், எல்லநாயக்கன்பேட்டை - மணியாச்சி, சிவலப்பேரி - கலியாவூர், சாயர்புரம் - கூட்டாம்புளி, தூத்துக்குடி - இன்னுசிபுரம், கொம்புக்காரநத்தம் - சொக்கலிஙகபுரம், மீனுக்ஷிபட்டி - அணியாபரநல்லூர், தூத்துக்குடி - திருச்செந்தூர் ரஸ்தாககள்.

திருச்செந்தூா தாலூகா

சபாபதிபுரம் - திருச்செந்தூர், ஆறுமுகனேரி - வீரபாண்டியன் பட்டினம், ஆழ்வார்திருநகரி - மாலமை, ஆத்தூர் - புனனககாயல், காயல்பட்டினம் - வீரபாண்டியனபட்டினம், உடஙகுடி - மெஞ்ஞானபுரம், குலசேகரபட்டினம் - மணபபாடு, பரமகுறிசசி - திருச்செநதூர், சோணக்காத்தான்விளை - காணம், கருஙகடல் - முனஞ்சிபட்டி, கச்சனுவிளை - கச்சனுவிளை ரயில்வே ஸ்டேஷன், பன்னம்பாறை - மெஞ்ஞானபுரம், அடைக்கலாபுரம் - ராணிமஹாராஜபுரம், முதலூர் - குமட்டிக்கோட்டை, படுககைப்பத்து - பெரியதலை, திசையன்விளை - தட்டார்மடம், சாத்தாஙகுளம் - இட்டமொளி ரஸ்தாவிலிருந்து கொம்பங்குளம், முதலூர் - கடாக்ஷபுரம் ரஸதாக்கள்.

நாங்குனேரி தாலூகா

திடியூர் - சிங்கிகுளம், பத்மனேரி - சிங்கிகுளம், விஜயாபதி - கூத்தங்குளி, பணகுடி - குமுலம்பாடு, வடுவச்சிமலை - டோனுவூர், டோனுவூர் - ஏர்வாடி, வள்ளியூர் - இட்டமொளி ரஸ்தாவிலிருந்து சுவிசேஷபுரம், இடையங்குடி - நாடார்ஓவரி, பெருங்குடி - காவல்கிணறு, கூட்டாம்புளி - செட்டிகுளம், பளவூர் - ஜாகோப்புரம், இடையங்குடி - குட்டம் ரஸ்தாக்கள்.

திருநெல்வேலி தாலூகா

அழகியபாண்டியபுரம் - உக்கிரன்கோட்டை, திருமலைக்கொழுந்து - மணக்காடு, கங்கைகொண்டான் - பிராஞ்சேரி, சீவலப்பேரி - கலியாவூர் திருநெல்வேலி - ராஜபாளையம் ரஸ்தாவிலிருந்து பள்ளிக்கோட்டை ரஸ்தாக்கள்.

தென்காசி தாலூகா

திருநெல்வேலி - செங்கோட்டை ரஸ்தாவிலிருந்து பூலாங்குளம், பெத்துநாடான்பட்டி - சிவனுடானூர், கீழவீராணம - உக்கிரன் கோட்டை ரஸதாக்கள்.

பாலங்கள்

திருநெல்வேலி - ராஜபாளையம் ரஸ்தாவில் சோலசேரியின் குறுக்கே 80,000 ரூபாய் செலவில் ஒரு பாலம் புதுப்பித்தல்.

தென்காசி - மதுரை ரஸ்தாவில் கருப்பயாறுக்கு குறுக்கே 84,000 ரூபாய் செலவில் ஒரு பாலம் புதுப்பித்தல்.

நாங்குனேரி - திருக்குருங்குடி ரஸ்தாவில் நம்பியாறுக்கு குறுக்கே 83,000 ரூபாய் செலவில் ஒரு பாலம்.

அம்பாசமுத்திரம் - ஆலங்குளம் ரஸ்தாவில் கடனு நதிக்கு குறுக்கே 3,50,000 ரூபாய் செலவில் ஒரு பாலம்.

அபிவிருத்திப் பட்டியல்

விவசாயம்

நெல்	3,61,140	ஏக்கா.
கம்பு	2,00,000	,,
சோளம்	90,000	,,
ராகி	10,000	,,
பருத்தி	2,50,000	,,
பொறுக்கு விதைகள் வினியோகம்	2,400	டன்.
தக்காவி கடன் வினியோகம்	76,456	ரூபாய்
புது கிணறுகள் வெட்டியவை	6,675	
வெட்டப்படுபவை	2,660	
பழைய கிணறுகள் செப்பனிடப் பட்டவை	687	
கிணறுகளுக்கு மொத்த செலவு	47,00,000	ரூபாய்
விவசாயிகளுக்கு உதவிய இரும்பு வண்டிப்பட்டைகள்	1,000	டன்.
அச்சுக்கள்	45	,,
இதர இரும்புச் சாமான்கள்	50	,,
அதிக உணவு உற்பத்தி முயற்சிகளால் அதிகரித்திருக்கும் சாகுபடி விஸ்தீர்ணம்	78,340	ஏக்கர்.
ரயத்து வாரி முறைக்குக் கொண்டுவரப் பட்ட ஜமீன்தாரி எஸ்டேட்டுகள	15	

நீர்ப்பாசனம்

மணி முத்தா நதி நீர்த்தேக்கத்திட்டத் தின் செலவு மதிப்பீடு	3,98,00,000	ரூபாய்.
விவசாயிகள கொடுத்திருக்கும் முன் பணம்	1,28,00 000	,,
இத்திட்டத்தால் பயனடையும் நிலம்	1,00,000	ஏக்கர்.
இந்த நீர் தேக்கத்திலிருந்து வெட்டப் படும் கால்வாய் நீளம்	29 மைல் 6½ பர்லாங்.	

இந்த கால்வரத்தால் பயனடையப்போகும் குளஙகள் :—

அம்பாசமுத்திரம் தாலுகாவில்	75
திருநெல்வேலி	32
ஸ்ரீவைகுண்டம்	18
நாங்கூனேரி	122
திருச்செந்தூர்	74

ஜில்லாவில் செப்பனிடப்பட்ட பெரிய குளங்கள் விவரம :—

சிவலப் பேரிக்குளம் ஆயக்கட்டு	550	ஏக்கர்.
வயலிமலையடிப்பட்டி கால்வாய்கள்	600	,,

மின்சாரம்

மின்சார வசதி ஏற்பட்டுள்ள கிராமங்கள்	36	
மின்சாரவசதி ஏற்பட்டுள்ள வீடுகள்	9,000	
மின்சாரவசதி ஏற்பட்டுள்ள தொழிற் சாலைகள்	89	
வருஷத்தில் செலவாகும் மின்சாரம்	62,00,000	யூனிட்டு

போக்கு வரத்து அமைககப்படும் முக்கியமான ரஸ்தாக்கள் :—

தூத்துக்குடி - திருச்செந்தூர் ரஸ்தா 13 மைல். இதற்குச் செலவு	4,00,000	ரூ
கிராம பாட்டைகள் 40 மைல் நீளம்	3,00,000	
பெரிய சாலைகள் 80 மைல் நீளம்	5,00,000	

கல்வி

மக்கள் சர்க்கார் ஆட்சிக்கு வந்தபின் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிலையங்கள் :—

ஆரம்பப்பள்ளிகள்	478	
நடுத்தரக்கல்விப் பள்ளிகள்	14	
கல்லூரிகள்	3	
ஆதாரக் கல்விச் சாலைகள் ..	20	

வைத்திய வசதி

ஜில்லாவிலுள்ள வைத்திய சாலைகள்	46	
வருஷ செலவு	5,00,000	ரூபாய்க்கு அதிகம்.

கூட்டுக் குடிதண்ணீர் வினியோகத் திட்டம்

திருச்செந்தூர் தாலுகா கிராம குடிதண்ணீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள கிராமங்கள்	11	
திட்டத்திற்கு மொத்த செலவு மதிப்பீடு.	37,50,000	ரூபாய்

ஹரிஜன முன்னேற்றம

பிரத்தியோக ஆரம்ப பாடசாலைகள் திறக்கப்பட்டவை	13	
அவற்றிலுள்ள மாணவர்கள்	850	
இதுவரை உபகாரச் சம்பளம் பெற்ற மாணவர்கள்	2,000	
ஹாஸ்டல்களில் வசிக்கும ஹரிஜன மாணவர்கள்	936	
வருஷத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் மானியம் தலா	150	ரூபாய்.
ஹரிஜன குடியிருப்புகளில் கிணறுகள் செலவு	45,000	,,
கிராம பாட்டைகள் அமைக்க செலவு ..	4,000	,,
வேலையில்லாமல் கஷ்டப்பட்டவர்களுக்குச் செய்த ரொக்க உதவி ...	15,500	,,
விளாத்திகுளம் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கஞ்சி தொட்டிகள்	8	
இவற்றிற்காகக் கிடைத்த நன்கொடை.	4,100	ரூபாய்.
மொத்த தேர்தல் தொகுதிகள் ...	14	
அசம்பிளி பிரதிநிதிகள்	17	
மத்திய மக்கள் சபை பிரதிநிதிகள் ...	3	
மொத்த ஓட்டர்கள்	12,24,376	

மதுவிலக்கு

வெல்லம் தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள்	392	
அவற்றில் அங்கம் வகிக்கும் மாஜி கள்ளிறக்கும் தொழிலாளர்	45,000	
1950-ம் வருஷ முடிய தயாரிக்கப்பட்ட வெல்லம்	17,70,000	மணங்கு.
இந்த வெல்லத்தின் மதிப்பு	95,16,000	ரூபாய்.
கூட்டுறவு பால் சங்கங்கள்	9	
அவற்றில் வேலை செய்யும் மாஜி கள்ளிறக்கும் தொழிலாளர்	36,708	
ஜீவன வசதி செய்து கொடுக்கப்பட்ட அத் தொழிலாளர் குடும்ப மக்கள் ...	1,83,600	

மாதர் நலம்

நெல்லை கிளைஸ்தாபனங்கள்	4	

MADRAS ' PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.